
புண்ணிய பாரதம்

(பாகம்-2)



பரணீதரன்



யமுனாநதி உற்பத்தியாகும் இடம்

புண்ணிய பாரதம்

பாகம் – 2

(யமுனோத்ரி, கங்கோத்ரி,
கோமுகம், கேதார்நாத்.)

ப ர ணீ த ர ன்

ஒரு விகடன் பிரசுரம்

நூலைப் பற்றி...

இமாலயத்திலுள்ள யமுனோத்ரி, கங்கோத்ரி, கேதார்நாத், பத்ரிநாத் முதலிய நான்கு புனிதத் தலங்களை 'சதுர்தாம்' என்று அழைக்கிறார்கள். இந்த நான்கு தலங்களையும் ஒரே பயணத்தில், இதே வரிசையில் தரிசித்து முடிப்பவர்களுக்கு நிறையப் புண்ணியம் கிடைப்பதாகப் பன்னெடுங் காலமாக ஒரு நம்பிக்கை இருந்து வருகிறது.

1974-ம் ஆண்டு மத்தியில் இந்த நான்கு தலங்களையும் தரிசிக்க நண்பர்கள் கண்ணனுடனும் ஸ்ரீநிவாசனுடனும் நான் இமாலயப் பயணம் மேற்கொண்டேன். இவற்றுடன், கிடைத்தற்கரிய கோமுகத்தின் தரிசனமும் எங்களுக்குக் கிடைத்தது. அந்த யாத்திரையின் பலன்தான் இந்த நூல்.


கோமுகத்தில் ஐஸ் குகையிலிருந்து முதன் முதலில் பூமியில் பாய்ந்து வரும் புனித கங்கையைத் தரிசிக்கிறோம் நாம். யமுனை நதி உற்பத்தியாகிப் பெருகி வரும் மலைத் தொடர்ச்சியை யமுனோத்ரியில் காண்கிறோம். பகீரதன் தவம் இருந்து கங்கையைக் கொணர்ந்த இடமாகக் கங்கோத்ரி விளங்குகிறது. பாரதத்தின் புகழ்மிக்க பன்னிரண்டு சிவத் தலங்களில் ஒன்றுதான் கேதாரம். உடல் சக்தியும் பொருள் வசதியும் உள்ளவர்கள் வாழ்நாளில் ஒரு முறை தரிசிக்க வேண்டிய இடங்கள் இவை என்பதில் சந்தேகமில்லை.

பரணீதரன்



கோமுக ஐஸ் குகைக்கு முன்னால்... ►

31-1




முதற் பதிப்பு:—செப்டம்பர் 1975

அட்டைப் படம் :—
கோமுகத்தில் கங்கையின் முதல் தோற்றம்

வண்ணப்படம் :—
டில்லி ஸ்ரீநிவாசன்

விலை ரூபாய் 3-50

ஆனந்த விகடன் அச்சகம்,
151, அண்ணா சாலை, சென்னை - 2.



தராசு என்ற ஊரில் யமுனோத்ரிக்கும் கங்கோத்ரிக்கும் பாதைகள் பிரியும் இடம்

11

பத்ரிநாத் யாத்திரை சென்று விட்டுத் திரும்பிய நான், இமாசலத்திலுள்ள புனிதத் தலங்களைப் பற்றிய சில நூல்களைப் படிக்க நேர்ந்தது. முக்கியமாக, உத்தர கண்டத்தில் 'சதுர்தாம்' என்று அழைக்கப்படும் யமுனோத்ரி, கங்கோத்ரி, கேதார்நாத், பத்ரிநாத் என்ற தலங்களைப் பற்றிய பல விவரங்களைப் படித்து அறிந்து கொண்டேன். இந்த நான்கு இடங்களுக்கும் யாத்திரை சென்று வருவது பெரும் புண்ணியம் என்றும், அதிலும் இந்த வரிசையில் சென்றால்தான் முழுமை யான பலன் கிடைக்கும் என்றும் ஓரிரு புத்தகங்களில் குறிக்கப்பட்டிருந்தது. அதைத் தவிர, பத்ரிநாத்துக்கு மட்டும் நேரே சென்று வருவது சாத்திரத்திற்கு உடன்பாடானது அல்லவென்றும், முதலில் கேதார்நாத்துக்குச் சென்று, கேதாரேச்வரரைத் தரிசித்துக் கொண்டு, பின்னர் ஸ்ரீ பத்ரிநாராயணரைத் தரிசிக்கச் செல்வதுதான் முறை யென்றும், அவ்வாறு நிறைவுற்ற யாத்திரைதான் உண்மை யான பலன் அளிக்கிறது என்றும் அவற்றில் கண்டிருந்தது. அவ்வாறு முதலில் கேதார்நாத்துக்குச் செல்ல முடியாதவர்கள் பத்ரிநாத்தில், தப்த குண்டத்திலிருந்து ஆலயத்திற்குச் செல்லும் வழியில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ ஆதிகேதாரேச் வரரை முதலில் தரிசித்து விட்டால் அத்தகைய பலன் கிட்டி விடுகிறது என்றும் கூறப்படுகிறது.

ஸ்ரீ நாராயணப் பெருமான், சிறு குழந்தையாக பத்ரிகாச்ரமத்தில் தவம் இருக்க வந்தபோது, அங்கிருந்த சிவபெருமான் கேதார்நாத்துக்குச் சென்று விட்டதாகவும், செல்லுமுன் தம்முடைய ஓர் அம்சத்தைப் பத்ரியிலே விட்டுவிட்டு, 'என்னைத் தரிசித்த பிறகுதான் பக்தர்கள் தங்களைத் தரிசிக்க வேண்டும்' என்று ஸ்ரீ நாராயணரிடம் அவர் கேட்டுக் கொண்டதாகவும் ஒரு கதை இருந்து வருகிறது. அதனாலேயே ஸ்ரீ ஆதி கேதாரேச்வரர் சந்நிதியில் சிராவண மாதத்தில் ஆலயக் கமிட்டியினர் விசேஷ பூஜைகளும் ஹோமங்களும் செய்து வருகின்றனராம்.

இவற்றையெல்லாம் படித்ததிலிருந்து, இமாலயத்தில் மற்றொரு யாத்திரை செய்ய வேண்டும் என்றும், அதைச் சாத்திர முறைப்படி முடித்து வரவேண்டும் என்றும் என்னுள் பேரவா எழத் தொடங்கியது. என் மனத்தில் எண்ணங்களைத் தூண்டி, திட்டங்களைத் தீட்டித் தந்து, அவற்றைச் செயல்படுத்த அருளாசி வழங்கி என்னை இயக்கிவரும் மாபெரும் சக்தியின் துணையோடு 1974-ம் ஆண்டு ஜூன் பதினைந்தாம் தேதி 'சதுர்தாம்' யாத்திரைக்குப் புறப்பட்டேன். டெல்லியில் ஸ்ரீநிவாசன் தயாராக இருக்க வேண்டும் என்பதும், காசியில் இருக்கும் கண்ணன் எங்களுக்காக ரிஷிகேசம் ஆந்திரா ஆச்ரமத்தில் காத்திருக்க வேண்டும் என்பதும் ஏற்கெனவே நிச்சயமாகி விட்டன.

அப்போது மத்திய அரசில் உயர் அதிகாரியாகப் பதவி வகித்த சி. எஸ். ஆர்., சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு என்னை அறிமுகப் படுத்தி, என் இமாலயப் பயணம் சிரமமில்லாமலும் பயனுள்ளதாகவும் நிறைவேறுவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து தந்ததை நான் நன்றியுடன் நினைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ''உனக்கு எல்லா தரிசனங்களும் சௌகரியமா கிடைக்கும், க்ஷேமமா போயிட்டு வா'' என்று தம் பொற்கரத்தால் ஆசி வழங்கி அனுப்பிய காஞ்சிப் பெரியவரின் சங்கல்பம் நிறைவேற அன்னாரின் கடைசிப் பக்தனாகத் தன்னைக் கருதிக் கொண்டிருக்கும் சி. எஸ்.ஆர்., தம் பங்குக்குரிய உதவிகளைச் செய்து தந்ததாகவே எனக்குத் தோன்றுகிறது.

பாதுகாப்பு இலாகாவினர் தந்த அனுமதிக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டு நானும் ஸ்ரீநிவாசனும் ரிஷிகேசத்திற்குப் புறப்பட்டோம். அங்கு ஆந்திரா ஆச்ரமத்தின் திண்ணையில் எங்களுக்காகக் கண்ணன் காத்துக் கொண்டிருந்தார். கண்ணனைக் கண்டவுடனேயே எங்களுக்குப் பயணத்திற்கான தெம்பு பிறந்து விட்டது. அதற்கான களையும் கட்டி விட்டது.

அவையெல்லாம் எல்லைப் பகுதிகளாகவும் பனி உறையும் மலைப் பிரதேசங்களாகவும் இருப்பதால் தக்க ஏற்பாடுகளுடனும், பாதுகாப்புடனும் செல்ல வேண்டும் என்று முடிவு செய்த சி. எஸ். ஆர்., நம் எல்லையைப் பாதுகாத்து வரும் போலீஸ் துறையின் ஒத்துழைப்பை பெறுவதற்கு ஆவன செய்து தந்தார். இது விஷயமாக நான் மெஹ்மி (Mehmi) என்ற I.T.B.P. (இந்திய-திபெத் எல்லைப் போலீஸ் படை) அதிகாரியைச் சந்தித்தேன்.

என் பயணத் திட்டங்களைக் கேட்டு மகிழ்ச்சியுற்ற மெஹ்மி, ''நீங்கள் செய்து வரும் பணி உன்னதமானது. நாட்டுக்கே பயன்படக்கூடியது. என் அதிகாரத்திற்கு உட்பட்ட உதவிகளை யெல்லாம் செய்யக் காத்திருக்கிறேன்.

35-1

மாலையில் உங்களோடு தொடர்பு கொள்கிறேன். உங்களது முகவரியையும் டெலிபோன் நம்பரையும் கொடுத்துவிட்டுப் போங்கள்'' என்று பண்போடும் அடக்கத்தோடும் கூறி எனக்கு விடை கொடுத்து அனுப்பினார்.

எனக்கு வாக்குக் கொடுத்தது போலவே, மாலைக்குள் உத்தரவுகளைப் பிறப்பித்து விட்டார் அந்த அதிகாரி. என் வருகையைப் பற்றி ரிஷிகேஷ், மாத்லி, கோபாங், ஜோஷிமட் முதலிய இடங்களிலுள்ள **I.T.B.P.** முகாம் களுக்கு முன்னறிவிப்புக் கொடுத்து, எங்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து தரும்படி அங்குள்ள தலைமை அதிகாரிகளுக்குத் தாக்கிதும் அனுப்பி விட்டார்.

ஆந்திரா ஆச்ரமத்தில் கண்ணனைச் சந்தித்த பிறகு எங்கள் திட்டப்படி உடனேயே யமுனோத்ரிக்குப் புறப்படுவதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கத் தொடங்கினோம். ரிஷிகேசத்திலிருந்து யமுனோத்ரிக்கு சுமார் 135 மைல் பயணம். 125 மைல் வரை பஸ்ஸிலோ காரிலோ செல்லலாம். பத்து மைல் நடந்துதான் ஆகவேண்டும். அதிலும் கடைசி நான்கு ஐந்து மைல் மிகவும் கடினமான, செங்குத்தான ஏற்றம் என்று கூறினார்கள்.

நாங்கள் மூவரும் நேரே ரயில் நிலையத்திற்கருகிலுள்ள **I.T.B.P.** முகா மிற்குச் சென்றோம். எங்கள் வருகைக்காகக் காத்திருந்த 'இன்சார்ஜ்', எங்களை மலர்ந்த முகத்துடன் வரவேற்று, 'டீ' கொடுத்து உபசரித்தார். பின்னர், ''நீங்கள் ஜம்னோத்ரி போய்விட்டு, நேரே மாத்லி காம்ப்புக்குப் போய் விடுங்கள். அங்கு உங்களுக்குத் தேவையான 'ட்ரஸ்'களும் படுக்கைகளும் கொடுப்பார்கள். நான் இங்கிருந்து ஒயர்லஸ் செய்தி அனுப்பி விடுகிறேன். ஜம்னோத்ரிவரை உங்களுக்குத் துணையாக ஒரு ஜவானை அனுப்பி வைக்கிறேன். அவரை மாத்லியில் 'ரிலீவ்' பண்ணிவிடுங்கள். மாத்லியில் உங்களுக்கு வேறு ஒரு ஜவானும், ஓவர்கோட், பெட்டிங் கிட், ஷூ எல்லாம் தருவார்கள். அந்த ஜவான் உங்களுடன் கங்கோத்ரி, கோமுக் வரை வருவார். பிறகு அவரை மாத்லியில் ரிலீவ் பண்ணி, அந்த சாமான்களை அங்கே 'டெலிவரி' பண்ணி விடுங்கள். பிறகு கேதார்நாத்தை முடித்துக்கொண்டு ஜோஷிமட் போங்கள்; அது பெரிய காம்ப். அங்கு தேவையான உதவிகளைப் பெற்று வேறொரு ஜவானை அழைத்துக் கொண்டு பத்ரிநாத்துக்கும் மானா கிராமத்திற்கும் போங்கள்'' என்று ஒரே மூச்சில் என் யாத்திரையை முடித்து வைத்து விட்டார் அவர்! இந்த ஏற்பாடுகளை யெல்லாம் கேட்டபோது எங்களுக்கு எங்களைப் பற்றிய அபிப்பிராயமே மாறி விட்டது. இமாலயச் சிகரம் ஒன்றை வெற்றி காணச் செல்பவர்கள் போல் நினைத்துக் கொண்டோம். தன் மிலிட்டரி 'கிட்'டைச் சுமந்து கொண்டு பின்னால் வந்த ஜவானுடன் டாக்சி ஸ்டாண்டை நோக்கி நடந்தபோது, எங்களுக்குச் சற்றுப் பெருமையாகவே இருந்தது.

காலை பதினொரு மணிக்கு இந்தப் பயணத்திற்காக அமர்த்திக் கொண்ட டாக்சியில் நாங்கள் நரேந்திரநகரை நோக்கிப் போய்க் கொண்டிருந்தோம். அது ரிஷிகேசத்திலிருந்து பத்தாவது மைலில் இருக்கிறது. நாங்கள் சென்ற மலைப் பாதையிலிருந்து திரும்பி பள்ளத்தாக்கைப் பார்த்தோம். ரிஷிகேசமும், லட்சுமணஜூலாவும், சொர்க்காச்ரமும், சிவானந்தா ஆச்ரமும், ஆந்திரா



நரேந்திர நகரின் அழகிய தோற்றம்

ஆச்ரமும், கிதாமந்திரும் மரங்களுக்கிடையே தெரிந்தும் தெரியாமலும் கொஞ்சம் கொஞ்சமாகக் கண்களிலிருந்து மறைந்து கொண்டிருந்தன. தொலேவில் நீரோடையாகத் தெரிந்த கங்கை நதி, சமவெளியை நோக்கி அமைதியாக ஓடிக் கொண்டிருந்தது.

நரேந்திரநகர் 3,800 அடி உயரத்திலுள்ள ஓர் அழகான ஊர். அந்தக் காலத்தில் டெஹ்ரி கர்வால் சமஸ்தானத்தின் தலேநகராயிருந்தது. தற்போது டெஹ்ரி மாவட்டத்தின் ஹெட்குவார்ட்டர்ஸ். ஊரின் உள்ளே நுழைந்ததும் அழகிய பெரிய நந்தி ஒன்றைக் காண்கிறேம். அங்கிருந்து சற்றுத் தொலேவில் ராதாகிருஷ்ணன் கோயில் ஒன்று இருக்கிறது.

அங்கிருந்து ஐந்தாவது மைலில் 'குஞ்சாபுரி' என்ற இடத்தில் மலே மீது ஒரு தேவி கோயில் இருக்கிறது. புலிமீது அமர்ந்திருக்கும் அந்த வனதுர்க்கையை அப்பகுதி மக்கள் மிகவும் சக்திவாய்ந்தவளாகக் கருதுகிறார்கள். ஆடு பலியிடு கிறார்கள். உற்சவமும் நடைபெறுகிறது. கீழுள்ள கிராமத்தின் பெயர் குஜினி.

நரேந்திரநகரிலிருந்து டெஹ்ரி என்ற ஊர், நாற்பத்தோரு மைல் தொலேவில் உள்ளது. இடையில் சம்பா என்ற ஊர் வருகிறது. முஸோரியி லிருந்து ஒரு பாதை அங்கு வந்து சேருகிறது. டெஹ்ரி பள்ளத்தாக்கில் நாம் பாகிரதி நதியைச் சந்திக்கிறேம். அதன் இடக் கரையில்தான் டெஹ்ரி ஊர் அமைந்திருக்கிறது. நாங்கள் டெஹ்ரி ஊருக்குள் நுழையாமலேயே இடப்புறம் திரும்பி விட்டோம். அங்கிருந்து தராசு (Dharasu) என்ற ஊருக்குச் சென்றேம்.

தராசு என்ற ஊரில் நுழைந்ததும் ஒரு செக்-போஸ்டில் எங்களே மடக்கி விட்டார்கள். இரண்டு பேர் வந்து காருக்குள் எட்டிப் பார்த்தார்கள். "என்ன செக்கிங்?" என்று கேட்டேன். பதில் சொல்லாமல் அங்கிருந்த ஒரு போர்டைக் காட்டினர் ஜவான். வெளிநாட்டுக்காரர்கள் ஒருவரும் அனுமதி யின்றி அந்த எல்லேயைக் கடந்து செல்ல முடியாதாம். வெளிநாட்டுக்காரர்கள் யாராவது இருக்கிறர்களா என்று எங்கள் காருக்குள் எட்டிப் பார்த்திருக்கிறர் அவர். அவ்வளவுதான்.

அந்த செக்-போஸ்டிலிருந்து ஒரு மைல் சென்றல், மலேப் பாதை இரண் டாகப் பிரிகிறது. நேரே சென்றல் உத்தரகாசிக்கும், அங்கே யிருந்து கங்கோத் ரிக்கும் போகலாம். இடப்புறம் திரும்பும் பாதை நம்மை ஜமுனேத்ரி என்ற யமுனேத்ரிக்கு அழைத்துச் செல்லும்.

நாங்கள் இடப்புறம் திரும்பி எங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம். நல்ல அகலமான, ஆபத்தில்லாத அருமையான கார் பாதை அது. எங்கள் இடப்புறத்தில் வானுயர்ந்த மரங்கள்; வலப்புறம், தாவரங்களேயற்ற வறண்ட மலைத்தொடர்ச்சிகள். ஒவ்வொரு நிமிடமும் நாங்கள் உயர்ந்து கொண்டே சென்றோம்! சட்டென்று 7,000 அடி உயரத்திற்கு வந்து விட்டதை அங்கிருந்த ஒரு போர்டு அறிவித்தபோது எங்களால் நம்பவே முடியவில்லை.


பிறகு அங்கிருந்து ஒரே இறக்கம். அந்த இருபத்தாறு மைல் பயணம், 'ஜிலு ஜிலு'வென்று பரம சுகமாயிருந்தது.

மாலை நான்கு மணி சுமாருக்கு 'பர்கோட்' என்ற ஊருக்கு வந்து சேர்ந்தோம். அங்கு அரசினர் தங்கும் விடுதி ஒன்றிருக்கிறது. அந்த ஊர் அண்மையில் டேராடூனுடன் இணைக்கப்பட்டிருப்பதால் அங்கு லாரி, ஜீப் போக்குவரத்து பெருகத் தொடங்கியிருக்கிறது.

நாங்கள் தங்கியிருந்த விடுதியிலிருந்து யமுனையின் முதல் தரிசனம் கிடைத்தது. அது வற்றிப் போய் ஒரு வாய்க்காலாகத் தொலைவில் ஓடிக் கொண்டிருந்தது. மறுநாள், அது உற்பத்தியாகும் இடத்தைக் காணப் போகிறோம் என்று நினைத்தபோது, சற்று 'திரில்'லிங்காக இருந்தது.

முன்பெல்லாம் தராசு வரையில்தான் பஸ் போகுமாம். அங்கிருந்து, ஜமுனோத்ரிக்கு நடையாகத்தான் செல்ல வேண்டுமாம். பின்னர், பர்கோட் வரையில் பஸ் வந்தது. அங்கிருந்து 25 மைல்கள் நடைப் பயணம். தற்போது, இன்னும் பதினைந்து மைல்கள் வரை பஸ் போகிறது. அங்கிருந்துதான் பத்து மைல்கள் நடந்து செல்ல வேண்டுமாம். 'சேனுசட்டி' என்ற இடத்தில்

யமுனோத்ரிக்குச் செல்லும் மலைப் பாதையும் பாகீரதியும்



பஸ்கள் நிறுத்தப்பட்டாலும், கார்களும் ஜிப்புக்களும் மேலும் ஒன்றரை மைல் செல்ல முடியும் என்று எங்கள் டாக்ஸி டிரைவர் புஷ்க்கர் கூறினர்.

பர்கோட்டில் எங்களுக்கு ஒரு புதுப் பிரச்னை தோன்றியது. நாங்கள் பர்கோட் வரைதான் அந்த டாக்ஸியை ஏற்பாடு செய்து கொண்டு வந்தோம். அங்கிருந்து பஸ்ஸிலோ டாக்ஸியிலோ போய் விடலாம் என்று திட்டமிட்டிருந்தோம்.

ஆனல், அங்கு வந்து பார்த்த பிறகுதான் அம்மாதிரி வசதிகள் ஒன்றும் அங்கில்லை என்பது புரிந்தது. என்ன செய்யலாம் என்று நாங்கள் 'மாநாடு' கூட்டி யோசித்துக் கொண்டிருந்தபோது புஷ்க்கர் ஒரு யோசனையை வெளியிட்டார்.

''நாளைக் காலையில் உங்களை அழைத்துக் கொண்டு போய் ராணுசட்டியில் விட்டு விடுகிறேன். நீங்கள் ஜமுனோத்ரிக்குப் போய்விட்டு, மறுநாட் காலைதான் திரும்ப முடியும். அதுவரை அங்கேயே காத்திருக்கிறேன். நீங்கள் திரும்பியதும் உங்களை அழைத்துச் சென்று உத்தரகாசியில் விட்டுவிடுகிறேன். அங்கிருந்து எனக்கு ரிஷிகேசத்திற்கு சவாரி கிடைக்கும்'' என்று ஜவான் மூலம் தூது விட்டனுப்பினர் புஷ்க்கர். நாங்கள் அந்த 'ஐடியா'வை ஏற்றுக் கொண்டு, ஏதோ ஒரு தொகையைப் பேசி முடிவு செய்தோம். அடுத்து, பெட்ரோல் பிரச்னை வந்தது. அந்த ஊரில் பெட்ரோல் பங்க்கே கிடையாது.

மறுநாட்காலை, எங்கள் விடுதிக்குப் பக்கத்தில் இருந்த ஒரு பொதுப்பணித் துறை அலுவலகத்திற்குச் சென்று அங்கிருந்த அதிகாரியைச் சந்தித்து எங்கள் நிலைமையை விளக்கினேம். பாதுகாப்பு இலாகாவினர் தந்த கடிதத்தை அவரிடம் காட்டினேம். அதில் 'இதைக் காணும் எல்லா மிலிடரி, சிவில் அதிகாரிகளும் இந்தப் பத்திரிகைக் குழுவினருக்குத் தேவையான உதவிகளைச் செய்து தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்' என்று ஒரு வாசகம் இருந்தது. அதைப் பார்த்த பி. டபிள்யூ. டி. அதிகாரி, ''உங்களுக்கு தற்போது எவ்வளவு பெட்ரோல் வேண்டும் சொல்லுங்கள்?'' என்று கேட்டார்.

அன்று ஜூன் மாதம் 21-ந் தேதி, வெள்ளிக்கிழமை. யமுனையின் உற்பத்தி ஸ்தானத்தைத் தரிசிக்கப் புறப்பட்டோம். செல்லும் வழியில் பர்கோட் கடைவீதியில் இருந்த ஒரு போர்டு கண்ணில் பட்டது. அதில்

''ஜம்னுமாய்'க்கு ஜெய்!''



'கங்கானி 6.4 கி.மீ., குந்னேர் 15 கி. மீ., சேனுசட்டி 27 கி. மீ., ஹனுமான்சட்டி 37 கி. மீ., யமுனேத்ரி 47 கி.மீ.' என்று எழுதப் பட்டிருந்தது. அதாவது பர்கோட்டி லிருந்து சுமார் முப்பது கிலோ மீட்டர் வரை நாங்கள் காரில் செல்லலாம். அதற்கு மேல் நடைதான்.



கங்கானியில் கோயிலும் குளமும்

அது குறுகலான, கரடு முரடான பாதை. சில இடங்களில் கன மழை யின் காரணமாகப் பாதை பழுதுபட் டிருந்தது. கூலியாட்கள் அதைச் சீர்படுத்திக் கொண்டிருந்தனர்.

எங்களுக்கு இடப்புறத்தில் யமுனே ஓடிக் கொண்டிருந்தது. அலகநந்தா வையும் பாகீரதியையும் மந்தாகினியையும் பார்த்த கண்களுக்கு இது மிகச் சாதாரண ஓட்டமாக இருந்தது. அதன் கரையிலுள்ள பிரதேசமும் வறட்சியாகத்தான் காணப்பட்டது. கங்கைக் கரையில் கண்ட வளத்தை இங்கு காண முடியவில்லே. பசுஞ் சோலேகளேயோ, பயிர் சாகுபடிகளேயோ காணேம். அங்கொன்றும் இங்கொன்றுமாக மலேமீது சிறு கிராமங்கள் தென்பட்டன. ஆனல் அதிக ஜனநடமாட்டம் இல்லே.

நான்கு மைல் பயணத்திற்குப் பிறகு 'கங்கானி' என்ற கிராமத்திற்கு வந்து சேர்ந்தோம். அங்கு யமுனுதேவிக்கு ஒரு கோயிலும், அதை யொட்டி சிறுகுளமும் இருப்பதாக முன்பே படித்திருந்ததால் காரை நிறுத்தச் சொல்லிக் கோயில் இருக்கும் இடத்தை விசாரித்தேன். பாதையிலிருந்து நூறு அடி கீழே இறங்கிப் போக வேண்டும் என்று அருகில் நின்றிருந்த ஓர் ஆசாமி கூறவே, இறங்கி நடந்தோம்.

அந்தச் சிறு குளமும், அதையொட்டியுள்ள கோயிலும் யமுனேயின் கரையில் இருக்கின்றன. அந்தக் கோயிலில் யமுனுதேவிக்கும், கங்காதேவிக்கும் சிலா வடிவங்கள் காணப்படுகின்றன. அந்தக் குளத்தில் பாதாள வழியாகக் கங்கை வந்து கலக்கிறது. பின்னர், அக் குளத்தின் நீர் யமுனேயுடன் கலக்கிற தாம். ஒருவகையில் பார்த்தால் கங்கானியில் கங்கையும் யமுனேயும் சங்கம மாகிறது என்றே கூற வேண்டும்.

இடையிலிருக்கும் பெரிய மலேதான் கங்கையையும் யமுனேயையும் பிரித்து வைத்திருக்கிறது. அது இல்லாவிட்டால், அலகாபாத்தில் சங்கமம் ஆகும் இவ்விரு நதிகளும், கங்கானியிலேயே சங்கமமாகி இருக்கும். இம் மலேக்கு இருபுறமும், பத்து மைல் இடைவெளியில் கங்கையும் யமுனேயும் ஓடிக் கொண்டிருக்கின்றன.

கங்கானியில் எங்களேச் சற்றுக் காக்க வைத்து விட்டார்கள். அங்கு 'கேட் சிஸ்டம்'. அதாவது ஒரு வழிப் போக்குவரத்து. சேனுசட்டியிலிருந்து காரோ, பஸ்ஸோ வந்த பிறகுதான் நம்மைப் போக விடுவார்கள். அந்தளே குறுகலான பாதை. சிறிது நேரம் பார்த்துவிட்டு, வண்டி ஒன்றும் வராததால் எங்கள் காரைப் போக அனுமதித்தார்கள். அங்கிருந்து ஒன்பது



சேனுசட்டி பஸ் நிலையம்

கிலோமீட்டர் சென்றதும், 'குத்னேர்' என்ற சிற்றூர் வந்தது. அங்கேயும் சிறிது நேரம் காக்க வைத்த பிறகே எங்களை அனுப்பி வைத்தார்கள்.

அடுத்து சேனுசட்டி என்ற ஊர் வந்தது. 'சியானுசட்டி' என்பதுதான் சேனுசட்டி ஆகியிருக்கிறது. அங்கு இருபத்தைந்து பஸ்களுக்கு மேல் நின்று கொண்டிருந்தன. அத்தனையும் டூரிஸ்ட் பஸ்கள். எல்லோரையும் அங்கே இறக்கி விட்டுவிடுவார்கள். பிறகு நடைதான். அல்லது, தண்டியோ கண்டியோ, மட்டக் குதிரையோ ஏற்பாடு செய்துகொண்டு செல்லலாம்.

சேனுசட்டியில் தங்குவதற்கு அறைகள் இருக்கின்றன. ஆகாரத்திற்கு, சிற்றுண்டிச்சாலை இருக்கிறது. யமுனேத்ரிக்குச் செல்பவர்களும், யமுனேத்ரியிலிருந்து திரும்புபவர்களும் அங்கு கூடுவதால் அந்த இடம் எப்போதும் திருவிழா கோலம் பூண்டிருக்கும். அசதியால் ஓய்வெடுத்துக் கொள்பவர்களும், துணிமணிகளைத் துவைத்து உலர்த்துபவர்களும், சமைத்துச் சாப்பிடுபவர்களும்,மூட்டைகளைத் தூக்கிக்கொண்டு பஸ்ஸுக்கு ஓடுபவர்களுமாக சேனுசட்டி 'ஜே ஜே' என்றிருக்கிறது. நான் சந்தித்துப் பேசியவர்களில், பாதிக்கு மேல் மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாகவும், மேற்கு வங்காளத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தார்கள். முக்கால்வாசிப் பேர் படிப்பு எழுத்து அதிகமில்லாத கிராமப்புற மக்கள். ஆண் பெண் எல்லாருமே அநேகமாக ஐம்பது வயதைக் கடந்தவர்கள்.

எத்தனையோ தொலைவிலிருந்து புறப்பட்டு, எந்தவித சௌகரியத்தையும் எதிர்பார்க்காமல், எதிர்ப்படும் தொல்லைகளையெல்லாம் சிறிதும் பொருட்படுத்தாமல், குடும்பம் குடும்பமாக, நாட்கணக்கில் இப்படிப் பயணம் செய்கிறார்களே! இவர்களை ஊக்குவிக்கும் அந்தச் சக்திதான் என்ன? அதற்குப் பெயர்தான் பக்தியா? இவர்கள் பெறத் துடிக்கும் பலன்தான் என்ன? அதற்குப் பெயர் முக்தியா?

என் இமாலயப் பயணங்களின்போது இத்தகைய கேள்விகள் என் நெஞ்சில் எழுந்த வண்ணம் இருக்கும். சேனுசட்டியிலும் அந்தக் கேள்விகள் மீண்டும் மீண்டும் எழுந்தன.

சேனுசட்டியிலிருந்து ராணுசட்டிக்குச் சென்ற போது மலைப் பயணம் உள்ளத்தைக் கொள்ளை கொள்வதாக இருந்தது. மேலே போகப் போக, கீழே மலைப் பாம்பு போல் வளைந்து வளைந்து செல்லும் மலைப் பாதையும், சேனுசட்டியிலிருந்த பாலமும், அதனருகில் வரிசையாக நின்ற பஸ்களும் கொலுக் காட்சியாகத் தோற்றம் அளித்தன.


ராணுசட்டியை அடுத்துள்ள பாடியாசட்டி என்ற இடத்தில் புஷ்க்கர் டாக்சியைச் சட்டென்று நிறுத்திவிட்டு, ''சார், இனிமேல் வண்டி போகாது. நீங்கள் நடந்துதான் போக வேண்டும்'' என்றார். அங்கு ஒரு டீக்கடை இருந்தது. ''நீங்கள் நாளைக் காலையில் திரும்பி வரும் வரையில் நான் இங்கேயே இருக்கிறேன், போய் வாருங்கள்'' என்று விடை கொடுத்தார்.

''சாமான்களெல்லாம் ஜாக்கிரதையாக இருக்குமா?'' என்று எங்களுடன் வந்த ஜவானிடம் கேட்டேன் நான். அந்தக் காரின் டிக்கியிலிருந்த ஒரு பெட்டியில் நிறையப் பணம் இருந்தது. அந்தக் கவலைதான் எனக்கு.

''அதைப் பற்றி நீங்கள் கவலைப்படாமல் போய் வாருங்கள். இது டில்லியில்லை, உத்தர்கண்ட்'' என்று பெருமையுடன் கூறினார் புஷ்க்கர். 'ஏன் அப்படிக் கேட்டோம்' என்று அவமானத்தால் குன்றிப் போனேன் நான்.

இங்கிருந்து சுமார் பத்து மைல்கள் ஒரே மலையேற்றம்தான். கிட்டத்தட்ட 8,000 அடி உயரத்தில் இருந்தோம். இன்னும் 3,000 அடி ஏறியாக வேண்டும். எங்களுக்குத் துணையாக நிறையப் பேர் வந்து கொண்டிருந்தார்கள். தடியை ஊன்றிக் கொண்டு, தலையில் மூட்டையுடன் 'ஜம்னு மாய்க்கு ஜெய்' 'கங்கா மாய்க்கு ஜெய்' என்று கோஷமிட்டவாறே பல முதியவர்கள் வந்தார்கள். அப்பா! என்ன வேகம்? மலையில் நடப்பதற்கென்றே பிறந்தவர்களோ? பின்னால் வந்த சிலர் எங்களை முந்திக் கொண்டு சென்றார்கள். வயதான பெண்மணி ஒருத்தி தண்டியில் சென்றார். கிழவர் ஒருவர் தன் உடலை மூட்டையாக முடக்கிக் கொண்டு கண்டியில் அமர்ந்து சென்றார். பணக்கார அம்மாள் ஒருத்தி, 'ஜம்'மென்று குதிரை சவாரி செய்து கொண்டு வந்தார்.

ஹனுமான்சட்டி பாலம்





இதற்குப் பெயர்தான் 'கண்டி'


நாற்காலி போன்ற மரத்தாலான ஆசனத்திற்குப் பெயர்தான் தண்டி. இதை நான்கு பேர் கலபமாகச் சுமந்து செல்கிருர்கள். அதையாவது ஏற்றுக் கொள்ளலாம்; ஆனுல், இந்தக் 'கண்டி'யைத்தான் என்னுல் ஒத்துக்கொள்ள முடியவில்லை. கூடை போன்ற ஆசனத்தைக் கூலியாள் ஒருவன் தன் முதுகில் கட்டிக் கொள்கிருன். அதில் ஒருவரோ, அல்லது ஒருத்தியோ ஏறி அமர்ந்து கொள்கிருர்கள். அந்தச் சுமையை அந்தக் கூலி தூக்கிக் கொண்டு முன்னே சாய்ந்தபடி, மெள்ள மெள்ள, தள்ளாடித் தள்ளாடி மலையேறுகிருன். அது என்ன சௌகரியமான பாதையா? ஆபத்துக்கள் நிறைந்த பாதை. சரளைக் கற்கள் குத்துகின்றன; கூழாங் கற்கள் வழுக்குகின்றன. சில இடங்களில் நீர் கசிந்து ஓடுகிறது. சற்று அஜாக்கிரதையாகச் சென்ருல், அதோகதிதான்! ஆபத்துக்கள் ஒருபுறம் இருக்க, மனிதச் சுமையோடு இந்தக் கூலிகள் ஏறி இறங்குவதைப் பார்த்தால் மிகவும் பரிதாபமாக இருக்கிறது.

அடுத்து நாங்கள் ஹனுமான்சட்டி என்ற இடத்தை நெருங்கினேம். அங்கு ஹனுமான் கங்காவும் யமுனையும் கலக்கிறது. பாலத்தைக் கடந்து சென்ருல் ஹனுமான்சட்டி என்ற சிற்றூர் வருகிறது. பத்ரிநாத் செல்லும் வழியிலுள்ள ஹனுமான்சட்டியிலுள்ளது போல் இங்கு ஆஞ்சநேயர் கோயில் ஒன்றுமில்லை. பயணிகள் தங்குவதற்கான சில விடுதிகள்மட்டுமே இருக்கின்றன.

நாங்கள் நடந்து கொண்டே யிருந்தோம். எனக்குப் பசி வயிற்றைக் கிள்ளி யது. கண்ணனும் ஸ்ரீநிவாசனும் வழியில் டீ சாப்பிட்டார்கள். எனக்கு அது பிடிக்கவில்லை. அங்கெல்லாம் ஏதோ ஒரு காட்டு மரத்தை வெட்டி விறகுகளாகப் பிளந்து அப்படியே பச்சையாக வைத்து அடுப்பெரிக்கிருர்கள். அதிலிருந்து ஒருவிதமான எண்ணெய் கசிகிறது. அதனுல் அது அணையாமல் எரிகிறது. மழையாலும், பனியாலும் வருடம் பூராவும் அவதிப்படும் மக்களுக்காக இயற்கை படைத்துத் தந்திருக்கும் அபூர்வ விறகு அது. ஆனுல் அதிலிருந்து வரும் புகையின் நாற்றம் என் நாசிக்கு ஒத்துக்கொள்ளவில்லை. அது வயிற்றைக்



இது தண்டி



மட்டக் குதிரை சவாரி

குமட்டியது. அதனுல் எங்காவது டீக்கடை வருகிறது என்றுலே எனக்கு 'அலர்ஜி'. அதுவும் அங்குள்ள ஆசாமிகளின் ஹைதர் காலத்து ஆடைகளும், குதிரைச் சாணமும், அவை தாராளமாகக் கழிக்கும் சிறுநீரும் வயிற்றைப் புரட்டி யெடுத்தது. இந்த அலர்ஜி கங்கோத்ரி, கேதார்நாத் பயணங்கள் வரை தொடர்ந்து, என்னைப் பெரும் சோதனைக்கு உள்ளாக்கியது.

நல்ல வேளை, கண்ணன் தன் வீட்டிலிருந்து கோதுமை உருண்டைகள் கொண்டு வந்திருந்தார். பூரி பொரித்து அதைத் தூளாக்கி, சர்க்கரையில் கலந்து, ரவா லாடு போல் செய்து அவருடைய தாயார் வழிப் பயணத்துக்காகக் கொடுத்திருந்தார். அது எனக்கு மிகவும் சௌகரியமாக இருந்தது. பசிக்கும்போதெல்லாம் அதில் கொஞ்சம் எடுத்து வாயில் போட்டுக் கொண்டு தண்ணீர் குடித்தால் ஒரு மாதிரியாக இருக்கும். கடைகளில் கிடைக்கும் வறட்டு ரொட்டியும் சப்ஜியும் எனக்குப் பரம விரோதிகளாகி விட்டன. கைவசம் இருந்த கோதுமை உருண்டைகள் தீர்ந்துவிட்டால் என் உணவுப் பிரச்னையை எப்படிச் சமாளிப்பது என்ற கவலைக் கோடுகள் கண்ணனின் முகத்தில் படரத் தொடங்கிவிட்டதை நான் கவனிக்கத் தவறவில்லை. எல்லாவித மான ஆகாரத்திற்கும் தங்களைப் பழக்கப்படுத்திக் கொள்ள முடியாதவர்களுக்கு இமாலயப் பயணம் ஓரளவு கடுமையாகத்தான் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

உடற்களைப்புடன் நான் சற்றுத் தட்டுத் தடுமாறி நடப்பதைக் கண்ணன் கவனித்துவிடவே, என் அருகிலேயே நடந்து வந்தார். வெய்யில் ஏற ஏற, 'ஜான்கிசட்டி சீக்கிரம் வராதா?' என்று ஏங்கத் தொடங்கினேன் நான்.

அவர்கள் 'ஜான்கி' என்று அழைத்ததால் அது, அன்னை ஜானகியைக் குறிப்பதாக இருக்கும் என்று முதலில் நினைத்தேன். ஆனுல், சீதா பிராட்டிக்கும் அந்த இடத்திற்கும் சிறிதும் சம்பந்தம் இல்லை என்று பின்னரே தெரிந்தது.

ஓர் அசுத்தமான கிராமத்தைக் கடந்துதான் ஜான்கிசட்டிக்குச் செல்ல வேண்டும். அந்தக் கிராமத்தின் பெயர் பீஃப் (Beeph). அங்கு பாழடைந்து போன ஓரிரண்டு தங்கும் விடுதிகள் இருந்தன. முன்காலத்தில் யமுனோத்ரிக்கு வந்தவர்கள் அங்கு ஓர் இரவு தங்கிவிட்டுச் செல்வார்கள் போலிருக்கிறது. அக் கிராம மக்கள், அறுவடை செய்த தான்யப் பயிர்களின் வைக்கோலைக் கட்டுக் கட்டாகக் கட்டி வீட்டின் கூரைகளில் காய வைத்துக் கொண்டிருந்தார்கள். அது என்ன பயிர் என்பதில் எங்களுக்குள் கருத்து வேற்றுமை தோன்றவே, ''அவர்களையே கேட்டுப் பார்க்கலாம்'' என்றேன் நான். கேட்டோம். அவர்கள் கூறியது யாருக்குமே புரியவில்லை.


யமுனோத்ரி செல்ல அந்த கிராமத்தில் கோவேறு கழுதைகளும், மட்டக் குதிரைகளும் கிடைக்கின்றன. தேவையானவர்கள் அவற்றை ஏற்பாடு செய்து கொள்ளலாம். அந்த ஊரில் ஸ்ரீ லட்சுமிநாராயணர் கோயில் ஒன்றிருக்கிறது.

அங்கிருந்து பார்த்தால், யமுனையின் அக்கரையில் ஒரு கிராமம் தெரிகிறது. அதன் பெயர் 'கர்சாலி'. அதுதான் இந்தப் பகுதியில் பாரதத்தின் கடைசிக் கிராமம். பத்ரிநாத் பகுதியில் மானா கிராமம் போல் கர்சாலி இந்தப் பகுதியின் எல்லைக் கிராமம். அந்த மலையைக் கடந்தால் திபெத்தின் எல்லை தொடங்குகிறது. இந்தக் கர்சாலி கிராமத்தில் யமுனோத்ரி கோயிலில் பணி புரியும் பண்டாக்கள் குடியிருக்கிறார்களாம். அந்தக் கிராமத்தில் சிறு கோயில் ஒன்று இருப்பது நாங்கள் நின்ற இடத்திலிருந்து தெரிந்தது. விசாரித்தபோது, அது யமனுடைய கோயில் என்றார்கள். யமனுக்குக் கோயிலா? ஆமாம். ஒரு புராணத்தின்படி சூர்யபுத்ரியான யமுனா, யமனுடைய சகோதரியாம். அதற்காக அவனுக்கு அங்கு கோயில் இருக்கிறதாம். அங்கு போய்வர முடியுமா என்று யோசனை செய்து பார்த்தோம். கீழிறங்கி, நதியைக் கடந்து அங்கு ஏறிச் செல்வது அத்தனை எளிதானதாகத் தோன்றவில்லை. அங்கு போய் வந்தால், அன்று மாலை யமுனோத்ரிக்குச் செல்ல முடியாது. கர்சாலி கிராமத்திற்குச் சென்றுவரும் எண்ணத்தைக் கைவிட்டு, மேலே நடந்தோம்.

நாங்கள் ஜான்கிசட்டிக்கு வந்து சேர்ந்தபோது மணி பன்னிரண்டுக்கு மேலாகிவிட்டது. அங்கு சிறு கடைவீதி இருந்தது. அதில் சுமாரான ஓர் ஓட்டல் இருப்பது கண்ணில் பட்டபோது எனக்குச் சற்று தென்பு ஏற்பட்டது. கொஞ்சம் சாதமும் தயிரும் கிடைத்தால் போதுமே!

அது மட்டுமல்ல; ஜான்கிசட்டியில் நவீன வசதிகளுடன் கூடிய ரெஸ்ட் ஹவுஸ் ஒன்றும் இருந்தது. இது எதிர்பாராமல் கிடைத்த 'போனஸ்'. ஆனால், கைக் கெட்டியது வாய்க்கு எட்டவில்லையே! அதில் ஒரே ஓர் அறைதான் இருந்தது. அதில் வேறொரு குடும்பம் தங்கியிருந்ததால் நாங்கள் வெளி தாழ்வாரத்தில் தங்கினோம்.

அவர்கள் மொத்தம் ஐந்தாறு பேர். டிரான்ஸிஸ்டரில் இந்திப் பாட்டில் மூழ்கியிருந்த இரண்டு சகோதரிகளை தம்பிப் பிள்ளையாண்டான் வந்து தொந்தரவு செய்து கொண்டிருந்தான். அப்பா, கையில் காமிராவுடன் எல்லோரையும்



யமுனோத்ரி செல்லும் வழியில் ஒரு கிராமம்

அழைத்துக் கொண்டிருந்தார். அம்மா, கைப் பையிலிருந்த சிறு கண்ணாடியை எடுத்து, தன்னை அழகு பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவர்களெல்லாம் சற்று முன்புதான் யமுனோத்ரியிலிருந்து திரும்பியிருந்தார்கள் என்பது அவர்கள் பேச்சிலிருந்து புரிந்தது. அவர்களை அழைத்துச் சென்ற குதிரைக்காரர்கள், பைசாவுக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள். அதற்குள் அந்தப் பெண்கள் டிரான்ஸிஸ்டரை நிறுத்திவிட்டு, குதிரைக்காரன் உதவியுடன் குதிரையின் மீது ஏறி அமர்ந்து கொண்டார்கள். தம்பியும் குதிரைக்குட்டி ஒன்றின்மீது ஸ்டைலாக உட்கார்ந்து கொண்டான். அம்மாவுக்கும் ஆசை பிறந்துவிட்டது. இரண்டு பேர் உதவியுடன் மிகவும் சிரமப்பட்டு ஒரு குதிரையின் மீது ஏறி அமர்ந்தாள். (குதிரையும் சிரமப்பட்டது. பாவம்!) இவர்கள் எல்லோரையும் அப்பா படம் பிடித்தார். ஒரே சிரிப்பு! கும்மாளம்!

தாழ்வாரத்தில் படுத்துக் கொண்டே எல்லாவற்றையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த எனக்கு எரிச்சலாக இருந்தது. நமக்கு உற்சாகம் குன்றியிருக்கும்போது, பிறர் குஷியாக இருப்பதை நம்மால் ரசிக்க முடிவதில்லையே!

கடைவீதிக்குச் சென்ற கண்ணனும், ஸ்ரீநிவாசனும் ஓட்டலில் கிடைத்ததைச் சாப்பிட்டுவிட்டு, எனக்குக் கொஞ்சம் 'சாவல்' மட்டும் வாங்கி வந்திருக்கிறார்கள். வேறு ஒன்றுமில்லை, சாதம்தான்! 'தஹி' கிடைக்கவில்லையாம். அதாவது தயிர்! என்ன செய்வது? கையில் வைத்திருந்த ஊறுகாய்களையும் கறிவேப்பிலைப் பொடியையும் போட்டு, இரண்டு உருண்டைகள் உருட்டி வாயில் போட்டுக் கொண்டேன். அதற்கு மேல் வேண்டியிருக்கவில்லை. வயிற்றைக் குமட்டியது!

''என்னப்பாது! எதையுமே சாப்பிடாவிட்டால் என்ன செய்வது? உன்னை யமுனோத்ரிக்கு அழைத்துக் கொண்டுபோய் வருவது பெரிய பாடாயிருக்கும் போலிருக்கே'' என்று கண்ணன் அலுத்துக் கொண்டார்.

நான் 'டல்'லடித்தது ஸ்ரீநிவாசனுக்கும் கவலையை அளித்திருக்க வேண்டும். என்னை உற்சாகப்படுத்துவதற்காக ''சார், இங்கே ஒரு விசேஷம் தெரியுமா? மார்க்கெட்டுக்குப் பக்கத்திலே ஒரு 'ஹாட் வாட்டர் ஸ்பிரிங்' இருக்கு. அந்தத் தண்ணீர் ரொம்பச் சுடவில்லை. அதை மார்க்கண்டேய தீர்த்தம் என்கிறார்கள். அதை போட்டோ பிடித்துக் கொண்டுவிட்டேன்'' என்றார்.

''மார்க்கண்டேய தீர்த்தமா?'' என்று கேட்டேன் நான்.

''ஆமாம், 'என் அந்தப் பெயர் வந்தது?'ன்னு கேட்டேன். இங்கே மார்க்கண்டேயர் தபஸ் பண்ணியிருக்காராம்'' என்றார் ஸ்ரீநிவாசன்.

மணி ஒன்றாகிவிட்டது. இனி நேரம் கடத்த முடியாது என்று பயணத்தை தொடருவதில் தீவிரம் காட்டத் தொடங்கினார் கண்ணன். ஜவானிடம் சாமானெல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்க்கச் சொல்லிவிட்டு, யார் யார் எதை எடுத்துக் கொள்வது என்று முடிவு செய்தார்.

''ஏம்ப்பா, இன்னும் நாலரை மைல் தூரம் இருக்காம். போகப் போக ரொம்ப ஏற்றமாம். மூச்சு வாங்குமாம். நீ அத்தனை தூரம் நடப்பேன்னு எனக்குத் தோணலே. பேசாமெ நான் சொல்றதைக் கேளு. நீ குதிரையிலே வந்துடு. நாங்க நடந்துடறோம்'' என்றார் கண்ணன் என்னைப் பார்த்து.

நான் சற்றுத் தயங்கினேன்.

''நான் சொன்னாக் கேளு.. பயம் ஒன்றுமில்லை. உனக்கு அதுதான் சௌகரியம். சிரமம் இல்லாமெ மூணு மணிக்கெல்லாம் யமுனோத்ரி போயிட்டு எல்லாத்தையும் பார்த்து, போட்டோ எடுத்துக் கொண்டு ஆறு மணிக்குள்ளே கீழே இறங்கிடலாம். ராத்திரி இங்கே தங்கிட்டு, நாளைக் காலையிலே புறப்பட்டு ராணாசட்டிக்குப் போய் அங்கிருந்து காரில் மத்தியானத்துக்குள்ளே உத்தர காசி போய்ச் சேர்ந்துடலாம். யோசிக்காதே, கிளம்பு.. ஒரு குதிரைகூடப் பேசி வெச்சுட்டேன்.. இருபத்தைஞ்சு ரூபா வாடகை. ஃபஸ்ட் கிளாஸ் குதிரை. அதோ பாரு, அந்த வெள்ளைக் குதிரை தான்..'' என்று சிறு குழந்தைக்கு மிட்டாய் தந்து ஆசை காட்டுவது போல் என்னிடம் குழைந்தார் கண்ணன்.

யமுனோத்ரி சென்று திரும்பும் சாது



நான் எழுந்து குதிரையை நோக்கி நடந்தேன். குதிரைக்காரன் ஒரு சிறு பாறையை ஒட்டினாற்போல் குதிரையை நிற்க வைத்து, பாறையின்மீது என்னை ஏறச் சொல்லிக் குதிரையின் முதுகைச் சுற்றிக் காலைத் தூக்கிப் போடச் சொன்னான். அவன் சொன்னபடி செய்தேன்.

''அம்மாடீ ..'' — கத்திவிட்டேன் நான்.

திடீரென்று சுளுக்கிக் கொண்டு விட்ட மாதிரி தொடையில் 'சுரீர்' என்று ஒரு வலி. காலைச் சட்டென்று எடுத்துவிட்டேன்.

''எனக்குக் குதிரை வேண்டாம். நடந்தே வருகிறேன்.'' — கண்ணனிடம் மன்றாடினேன் நான்.



மார்க்கண்டேய தீர்த்தம்

''காலை அவ்வளவு தூக்காதே.. மெல்ல, இதோ, இப்படிப் போடு'' என்று அருகில் வந்து சொல்லிக் கொடுத்தார் கண்ணன்.

அதே மாதிரி காலைத் தூக்கினேன்.

''ஐயோ, அப்பாடீ!''

உயிர் போவது போல் எங்கோ நரம்பு ஒன்று இழுத்தது.

''சே! நான் ஏறமாட்டேன். பிராணன் போனாலும் சரி, நடந்துதான் வருவேன்.''—நான் இரைச்சல் போட்டேன்.

குதிரைக்காரன் கேலியாகச் சிரித்தான். தொலைவில் பீடி பிடித்துக் கொண்டிருந்த ஜவான் சற்று மரியாதையுடன் புன்னகை புரிந்தான்.

மறு பேச்சுப் பேசாமல் நான் யமுனோத்ரியை நோக்கி நடக்கத் தொடங்கினேன். மூவரும் பின்னால் வந்தனர்.

நூறு அடி நடந்திருப்பேன். எதிரில் நான் கண்ட காட்சி என் நெஞ்சை உருக்கியதோடு, என் இதயத்தில் நம்பிக்கையை ஊட்டுவதாக இருந்தது.

ஒரு காலை இழந்திருந்த சாது ஒருவர், ஊன்றுகோல்களுடன், யமுனோத்ரியிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தார்!

மிகக் கடினமான பாதையில், செங்குத்தான ஏற்றத்தில், நாலரை மைல்கள் ஒற்றைக் காலுடன் பயணம் செய்துவிட்டு வரும் அந்தச் சாதுவின் மன வலு எத்தகையதாக இருக்க வேண்டும்? அவரைக் கண்டதும் என் உள்ளத்திலும் வீரம் பிறந்தது. ''ஜம்னா மாய்க்கு ஜெய்'' என்று உரக்கக் குரல் கொடுத்தேன். அந்த சாதுவும் பதிலுக்கு ''ஜம்னா மாய்க்கு ஜெய்'' என்றார்.

நடந்து கொண்டேயிருந்தோம். சில இடங்களில் பாதை மிகக் குறுகலாய் இருந்தது. எதிரில் வருபவர்களுக்கு வழிவிடக்கூட இடமில்லை. இந்த நிலையில், எதிரில் தண்டியும் கண்டியும் குதிரையும் வேறு வந்துவிடும். ஆனால், ஒருவராவது முகம் சுளிக்க வேண்டுமே! கடுமையாக ஒரு வார்த்தை பேச வேண்டுமே! மூச்! ''ஜம்னா மாய்க்கு ஜெய்'' ''கங்கா மாய்க்கு ஜெய்''தான். வேறு அநாவசியப் பேச்சே கிடையாது.

எங்களுக்குப் பின்னால் ஏழெட்டு யாத்திரிகர்கள் வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் மிகவும் வயதானவர்கள். இரண்டு மூன்று பேர் கிழவிகள். நூறு அடிக்கு ஒரு தரம் உட்கார்ந்து இளைப்பாறிவிட்டு வந்தார்கள். அவர்களுடன் அங்கங்கே நானும் சற்று உட்காரத் தொடங்கினேன்.

திருப்பதிக்குப் போகும் வழியில் உள்ள 'முழங்கால் முடிச்சை'ப் பற்றிப் பிரமாதமாகப் பேசுகிறோமே, இங்கே முழுக்க முழுக்க முழங்கால் முடிச்சுக்கள்


தான். முட்டி கழன்று போகிறது; மூச்சு வாங்குகிறது. உண்மையில் திணறி விட்டேன். கால்கள் உதற ஆரம்பித்தன. ஓரடி எடுத்து வைப்பதே மிகவும் சிரமமாகிவிட்டது. ஜவானும், கண்ணனும் மாறி மாறிக் கைலாகு கொடுத்து என்னை நடத்திச் சென்றனர். என் நிலையைக் கண்டபோது எனக்கே சற்று அவமானமாக இருந்தது.

அப்போது என்னைக் கடந்து மேலே சென்று கொண்டிருந்த ஒரு சாது என்னைப் பார்த்தார். சிரித்தார். நானும் சிரமப்பட்டுப் பதிலுக்குச் சிரித்தேன். தன் கையிலிருந்த தடியை என்னிடம் தந்துவிட்டு, ''இதை ஊன்றிக் கொண்டு நடந்து வாருங்கள், அத்தனை சிரமம் தெரியாது'' என்று இந்தியில் கூறிவிட்டுப் போய் விட்டார்.

தெய்வம் எப்படியெல்லாம், எங்கெல்லாம் நம் உதவிக்கு வருகிறது! அந்த சாது யாரோ, நான் யாரோ! அவருக்கு எழுபது வயதுக்கு மேலிருக்கும். கூனல் முதுகு. மூட்டையை வேறு சுமந்து கொண்டிருக்கிறார். என்னைவிட, அவருக்குத்தான் கைத்தடி மிகவும் தேவை. அதை எப்படி என்னிடம் கொடுத்தார்? ஏன் கொடுத்தார்? பதில் கிடைக்காத எத்தனையோ கேள்விகளின் ரகத்தைச் சேர்ந்தவை இவை.

தடியை ஊன்றிக் கொண்டு அடிமேல் அடியெடுத்து வைத்து, மாலை ஐந்து மணிக்கு யமுனோத்ரிக்கு வந்து சேர்ந்தேன். உறைபனி மூடிய மலைச் சிகரங்கள், கரு மேகங்களின் பின்னணியில் பளிச்சிட்டது, புன்னகையுடன் எங்களை 'வா 'வா' என்று வரவேற்பது போலிருந்தது.

யமுனோத்ரி கோயில் தரிசனம்



''அதோ பார், அந்தப் பனிச் சிகரத்தை! வெள்ளிக் கம்பிகளாக உருகி எத்தனை அழகாக யமுனை ஓடி வருகிறாள் பார்.. ஆகா.. அருமை யான காட்சி'' என்றார் கண்ணன்.

''ஆகா, எத்தனை அருமையான 'வ்யூ'! இங்கேயிருந்து ஒரு போட்டோ எடுத்துக் கொண்டு விடுகிறேன்'' என்றார் ஸ்ரீநிவாசன், காமிராவை எடுத்துக் கொண்டே.

''அதுதான் யமுனையின் கோயிலா?''

''அதுவாகத்தான் இருக்க வேண்டும்.''

உடல் அசதியையும் மறந்து ஆலயத்தை நோக்கி உற்சாகத்துடன் நடக்கத் தொடங்கினேன் நான்.



கருவறையில் யமுனாதேவி, கங்காதேவி

12

கருமேகக் கூட்டங்கள் கவிந்து, நீலவானமே இருண்டு போயிருந்தது. செழுமை நிறைந்த மலைகளின் மீது கருமை படிந்திருந்தது. குளிர்காற்று வீசிக் கொண்டிருந்தது. அருவிகளாகக் கொட்டி ஆவேசமாகப் பாய்ந்து கொண்டிருந்த யமுனை, அருகில் ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தாள்.

ஒரு சிறு கடைவீதியைக் கடந்து, பாலத்தின் மீதேறி மறு பக்கமுள்ள யமுனைக் கோயிலின் அடிவாரத்தை அடைந்தோம். கோயிலை அடைய இன்னும் பத்துப் படிகள் ஏறிச் செல்ல வேண்டும்.

நாங்கள் நின்ற இடத்திலிருந்து சற்று கீழிறங்கிப் போனால், யமுனையில் நீராடலாம். அந்த ஆசையும் இருந்தது. ஆனால், அதில் காலை வைத்ததும் தேள் கொட்டினாற்போல் சுரீரென்றது. அலகநந்தாவை விட 'ஜில்'லென்றிருந்தது. ஐஸ் கெட்டது போங்கள்! ஒரு கணம்கூட அதில் நிற்க முடியவில்லை. வெற்றிகரமாக வாபஸ் செய்வது என்று முடிவு செய்தோம். அதற்கு முன், கையில் நீரை எடுத்துப் பருகினோம். யமுனை நீரை எடுத்து ஒரு வாய்ப் பருகினால் பெரிய யாகங்கள் செய்த புண்ணியம் கிடைக்கிறதாம்.

அதோ, ஆலயத்திற்குப் பின்னால் பிரமாண்டமாகத் தெரிகிறதே, அந்த மலைத் தொடருக்கு 'பந்தர்பூஞ்ச்' என்று பெயர். அதன் சிகரம் 21,000 அடி உயரம். ஆஞ்சநேயர் தன் வாலில் தீயைப் பற்ற வைத்துக் கொண்டு லங்காதகனம்

செய்தார் அல்லவா? இலங்கையை அழித்த பிறகு, நெருப்பை அணைப்பதற்கு நேரே இமாலயத்திலுள்ள இந்த மலைச் சிகரத்திற்குத்தான் மாருதி வந்தாராம். எப்போதும் உறைபனியால் மூடப்பட்டிருக்கும் மலையில் தேய்த்து, தன் வாலில் உள்ள நெருப்பை அணைத்துக் கொண்டதால் 'குரங்கு வால்' (பந்தர் பூஞ்ச்) என்று இதற்குப் பெயர் ஏற்பட்டதாம்.

இந்த மலைத் தொடருக்கும் பின்னால் உள்ள 'களிந்தி' என்ற ஐஸ் மலைச் சிகரத்திலிருந்து யமுனை உற்பத்தியாகி வருவதாகச் சொல்லப்படுகிறது. இது யமுனோத்ரியிலிருந்து நான்கு மைல் தொலைவில் உள்ளது. இம் மலையிலிருந்து யமுனா என்றும் ஜானவி என்றும் இரண்டு பெரிய நீர்வீழ்ச்சிகள் பெருகி வந்து யமுனோத்ரிக்கு அருகில் ஒன்று கலந்து நதியாகின்றன.

வட நாட்டில் ஜமுனா என்கிறார்கள். அது நம் பக்கத்தில் யமுனாவாகி யமுனையாகி யிருக்கிறது. ஜம்னோத்ரி யென்றும், யமுனோத்ரியென்றும் அழைக்கப்படும் இடம், அந் நதி உற்பத்தியாகும் இடத்தைக் குறிப்பிடவில்லை. இங்கு யமுனை வடக்கு நோக்கிப் பாய்கிறது (யமுனா+உத்தரி). அப்படிப் பிரவகிப்பது சிறப்பானதாகக் கருதப்படுகிறது. இதே போன்றுதான் கங்கை வடக்கு முகமாகப் பாயும் இடத்தைத்தான் 'கங்கோத்ரி' என்று அழைக்கிறார்கள். பாகீரதி அங்கே உற்பத்தியாகவில்லை. சுமார் பன்னிரண்டு மைல்களுக்கு அப்பாலுள்ள கோமுகத்திலிருந்து அவள் பிறந்து, கீழ்நோக்கி ஓடி வருகிறாள்.

யமுனையில் காலை நனைத்தவுடனேயே என் உடலெங்கும் நடுக்கமுற்று சிலிர்க்கத் தொடங்கியது. குளிர் அதிகமாய் இருந்ததால் சீராகப் பேச முடியாமல் உதடுகள் தாளம் போடத் தொடங்கின.

''இதோ, இங்கே வாப்பா, எத்தனை இதமாக இருக்கிறது பார்'' என்று கண்ணன் அழைக்கவே, அங்கு வேகமாகச் சென்றேன்.

''ஆகா . . .எத்தனை சுகம்!''

காலுக்கடியிலிருந்து நீராவி வந்து, உடலில் சூடேற்றியது. பக்கவாட்டில் இருந்த ஒரு துவாரத்திலிருந்து 'புஸ்... புஸ்' என்று வெளியேறிய ஆவி, புகைமண்டலமாகப் பரவியது.

இது இயற்கையின் கருணை. ஐஸ் நீராக ஓடிக் கொண்டிருக்கும் யமுனைக்குப் பத்தடி தொலைவில், ஓர் உஷ்ண ஊற்று ஓடிக் கொண்டிருக்கிறது. சிரிப்புடன் அழுகை; இன்பத்துடன் துன்பம்; புகழ்ச்சியுடன் இகழ்ச்சி; குளுமையுடன் வெம்மை—என்னே இயற்கையின் சமன் செய்யும் நீதி பரிபாலனம்! கனிவுடன் 'பாலன்ஸ்' செய்யும் அற்புதம்!

''வாப்பா, முதலில் அந்த உஷ்ண குண்டத்தில் போய்க் களைப்புத் தீரக் குளிப்போம். பிறகு அம்மன் தரிசனம் செய்யலாம்'' என்று கண்ணன் கருத்து தெரிவித்து முடிப்பதற்குள், நாங்கள் சுடுநீர்க் குளத்தில் குதித்து விட்டோம். பத்ரிநாத்தில் இருப்பது போன்ற ஒரு குளம்தான் அது. இறங்கும்வரை பயம்; பின்னர் வெளியேற மனமில்லாத இதம். அலுப்பு மிகுந்த நடைக்குப் பின்னர் நடுக்கும் குளிருக்கு இடையே அந்தச் சுடுநீரில் அமுங்கித் திளைக்கும் சுகத்தைச் சொல்லில் விளக்குவது எளிதல்ல. 'இத்தனை முன்யோசனையுடன் 1,08,000 அடி உயரத்தில், எங்களுக்காக ஒரு 'ஹாட் ஸ்பிரிங்' அமைத்துத் தந்துள்ள இயற்கையன்னையே, எங்கள் ஆனந்தக் கண்ணீரையே நன்றிக் கண்ணீராகப் பெற்றுக் கொள், தாயே!'



சுடு நீர்க் குண்டம்



கொதி நீர்க் குண்டம்

நாங்கள் குளித்த சுடுநீர்க் குண்டத்திற்குச் சற்று மேலே மற்றொருகுண்டம் இருக்கிறது. அது இதைவிடச் சூடு மிகுந்தது. கொதிநீரில் மூழ்கிப் பழக்கப் பட்ட ஓரிரு சாதுக்கள் அதில் ஸ்நானம் செய்து கொண்டிருந்தனர்.

அதன் கரையில், மலையேறி வரும் வழியில் எனக்குத் தன் கைத் தடியைத் தந்து உதவிய சாது நின்று கொண்டிருந்தார். ''நலமாக வந்து சேர்ந்திர்களா?'' என்று புன்னகைத்தவாறே ஜாடையால் கேட்டார் அவர். ''உங்கள் உதவியால் வந்து சேர்ந்தேன்; மிக்க நன்றி'' என்று கூறி, அவரது தடியை அவரிடம் தந்தேன்.

எங்களுடன் குளித்த ஓர் இளைஞன், அம்மன் தரிசனம் செய்யும்படி எங்களை அழைத்தான். அவன் அக்கோயிலின் ஜூனியர் பண்டா என்பது பின்னர் தான் தெரிந்தது. பெரிய பண்டாவை நாங்கள் மலையேறி வரும் வழியில் சந்தித்தோம். அப்போது அவர் கோயிலிலிருந்து தமது கிராமத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்தார். இல்லை, பறந்து கொண்டிருந்தார். அடேயப்பா, எத்தனை வேகமாக நடந்தார் அவர்! ஒரு நாளைக்கு இரண்டு மூன்று முறை கூட ஏறி இறங்குவாரோ, என்னவோ! அவருடைய காலின் கன்றுச் சதையைக் கவனித்தேன். அந்த மலையைப் போலவே இரும்பாக இறுகி யிருந்தது அது.

நீராடிவிட்டு சின்னப் பண்டாவுடன் சில படிகள் ஏறிச் சென்றோம். அங்கு ஒரு தகரக் கொட்டகை போடப்பட்டிருந்தது. அதன் கீழே ஐந்தாறு சாதுக்கள் ஆட்டா மாவு பிசைந்து ரொட்டி தட்டிக் கொண்டிருந்தார்கள். சில யாத்திரிகர்களும் இருந்தனர். அங்கு குளிரே தெரியவில்லை. கடப்பைக்கல் தரையில் காலை வைத்தபோது சூடேறியது. சிறு சிறு துவாரங்கள் வழியே



சூரிய குண்டத்தில் சமையல் தயாராகிறது

ஆவி வெளிவந்து கொண்டிருந்தது. இயற்கை படைத்துத் தந்திருக்கும் அந்த 'ஹாட் கண்டிஷன்' அறையில் அவர்கள் சுகமாகப் படுத்து உறங்குவார்களாம். கொடுத்து வைத்தவர்கள்!

அங்கிருந்து பத்தடி தொலைவில், மலைச் சரிவை ஒட்டினாற்போல் ஒரு சிறு குண்டம் இருந்தது. அதை நெருங்க முடியாமல் அனல் அடித்தது. கல்யாண வீட்டில்கோட்டையடுப்பைநெருங்குவதுபோல் இருந்தது. எட்டி நின்று எட்டிப் பார்த்தேன். அதிலிருந்த தண்ணீர் 'தளதள'வென்று கொதித்துக் கொண்டு இருந்தது. கீழே யாரோ தீ மூட்டி அடுப்பெரிப்பதுபோல் தோன்றியது. அதற்குப் பெயர் சூரிய குண்டம். பொருத்தமான பெயர்தான்!

அதன் கரையில் ஓரிருவர் உட்கார்ந்து சோறு வடித்துக் கொண்டிருந்தார்கள். அரிசியையோ, வேறு தானியத்தையோ மூட்டையாகக் கட்டித் தண்ணீரில் முக்கிவிட்டு, மீன் பிடிப்பவர்கள் போல் உட்கார்ந்திருந்தார்கள். ஐந்து நிமிடங்களுக்குள் அது சாதமாகி விடுகிறது. உருளைக்கிழங்கு வெங்காயம் முதலிய காய்கறிகளையும் இம்மாதிரியே வேக வைக்கிறார்கள். அது மட்டுமல்ல, ஆட்டா மாவில் கனமாக ரொட்டி தட்டுகிறார்களே, அதையும் அந்த நீரில் போட்டு எடுக்கிறார்கள். அது வெந்ததும் மேலே மிதந்து வருகிறது. அதைக் கிடுக்கியினால் வெளியே எடுத்து விடுகிறார்கள்.

பசித்தவர்களுக்கு இயற்கை அன்னை அங்கு அடுப்பும், வெண்கலப் பானையும், வாணலியும் செய்து வைத்திருக்கிறாள்!

அந்த 'அடுப்பு குண்ட'த்திற்கு வலப்புறம் ஏழு எட்டு அடி தொலைவில் 'யமுனா திவ்யசிலா' இருக்கிறது. அது பார்ப்பதற்கு ஒரு யோனி குண்டம் போலிருக்கிறது. அதிலிருந்து சுடுநீர் கொப்புளித்துக் கொண்டு, ஆவி பறக்கக் குமிழிட்டுக் 'கள கள'வென்று இரைச்சலோடு வெளிவருகிறது. அருகில் சின்னஞ்சிறு வலம்புரி விநாயகர் சிலையும் காணப்படுகிறது.



'ஹாட் கண்டிஷன்' அறையில்...

அங்குள்ள 'யமுனு திவ்யசிலா'வுக்குத்தான் பூஜை நடைபெறுகிறது. பண்டா மந்திரங்கள் சொல்ல, நாமே அர்ச்சனை செய்யலாம். ''இதுதான் உண்மையான யமுனை. இங்குதான் அவள் உற்பத்தியாகிருள்'' என்ருர் அந்த சின்ன பண்டா.

''ஐஸ் உருகி வருவதுதான் யமுனை என்கிருர்கள்; நீங்கள் இதைச் சொல்கிறீர்களே?'' என்று அவரிடம் விளக்கம் கேட்டேன் நான்.

''அதெல்லாம் இல்லை. இதுதான் ஜம்னு'' என்ருர் அவர் பிடிவாதமாக.

யமுனை சூரியனுடைய புத்திரி என்று புராணம் கூறுவதால், இந்தச் சுடுநீரை அவ்விதம் கூறுகிருர்களோ என்று நினைத்துக் கொண்டேன் நான்.

யமுனையின் திவ்யசிலாவுக்கு அருகில் ஒரு பள்ளம் இருக்கிறது. அதை 'கௌதம குண்டம்' என்று குறிப்பிட்டார் பண்டா. அதிலிருந்து நீராவி மேல்நோக்கி வீசும் வேகம், ஒரு பாக்டரியின் அருகில் இருக்கும் பிரமையைத் தோற்றுவித்தது. அடியில் ஒரு மெஷின் வேலை செய்வது போலிருந்தது.

நாங்கள் அர்ச்சனையை முடித்துக் கொண்டு, இடப்புறமுள்ள யமுனையின் கோயிலுக்குச் சென்ருேம்.

அது மிகச் சிறிய கட்டடம். கருவறையில், அமர்ந்த திருக்கோலத்தில் யமுனுதேவியின் புராதன உருவச் சிலை ஒன்றிருக்கிறது. மேல் கரங்களில் கமலமும் கமண்டலமும் வைத்திருக்கிருள். வலது கீழ்க் கரத்தைத் தொங்க விட்டுக் கொண்டிருக்கிருள். நான்காவது கரம் தொடையின் மீது இருக்கிறது. அது சுயம்பு மூர்த்தி என்கிருர்கள். பக்கத்தில் கங்காதேவியின் சிலையொன்றும் இருக்கிறது. அது நவீனமானது. நதிகளாக பாரதத்தை வாழ்விக்கும் பெருங் கருணையைத் தேவி வடிவத்தில் தரிசித்து, நம் நன்றிப் பெருக்கை வெளிப்படுத்துகிருேம். யமுனை கோயிலுக்குத் தெற்கே, சற்றுத் தொலைவில் ஓர் ஆஞ்சநேயர் கோயிலும் இருக்கிறது.

கேதார்நாத், பத்ரிநாத், கங்கோத்ரி கோயில்களைப்போல், யமுனோத்ரியிலுள்ள ஆலயத்தையும் நவம்பரிலிருந்து ஆறு மாதங்களுக்கு மூடி விடுகிறார்கள். இந்தப் பகுதி தியான, யோக சாதனைகளுக்கு ஏற்ற இடம் என்று கூறப்படுகிறது. இலங்கையிலிருந்து சிவபெருமானுடன் பன்னிரண்டு மகரிஷிகள் இங்கு வந்ததாகவும், அவர்கள் இன்னும் இங்கு தவத்தில் ஆழ்ந்திருப்பதாகவும் கருதப்படுகிறது. இயற்கையின் வனப்பை ரசித்து இங்கு வீசும் காற்றைச் சுவாசிப்பது உடலுக்கும் உள்ளத்துக்கும் நன்மருந்தாகும்.

யமுனோத்ரியில் இருப்பது மிகமிகச் சாதாரணமான கடை வீதி. தங்குவதற்கும் நவீன வசதிகளோடு கூடிய விடுதிகள் ஒன்றும் கிடையாது. மின்விளக்குகள் கிடையாது. ஒரு மைல் ஏறிச் சென்றால் ஒரு காட்டு இலாகா விடுதி இருப்பதாகச் சொன்னார்கள். எங்கள் உடல் அசதி அத்தனை தொலைவு நடக்கும் தெம்பையோ, உற்சாகத்தையோ அளிக்காததால், நாங்கள் அருகிலுள்ள ஓர் அறையையே வாடகைக்கு எடுத்துக் கொண்டோம். வாடகைக்கு ரஜாயும் கொடுத்தார்கள். அந்தக் கும்மிருட்டிலும், கடுங் குளிரிலும், உடல் களைப்பிலும் வேறு ஒன்றும் செய்யத் தோன்றாதவர்களாய், பேசாமல் போர்த்துக் கொண்டு படுத்துவிட்டோம். அப்போது மணி என்ன தெரியுமா? ஆறரையோ, ஆறே முக்காலோதான்! யமுனோத்ரி உறங்கத் தொடங்கி விட்டது. ஆனால், எனக்குத் தூக்கம் வரவில்லை.


மலையேறி யமுனோத்ரிக்கு வந்து சேரும்வரை என் உடல் நிலை அவ்வளவு திருப்திகரமாக இல்லை. தலைவலி மண்டையைப் பிளந்து கொண்டிருந்தது. எதுவுமே உட்கொள்ள ஆர்வமில்லாத வகையில் வயிறு குமட்டிக் கொண்டிருந்தது. ஓர் அயர்வு, ஆயாசம், ஒய்ச்சல்.

ஆனால், பனி மூடிய மலைச் சிகரத்தையும், யமுனா நதியையும், இயற்கை யழகையும் கண்ட உடனேயே அத்தனையும் எங்கோ மறைந்து விட்டன. அந்த சுடுநீர்க் குண்டத்தில் முழுகிவிட்டு எழுந்த உடனேயே, களைப்பெல்லாம் பறந்தோடி விட்டது. உள்ளத்தில் ஒரு மலர்ச்சியும், உடலில் ஒரு புதுத் தெம்பும் தோன்ற ஆரம்பித்தன. புது இடங்களை ஆர்வத்துடன் பார்க்கும்போதும், அவற்றின் தொடர்பான புராணக் கதைகளைக் கேட்கும்போதும் உடலை மறந்த புதியதோர் உற்சாகம் பெறுவதை நான் பலமுறை உணர்ந்திருக்கிறேன். அன்றும் அவ்வாறே இருந்தது.

யமுனாதேவி கோயில்



ஆஞ்சநேயர் கோயில்



எல்லாவற்றையும் பார்த்தான பிறகு ஓய்வெடுப்பதற்காகப் படுத்த போது மீண்டும் உடல் ஒரு சுமையாகத் தோன்றியது எனக்கு. எங்கோ சென்று இருந்த தலைவலி மீண்டது. அது சாதாரணமாக நமக்கு வரும் தலை நோயிலிருந்தும் மாறுபட்டிருந்தது. மலையேற்றத்தின்போது சிலருக்கு வரும் 'ஆல்டிடியூட் சிக்னஸ்' என்ற வகையைச் சேர்ந்ததாம் அது. அதற்காக ஸ்ரீநிவாசன் டில்லியிலிருந்து கையோடுகொண்டு வந்திருந்த மாத்திரை எங்கோ கீழே டாக்ஸியிலேயே பத்திரமாக இருந்தது! பசியைத் தணிப்பதற்காகக் கொஞ்சம் 'க்ளூகோஸ்' கரைத்துக் குடித்தேன். அதுவும் வயிற்றில் தங்கவில்லை. அதற்குப் பிறகு தூக்கமில்லாமல் அவதிப்பட்டேன். மறுநாட் காலை எழுந்து மறுபடியும் அத்தனை தூரம் நடந்தாக வேண்டுமே என்பதை நினைத்தபோது, என் வேதனை அதிகமாயிற்று. 'பேசாமல் குதிரையிலேயே ஏறி வந்திருக்கலாம்' என்று மனத்திற்குள் எண்ணிக் கொண்டேன். என்னுல் அன்றிரவு என் நண்பர்களுக்கும் அரைகுறைத் தூக்கம்தான், பாவம்!



'யமுனு திவ்ய சிலா'

விடியற்காலை ஐந்து மணிக்கே எழுந்து அவசர அவசரமாக முகம் கழுவிக் கொண்டு நடக்கத் தொடங்கினேம். பொழுது புலரும் பொன்னுன வேளையில் இமாலயத்தில் நடக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். இருபுறமும் கோட்டைச் சுவர்களாக மலைகள் எழும்பியிருக்க, கீழே சில சமயம் கண்ணுக்குத் தெரிந்தும் சில சமயம் மறைந்தும் ஓடிக் கொண்டிருக்கும் நதியின் ஆதார சுருதியோடு இழைந்து புள்ளினங்கள் இசைக்கும் இன்னிசையும், வகை வகையான மரங்களும், வித விதமான கொடிகளும், வண்ண வண்ணப் பூக்களும், வழி யெங்கும் பாய்ந்து கொண்டிருக்கும் ஊற்று நீரும், நீலவானத் தொட்டிலில் தவழ்ந்து விளையாடும் முகிற் கூட்டமும், பனி மூட்டமும்...அப்பப்பா..! கவிஞனின் சொர்க்க பூமியாகவும் கலைஞனின் சித்திரக்கூடமாகவும் பரந்து விரிந்து நம்மைப் பரவசத்தில் ஆழ்த்தும். பேச்சடக்கி, பேரெழிலில் மனத்தைப் பறி கொடுத்து, மெள்ள மெள்ள நடந்து வந்ததில் சிரமமே தெரியவில்லை. மாறுக, உடல் அசதியெல்லாம் மறைந்து, புத்துணர்ச்சி பிறந்தது. வீராதி வீரர்களைப் போல் நடந்து கொண்டிருந்தோம். களைப்பு மேலிட்டு, மூச்சுத் திணற ஏறி வருபவர்கள், ''இன்னும் எத்தனை தூரம் இருக்கு?'' என்று பரிதாபமாகக் கேட்கும்போதெல்லாம் ''இன்னும் கொஞ்ச தூரம்தான், கவலைப்படாதீர்கள்'' என்று அபயம் அளித்துக் கொண்டு சென்றேம். அவர்கள் சோர்ந்து போய், ''ஜம்னு மாய்க்கு ஜெய்'' என்று ஈனக் குரலில் கூறும்போது நான் அவர்களை உற்சாகப்படுத்தும் பொருட்டு ''ஜம்னு மாய்க்கு ஜெய், கங்கா மாய்க்கு ஜெய்'' என்று உரக்கக் குரல் கொடுத்தேன். இவர்களைப் போன்றே நேற்று நான் திணறியதை ஒரு கணம் நினைத்துப் பார்த்துக் கொண்டேன்.

''ரொம்ப அலட்டிக்காதிங்க சார்! இன்னும் கங்கோத்ரி, கோமுக், கேதார்நாத் எல்லாம் இருக்கு. யமுனோத்ரிக்கே 'டம்' வாங்கிட்டீங்க'' என்று கேலி செய்தார் கண்ணன்.

''கண்ணா, ஆனைக்கும் அடி சறுக்கும்; கேலி பண்ணாதே'' என்றேன் நான். ஆனைக்கு அடி சறுக்கிய கதையைப் பின்னால் சொல்கிறேன்!


பத்தரை மணி சுமாருக்கு எங்கள் டாக்ஸி நின்று கொண்டிருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தோம். எங்களைக் கண்டதும் புஷ்க்கருக்கு ஒரே குஷியாகி விட்டது. பாவம், தன்னந் தனியாக ஒரு நாளெல்லாம் 'போ'ரடித்துக் கொண்டல்லவா அவர் உட்கார்ந்திருந்தார்.

நாங்கள் சேனாசட்டிக்கு வந்து சேர்ந்தபோது எல்லாருக்கும் நல்ல பசி! எனக்கும் கூடத்தான். அங்கு கெட்டித் தயிர் கிடைத்தது. அது 'ஃபிரிட்ஜில்' வைக்கப்பட்டது போல் இருந்தது!

பன்னிரண்டு மணி சுமாருக்கு பர்கோட் வந்து, அரசினர் தங்கும் விடுதியில் குளித்து, துணிகளைத் துவைத்து, 'லா'னில் உலர வைத்து, சிறிது ஆகாரம் உண்ட களைப்புத் தீர சற்றுப் படுத்துப் புரண்டுவிட்டு, பொதுப்பணித்துறை இலாகா அதிகாரி அன்புடன் தந்த பெட்ரோலைப் பெற்றுக் காரில் ஊற்றிக் கொண்டு மூன்று மணி சுமாருக்கு உத்தரகாசியை நோக்கிப் பயணமானோம். பர்கோட்டிலிருந்து ஐம்பது ஐம்பத்திரண்டு மைல் பயணம்.

யமுனா நதிப் பள்ளத்தாக்கின் எழிலார்ந்த தோற்றம்





கங்கோத்ரியிலிருந்து பாகீரதி பாய்ந்து வரும் காட்சி

13

நாங்கள் அடுத்து காண வேண்டியது கங்கோத்ரி. யமுனேத்ரியிலிருந்து கால்நடையாகச் சென்ருல் சுமார் நூறு மைல் ஆகிறது. யமுனேத்ரியிலிருந்து திரும்பி வரும்போது கங்கானியருகிலுள்ள 'சிம்லி'யிலிருந்து குறுக்கே நடந்தால் உத்தரகாசி நாற்பத்துமூன்று மைல் ஆகிறது. அங்கிருந்து ஐம்பத்தாருவது மைலில் கங்கோத்ரி இருக்கிறது. காரிலோ, பஸ்ஸிலோ வருபவர்கள் சேனசட்டியிலிருந்து பர்கோட் வந்து, அங்கிருந்து தராசு வந்து உத்தரகாசி செல்ல வேண்டும். நாங்கள் அப் பாதையில் பயணமானேம்.

உத்தரகாசிக்கு முன்னுல், ஆருவது மைலில் நகூரி என்ற கிராமம் இருக்கிறது. அங்கு மலேயுச்சியில் ரேணுகாதேவி ஆலயம் இருப்பதாகவும், ஆனுல் அங்கு ஏறிச் செல்வது கடினம் என்றும் கூறினர்கள். ஜமதக்னி முனிவர் தவம் இருந்த புனித இடம் அது. அவரது மகன் பரசுராமன் 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லே' என்ற பொன்மொழிக் கேற்ப, அவர் வேண்டுகோளின்படி தன் தாயின் தலேயைக் கொய்து விட்டார். பின்னர் மகனின் கடமையுணர்ச்சியை மெச்சிய தந்தை, 'உனக்கு என்ன வரம் வேண்டும்?' என்று கேட்டபோது, 'என் தாயை மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டும்'

என்று கேட்டார். ரேணுகாதேவியும் உயிர் பெற்று எழுந்தாள். இந்தப் புராண நிகழ்ச்சி நடந்த இடம் நகூரி என்கிறார்கள். காரை நிறுத்தி, அங்கிருந்தபடியே, மலையுச்சியை நோக்கி ஒரு கும்பிடு போட்டு விட்டு, பயணத்தைத் தொடர்ந்தோம்.

ஒன்றரை மைலில் 'மாத்லி' என்ற ஊர் இருக்கிறது. முன்பு அப் பகுதியில் கபில மகரிஷியின் ஆச்ரமம் இருந்ததாம். தற்போது அங்கு I. T. B. P. காம்ப் ஒன்று இருக்கிறது. அங்கு சென்று ரிஷிகேசத்திலிருந்து எங்களுடன் வந்த ஜவானை 'ரிலீவ்' செய்துவிட்டு புது ஜவானை அழைத்துக் கொண்டு செல்ல வேண்டும். கங்கோத்ரி, கோமுக் பயணத்திற்காக இதர உபகரணங்களையும் அங்கிருந்துதான் எடுத்துச் செல்ல வேண்டும். எனவே, அந்த காம்ப்புக்குள் நுழைந்தோம்.

எங்கள் வருகையைப் பற்றி அவர்களுக்கு முன்னறிவிப்பு வந்திருந்ததால், அந்த காம்ப்பில் நாங்கள் இரவு தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்து வைத் திருந்தார்கள். ஐந்து மைலில் உத்தரகாசி ஊர் இருந்ததால், இரவு அங்கு சென்று தங்கி விடலாம் என்று நாங்கள் முடிவு செய்தோம். பின்னர், அங்கு எங்களுக்காகத் தயாராக எடுத்து வைத்திருந்த கோட்டுகளையும், ஷூக்களையும், ஸ்லீப்பிங் கிட்டுகளையும் காட்டினார் ஒருவர். நீளமான ரப்பர் ஷூவைக் கண்ட தும் 'இதைப் போட்டுக் கொண்டு எப்படி நடக்கப் போகிறோம்' என்று பயம் தோன்றவே, ''இது எதற்கு? வேண்டாமே'' என்றேன். ''நோ நோ, ஸ்நோவில் நடப்பதற்கு இதுதான் ஏற்றது'' என்றார் கண்ணன். அவர் ஒரு காலத்தில் மிலிட்டரியில் பணியாற்றியிருந்ததால் மிலிட்டரி விஷயத்தில் அவர் சொல் லுக்கு மறு சொல் பேசுவதை அவர் விரும்பமாட்டார் என்று அனுபவத்தில் அறிந்திருந்த நான், பேசாமலிருந்து விட்டேன். எல்லாவற்றையும் மறு நாள் வந்து எடுத்துச் செல்வதாகக் கூறிவிட்டு, நாங்கள் உத்தரகாசிக்குப் புறப்பட்டோம்.

புராண காலத்திலிருந்து புகழ்பெற்ற புனிதத் தலம் உத்தரகாசி. உத்தரையின் தந்தை விராட மகாராஜனின் பெயரோடு இணைக்கப்பட்டு, இதை 'விராட நகரி' என்று புராணம் அழைக்கிறது. வடக்கிலுள்ள காசியான தால், உத்தரகாசி என்று அழைக்கிறார்கள். வட திசைக்கு அதிபதி குபேரன். அவனுக்கு சோமன் என்றொரு பெயர் உண்டு. எனவே வடதிசையை சௌம்யம் என்கிறார்கள். அதனால் உத்தரகாசியை சௌம்யகாசி என்றும் குறிப்பிடுகிறார்கள்.

கங்கைக் கரையிலுள்ள காசியைப் போன்று பாகீரதியின் வட கரையி லுள்ள இந்தக் காசியையும் 'வாரண' 'அசி' என்ற இரண்டு உப நதிகள் சூழ்ந் திருக்கின்றன. இங்கும் விசுவநாதர் ஆலயம் இருக்கிறது. இங்குள்ள ஸ்நான கட்டத்திற்கும் 'மணிகர்ணிகா' என்ற பெயர் உண்டு.


மலைகளால் சூழப்பட்டுள்ள இந்தச் சமவெளி, மகரிஷிகளின் ஆச்ரமங்கள் நிறைந்த காட்டுப் பகுதியாக இருந்திருப்பதற்கான சான்றுகள் பல இருக் கின்றன. தன் ராஜ்யத்தைத் துறந்துவிட்டு, பித்தனைப் போல அலைந்து திரிந்த ஞான வள்ளலான ஜடபரதரின் ஆச்ரமம் இங்குதான் இருந்ததாம்.

நகரை அடுத்துள்ள வாரண வடமலை உயர்ந்தோங்கி கம்பீரமாக நிற்கிறது. பாண்டவர்களைக் கொல்லச் சதித் திட்டம் தீட்டிய துரியோதனன்


இம்மலைக்கருகில்தான் அரக்கு மாளிகை கட்டினாலும். அர்ஜுனனுக்கும் வேடன் உருவத்திலிருந்த சிவபெருமானுக்கும் யுத்தம் நடைபெற்றது. இறுதியில் அர்ஜுனனின் வீரத்தை மெச்சிய சிவபெருமான் அவனுக்குப் பாசுபதாஸ்திரம் அளித்த பூமி இதுதான் என்றும் கூறப்படுகிறது.

1924-ம் ஆண்டு கேரளத்திலிருந்து இங்கு வந்த தபோவன்ஜி மகராஜ், இதன் புராண மகிமைகளையும், இயற்கை வனப்புக்களையும், அமைதி நிலவும் சூழ்நிலையையும் புகழ்ந்து பாராட்டியுள்ளதைப் படித்துவிட்டு, ஏதேதோ கற்பனை செய்து கொண்டு இங்கு வந்த நான், பெரும் ஏமாற்றமடைந்தேன். கடந்த ஐம்பது ஆண்டுகளில் அங்கு எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டிருப் பதைக் கண்டேன். கங்கோத்ரிக்குச் செல்லும் வழியில் உத்தரகாசி ஒரு முக்கிய ஊரானதால் அங்கு பஸ்களும், டாக்சிகளும் வந்தவண்ணம் இருக்கின்றன. உத்தரகாசி, அப்பெயர் கொண்ட புது மாவட்டத்தின் தலைநகரானதால் அரசு அலுவலகங்களும் அலுவலர்களின் இல்லங்களும் வேகமாக எழும்பிக் கொண் டிருக்கின்றன. ஒன்பதாவது மைலில் உள்ள மனேரி என்ற இடத்தில், பாகீரதி யைத் தடுத்துக் கட்டப்படும் பிரமாண்டமான அணைக்கட்டு வேலை நடை பெற்றுக் கொண்டிருப்பதால், லாரிகளின் அசுரப் போக்குவரத்து அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அதில் வேலை செய்பவர்கள் வசிக்கும் காலனிகள் பெருகிக் கொண்டிருக்கின்றன. வியாபாரம் வளர்ந்து கொண்டிருக்கிறது. கடைவீதி நீண்டு கொண்டிருக்கிறது! இப்படியொரு நவீன நாகரிக முன்னேற்றத்தின் இரும்புப் பிடியில் சிக்கியுள்ள ஓர் ஊரின் புராணத் தொடர்பைக் கற்பனை செய்து பார்ப்பதுகூடச் சற்றுக் கடினமாகத்தான் இருக்கும்.

மறுநாள் காலை நாங்கள் கங்கோத்ரிக்குப் புறப்படுவதாகத் திட்டம் போட்டிருந்தோம். ஆனால், உத்தரகாசி மாஜிஸ்டிரேட்டிடம் அனுமதி பெற்ற பின்தான் யாத்திரிகர்கள் கங்கோத்ரிக்கு செல்ல முடியும் என்று பின்னர்தான் எங்களுக்குத் தெரிந்தது. அதற்கான விண்ணப்பத்தாள்களை வாங்கி, அவற்றில் இருந்த இந்தியைப் படித்துப் புரிந்து கொண்டு, கேட்கப்பட்டிருந்த கேள்வி களுக்கு எல்லாம் பதில் எழுதிக் கொடுப்பதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது. அதோடு விட்டதா? நாங்கள் புகைப்படம் எடுப்பதற்கு மாஜிஸ் டிரேட்டிடம் தனியாக அனுமதி பெற வேண்டும் என்று கூறினார்கள். டில்லி ராணுவ இலாகாவிடமிருந்து பெற்று வந்த கடிதம் போதாதாம். அன்று ஞாயிற்றுக்கிழமை! அரசு அலுவலகங்கள் மூடியிருந்தன. ''நீங்கள் கங்கோத் ரிக்கு நாளைக்குத்தான் போக முடியும்'' என்று ஒரு கிளார்க் கூறியபோது 'இதற்காக ஒரு நாளை வீணாக்குவதா?' என்று தீவிரமாகச் சிந்தித்தோம். பின்னர், மாஜிஸ்டிரேட்டின் வீட்டைத் தேடிக் கொண்டு சென்று அவரிடம் எங்கள் நிலையை எடுத்துச் சொன்னோம். அவர் ஆர்வமுள்ள ஓர் ஐ.ஏ.எஸ். அதிகாரி. இளைஞர். சாக்குப் போக்குச் சொல்லித் தட்டிக் கழிக்காமல், சம்பந்தப்பட்ட கீழதிகாரியை அழைத்து எங்களுக்குத் தேவையான அனுமதியை உடனே 'டைப்' அடித்துக்கொண்டு வரச் சொல்லி, அரை மணி நேரத்திற்குள் கையெழுத்துப் போட்டுத் தந்துவிட்டார். அவர் இமாலயத்தின் கௌமான் பகுதியைச் சேர்ந்தவர். அவரது சின்னஞ்சிறு பெண், அங்கு அலைந்து கொண் டிருந்தாள். தந்தையைக் குஷிப்படுத்திச் சீக்கிரம் கையெழுத்தைப் பெறுவ தற்காக, ஸ்ரீநிவாசன் அச் சிறுமியைப் பல கோணங்களில் படம் பிடித்துத் தள்ளிவிட்டார்!



பாஸ்கரேச்வரர் ஆலயம் (பட்வாடி)



கருவறையில்....

இதற்குப் பிறகு, டாக்சிக்காரர் புஷ்க்கருடன் சிறு விவாதம் நடைபெற்றது. அதன் பலனாக உத்தரகாசியோடு அவருக்கு விடை கொடுத்து அனுப்புவதாக இருந்த ஏற்பாட்டை மாற்றிக் கொண்டோம். அவருக்கு எங்களைப் பிடித்துவிட்டதாம். எங்களுக்கும் அவரைப் பிடித்துவிட்டது. பத்ரிநாத், மானாவரை அவரது டாக்சியிலேயே செல்லலாம் என்று தீர்மானித்து அதற்கான வாடகையைப் பேசி முடிவு செய்தோம். காலையில் ரிஷிகேசத்திலிருந்து புறப்பட்டு, எங்களை 'பர்கோட்'டில் விட்டுவிட்டு அன்று இரவே திரும்புவதாகத் திட்டம் போட்டிருந்தவர், பன்னிரண்டு நாட்களுக்கு எங்களுடனேயே இருக்கும்படி நேர்ந்து விட்டது.

ஆனால், அவருக்கு ஒரு பெரிய குறை! போட்டுக் கொண்டு வந்திருந்த உடையைத் தவிர அவரிடம் மாற்று உடை இல்லை. அதைக் குறித்து முனகிக் கொண்டே யிருந்தார்: ''எனக்கு ஒரு மணி டைம் கொடுங்க, துணியைத் துவைத்து, உலர்த்திப் போட்டுக் கொண்டு வந்துவிடுகிறேன்'' என்று கேட்டுக் கொண்டார்.

''ஓயெஸ், அதற்குள் நாங்களும் தயாராகி விடுகிறோம்'' என்று கூறி, கண்ணன் புஷ்க்கரை அனுப்பி வைத்தார்.

முதல்நாள் மாலையிலிருந்தே விட்டுவிட்டு மழை பெய்து கொண்டிருந்தது. உத்தரகாசியிலேயே இப்படி மழை பெய்தால், இன்னும் மேலே போகப் போக நல்ல மழை இருக்கும் என்று கூறினார்கள். அதனால் வழியில் அங்கங்கே மலைகள் சரிந்து, பாதை அடைக்கப்பட்டிருக்கும் என்றும், அப்படிப் பாதை சீராக இருந்தாலும், சில சமயம் காரின் மீது பெரும் பாறைகள் சரிந்து விழக்கூடும் என்றும் சிலர் பயமுறுத்தினார்கள். நாங்கள் அன்று புறப்படுவதா வேண்டாமா என்று தயங்கிக் கொண்டிருந்தோம்.

இரண்டு மணிக்கு மேல் புஷ்க்கர் குளித்துவிட்டு, உலர்ந்த துணிகளை உடுத்திக் கொண்டு பளிச்சென்று வந்து எங்கள் எதிரில் நின்றார்.

''புறப்படலாமா, சாமானெல்லாம் கட்டியாகி விட்டதா?'' என்று கேட்டார் உற்சாகத்துடன்.

நாங்கள் மழையைப் பற்றிய எங்கள் கவலையைத் தெரிவித்தோம். புஷ்க்கர் சிரித்தார்: ''இமாலயத்தில் வந்து மழைக்குப் பயப்பட்டால் எப்படி? இதோ, வானம் வெளுத்துவிட்டது பாருங்கள். கங்கோத்ரியிலிருந்து பஸ்களும் ஜீப்புகளும் வந்து கொண்டிருக்கின்றன. பாதை ஒழுங்காகத்தான் இருக்கிறது. கவலைப்படாமல் புறப்படுங்கள். சௌக்கியமாகக் கொண்டு சேர்க்க வேண்டியது என் பொறுப்பு'' என்று எங்களுக்குத் தைரியம் அளித்தார். பிறகு என்ன? புறப்பட்டுவிட்டோம். திரும்பி வரும்போது விசுவநாதர்கோயிலைத் தரிசிக்கலாம் என்று முடிவு செய்து, மாத்லி ஐ. டி. பி. பி. காம்ப்புக்குக் காரை விடச் சொன்னோம். அங்கு நேர்ந்த ஒரு சிறு குழப்பத்தால் எங்கள் பயணத்தை சற்று ஒத்திப் போடும்படியாயிற்று.


சாமான்களையெல்லாம் எடுத்துக் கொண்டு ஜவான் ஒருவர் எங்களைத் தேடி பன்னிரண்டு மணிக்கே உத்தரகாசிக்கு வந்துவிட்டதாக காம்ப்பிலிருந்த ஓர் ஆபிசர் கூறவே, நாங்கள் மீண்டும் உத்தரகாசிக்கு வந்தோம். நாங்கள் எங்கு தங்கியிருக்கிறோம் என்று ஒவ்வோர் இடமாகத் தேடிக் கொண்டிருந்த ஜவானை நாங்கள் தெருத் தெருவாகத் தேடினோம். இந்தக் கண்ணாமூச்சி விளையாட்டு முடிந்து, ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்வதற்குள் மாலை நான்கு மணியாகிவிட்டது. உடனே கிளம்பினால், இரவு 'கோபாங்' காம்ப்பிற்குப் போய்ச் சேர்ந்து விடலாம் என்று ஜவான் கூறவே, நாங்களும் அவசர அவசரமாகப் புறப்பட்டோம்.

உத்தரகாசி 4,000 அடி உயரத்திலிருக்கிறது. அங்கிருந்து நாங்கள் சென்ற பாதை ஆயிரம் ஆயிரம் அடியாக உயர்ந்து கொண்டிருந்தது. இதம் தரும் இயற்கையன்னை கோலோச்சும் இணையில்லா சாம்ராஜ்யத்தின் இமய எழிற் கோட்டைக்குள் நாங்கள் முன்னேறிக் கொண்டிருந்தோம். இன்றும் தவச் சிரேஷ்டர்களும், சித்த மகா புருஷர்களும் நம் கண்களிலிருந்து மறைந்து வாழ்வதாகக் கருதப்படும் மலைப் பகுதிகளைக் குடைந்து சென்ற அந்தக் குறுகலான பாதையில், பாகீரதியைத் தரிசித்துக் கொண்டே, அவள் கோலாகலமாகப் போடும் எழிலாட்டங்களைக் கண்டு வியந்து கொண்டே, ஒவ்வொரு திருப்பத்திலும் புதுக்கோலத்துடன் மலரும் ஓவியக் காட்சிகளை ரசித்துக் கொண்டே உள்ளத்தில் புளகிதம் பொங்க அன்னை கங்கை பிறந்தகத்தை நோக்கி பயணம் செய்து கொண்டிருந்தோம்.

ஒன்பதாவது மைலில் 'மனேரி' என்ற இடத்தில் எழும்பிக் கொண்டிருக்கும் பிருமாண்டமான அணைக் கட்டையும், அதற்காக இயங்கிக் கொண்டிருந்த ராட்சச இயந்திரங்களையும், தேனீக்களாகப் பணியாற்றிக் கொண்டிருந்த நூற்றுக்கணக்கான ஊழியர்களையும் பார்த்துக் கொண்டே சென்றோம்.

பாதை ஓரத்தில் பல கேரள, தமிழ் முகங்களைக் கண்டபோது

சரிந்து கொண்டிருக்கும் மலை



உண்மையில் உள்ளம் பூரித்தது. தென்கோடி மக்கள் வடகோடி மக்களுடன் தோளோடு தோள் நின்று, நலமிகு நவபாரதத்தை சுபிட்சப் பாதையில் ஆர்வமுடன் இழுத்துச் செல்லும் அற்புதக் காட்சியைக் கண்டபோது, எங்கள் நெஞ்சங்கள் நிமிர்ந்து நின்றன.

பகீரதனின் பெரு முயற்சியால் வான் உலகிலிருந்து பெருகிப் பாய்ந்து, சிவபெருமானின் சிரசில் தங்கிப் புனிதம் பெற்று, மனித குலம் புண்ணியம் பெறப் பூமியில் புரண்டோடிக் கொண்டிருக்கும் பாகீரதியை இங்கு தேக்கி, மின்சக்தியை உற்பத்தி செய்யப் போகிறார்களாம். தன் மக்களின் நலத்துக்காக அங்கு அன்னையும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்கிறாள். தன் சக்தி அனைத்தையும் சேய்களுக்காகவே அர்ப்பணித்து அருளும் தியாகச் சுடரல்லவா அன்னை கங்காதேவி!

உத்தரகாசியிலிருந்து பதினெட்டு மைல் பிரயாணத்திற்குப் பிறகு, 'பட்வாடி' என்ற ஊருக்கு வந்து சேர்ந்தோம். அங்கு நபுலகங்கா என்ற சிற்றாறு பாகீரதியுடன் கலக்கிறது. மலைப் பாதையிலிருந்து நூறு அடி இறங்கிச் சென்றால் சங்கமத்தருகில் ஒரு சிவன் கோயிலைத் தரிசிக்கலாம். எட்டாவது நூற்றாண்டில் சிலவர்மன் என்ற மன்னனால் கட்டப்பட்ட கோயில் அது.

அத் தலத்தில் சிவபெருமானைக் குறித்து சூரியன் தவம் இருந்ததால் அங்கு உறையும் மூர்த்தியை 'பாஸ்கரேச்வரா' என்று அழைக்கிறார்கள். இந்த இடம் 'பாஸ்கர க்ஷேத்ரம்' என்றும், இந்தச் சங்கமம் 'பாஸ்கரப் பிரயாகை' என்றும் அழைக்கப்படுகின்றன.

சிவன் கோயிலின் முன்புறம் ஒரு புராதன கணபதியின் உருவச் சிலை இருக்கிறது. ஒரு நவீன நந்தியும் அங்கு காணப்படுகிறது.

கருவறையில் இருக்கும் சிறிய சிவலிங்கம் சுயம்புமூர்த்தியாகத் தோன்றுகிறது. அருகில் மகாதேவனையும் கருடன் மீது அமர்ந்திருக்கும் லட்சுமிநாராயணமூர்த்தியையும் காண்கிறோம். அங்கு கந்தப் பெருமானும், விநாயகப் பெருமானும் கூட இருக்கிறார்கள். பிராகாரத்தில் மகிஷாசுரமர்த்தனியும், பிமேச்வரனும் தனித் தனிச் சந்நிதிகளில் எழுந்தருளி யிருக்கிறார்கள்.

பட்வாடி 5,000 அடி உயரத்திலிருக்கிறது. அங்கிருந்து ஒன்பது மைல்கள் சென்றதும், நாம் 6,000 அடி உயரத்திற்கு வந்து விடுகிறோம். அந்த இடத்திற்குக் கங்கனானி என்று பெயர். ஜமுனோத்ரிக்குச் செல்லும் வழியில் இருப்பது கங்கானி; இது கங்கனானி. இந்தப் பகுதியில் வியாச பகவானின் தந்தை பராசரர் தவம் இயற்றியதாகப் புராண வரலாறு கூறுகிறது. அங்கு ஒரு பலகையில் 'பராசரர் ஆச்ரமம்' என்று எழுதப்பட்டிருப்பதைக் கண்டேன். அந்த ஆச்ரமத்திற்குச் செல்ல வேண்டுமானால், பாகீரதி நதியை ஒரு தொங்கு பாலத்தின் மூலம் கடந்து அக்கரைக்குச் சென்று, ஒரு சிறு மலையின் மீது ஏறிச் செல்ல வேண்டும். கிழிருந்து பார்த்தபோது, குன்றின் மீது ஒரு சிறு குண்டத்திலிருந்து ஆவி வருவது தெரிந்தது. அங்கிருந்த ஒருவரிடம் அது என்னவென்று விசாரித்தேன். அது ஓர் உஷ்ண குண்டம் என்றும், அது 'ரிஷி குண்டம்' என்று அழைக்கப்படுவதாகவும் அவர் கூறினார். அது பராசரரும், மற்ற மாமுனிவர்களும் நீராடிய குண்டமாகத்தான் இருக்க வேண்டும். அங்கு போய் வருவதென்றால், குறைந்தது ஒரு மணி நேரமாவது ஆகும். பிறகு

'கோபாங்' போவதற்குள் பத்து மணியாகிவிடலாம். அந்த நேரத்தில் அப்பகுதிகளில் பயணம் செய்வது நல்லதல்ல. எனவே, நாங்கள் ரிஷி குண்டத்தையும், பராசரர் ஆச்ரமத்தையும் கீழிருந்தபடியே கும்பிட்டுவிட்டுப் பயணத்தைத் தொடர்ந்தோம். திரும்பி வரும்போது அங்கு ஏறிப் போய்ப் பார்க்கலாம் என்ற நல்ல எண்ணத்துடன்தான் சென்றோம். ஆனால், எங்கள் திட்டம் நிறைவேறவில்லை. போகும்போது மிக அவசரம். திரும்பும்போது அதிக அலுப்பு!



கோபாங்கில் கண்ணனும் ஆசிரியரும்

கங்கனானிக்குப் பிறகு பாகீரதி புது அழகுடன் பூத்துக் குலுங்குகிறாள். நாங்கள் உயரே போகப் போக, அவள் வடிவம் விரிவும் அமைதியும் பெறுகிறது. அகண்ட காவேரியைத் தரிசிக்கும் ஆனந்த அனுபவத்தைப் பெறுகிறோம். தேவப்பிரயாகையில் கர்ஜித்துச் சுழன்று சுழன்று ஓடும் பாகீரதியா, இங்கு இத்தனை மௌனமாக ஓடுகிறாள்? சற்று முன்பு கங்கனானியில் பாறைகளில் ஆக்ரோஷமாக முட்டி, மோதி 'ஓ'வென்ற பேரிரைச்சலுடன் முழங்கினாளே அந்த பாகீரதிக்கும், இவளுக்கும் எத்தனை வேற்றுமை? அடையாளமே தெரியவில்லையே?

திடீரென்று ஒரு திருப்பம். வேகமாகப் போய்க் கொண்டிருந்த எங்கள் கார் சட்டென்று நின்றது. ''என்ன?'' என்று கேட்டேன் நான். ''அதோ பாருங்கள்!'' என்று காட்டினார் புஷ்க்கர். எட்டிப் பார்த்தேன். பாதையையொட்டிய மலைச்சரிவிலிருந்து சிறு சிறு கூழாங் கற்கள் உருண்டோடி வந்து கொண்டிருந்தன. யாரோ மேலே இருந்து உருட்டி விடுவது போல் அவை ஒரே சீராக விழுந்து கொண்டிருந்தன. இறங்கிச் சென்று, அருகில் நின்று அந்த அழகான காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தோம்.

''உங்களுக்கென்ன பைத்தியம் பிடித்திருக்கிறதா? காரில் வந்து ஏறிக் கொள்ளுங்கள். மலை சரியப் போகிறது என்பதற்கு இது அறிகுறி. இது பெரிய பெரிய பாறைகளாகத் தலையில் வந்துவிழும், ஓடி வாருங்கள்'' என்று கூறிப் புஷ்க்கர் எங்களை அழைத்துச் சென்றுவிட்டார். உண்மைதான். அங்கு போய் நின்றது அசட்டுத் தைரியம் மட்டுமல்ல, மிகவும் பொறுப்பற்ற செயலுமாகும் என்று சற்றைக்கெல்லாம் தெரிந்துவிட்டது. எங்கள் கார் அங்கிருந்து நகர்ந்த உடனேயே அம் மலையிலிருந்து மண்ணும் பாறையும் சரிந்து 'தடால்' என்ற சத்தத்துடன் கீழே விழுந்தது.

மணி ஆறு ஆறரை ஆகிவிட்டது. 'கோபாங்' காம்ப் போய்ச் சேருவதற்கு இன்னும் பத்துப் பன்னிரண்டு மைல்கள் சென்றாக வேண்டும். வளைந்து வளைந்து செல்லும் பாதை குறுகலாகிக் கொண்டு போவதாலும், இருட்டு




லங்காவிலிருந்து பைரவன் கட்டத்திற்கு...

நேரமானதாலும், நாங்கள் ஆமை வேகத்தில் நகர்ந்து கொண்டிருந்தோம். முதலில், ஏழு மணிக்கெல்லாம் 'கோபாங்' போய்ச் சேர்ந்துவிடலாம் என்று புஷ்க்கர் போட்டிருந்த கணக்குத் தவறிவிட்டது. எனக்கோ ஏழு மணிக்குமேல் மலையில் பயணம் செய்வதில் விருப்பமில்லை. வழியில் எங்காவது தங்கிவிட்டு, மறுநாள் காலையில் பயணத்தைத் தொடரலாம் என்று கூறினேன் நான்.

புஷ்க்கர் அதற்குச் சரியாகப் பதில் சொல்லாமல் காரைச் செலுத்திக் கொண்டிருந்தார். வழியில் தங்குவதற்கு பதிலாக ஒன்பது மணிக்குள் 'கோபாங்' போய்ச் சேர்ந்துவிடலாம் என்றும், 'காம்ப்'பில் இரவு குளிர் அடக்கமாக, சௌகரியமாகப் படுத்து உறங்கலாம் என்றும் அவர் ஜவான் ஸலீந்தர்சிங்கிடம் கீழ் ஸ்தாயியில் கூறிக் கொண்டிருந்தது என் காதில் விழுந்தது. புஷ்க்கரின் காரோட்டும் திறவில் எனக்கு ஒரு திடநம்பிக்கை ஏற்பட்டுவிட்டதால், நானும் பேசாமல் இருந்துவிட்டேன்.

இருளில் இயற்கையின் கோலம் சட்டென்று மாறிவிட்டிருந்தது. பச்சைப் பசேலென்றிருந்த மலைகள் கரும் பாறைகளாக 'ஹோ'வென்று நின்றிருந்தன. பிறைச் சந்திரன் இமய உச்சியின் விளிம்பின் மீது மின்னிக் கொண்டிருந்தது. அக் காட்சி அந்தச் சந்திரசூடனையே நினைவுபடுத்தியது. சலசலத்துக் கொண்டிருந்த பாகிரதியைத் தவிர, அங்கு வேறு சப்தமே இல்லை. தொலைவில் வெள்ளிப் பனிமலையின் சிகரம் பளபளத்துக் கொண்டிருந்தது. லேசாகக் குளிரவும் தொடங்கிவிட்டிருந்தது. எங்கள் ஸ்வெட்டர், மஃப்ளர், ஷால் எல்லாம் பைக்குள்ளிருந்து வேகமாக வெளி வந்தன.

ஹர்சில், தராலி என்ற ஊர்களைக் கடந்து சரியாக இரவு ஒன்பது மணிக்கெல்லாம் 'கோபாங்' ஐ.டி.பி.பி. காம்ப்பிற்கு வந்து சேர்ந்தோம். சரியான காட்டுப் பகுதி. ஈரப் பசையோடு குளிர்காற்று தாக்கிக் கொண்டிருந்தது. 'மினுக் மினுக்'கென்று ஓரிரு ஹரிக்கேன் விளக்குகள் மட்டும் மின்னிக் கொண்டிருந்தன. குளிருக்கு அடக்கமாக அங்கு சுருண்டு படுத்துக் கொண்டிருந்த ஒரு நாய் சிலிர்த்துக் கொண்டு எழுந்து நின்றது; ஆனால், எங்களைப் பார்த்து



பைரவன் கட்டத்திலிருந்து கங்கோத்ரிக்கு....


அது குரைக்கவே இல்லை. ராணுவ உடையிலிருந்த ஸலீந்தர்சிங்கை தங்கள் ஆசாமியாக அந்த இருட்டிலும் அது அடையாளம் கண்டு கொண்டிருக்க வேண்டும்!

ஸலீந்தர்சிங் மட்டும் காரிலிருந்து இறங்கிச் சென்று, யாரையோ எழுப்பி விசாரித்து, எங்களுக்காக ஏற்பாடு செய்து வைக்கப்பட்டிருந்த கூடாரத்திற்கு அழைத்துச் சென்றார்.

குளிர் தாங்க முடியாமல் போய்விடவே, மாத்லி 'காம்ப்'பில் கொடுத்த 'ஃபர் கோட்டை' எடுத்து மாட்டிக் கொண்டோம். அது 'புஸு புஸு'வென்றிருந்ததால் ஏதோ விண்வெளி வீரர்களைப் போல் நாங்கள் தோற்றமளித்தோம். தலையையும், காதுகளையும் நன்றாக மூடிக்கொண்டு கூடாரத்திற்கு வெளியே வந்து வானத்தைப் பார்த்தோம். அம் மாதிரியான ஒரு காட்சியை நான் அதுவரை கண்டதே இல்லை.

பிறைச் சந்திரன் கண்ணிலிருந்து மறைந்துவிட்டிருந்தாலும் கருமலைச் சிகரங்களுக்குப் பின்னால் சிறு அகல் விளக்கொன்று ஏற்றி வைத்தது போல் மங்கலான வெளிச்சம் தெரிந்தது. நீலவானம் என்ற சொற்றொடருக்கு அன்றுதான் எனக்குப் பொருள் புரிந்தது. அம்மாதிரியான ஓர் அபூர்வ வண்ணக் கலவையை ஒப்பற்ற ஓவியனாலும் குழைத்துவிட முடியாது. பஞ்சுத் திட்டுக்கள் போன்று அங்கொன்றும் இங்கொன்றுமாக மிதந்த வெண் மேகங்கள், அந் நீல வண்ணத்தை மேலும் உறுதிப்படுத்திக் காட்டின. நட்சத்திரங்கள் லட்சக்கணக்கில் ஜொலித்துக் கொண்டு இருந்தன. சென்னையில் ஒரே சமயத்தில், ஒரே இடத்தில் அத்தனை நட்சத்திரங்களைப் பார்க்கவே முடியாது. புதிய பூமியில் நின்று அந்தப் புதிய வானத்தை நாங்கள் வெகு நேரம் ரசித்துக் கொண்டிருந்தோம்.

அப்போது ஓர் ஆசாமி அங்கு வந்தார். ''சார், ரொம்பக் களைப்பா வந்திருப்பீங்க. என்ன சாப்பிடறீங்க?'' என்று அவர் கேட்டார். பச்சைத் தமிழிலேயே கேட்டார். தாய்த் தமிழ் நாட்டிலிருந்து ஆயிரம் மைல்களுக்கு



கங்கோத்ரியை அடைந்து விட்டோம்

அப்பால், 8,500 அடி உயரத்திலுள்ள இமயமலைக் காட்டுக்குள்ளே, சற்றும் எதிர்பாராமல் திடீரென்று தீந்தமிழ் மொழியைக் கேட்டபோது, அதன் இனிமையும் குளுமையும் பன்மடங்காகத் தெரிந்தன.

அவர் பெயர் தாமஸ். ராமநாத புரம் மாவட்டம் பரமக்குடியை அடுத்த திருவள்ளூரைச் சார்ந்தவர். ஐ.டி.பி.பி. யில் பதினேரு வருடங்களாகப் பணி புரிந்து வருகிறர். 'கோபாங்' காம்ப்பில் சமையலறைக்கு அவர்தான் பொறுப்பு.

அவருடன் 'சியாம்லால்' என்ற இளைஞரும் வந்திருந்தார். எங்களுக்கு டின்னர் தயார் செய்வதாக இருவரும் உபசாரம் செய்தனர். நாங்கள் ஒன்றும் வேண்டாம் என்று கூறி, சூடாகக் காப்பி மட்டும் வாங்கி அருந்திவிட்டுப் படுப்பதற்கான ஏற்பாடுகளைக் கவனித்தோம்.


அந்த காம்ப்பிற்குப் பின்புறம் உத்தரப் பிரதேசப் போலீஸ்காரர்கள் ஆடிப் பாடி மகிழ்ந்து கொண்டிருந்தனர். அந்த நாடோடிப் பாடல்கள் காதுக்கு இனிமையாக இருந்தன. ''அங்கு போய் அந்தப் பாட்டை ரிக்கார்டு செய்யலாமா?'' என்று சியாம்லாலிடம் விசாரித்தேன். அவர்கள் தற்போது தங்கள் நிலையில் இல்லையென்றும் அங்கு செல்வது அத்தனை நல்லதல்ல என்றும் கூறி என்னைத் தடுத்துவிட்டார் அவர்.

ஐடகங்கையின் மீதுள்ள பாலம்



நாங்கள் 'பெட்டிங் கிட்'டைப் பிரித்து, அதனுள் புகுந்து கொண்டு, "ஸிப்'பை இழுத்து விட்டுக் கொண்டோம். அதன் சுகத்தை அதனுள் படுப்பவர்கள்தான் உணர முடியும். எந்தக் குளிரும் ஒன்றும் செய்ய முடியாது. சொர்க்கம்தான்!

போலீஸ்காரர்களின் நாடோடிப் பாடல், இமயத்தின் அமைதியைக் கிழித்துக் கொண்டு எங்களுக்குத் தாலாட்டாக, தெம்மாங்குத் தேனாக ஒலித்துக் கொண்டிருந்தது. உறக்கம் ஆர்வத்துடன் எங்களைக் கட்டித் தழுவியது.



உருக்குலைந்து போயிருக்கும் பாறைகள்

மறுநாட் காலை ஆறு மணிக்கெல்லாம் எழுந்து கங்கோத்ரிக்குச் செல்வதாகத் திட்டமிட்டிருந்தோம். ஆனால், நாங்கள் கண் விழித்த போதே மணி ஏழாகி விட்டிருந்தது. 'பிசுபிசு' வென்று மழை தூறிக் கொண்டிருந்ததால், ஒன்பது மணிக்கு முன்னால் அங்கிருந்து கிளம்ப முடியும் என்று தோன்றவில்லை. கங்கோத்ரியை அடைய இன்னும் ஒன்பது மைல்கள் சென்றாக வேண்டும். அதில் ஒரு மைல் பயங்கரப் பள்ளத்தாக்கில் இறங்கி நடந்தாக வேண்டுமாம். வழுக்குப் பாறைகளில் நடப்பது ஆபத்து நிறைந்தது என்றும், வானம் வெளுத்த பிறகு செல்வதுதான் நல்லது என்றும் 'காம்ப்'பிலிருந்த அதிகாரி அறிவுரை கூறவே, வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டே காத்திருந்தோம். அதற்குள் எங்களுக்கு ஸ்பெஷல் ஷூக்களும், மழைக் கோட்டுகளும் கொண்டு வந்து கொடுத்தார் அவர். அவற்றை யெல்லாம் மாட்டிக் கொண்டு, ஏதோ ஒரு போர்முனைக்குச் செல்லும் தளபதிகள் போல் நானும் கண்ணனும் கூடாரத்தின் எதிரில் நின்று கொண்டிருந்தது, ஸ்ரீநிவாசனுக்கு வேடிக்கையானதொரு காட்சியாகத் தோன்றவே, எங்களை அந்த வேஷத்தில் ஒரு படம் பிடித்துக் கொண்டார்.

சரியாக 10-30-க்கு 'கோபாங்' ஐ.டி.பி.பி. காம்ப்பைவிட்டுப் புறப்பட்டு பதினைந்து நிமிடங்கள் கழித்து 9,150 அடி உயரத்திலிருக்கும் 'லங்கா' என்ற இடத்தில் எங்கள் டாக்சி போய் நின்றது. அங்கிருந்து நடக்க வேண்டும். ஒரு மைல் இறங்கி, மீண்டும் மேலே ஏறி அக்கரைக்குச் செல்ல வேண்டும். கூலிகளைப் பிடித்து, சாமான்களை யெல்லாம் அவன் முதுகில் கட்டிவிட்டு நாங்கள் நடக்கத் தொடங்கினோம். இங்கெல்லாம் கூலிகளுக்கு ஏஜெண்டுகள் இருக்கிறார்கள். சாமான்களை எடைபோட்டு 'இத்தனை கொடுக்க வேண்டும்' என்று கூறிவிடுகிறார்கள். அநாவசியத் தகராறுகளுக்கும் வீண் வாக்குவாதங்களுக்கும் இடமே வைப்பதில்லை.

நாங்கள் நடந்து சென்றது மரங்கள் மண்டிக் கிடந்த அடர்ந்த காட்டுப் பகுதி. ஆபத்துக்கள் நிறைந்த பயங்கரமான பாதை. ஈரம் படிந்த பாறைகளில் ஏறி இறங்கி, இரு நதிகள் சங்கமம் ஆகும் இடத்திற்கு வந்து சேர்ந்தோம்.

இங்கு கங்கோத்ரியிலிருந்து கலங்கலாகப் பாய்ந்து வரும் பாகிரதியில், திபெத்திலிருந்து பளிங்கு போல் ஓடிவரும் 'ஜடகங்கா' என்ற நதி கலக்கிறது. அதற்கு ஜானவி என்றும் பெயராம். தங்களைவிடப் பலமுள்ளவர்களை அடித்து விட்டு, கை வலி தாங்காமல் தானே அழும் குழந்தையைப் போல், ஜடகங்கா பாறைகளைத் தாக்கிவிட்டு, 'ஓ'வென்று ஓலமிட்டுக் கொண்டே ஓடும்போது, அப் பள்ளத்தாக்கு எதிரொலி எழுப்பி எக்காளமிடுகிறது. மண் தரையை அரித்திருப்பது போல் நதிப் பிரவாகம் அங்கு பாறைகளை உருத் தெரியாமல் அடித்திருக்கிறது. அங்குள்ள இரு பழைய பாலங்களின் மீது நடக்கும்போது, இயற்கையன்னை படைத்துத் தந்துள்ள கனவு உலகத்தில் சஞ்சரிப்பது போல் தோன்றுகிறதே தவிர, நாம் வாழும் உலகில் பயணம் செய்வது போலவே தோன்றவில்லை.

அந்தப் பகுதிக்கு 'பைரவன் கட்டே' என்று பெயர். அங்கு பைரவனுக்கு ஒரு சிறு கோயில் இருக்கிறது. கங்காதேவி, சிவபெருமானின் சிரசிலிருந்து பூலோகத்தில் இறங்கும் இடத்திற்குச் செல்லும் முன் நாம் பைரவமூர்த்தியைத் தரிசித்துக் கொண்டு செல்கிறோம்.

நதிகளைக் கடந்து, மீண்டும் சமதரைக்கு வந்து சேரும்போது மூச்சு முட்டுகிறது. சற்று இளைப்பாற வேண்டும் போல் தோன்றுகிறது. அங்கிருந்து ஆறரை மைல் பயணம் செய்து மேலும் ஓர் ஆயிரம் அடி ஏறினால், கங்கோத்ரிக்குப் போய்ச் சேர்ந்து விடலாம்.

முன்பெல்லாம் இங்கிருந்து கால் நடையாகத்தான் செல்ல வேண்டும். தற்போது ஓரிரு பஸ்களும், ஜிப்புகளும் சென்றுவர வசதி செய்து தந்திருக்கிறார் கள். இந்த இடத்திற்கு எப்படி வாகனங்கள் வந்தன என்று நாங்கள் வியந்து கொண்டிருந்தபோது, ஜிப் டிரைவர் எங்கள் சந்தேகத்தைத் தீர்த்து வைத்தார். வாகனங்களைப் பிரித்து, லங்காவிலிருந்து ஒவ்வொரு பாகமாக இந்தப் பக்கம் கொண்டு வந்து சேர்ப்பார்களாம். பின்னர், அவற்றை ஒன்று சேர்த்து முடுக்கு வார்களாம். வாகனங்கள் போகக்கூடிய வகையில் ஒரு பாலம் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாகவும் அந்த டிரைவர் கூறினார். பின்னர் பத்ரிநாத்துக்குச் செல்வது போல் கங்கோத்ரிக்கும் நேரே பஸ்ஸிலோ, காரிலோ செல்லலாம்.

பன்னிரண்டரை மணிக்கு கங்கோத்ரிக்கு வந்து சேர்ந்து விட்டோம். கோயிலிலிருந்து ஒரு பர்லாங் தொலைவில் நம்மை இறக்கிவிட்டு விட்டார்கள். அங்கிருந்து, ரம்மியமான இயற்கைக் காட்சிகளை ரசித்துக் கொண்டே நடந்து சென்றது சொல்லில் அடங்கா சுகமாயிருந்தது.

வந்து இறங்கியதுமே, இது யமுனோத்ரியைவிடப் பெரிய இடம் என்பது விளங்கி விடுகிறது. எங்களுக்கு வலப்புறம், சின்னஞ்சிறு வீடுகள் பல தென்பட்டன. அவற்றில் காவி நிறக் கொடிகள் பறந்து கொண்டிருந்தன. அவை சாதுக்கள் வசிக்கும் குடில்களாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டேன். அக்கரையில் பல கட்டடங்கள் தெரிந்தன. அங்கு பயணிகள் விடுதிகளும், சில ஆச்ரமங்களும் இருப்பதாக அறிந்தோம். இரு பாலங்களைக் கடந்து அங்கு செல்ல வேண்டும்.

மப்பும் மந்தாரமுமாக இருந்த வானம், பன்னீர் தெளித்து எங்களை வரவேற்பது போல் பொன்மாரிப் பொழிந்து கொண்டிருந்தது. சுற்றிலுமுள்ள மலைச் சிகரங்களிலிருந்து பனிக் காற்று வீசிக் கொண்டிருந்தது. பேரிரைச்சலுடன் ஓடிக் கொண்டிருந்த பாகிரதியை, மலைகளின் மீது மந்தமாகத் தங்கியிருந்த மேகக் கூட்டம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

நாங்கள் பாகிரதியின் பாலத்தின் மீது நடந்து கொண்டிருந்தோம். எங்கள் இடப்புறம் வெகு தொலைவிலிருந்து பாகிரதி வளைந்து வளைந்து வந்து கொண்டிருந்தாள். கேதார் சிகரத்திலிருந்து 'கேதார் கங்கா' பாய்ந்து வந்து, அங்கு பாகிரதியுடன் குதூகலத்துடன் கலந்து உறவாடிக் கொண்டிருந்தாள். எல்லாரும் இமயக் குமரிகளே. இருப்பினும், ஒவ்வொரு சிகரத்தையும் ஒட்டி ஒவ்வொருத்திக்கு ஒவ்வொரு பெயர்!

தெரிந்தும் தெரியாமலும் நாம் செய்யும் பாவங்களைக் கழுவி, நம்மைக் கடையேற்றக் காத்திருக்கும் அன்னை கங்கையை கங்கோத்ரியில் தரிசித்ததும், புல்லரித்துப் புளகிதம் மேலிட்டது. எட்டு மாதங்களுக்குமுன், தேவப்பிரயாகையில், அலகநந்தாவுடன் கலக்கும் இந்த பாகிரதியைத் தரிசித்துப் பூரித்துப் போனேன். இத்தனை விரைவில் அவளை கங்கோத்ரியில் தரிசிக்கும் பாக்கியம் கிட்டும் என்று அப்போது நான் கனவுகூடக் காணவில்லை. தாய் வீட்டில் உரிமை கொண்டாடி சோம்பேறியாய் வளைய வரும் எழில் மங்கையாகவும், சர்வ சுதந்திரத்துடன் அங்கு கும்மாளமிட்டுக் குதூகலிக்கும் பருவக் குமரியாகவும் பாகிரதியை அங்கு சந்திக்கிறோம்.

கேதார் கங்கையின் மீதுள்ள சிறு பாலத்தையும் கடந்து, எங்கள் விடுதிக்கு வந்து, சற்றைக்கெல்லாம் ஸ்நானத்திற்குப் புறப்பட்டோம்.

நாங்கள் பாகிரதி பாலத்தை மீண்டும் கடந்து, ஸ்நான கட்டத்திற்கு வந்து சேர்ந்தோம். தைரியமாக உடைகளையும் களைந்து விட்டோம். ஆனால்,

கங்கோத்ரியில் நீராடு துறை



நீரைத் தொட்டுப் பார்த்தபோது நடுங்கியே விட்டோம். பத்ரிநாத்தில் அலகநந்தா இருப்பதைவிடக் குளிர்ச்சியாக இருந்தது அது. விரல்களெல்லாம் மரத்துப் போய்விட்டன. சற்று நேரம் அவற்றில் சொரணையே யில்லை.

அப்போது கண்ணன் ஒரு யோசனை கூறினார்: ''கடையிலிருந்து கடுகு எண்ணெய் வாங்கிக் கொண்டு வந்து, உடம்பு பூராவும் நன்றாகத் தேய்த்துக் கொண்டு பிறகு நதியில் இறங்கிக் குளித்தால், அத்தனை ஜிலு ஜிலுப்புத் தெரியாது'' என்று அவர் கூறியதும், எண்ணெய் வாங்கி வந்து, உடலெங்கும் நன்றாகத் தேய்த்து விட்டுக் கொண்டோம்.

நாங்கள் அந்தக் குளிரில் சட்டை வேட்டிகளைக் களைந்து, வெறும் உடம்புடன் நின்றிருந்ததே அங்கிருந்த வட இந்தியர்களுக்குப் பெரும் வியப்பாகிவிட்டது. நீரில் மூழ்கி எழுந்தபோதோ, அவர்கள் அதிசயப்பட்டுப் போய், வைத்த கண் வாங்காமல் எங்களையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். அங்கு யாருமே நீரில் மூழ்கிக் குளிக்கவில்லை. பாறையில் உட்கார்ந்து, செம்பில் நீரை எடுத்து, கை, கால், முகங்களைக் கழுவிக் கொண்டிருந்தனர். ஓரிருவர், இரண்டு மூன்று செம்பு நீரை எடுத்து, அவசரம் அவசரமாக மேலே விட்டுக் கொண்டு ஓடிவந்து விட்டனர்.

நாங்கள் ஏதோ ஒரு வெறியில் மூழ்கி எழுந்துவிட்டோமே தவிர, கரைக்கு வந்ததும் தவித்தே போய்விட்டோம். ஆயிரம் தேள்கள் உடலெங்கும் கொட்டியதுபோல், 'விறு விறு'வென்று இழுத்து, இரத்தமே உறைந்துவிட்டது போல் ஓர் உணர்வு ஏற்பட்டது. ஒரு டன் பளு ஏறியது போல் தலை கனத்தது. மூச்சு நின்று விடுவது போல், மார்பு வேகமாக அடித்துக் கொண்டது.

எங்கள் நடுக்கமும் படபடப்பும் அடங்க ஐந்து நிமிடங்கள் பிடித்தன.

அப்போது ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் தமது குடும்பத்துடன் அங்கு வந்தார். என்னைப் பார்த்து ''நீங்கள்தானே..?'' என்று விசாரித்தார்.

''ஆமாம்'' என்றேன் நான்.

''நீங்கள் மும்முடிவரம் பாலயோகி ஆச்ரமத்திற்கு வந்திருந்தபோது நாங்களும் வந்திருந்தோம். ஆனால், அப்போது உங்களைச் சந்தித்துப் பேச முடியவில்லை. சற்றும் எதிர்பாராமல் கங்கோத்ரியில் தங்களைச் சந்தித்துப் பேசும் பாக்கியம் கிடைத்ததில் எங்களுக்கு ரொம்ப மகிழ்ச்சி'' என்றார் அவர்.

நான் யாரோ? அவர் யாரோ? மும்முடிவரம் எங்கே? கங்கோத்ரி எங்கே? கோதாவரிக் கரை எங்கே? பாகிரதிக்கரை எங்கே? கோதாவரியும் காவிரியும் கங்கையும் யமுனையும் இப் புண்ணிய பாரத மக்களை இணைத்து வைக்கும் புனித தீர்த்தங்கள் அன்றோ!

அப்போது கோயில் பண்டா வந்து, ''கங்கா தேவிக்கு பூஜை செய்கிறீர்களா?'' என்று கேட்டார்.

''கங்கோத்ரியில் கங்கைக்குப் பூஜை செய்யக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே, உட்காருங்கள்'' என்றேன் நான்.

பாரதத்தை வாழ்விக்க அவதாரம் எடுத்துள்ள புனித கங்கைக்கு அங்கு பூஜை செய்யும் புண்ணியம் எங்களுக்குக் கிட்டியது.



பாகீரதி கோயில் (கங்கோத்ரி)

14

நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்தாலும் கங்கையின் பெயரை உச்சரிப்பவர்கள் தங்கள் பாவங்கள் எல்லாம் நீங்கப் பெற்று, வைகுண்டப் பதவியை அடைவார்கள் என்கிறது தேவி பாகவதம்.

அத்தனை புனிதமிக்க கங்கைக்கு, கங்கோத்ரி புனிதத் தலத்திலேயே நம் கையால் அர்ச்சனை செய்து, ஆரத்தி காட்டும்போது ஆனந்தத்தின் எல்லையையே தொட்டு விடுகிறோம்.

''நதிகளில் நான் கங்கையா யிருக்கிறேன்'' என்கிறார் கீதாசாரியனான ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா. வையத்தை வாழ்விக்கும் பொருட்டு வானுலகிலிருந்து வந்த புனிதத் தீர்த்தத்தை நம் முன்னோர்கள் காத்தல் கடவுளாகவே நினைத்துப் போற்றியதில் தவறென்ன இருக்க முடியும்?

கங்கையின் உற்பத்தியைக் குறித்துத்தான் எத்தனை விதவிதமான கதைகள்! எத்தனை வளமான கற்பனை நயங்கள்!

ஸ்ரீ வைகுண்டவாசனான மகாவிஷ்ணுவின் சங்கீதத்தை ஒரு சமயம் சிவபெருமான் கேட்டுக் கொண்டிருந்தபோது அப்படியே உருகிப்போய் விட்டாராம். அது கங்கையாக ஓடிற்றாம்! அதை பிரம்மா தமது கமண்டலத்தில் பிடித்து வைத்துக் கொண்டு விட்டாராம்!

அந்த நீரினால் அவர் நாராயணனின் திருவடிகளைக் கழுவினாராம்: திருமாலின் மலரடிகளிலிருந்து பெருகிய அந்நீர் பகீரதனின் பிரார்த்தனைக்கு இணங்கி, பூலோகத்தை நோக்கிப் பாய்ந்ததாம்.

இமயத்தின் குமாரியான கங்கை, சிவபெருமானை மணந்துகொண்ட பிறகு, பிறந்தகத்தை விட்டுக் கைலாசம் செல்லப் புறப்பட்டாளாம். அப்போது பெற்றவளால், மகளின் பிரிவைத் தாங்க முடியவில்லையாம். அவள் ஒரு நதியாக மாறி, இமாலயப் பகுதியில் பாய்ந்து ஓட வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டாளாம். சிவபெருமானும் அதற்கு இணங்கினாராம்!

ஒரு சமயம் பார்வதிதேவி சிவபெருமானின் கண்களை விளையாட்டாகப் பொத்தப் போய், ஈரேழு உலகங்களும் இருளில் மூழ்கியதல்லவா? அப்போது சிவபெருமான் நெற்றிக் கண்ணைத் திறக்கவும்,சூரிய சந்திரர் மீண்டும் தோன்றி, உலகில் சகல ஜீவராசிகளும் உயிர்பெற்று எழுந்தன. தன் தவற்றை உணர்ந்த உமாதேவி, கணவனின் கண்களைப் பொத்தியிருந்த கைகளை எடுத்தாள். பயத்தால் நடுநடுங்கிய அவளது கை விரல்களிலிருந்து கீழே விழுந்த வியர்வைத் துளிகள் பத்து கங்கைகளாக மாறி அண்டசராசரங்களையே பிரளயத்திற் குள்ளாக்குவது போல் பயங்கரமாகச் சீறிப் பாய்ந்தன. அதைக் கண்டு பயந்த பிரம்மாவும், விஷ்ணுவும், இந்திரனும் சிவபெருமானிடம் சென்று மன்றாடினார் கள். கருணையுள்ளம் படைத்த கங்காதரன், எல்லா நதிகளையும் தம் தலைமுடியில் அடக்கிக் கொண்டு விட்டார். பின்னர், அம் மூவரும் தங்கள் உலகங்களுக்கு சிறிது நீர் தந்து அருளும்படி கோரவே, சிவபெருமான் அவ்விதமே செய்தார். வைகுண்டத்தில் 'விராஜ நதி' என்றும், பிரம்மலோகத்தில் 'மானஸ தீர்த்தம்' என்றும், இந்திரலோகத்தில் 'தேவ கங்கை'யென்றும் அவை பெயர் பெற்றன. பிரம்மலோகத்திலிருந்துதான் பகீரதன் தன் தவ சக்தியால் கங்கையை பூலோகத்திற்குக் கொண்டு வந்தான்.

தமது கங்காஷ்டகத்தில் பகவான் ஸ்ரீ ஆதிசங்கரர் கூறுகிறார்:

''ஏ, பாகீரதி! ஆதியில் நீ பிரம்மாவின் கமண்டலப் பாத்திரத்தில் இருந்தாய்; பின்னர் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் திருவடிகளை அபிஷேகம் செய்தாய்; சிவபெருமானின் சிரசை அலங்கரித்தாய். இறுதியில் ஜானு மகரிஷியின் மகளாய் அவதரித்து, ஜானவி என்ற பெயரையும் பெற்றாய்..''

பாரத நாட்டில் பிறந்த யாருக்குத்தான் பகீரதன் கங்கையைப் பூலோகத் திற்கு வரவழைத்த கதை தெரியாது. அந் நிகழ்ச்சியை அப்படியே படம் பிடித்துக் காட்டியுள்ள ரவிவர்மாவின் ஓவியத்தைப் பார்த்துப் பார்த்து அப்புராண வரலாறு நம் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்து விட்டிருக்கிறதே! எல்லோருக்கும் தன்னம்பிக்கையையும், விடாமுயற்சியையும், பிறர் நலம் பேணும் பரந்த உள்ளத்தையும் கற்றுத் தரும் அந்த நிகழ்ச்சி நம் ரத்தத்தோடு கலந்திருக்கிறதே..'பகீரதப் பிரயத்தனம்' என்ற சொற்றொடர் தோன்று வதற்கே காரணமாயிருந்த அந்தத் துறவி மன்னன் தவமிருந்த தலமல்லவா கங்கோத்ரி....அங்கல்லவா நாம் தற்போது அமர்ந்திருக்கிறோம்....... பகீரதனால் கொண்டு வரப்பட்டதால் பாகீரதி என்ற பெயர் பெற்ற கங்கைக்கு அல்லவா இப்போது பூஜை செய்து முடித்திருக்கிறோம்....

''பகீரத சிலாவைப் பார்த்துவிட்டுக் கோயிலுக்குப் போகலாம், புறப்படுங்கள்'' என்றார் பண்டா.



கங்கோத்ரியில் பாகீரதி நதியும் பாகீரதி கோயிலும்

''அப்படியென்ருல்....?''

''அதோ தெரிகிறதே, அந்த மண்டபம்தான். அங்கு பகீரதன் அமர்ந்து ஆயிரமாயிரம் ஆண்டுகள் தவமிருந்த பாறை இருக்கிறது..... வாருங்கள் பார்க்கலாம்'' என்கிருர் பண்டா வெகு சாதாரணமாக.

நமக்கு ஒவ்வொரு நரம்பும் நாடியும் துடிக்கிறது. உள்ளத்தில் பெருமகிழ்ச்சி பொங்குகிறது. கேட்ட கதைகளெல்லாம் கண் முன்ஞல் காட்சி தருகின்றன. படத்தில் பார்த்த காட்சிகளெல்லாம் உயிர்பெற்று எதிரில் உலவுகின்றன.

சூரிய வம்சத்தில் உதித்த சகர மகாராஜன், இந்திர பதவியை அடைவதற்காகத் தொண்ணூற்ருென்பது அச்வமேத யாகங்கள் செய்து முடித்து விட்டான். நூருவதுதான் பாக்கி. எனவே, இந்திரனுக்குக் கவலே ஏற்பட்டது. தன் பதவி பறி போகாமல் இருக்க நூருவது குதிரையைப் பிடித்துப் போய், கபில முனிவரின் ஆச்ரமத்தில் கட்டி வைத்து விட்டான்.



'பகீரத சிலா'



கௌரிசங்கர் சந்நிதி

குதிரை காணுமல் போகவே, சகர சக்ரவர்த்தியின் அறுபதினுயிரம் பிள்ளைகளும் அதைத் தேடிக் கொண்டு மூலை முடுக்குகளெல்லாம் சென்றூர்கள். கடைசியில் கபிலர் ஆச்ரமத்தில் குதிரை கட்டப்பட்டிருப்பதைக் கண்டு, அந்த முனிவர்தான் குதிரையைப் பிடித்து வந்திருக்க வேண்டும் என்று கருதி, அவரோடு சண்டைக்குப் போனூர்கள். கோபமடைந்த ரிஷி, அவர்களைச் சபித்து அங்கேயே எரித்துச் சாம்பலாக்கி விட்டார்.

காலம் ஓடியது. பல ஆண்டுகள் கழிந்தன. சகர மன்னனின் வம்சத்தில் பகிரதன் என்ற ஓர் அரசன் தோன்றினுன். முனிவரின் சாபத்தால் சாம்பல் மலையாகிக் கிடக்கும் தம் மூதாதையரை எப்படியாவது கரையேற்ற வேண்டு மென்று உறுதி பூண்டான். மாமுனிவர்களின் ஆலோசனைப்படி, கங்கையைக் கீழே இறங்கி வரச்செய்து அவர்கள் பாவத்தைக் கழுவ எண்ணம் கொண்டான். அதற்காகக் கடும் தவமிருந்தான். கங்கை அவன் முன் தோன்றினுள்: ''பகிரதா, உன் தவத்திற்கு அடிமையானேன் நான். ஆனுல், நான் பெருக்கெடுத்துப் பாய்ந்து வந்தால், இந்த பூலோகம் தாங்காது. நான் இறங்கி வரும்போது என் சக்தியைத் தாங்கக் கூடியவராக ஒருவரைத் தேடிக் கண்டுபிடி'' என்று கூறிச் சென்று விட்டாள்.

பகிரதன் மீண்டும் கடும் தவத்தில் அமர்ந்தான். நூற்றுக்கணக்கான ஆண்டுகள் மறைந்தன. பக்தனின் மீது சிவபெருமான் இரக்கம் கொண்டார். கங்கையின் வேகத்தைத் தாம் தடுத்து நிறுத்துவதாக வாக்களித்தார். அடுத்த கணம் சிறுத்தையெனச் சீறிப் பாய்ந்து வந்தாள் கங்கை. புன்முறுவல் பூத்த கங்காதரன் அவளைத் தன் முடியில் அப்படியே தாங்கி, அவள் கொட்டத்தை அடக்கி, மெள்ள பூமியில் ஓட விட்டார். வடக்கே அத்திருநாளை 'கங்கா சப்தமி'யாகக் கொண்டாடுகிறூர்கள். அது ஏப்ரல் கடைசி வாரம் வரும்.

பூமியில் மிடுக்குடன் ஓடிய கங்கை துடுக்குத்தனமாக ஜானு மகரிஷியின் ஆச்ரமத்தில் நுழைந்து, அதை அழிக்கப் பார்த்தாள். துணுக்குற்ற மகரிஷி, அவளைக் கையில் எடுத்து அப்படியே பருகிவிட்டார். பகிரதனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. தன் முயற்சியெல்லாம் வீணுனதை நினைத்து மறுகினுன். மீண்டும் தவமியற்றினுன். தங்கள் மூதாதையரைக் காத்து ரட்சிக்கும்படி


ஜானு மகரிஷியிடம் பிரார்த்தித்தான். பகீரதனின் பிரயத்தனத்திற்குப் பலன் கிட்டியது. ஜானு முனிவர், கங்கையைத் தன் காது வழியாக வெளியே விட்டார். அதனால் கங்கைக்கு ஜானவி என்ற பெயர் ஏற்பட்டது. அதற்குப் பிறகு தன் ஆர்ப்பாட்டத்தை அடக்கிக் கொண்ட கங்கை, கபிலர் ஆச்ரமத்தில் பாய்ந்து, அறுபதினாயிரம் சகர புத்திரர்களுக்கு நற்கதி தந்தருளினாள். இத்திருநாளை ஆனி மாதத்தில் 'கங்கா தசரா'வாகக் கொண்டாடுகிறார்கள். அப்போது ஹரித்வாரில் ஆயிரக்கணக்கானவர்கள் கங்கையில் நீராடுவார்கள்.

தம் முன்னோர்களின் பொருட்டு பாகீரதியை இங்கு அழைத்து வரப் பகீரதன் தபஸ் இருந்த புனித இடத்தில் நாம் இப்போது நின்று கொண்டிருக்கிறோம்.

பாகீரதியின் கரையிலிருந்து கோயிலுக்குப் போகும் வழியில், வடப்புறம் மரத்தாலான மண்டபம் ஒன்று உள்ளது. அதனுள் ஒரு பண்டா உட்கார்ந்திருக்கிறார். அவருக்கெதிரில் ஒரு சிறு பள்ளம் இருக்கிறது. அதனுள் எட்டிப் பார்த்ததில் அங்கு ஒரு கருங்கல் பலகை இருப்பது தெரிந்தது. ''அந்தப் பாறையின்மீது அமர்ந்துதான் பகீரதன் தவமிருந்தான்'' என்றார் பண்டா. அதைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டோம். பின்னர் அம் மண்டபத்தை வலம் வந்துவிட்டு, படிகளேறி பாகீரதி கோயிலுக்குள் சென்றோம்.

பகீரதன் தவமிருந்த பாறையின் மீதுதான் பாகீரதி கோயில் கட்டப்பட்டிருப்பதாகவும் கூறுகிறார்கள். யமுனோத்ரியிலுள்ள கோயிலைக் காட்டிலும் கங்கோத்ரியிலுள்ள கோயில் பெரிது மட்டுமல்ல, நவீனமானதும்கூட. முந்நூறு வருடங்களுக்கு முன், நேபாளத் தளபதி இங்கு ஒரு கட்டடம் எழுப்பினார். பின்னர், அது அழிந்து விடவே, ஜெய்ப்பூர் மன்னர் புதிதாக வேறொரு கோயில் கட்டினார்.

நதிக்கரையிலிருந்து கோயிலுக்குச் செல்கிறோம்



நாங்கள் சென்ற சமயம் கருவறை சாத்தப்பட்டிருந்ததால் தரிசனம் செய்ய முடியவில்லை. மாலையில் வந்தால் நன்றாகத் தரிசனம் செய்வதோடு பூஜை, ஆரத்தி எல்லாம் பார்க்கலாம் என்று கூறினார்கள். பிராகாரத்தைச் சுற்றி வலம் வந்தோம். அப்போது கௌரிசங்கர் சந்நிதியையும் விநாயகர் சந்நிதியையும் தரிசித்துக் கொண்டோம்.

ஆலயத்தின் முன்புறமுள்ள திண்ணையில் சில யாத்திரிகர்கள் கும்பலாக அமர்ந்திருக்க, பண்டா ஒருவர் மந்திரங்களை ஓதிக் கொண்டிருந்தார். அருகில் சென்று பார்த்தேன். அவர்களெல்லாம் கங்கையிலிருந்து ஜலம் எடுத்து வந்து அதற்குப் பூஜை செய்து கொண்டிருந்தார்கள். பின்னர் அச் செம்புகளை ராமேச்வரத்திற்கு எடுத்துச் சென்று ஸ்ரீ ராமநாத சுவாமிக்கு அதனால் அபிஷேகம் செய்வார்களாம். அங்கிருந்து எடுத்து வந்திருக்கும் மணலைப் பாகீரதியில் கரைப்பார்களாம். தொன்றுதொட்டுப் பழக்கத்தில் இருந்து வரும் இத்தகைய பயணங்கள் மக்களின் நம்பிக்கையை வளர்த்து, பாரதத்தை ஒருங்கிணைத்து, நம் கலாசாரத்தைப் பேணிக் காத்து வந்திருக்கின்றன.

விடுதிக்குத் திரும்பியபோது எங்களுக்கு நல்ல பசி. ஐந்து நிமிடத்திற்கெல்லாம் வெள்ளாடை உடுத்தியிருந்த ஒரு சாது வந்து சாப்பிட வரும்படி எங்களை அன்புடன் அழைத்தார்.

நாங்கள் தங்கியிருந்த விடுதியிலிருந்து சற்றுத் தொலைவில் 'தண்டி சுவாமி க்ஷேத்திர' என்ற போர்டுடன் ஓர் ஆச்ரமம் இருந்தது. 'ஈச்வர மட் காசி முமுக்ஷு பவன் (வாரணாசி)' என்று அருகில் மற்றொரு போர்டும் காணப்பட்டது. அங்கிருந்துதான் ஆங்கிலம் பேசும் ஒரு சாது எங்களைத் தேடி வந்து சாப்பாட்டுக்கு அழைத்தார். நாங்கள் குளிப்பதற்குப் புறப்பட்டபோதே அவர் எங்களை வழிமறித்து, கங்கோத்ரியில் இருக்கும் வரை தங்கள் ஆச்ரமத்திலேயே டிபன், காபி, சாப்பாடு எல்லாம் வைத்துக் கொள்ளும்படி கூறியிருந்தார்.

நாங்கள் அவரைப் பின்தொடர்ந்து சென்றோம். ஆச்ரமத்தின் வெளிப்புறத்தில், ஆஜானுபாகுவான ஒரு சாது நின்றுகொண்டு, இடிந்த மதில்

கங்கை நீருக்குப் பூஜை செய்கிறார்கள்





இயற்கை வனப்புமிக்க கங்கோத்ரியின் தோற்றம்

சுவரைப் பழுது பார்த்துக் கொண்டிருந்த பணியாளை மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்தார். எங்களைக் கண்டதும் புன்முறுவலுடன் ''உள்ளே வாருங்கள்'' என்று அன்புடன் அழைத்தார். அவர்தான் அந்த ஆச்ரமத்தின் தலைவர். அவருடைய பெயர், தண்டிசுவாமி பரம் வித்யானந்த தீர்த்.

எங்களுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. 'என்ன அன்பு, எத்தனை உபசரிப்பு! அடேயப்பா!' என்று வியந்து கொண்டே உள்ளே சென்று அமர்ந்தோம். 'பளபள'வென்று தட்டுகள் வந்தன. அதைத் தொடர்ந்து சூடான சப்பாத்தி, தால், ஸ்வீட் பச்சடி, ஊறுகாய், பப்படம், சாதம் எல்லாம் வந்தன. அந்தக் குளிருக்கும் எங்கள் பசிக்கும் ஏற்ப அவற்றை ரசித்து ருசித்துத் திருப்தியாகச் சாப்பிட்டோம்.

அது பெயருக்குத்தான் ஆச்ரமம். அது அறிவிக்கப்படாத ஒரு சிறு ஓட்டல் என்றே சொல்ல வேண்டும். மாடியில் அறைகள் இருக்கின்றன. கீழே சாப்பாடும் டீயும் கிடைக்கிறது. ஆனால், உள்ளே நுழையும்போது, 'ரேட்' பேசுவது கிடையாது. எல்லாம் 'இனாம்' என்பது போல் ஒரு பிரமையைத் தோற்றுவிக்கிறார்கள். ஆனால், வெளியே வரும்போது நன்கொடையாக

ஏதாவது கொடுத்துவிட்டுத்தான் வரவேண்டும். வாங்கிக் கொள்வதில் தயக்கமோ, கூச்சமோ கிடையாது. நாம் பணத்தைக் குறைத்துக் கொடுத்து விட்டாலோ, அங்குள்ளவர்கள் 'ஒரு மாதிரி' அதை நமக்குத் தெரியப்படுத்தி விடுவார்கள்!

எப்படியோ இருந்துவிட்டுப் போகட்டும்! அந்த உயரத்தில், அந்தக் குளிரிலும் பனியிலும் எங்கிருந்தோ சாமான்களைச் சேகரித்துக் கொண்டு வந்து, வருபவர்களுக்கு வயிறார, வாய்க்கு ருசியாக ஏதோ செய்து போடுகிறார்களே, அந்தச் சேவையைப் பாராட்டித்தானே ஆகவேண்டும்!

பூனாவிலிருந்து வந்திருந்த ஒரு வயோதிகரையும் அங்கு சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தேன். நான் பயணம் வந்திருக்கும் காரணத்தை அறிந்தபோது அவர் உள்ளம் மகிழ்ந்து போனார்! "'கோமுக்' செல்லப் போகிறீர்களா?" என்று கேட்டார். "அப்படித்தான் உத்தேசம், தெய்வ சங்கல்பம் எப்படியோ?" என்று அவருக்குப் பதில் கூறினேன் நான்.

"எப்போது புறப்படப் போகிறீர்கள்?" என்று கேட்டார்.

"நாளைக் காலையில் புறப்படலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம்."

"நல்ல வழிகாட்டி இல்லாமல் அங்கெல்லாம் போகாதீர்கள்.."

"அப்படித்தான் எல்லோரும் சொல்கிறார்கள். இங்கே சுந்தரானந்தா என்ற ஒரு சாது இருக்கிறாராம். அவரை அழைத்துக் கொண்டு சென்றால் சௌகரியமாயிருக்கும் என்று கேள்விப்பட்டேன். சற்று ஓய்வு எடுத்துக் கொண்ட பிறகு அவரைப் போய்ப் பார்ப்பதாக இருக்கிறோம்" என்றேன் நான்.

நாங்கள் புறப்பட்டபோது தண்டி சுவாமி ஆங்கிலம் பேசும் சாதுவைப் பார்த்து ஏதோ இந்தியில் சொன்னார். அந்த சாது எங்களைப் பார்த்து, " 'சாயந்திரம் காப்பி, இரவு சாப்பாடு எல்லாம் இங்கேதான்' என்று சுவாமி சொல்கிறார். மறந்து விடாதீர்கள்" என்றார். "அப்படியே ஆகட்டும்" என்றோம் நாங்கள். வேறே எங்கே போவது?

தண்டி சுவாமி ஆச்ரமத்தை ஒட்டினாற்போல் ஐந்தாறு குடில்கள் இருந்தன. அவற்றில் ஒரு குடிலில் சுந்தரானந்தா இருப்பதாக அறிந்து, அங்கு சென்றோம்.

கேரளத்தில் பிறந்து, வடக்கே சென்று ஒரு சாதுவாகி, பல ஆண்டுகள் இமாலயத்தின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் பயணம் செய்து, புனித இடங்களில் எல்லாம் தங்கி, ஆத்மசாந்தியைத் தேடியவர் ஸ்ரீ தபோவன்ஜி மகராஜ். தமது பயண அனுபவங்களை மிக விரிவாக அவர் எழுதி வைத்திருக்கிறார். அவற்றைப் படிக்கும்போது, அழகை ரசிக்கும் ஒரு கலைஞனின் உள்ளத்தையும் இயற்கை யெழிலில் இறைவனைக் கண்டு கரைந்து உருகும் ஒரு பக்தனின் தூய இதயத்தையும் காண்கிறோம். அவர் உத்தரகாசியிலும் கங்கோத்ரியிலும் அநேக ஆண்டுகள் தங்கி யிருக்கிறார்.

அன்னாருக்குச் சேவை புரியும் பேறு பெற்றவர்களில் சுந்தரானந்தாவும் ஒருவர். இருபத்தைந்து ஆண்டுகளாக கங்கோத்ரியில் வசித்து வரும் இவர்,

ஒரு கைதேர்ந்த புகைப்படக்காரர். இமாலயத்திலுள்ள இயற்கைக் காட்சிகளையும், பனிச் சிகரங்களையும் இவரைப் போல் அரிய கோணங்களில் படம் எடுத்திருப்பவர்கள் வெகு சிலரே இருக்க முடியும். சாதாரணமாக நாம் போக முடியாத பகுதிகளுக்கெல்லாம் அவர் சென்றிருக்கிறார். மலையேறும் கலையில் வல்லவர்.

நாங்கள் அவரது குடிலுக்குச் சென்றபோது தோட்டத்தில் ஏதோ வேலை செய்து கொண்டிருந்தார். எங்களை அவருக்கு அறிமுகம் செய்து கொண்டதும், அன்புடன் அழைத்து கம்பளியின்மீது அமரச் சொன்னார். ஒரு நொடியில் சூடான 'பஸ்ட் கிளாஸ்' டீ தயாரித்துக் கொண்டு வந்து தந்தார்.


அவர் தற்போது இருக்கும் குடிலில்தான், தமது குரு தபோவன்ஜி மகராஜ் வசித்து வந்ததாகக் கூறினார். நாங்கள் அமர்ந்திருந்த தாழ்வாரத்தில் அம்மகானின் பெரிய போட்டோ ஒன்று காட்சியளித்தது. அதற்கு மேல், சுந்தரானந்தா எடுத்த இமயச் சிகரங்களின் கண்கவர் தோற்றங்கள் இருந்தன.


சுந்தரானந்தா நெல்லூரைச் சேர்ந்தவர். ஆனால், அவருக்குத் தெலுங்கு அநேகமாய் மறந்து போய்விட்டது. தமிழும் தட்டுத்தடுமாறித்தான் பேசினார். தமிழில் ஒரு வார்த்தை பேசத் தொடங்கியதும் அத்துடன் ஒன்பது இந்தி வார்த்தைகள் வந்து குதித்து, எங்களைத் திக்குமுக்காட வைத்தன.

கங்கோத்ரிக்கு வருவதற்கு ஆகஸ்ட் மாதம்தான் சிறந்த மாதம் என்பது அவரது அபிப்பிராயம். திடீர் திடீர் என்று மழை பெய்யுமாம். நினைத்த போது பனி பெய்யுமாம். முதல் நாள் கூட அங்கு 'ஸ்நோ' விழுந்தது என்று கூறினார் அவர். புதிதாக வருபவர்கள் உடலை வெகு ஜாக்கிரதையாகப் பாதுகாக்க வேண்டுமென்றார். கண்ணன் செருப்பில்லாமல் வந்திருப்பதைப் பார்த்துவிட்டு, ''சுவாமி, வெறுங் காலோடு இங்கெல்லாம் நடப்பது ரொம்பத் தப்பு. நிமோனியா வந்துவிடும்'' என்று சட்டென்று கூறவே, கண்ணன் பயந்தே போய்விட்டார். சுந்தரானந்தா தம்மிடமிருந்த ஷூவை எடுத்துக் கொடுத்துப் போட்டுக் கொள்ளச் சொன்னார்.

பின்னர் 'கௌரி குண்டம்' என்ற இடத்தைக் காட்டுவதற்காக எங்களை வெளியே அழைத்துச் சென்றார். அப்போது தொலைவில், கிழக்கிலும் மேற்கிலும் தெரிந்த பனிச் சிகரங்களைச் சுட்டிக் காட்டினார்: ''அதோ தெரிகிறது

கௌரிகுண்டம் (கங்கோத்ரி)







கங்கா பாகீரதி சந்நிதி

பார்த்தீர்களா, அதுதான் மைனு சிகரம். இமயவானின் தர்மபத்தினி மைனுவதி. அது அந்தச் சிகரம்தான்.. அதோ கிழக்கில் தெரிகிறதே, அது சுதர்சன் சிகரம், பிருகுபந்த் ரேஞ்சு, அது மாத்ரி சிகரம், அது கங்கா சிகரம், மந்தாகினியீக், பகீரத சிகரம், வசிஷ்ட சிகரம்'' என்று அடுக்கிக் கொண்டே போனார். நமக்கு எல்லாச் சிகரமும் ஒரே மாதிரிதான் இருக்கிறது. அவருக்கு எல்லாப் பெயரும் தண்ணீர்பட்ட பாடாயிருக்கிறது.

பாகீரதியின் கரையையொட்டியுள்ள பாறைகளில் சில சாதுக்கள் குடில்கள் அமைத்துக் கொண்டு வசிப்பதைக் கண்டோம். அங்குள்ள குகைகளையும் அவர்கள் விட்டு வைக்கவில்லை. அவர்களில் ஒருவர் மௌனியாம். அவர் மண் தரையில் ஏதோ தோட்டம் போட்டிருந்தார். மண்ணை வெட்டிப் போட்டு மும்முரமாக வேலையில் ஈடுபட்டிருந்தவர் எங்களைக் கண்டதும் கையை அசைத்து வாழ்த்துக் கூறினார்.

'ஓ'வென்று இரைச்சலிட்டுக் கொண்டு ஓடும் பாகீரதியைப் பார்த்துக் கொண்டே அதன் கரையில் நடந்து கொண்டிருந்தோம்.

''இதோ பார்த்தீர்களா, இதுதான் கௌரி குண்டம் என்பது'' என்று ஓர் இடத்தைக் காட்டினார் சுந்தரானந்தா. பார்த்தோம். அடடா...! எத்தனை அற்புதமான காட்சி! பாகீரதி அந்த இடத்தில் ஐம்பது அடி உயரத்திலிருந்து பேரிரைச்சலுடன் விழுகிறாள். பாறைகளில் மோதி, நொங்கும் நுரையும் கொப்புளிக்கும்படி கர்ஜனை புரிகிறாள்.

''கங்கையின் வேகத்தையும் கோபத்தையும் கண்டு நடுங்கி, அவளைத் தன் முடியில் தாங்கிக் கொள்ளும்படி சிவபெருமானிடம் பார்வதிதேவி வேண்டிக் கொண்டாள். அதற்கிணங்க சிவனும் பாகீரதி கங்கையைத் தன் சிரசில் அடக்கிக் கொண்டார். அது இங்குதான் நடந்தது'' என்று ஒரு புதுக் கதையைக் கூறினார் சுந்தரானந்தா.

''இங்குதானே சிவலிங்கம் ஒன்று இருப்பதாகக் கூறுகிறார்கள்'' என்று கேட்டேன் நான்.

''ஆமாம். இதனடியில் இருக்கிறதாம். பாகீரதி இங்கே சிவனுக்கு அபிஷேகம் செய்வதாக ஐதிகம். இந்த இடத்திற்குக் கீழே ஓடும் நீரெல்லாம் நிர்மால்யமாகி விடுகிறது. அதனால், ராமேச்வரத்தில் சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்ய விரும்புகிறவர்கள் இதற்கு மேலே இருந்துதான் கங்கை நீரை எடுத்துச் செல்ல வேண்டும். அதுதான் பவித்ரமாகக் கருதப்படுகிறது'' என்று மேலும் ஒரு புதுத் தகவலைக் கூறினார் அவர்.

அருகில் மற்றோர் இடத்தைக் காட்டினார் சுந்தரானந்தா. ஒரே கிடுகிடு பாதாளம். குகை போன்ற ஒரு பெரிய துவாரத்தின் வழியே பாகீரதி அசுர வேகத்தில் பாய்ந்து கொண்டிருந்தாள். எட்டிப் பார்த்தேன். தலையைச் சுற்றியது.

நாங்கள் நின்ற இடத்திலிருந்து கங்கையை முழுமையாகப் பார்க்க முடியவில்லை. இங்கு வடக்கு நோக்கி ஓடி, சிறிது தூரத்திற்குப் பிறகு அவள் கண்ணிலிருந்து மறைந்து விடுகிறாள். எங்கோ தன்னை மறைத்துக் கொண்டு பின்னர் சற்றுத் தொலைவில் வெளிப்படுகிறாள்.

''இந்த இடத்தில் மனத்தைக் கொள்ளை கொள்ளும் சௌந்தர்யமும் இருக்கிறது; மனத்தைத் திகிலடையச் செய்யும் பயமும் இருக்கிறது'' என்று சிரித்துக் கொண்டு கூறியபடியே, எங்களை அருகில் உள்ள ஒரு பெரிய பாறைக்கு அழைத்துச் சென்றார் சுந்தரானந்தா.

''இதோ பார்த்தீர்களா கோயில், இதோ உடுக்கை, இதோ சங்கு, இதோ ஆவுடையார்'' என்று அப்பாறையிலேயே இயற்கையாக உருவாகியிருக்கும் சில வடிவங்களைக் காட்டினார்.

''இது பவித்ரமான இடம் என்பதற்கு இவையெல்லாம் சான்றாகும். முன்பெல்லாம் ராமேச்வரத்திலிருந்து வருபவர்கள் இங்கு தர்ப்பணம் செய்வதைத்தான் விசேஷமாகக் கருதுவார்கள். அவர்கள் கையோடு கொண்டு வரும் மணலை இங்குதான் பாகீரதியில் கரைப்பார்கள்'' என்று கூறினார் அவர்.

''இங்கே வேறென்ன விசேஷம்?'' என்று கேட்டேன்.

''மேற்கே சற்று தூரம் சென்றால், தங்கள் பாவங்களெல்லாம் தொலையப் பாண்டவர்கள் இந்தப் புண்ணிய பூமிக்கு வந்து யாகம் செய்த இடத்தைக் காணலாம். ஆனால், இப்போது அங்கே போவது சுலபமல்ல'' என்றார் அவர்.


நாங்கள் குடிலுக்குத் திரும்பும் வழியில் கோமுக் பயணத்தைப் பற்றிய பேச்சை மெள்ளத் தொடங்கினேன்.

''உங்களைத் துணைக்கு அழைத்துக் கொண்டு போவதுதான் நல்லது என்று எல்லோரும் சொல்கிறார்கள். நீங்கள் மறுக்காமல் எங்களுடன் வரவேண்டும். நான் சென்று வந்தால், அதனால் பல லட்சம் பேர் பயனடைவார்கள். அந்தப் புண்ணியம் உங்களைத்தான் சேரும்'' என்று கூறினேன்.

ஆனால், அவர் தனக்கு மறுநாள் நிறைய வேலை இருப்பதாகவும், தன்னை மன்னிக்கும்படியும் கூறி விட்டார். அதைக் கேட்டு எங்களுக்குப் பெரும் ஏமாற்றமாகிவிட்டது.

பேசிக்கொண்டே அவருடைய குடிலுக்கு வந்து விட்டோம். அங்கு ஒரு நபர் சுந்தரானந்தாவைக் காண வந்தார். அவர் ஓர் இளைஞர். புகழ்பெற்ற ஏதோ ஓர் இந்திப் பட நடிகரின் முகவெட்டுடன் பார்ப்பதற்கு அழகாக இருந்தார்.

கோயிலில் பஜனை நடைபெறுகிறது



''இவர், 'மிலிட்டரி இன்ட்டலிஜென்'ஸில் ஆபீசராக இருக்கிறார்... பெயர்......'' என்று எங்களுக்கு அறிமுகம் செய்துவிட்டு அவரிடம், ''இவர்கள் நாளைக்கு கோமுக் அழைத்துச் செல்லும்படி என்னை வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள்'' என்று இந்தியில் கூறினார்.

''அப்படியா? வாருங்கள், எல்லாரும் போய் வரலாம். நாளைக்கு எனக்கும் அங்கே கொஞ்சம் வேலை இருக்கிறது. 'நீங்களும் வருகிறீர்களா?' என்று கேட்கத்தான் வந்தேன்'' என்றார் அந்த இளைஞர் சிரித்துக்கொண்டே.

''அச்சா! தாராளமாய்ப் போய்விட்டு வரலாமே!'' என்று அவரிடம் கூறிவிட்டு ''உங்களுக்கு அதிர்ஷ்டம்தான். நாளைக் காலை எட்டு மணிச்குப் புறப்படுவோம்'' என்றார் சுந்தரானந்தா எங்களைப் பார்த்து. மறுநாள் 'கோமுக்' செல்வது என்று முடிவானபோது என் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

சுந்தரானந்தாவிடம் நாங்கள் விடைபெற்றபோது மணி ஏழரையிருக்கும். நள்ளிரவு போல் இருட்டி விட்டிருந்தது. 'ஜில்'லென்று ஊதல் காற்று வீசி உபத்திரவப்படுத்தியது. பாகிரதியின் 'ஓ'வென்ற பேரிரைச்சல், அங்கு நிலவிய பயங்கரச் சூழ்நிலையை மிகைப்படுத்திக் காட்டியது. திவட்டியைப் பிடித்துக் கொண்டு நடந்து கொண்டிருந்த ஓரிருவரைத் தவிர, அந்த வட்டாரத்தில் வேறு ஜன சஞ்சாரமே இல்லை.

''கோயிலுக்குச் செல்வதாக இருந்தால் சற்று வேகமாக நடங்கள். சீக்ரம் சாத்தி விடுவார்கள்'' என்று எங்களை அவசரப்படுத்தினார் ராணுவ 'இன்ட்டலிஜென்ஸ்' அதிகாரி. (அவருக்கு கே. என்ற பெயர் சூட்டுகிறேன்) அவரும் எங்களுடன் ஆலய தரிசனத்திற்கு வருவதாக ஒப்புக்கொண்டு முன்னால் நடந்தார். நாங்கள் அவரைப் பின்தொடர்ந்தோம்.

கடைவீதியைக் கடந்து கங்கா பாகிரதி கோயிலுக்கு வந்து சேர்ந்தோம். ஓவ்வொரு கடையாக மூடிக் கொண்டிருந்தார்கள். கோயில் மூடும் வரையில் தான் கங்கோத்ரி விழித்துக் கொண்டிருக்கும்.

நாங்கள் சென்றபோது பூஜை யெல்லாம் முடிந்து ஆரத்தி நடைபெற்றுக் கொண்டிருந்தது. வடநாட்டு ஆலயங்களில் 'ஆரத்திப் பாட்டு' என்பது ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகும். அதை எல்லோரும் சேர்ந்து பாடுகிறார்கள். கேட்பதற்கு ஒரே மாதிரிதான் இருக்கிறது. அந்தந்தக் கோயிலில் உறையும் சுவாமியின் பெயரையும், மகிமைகளையும் அங்கங்கே சேர்த்துக் கொள்கிறார்கள், அவ்வளவுதான். பத்து கோயில்களுக்குச் சென்றால் பதினோராவது கோயிலில் நாமும் ஆரத்திப் பாட்டில் கலந்து கொள்ளும் அளவுக்கு நமக்கு மனப் பாடம் ஆகிவிடுகிறது. பத்ரிநாத் ஆலயத்தில் ஆரத்திப் பாட்டுப் பாடப் பட்டபோது, புதுப் பெரியவர் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளும் கோஷ்டி யில் கலந்து கொண்டு சரளமாகக் கூடவே பாடினார். நான் அதை ஆச்சரிய மாகப் பார்க்கவே, ''இந்த யாத்திரையின் போது கேட்டுக் கேட்டு எனக்குப் பழக்கமாகி விட்டது'' என்று பின்னர் விளக்கம் கூறினார் சுவாமிகள்.

கருவறையில் கங்கா பாகிரதி, சிம்மாசனத்தில் மகர வாகனத்தின் மீது கம்பீரமாக வீற்றிருக்கிறாள். மேல் கரங்களில் கமலமும் கலசமும் வைத்திருக்

கிருள். வலது கீழ்க்கரம் அபயஹஸ்தமாக இருக்கிறது. இடக் கையைத் தொடையின் மீது வைத்திருக்கிருள்.

கங்காதேவியைத் தவிர மகாலட்சுமி, அன்னபூரணி தேவி, சரஸ்வதி, யமுனு, ஜானவி முதலியோர் விக்கிரகங்களும் அங்கே காணப்படுகின்றன. நவக்கோலத்தில் பகிரத ராஜனின் பிரதிமையும் இருக்கிறது.

பத்ரிநாத்தில் பத்ரி பஞ்சாயதனம் இருப்பது போல் கங்கோத்ரியில் கங்கா பஞ்சாயதனம் இருப்பதாக எங்களுக்கு விளக்கம் தந்த பண்டிட் கமலேஷ்குமார் கூறினுர்.

கருவறையில், பாகிரதிக்கு இடப்புறம் ஸ்ரீ ஆதிசங்கரரின் சிறிய மூர்த்தி ஒன்று இருக்கிறது. முகம் அழகாக இருக்கிறது. கழுத்தில் பெரிய உருத்திராட்ச மாலே அணிவிக்கப்பட்டிருந்தது. சிரசில் சந்தனம் வைத்திருந்தார்கள். அதனடியில் அஷ்ட தாதுக்களாலான ஸ்ரீசக்கரம் ஒன்று இருப்பதாகப் பிரதம பண்டா கூறினுர். பாகிரதி கோயில் மிகப் புராதனமானது என்றும், மலேச் சரிவுகளாலும் வெள்ளக் கொடுமையினுலும் சிதிலமான கோயிலேப் பகவான் ஸ்ரீ ஆதிசங்கரர் புனருத்தாரணம் செய்து வைத்தார் என்றும் அவர் கூறினுர்.

அங்கு கங்கா சப்தமி, கங்கா தசரா, ஜன்மாஷ்டமி, நவராத்திரி, தீபாவளி முதலிய திருவிழாக்கள் நடைபெறுகின்றன. பத்ரி, கேதார், ஜமுனேத்ரி போன்று இந்தக் கோயிலும் மே மாதம் முதல் நவம்பர் மாதம் வரையில்தான் திறந்திருக்கும்.

அக்கோயிலின் நிர்வாகத்தை வேத சாஸ்திரம் அறிந்த பதினுறு பண்டிதர்கள் அடங்கிய கமிட்டி ஒன்று கவனித்து வருகிறது. எல்லாவித பிரச்னேகளேயும் அக்கமிட்டியே விவாதித்து முடிவெடுக்கும். அன்று, கமலேஷ் குமார்ஜியைத் தவிர, மகிஷா நந்தாஜி, ஜகதீஷ் பிரஸாத்ஜி, சைதன்யா ராம்ஜி, கோகுல் பிரஸாத்ஜி, அநிருத் பிரஸாத்ஜி, காசி விச்வேச்வரப் பிரஸாத்ஜி முதலியவர்களேச் சந்தித்தேன். சாஸ்திர அறிவால் விளேந்த ஒளியும் ஆசார அனுட்டானங்களால் கிட்டிய பலனும் அவர்கள் முகங்களில் பிரகாசிக்கக் கண்டேன். நவீன நாகரிகப் படையெடுப்பின் காரணமாகச் சிதைந்து போயிருப்பதாகத் தோற்றமளிக்கும் நம் கலாசாரத்தின் அழிக்க முடியாத சின்னங்களாக அவர்களேத் தரிசித்தேன். கங்கோத்ரியில், வற்ருத ஜீவநதியாகப் பெருகி பாரதத்தின் உயிர்நாடியாகத் திகழும் கங்கா மாதாவைக் கண்டது போலவே, நம் சமயக் கோட்பாடுகளே ஜீவனுள்ள தத்துவங்களாகக் காப்பாற்றி வரும் பரம்பரையையும் அங்கு கண்டு திளேத்தேன். பாரதத்தின் ஆன்மிக கலாசாரத்தைப் பேணிக் காக்கும் பெட்டகமாக, தெய்வங்கள் குடியிருக்கும் கோட்டமாக இமயக் கோயிலே வணங்கினேன். 'ஏ, இமயமே, எங்கள் சிறுமைகளேப் பொறுத்து வறுமையைப் போக்கிப் பெருமைகளேக் காக்கும் மா மனிதனுக, உயர்ந்த ஆத்மாவாக நீ காட்சி யளிக்கிருய். எல்லேக் காவலனுக நிமிர்ந்து நின்று தொல்லேகளுக்கெல்லாம் ஈடு கொடுத்து, எங்கள் மண்ணே மட்டுமின்றி, மானத்தையும் மாண்புமிகு மரபுகளேயும், உன்னேப் போர்த்தி யிருக்கும் வெண்பனிபோன்ற வெள்ளே உள்ளத்தோடு காத்து வரும் கருணேத் தெய்வமே, வானேர் வாழும் பர்வதமே, நீ வளமோடு வாழ்வதால்தானே நாங்கள் உயிரோடு வாழ முடிகிறது. சொல்லப்போனுல் பண்டைய பாரதம், பரந்த இமயத்தின் மடியில்தானே இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

அம்மையப்பனாக, சிவசக்தி ஐக்கியமாக, ஹரிஹர சொரூபமாக விளங்கும் நீ, இயற்கை வள்ளல் இந்த வையத்திற்கு வாரித் தந்த வரப்பிரசாதம் அல்லவா?

பாகீரதி ஆலயத்தில் கடைசி நிகழ்ச்சியாக நடைபெற்ற பஜனைப் பாடல்களைக் காது குளிரக் கேட்டுவிட்டு தண்டி சுவாமி ஆச்ரமத்தில் சிறிது ஆகாரம் செய்துவிட்டு எங்கள் விடுதிக்கு வந்து சேர்ந்தபோது, இரவு சுமார் ஒன்பது மணி யிருக்கும்.

மறுநாள் கோமுகத்திற்குச் செல்வது என்று முடிவான பிறகுதான் எனக்கு நிம்மதி ஏற்பட்டது. இந்த யாத்திரையில் எப்படியாவது கோமுக் சென்று வந்து விடவேண்டும் என்ற ஒரு 'வெறி' என்னைப் பற்றிக் கொண்டு விட்டது. தபோவன்ஜி மகராஜின் வர்ணனைகளைப் படித்ததிலிருந்தும் 'கங்கா' என்ற ஒரு புத்தகத்தில் 'ரகுபீர்சிங்' என்பவரின் வண்ணப் படங்களைப் பார்த்ததிலிருந்தும் கோமுகத்தைக் காண வேண்டும் என்று என்னுள் ஓர் ஆர்வம் நாளும் அதிகமாகிக் கொண்டு வந்தது. அந்தப் பயணம் கஷ்டங்கள் நிறைந்தது என்று அறிந்தபோது, குருவருளை நாடினேன். யாத்திரை புறப் படும் முன் வழக்கப்படி தேனம்பாக்கம் சென்ற நான், காஞ்சி முனிவரிடம் முக்கியமாக 'கோமுக தரிசனம் கிட்ட வேண்டும்' என்று பிரார்த்தித்துக் கொண்டேன். 'உனக்கு எல்லா தரிசனங்களும் கிடைக்கும், போ' என்று கரம் உயர்த்தி, அபயம் தந்து திருவாய் மலர்ந்தருளினார் குருநாதர். அவரது ஆசி கிடைத்துவிட்டால் ஜகத்தையே ஜெயித்துவிடலாம் என்ற நம்பிக்கை யிருந்தாலும், உடன் பிறந்த அஞ்ஞானம் நம் கண்களை மறைக்கிறதே! 'முடியுமோ முடியாதோ, கிடைக்குமோ கிடைக்காதோ' என்ற சந்தேகங்கள் அவ்வப்போது தோன்றிக் கொண்டே யிருக்கின்றன. எதிர்ப்படும் இன்னல்க ளெல்லாம் நீங்கி, தடைகளை யெல்லாம் கடந்து, எதிர்பார்த்ததற்கு மேல் எளிதாகத் தரிசனம் பெற்றுத் திரும்பும்போது நன்றியுணர்ச்சியால் நம் நெஞ்சம் விம்முகிறது; கண்கள் கலங்குகின்றன. கோமுகப் பயணத்தின் போதும் அத்தகையதோர் அபூர்வ அனுபவத்தைப் பெற்றேன் நான்.



கோமுகத்தை நோக்கி..

15

1974-ம் ஆண்டு ஜூன் மாதம் 25-ம் தேதி செவ்வாய்க் கிழமை என்னைப் பொறுத்த வரையில் மறக்க முடியாத நாட்களில் ஒன்றாகும். அன்று காலை எட்டு மணிக்கு, பாகிரதி கோயிலில் பிரசாதம் பெற்று, அன்னையை வலம் வந்து எங்கள் 'கோமுக்' பயணத்தைத் தொடங்கினோம். கோயிலைக் கடந்துதான் அப்பாதைக்குச் செல்ல வேண்டும். கோயிலுக்குள் நுழையாமலேயே மலை யோரமாகவே நடந்து போயும் கோமுக் செல்லும் பாதையில் சேரலாம்.

அந்த வழியாகத்தான் சுந்தரானந்தா வந்தார். எங்களை முதலில் புறப்பட்டுச் செல்லும்படி கூறிய அவர், அரை மணி கழித்துதான் எங்களுடன் சேர்ந்து கொண்டார். எங்களுக்காகக் கடைத் தெருவில் தமது ஜவானுடன் காத்திருந்த கே.யுடன் நாங்கள் முன்னால் நடக்கத் தொடங்கினோம். எங்கள் சாமான்களைச் சுமந்து வர ஒரு கூலியை அமர்த்திக் கொண்டோம். எங்களுடன் வந்திருந்த I. T. B. P. ஜவான் ஸலிந்தர்சிங்குக்கு வாயெல்லாம் பல். அவர் ஒரு கார்வாலியாக இருந்தும், அதுவரை கங்கோத்ரியையே பார்த்ததில்லையாம். அத்துடன் கோமுக தரிசனம் கிடைப்பதும் தனது பெரும்பாக்கியம் என்று நூறு தடவைக்கு மேல் சொல்லிப் பூரித்துப் போய் விட்டார்.

சற்று தூரம் சென்றதும் திரும்பிப் பார்த்தோம். கங்கோத்ரி கோயில் சிறியதாகத் தெரிந்தது. பக்கத்தில் பாகீரதி, வாய்க்காலாக வளைந்து வளைந்து சென்று கொண்டிருந்தாள். கங்கோத்ரியிலுள்ள குடில்களும், விடுதிகளும் வெகு தொலைவில் இருப்பது போல் தெரிந்தன.

ஒரு பர்லாங் தொலைவில் சுந்தரானந்தா நடந்து வருவது தெரிந்தது. ஒரு மலையேறும் வீரனைப் போலவே உடையணிந்திருந்தார் அவர். 'ஸ்டை'லாக நடந்து வந்தார். முதுகில் இருந்த பெரிய பை பாரமாக அழுத்த, அதை பாலன்ஸ் செய்வதற்குச் சற்று குனிந்தவாறு, கையிலிருந்த சிறு கோடரியைக் கீழே ஊன்றிக் கொண்டு அவர் வேகமாக நடந்து வந்த தோரணை எங்களுக்குச் சற்று நம்பிக்கையளித்தது. எந்த ஆபத்திலிருந்தும் எங்களைக் காப்பாற்றும் திறன் பெற்ற ஓர் அனுபவசாலி நமக்கு வழிகாட்டியாக வருகிறார் என்ற எண்ணமே தெம்பு அளிப்பதாக இருந்தது.


கங்கோத்ரியின் மட்டத்திலிருந்து உயர்ந்து வந்து விட்டோம் என்பதற்கு எங்களுக்கு வலப்புறம் சிறுத்துக் கொண்டும் இளைத்துக் கொண்டும் ஓடிய பாகீரதி நதியே சான்றாக அமைந்தது. வலப்புறமுள்ள மலை உச்சியிலிருந்து பனி உருகி, சிறு நதியாக ஓடி வந்து பாகீரதியுடன் கலந்து கொண்டிருந்தது. சூரிய ஒளி பட்டுப் பனிமலைச் சிகரங்கள் மின்னும்போது எங்கள் கண் கூசப் போகிறது என்றோ என்னவோ, மேகக் கூட்டங்கள் அவற்றை மறைத்திருந்தன.

ஒரு மைல் வந்திருப்போம். வலப்புறம் 'பாபா கங்காதாஸ் பலஹரி' என்ற ஒரு சிறு போர்டு கண்ணில்பட்டது.

''இங்கிருந்து கீழிறங்கிப் போனால் நதிக்கரையில் இருக்கும் ஒரு சிறு ஆச்ரமத்தில் இந்த சாதுவைத் தரிசிக்கலாம். இவர் இருபது வருடங்களாக இங்கு வசித்து வருகிறார். பழ ஆகாரங்களிலேயே உயிர் வாழ்ந்து வருகிறார்'' என்றார் சுந்தரானந்தா.

''அவரைப் பார்க்கலாமா?'' என்றேன் நான். ''இப்படிப் போகிற வழியெல்லாம் இறங்கி ஏறிக் கொண்டிருந்தால், கோமுக் போக இரண்டு நாட்களாகி விடும். நீங்கள் நடக்கும் வேகத்தைப் பார்த்தால் 'சிடுவாஸா' போய்ச் சேருவதற்குள்ளேயே இரவாகிவிடும் என்று தோன்றுகிறது'' என்றார் சுந்தரானந்தா. அதைக் கேட்டு கே. சிரித்தார்.

கோமுகம் செல்லும் பாதையிலிருந்து கங்கோத்ரியின் தோற்றம்





கோமுகம் சென்ற எங்கள் குழுவினர்

கங்கோத்ரியிலிருந்து கோமுகம் சுமார் பன்னிரண்டு மைல் இருக்கும். ஒழுங்கான பாதை கிடையாது. ஏற்றமும் இறக்கமுமாக இருக்கிறது. போகப் போக மண் தரையைக் காண்பதே அரிதாகி விடுகிறது. பாறைகளிலும் சரளைக் கற்களிலும்தான் நடந்து செல்லவேண்டும். பனிக் காலத்திலும் மழைக் காலத்திலும் சாதாரண மக்கள் அங்கு செல்வது முடியாத காரியம். மலை ஏறுவதில் பயிற்சி பெற்றவர்களும், உயிரைத் துரும்பாக மதிக்கும் சாதுக்களும் தான் அங்கு செல்லத் துணிவார்கள்.

முதல் இரண்டு மூன்று மணி நேரம் பாகிரதியின் பள்ளத்தாக்கின் வனப்பையும், நதிக்குக் கரைகட்டி நின்ற வெண் பனிச் சிகரங்களையும் ரசித்துக் கொண்டே நடந்தோம். சுந்தரானந்தா ஒவ்வொரு சிகரத்தின் பெயரையும் கூறி, சுட்டிக் காட்டிய போது, அங்கங்கே நின்று 'ஆகா, ஆகா' என்று பாராட்டி மகிழ்ந்தோம். ஸ்ரீநிவாசன், தகுந்த கோணங்களைத் தேர்ந்தெடுத்துப் படங்களும் எடுத்துக் கொண்டார். ஆனால், நடக்க நடக்க அசதி மேலிட்டது. கால் கெஞ்சிற்று. நடை தளர்ந்தது. உடல் தள்ளாடி, மூச்சுவிட முடியாமல் இரைத்தது. உட்கார்ந்து உட்கார்ந்து, பயணத்தைத் தொடர வேண்டியதாயிற்று.

யமுனோத்ரிக்குச் செல்லும்போது தலையிடியால் தவித்தேனே, அதேமாதிரி 'ஆல்டிடியூட் சிக்னெஸ்' தாக்க, ஒற்றைத் தலைவலியால் தற்போதும் அவதிப் பட்டேன். நாக்கு உலர்ந்தது, தொண்டை வறண்டது. காற்றடித்தால் கீழே விழுந்து விடுவோமோ என்று அஞ்சும்படி உடல் லேசாகி விட்டிருந்ததை உணர்ந்தேன். நல்லவேளையாகக் கையில் தடியிருந்ததோ, தப்பித்தேனே.

இம்முறை கங்கோத்ரியிலிருந்து வரும்போதே கவனமாக ஒரு தடியைக் கையோடு கொண்டு வந்திருந்தேன். சுந்தரானந்தாவுக்குப் பால் கொண்டு வந்திருந்த கிழவரிடமிருந்து இரவலாக அதை வாங்கி வந்திருந்தேன்.

என் கவனத்தை வேறு பக்கம் திருப்புவதற்காகவும் என்னை உற்சாகப் படுத்துவதற்காகவும் சுந்தரானந்தா, ''இந்தச் செடியைப் பார்த்தீர்களா? அந்த மரத்தைப் பார்த்தீர்களா?'' என்று வழிநெடுகிலும் எதையாவது காட்டிக் கொண்டே வந்தார்.

செல்லும் வழியில் ஒருவகை காட்டுத் துளசிச் செடி மண்டிக் கிடந்ததைப் பார்த்தேன். அதற்கு 'கங்கா துளசி' என்று பெயராம். அது பூஜைக்கு ஏற்றது என்றும், அதில் கஷாயம் செய்து குடித்தால் விஷ ஜுரத்திற்கு நல்லது என்றும் கூறினர் சுந்தரானந்தா.

ஒருவகை காட்டு ரோஜாச் செடிகளும் ஏராளமாகக் காணப்பட்டன. மலர்கள் சிறியவையாக இருந்தன. அதன் கிளைகளை உடைத்து, சீவி, கழிகளாகப் பயன்படுத்துவார்களாம்.

பாகிரதியின் கரையில் அரசமரங்களைப் போன்ற பெரிய பெரிய மரங்கள் வளர்ந்திருந்தன. அவற்றுக்கு 'வேணு மரங்கள்' என்று பெயராம். இலைகள் அரச இலைகளைப் போன்றே சற்று அகலமாக இருக்கின்றன. அரச மரங்களை நாம் வழிபடுவது போலவே, காட்டு மக்கள் அம்மரத்தை வழிபடுகிருர்களாம்.

கோமுகத்தை நெருங்க நெருங்க 'போஜ்பத்ர' என்ற ஒருவகையான மரம் அதிகமாகக் காணப்படுகிறது. அதன் பட்டையை உரிக்க உரிக்கக் காகிதம் போல் வந்துகொண்டே இருக்கிறது. அந்தக் காலத்தில் மகரிஷிகள் எழுதுவதற்கு அதைத்தான் உபயோகித்தார்களாம்.

பனிமலைச் சிகரங்களில் தவழ்ந்து விளையாடும் முகிற் கூட்டம்





ஆபத்தான மரப்பாலத்தைக் கடக்கிறோம்

நாங்கள் பல காட்சிகளைப் பார்த்துக் கொண்டே, பல விஷயங்களைப் பேசிக்கொண்டே நடந்து கொண்டிருந்தோம். திடீரென்று 'ஜில்'லென்று வீசிய காற்று எங்களைத் தாக்கத் தொடங்கியது. அது உடலை ஊசியாகக் குத்திற்று.

''இது கடும் பனிக்காற்று. ஐஸ் மலைகளிலிருந்து வீசுகிறது. இப்படித் தான் திடீர் திடீரென்று வீசும். நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். முக்கியமாக காதுகளையும் மூக்கையும் மூடிக் கொள்ளுங்கள்'' என்று எங்களை உஷார்ப்படுத்தினார் சுந்தரானந்தா.

கங்கோத்ரியிலிருந்து காலையில் நாங்கள் புறப்பட்டபோது நல்ல வெய்யில் அடித்துக் கொண்டிருந்தது. நடக்கும்போது சற்றுப் புழுக்கமாக இருக்கவே, ஸ்வெட்டரைக் கூடக் கழற்றி யிருந்தேன் நான். ஆனால், சுந்தரானந்தாவின் எச்சரிக்கையைக் கேட்டதும், எல்லாவற்றையும் மீண்டும் எடுத்துப் போட்டுக் கொண்டு விட்டேன். தலையையும் முகத்தையும் மூடிக் கொண்டேன். க்ளவுஸ் போட்டுக்கொண்டு கைவிரல்களையும் பாதுகாத்துக் கொண்டேன். இந்த உடலை எப்படியாவது பழுதுபடாமல் பாதுகாத்து, கோமுகத்தைத் தரிசனம் செய்து விட்டு வந்துவிட வேண்டும் என்ற தணியாத ஆர்வம் என்னுள் கொழுந்துவிட்டு எரிந்ததால், யார் என்ன சொன்னாலும் கேட்கும் 'மூடி'ல் இருந்தேன் நான்.

நாங்கள் பாகிரதி நதிக்கு இடப்புறமாக நடந்து கொண்டிருந்தோம். வலப்புறக் கரையின் ஓரமாக ஒற்றையடிப் பாதையைப் போல் ஒரு சுவடு தெரிந்தது. அவ்வழியேதான் முன்பெல்லாம் கோமுகத்திற்குச் செல்வார் களாம். சுவாமி தபோவன்ஜி மகராஜ் அவ்வழியே பல வருடங்கள் சென்றிருக் கிறாராம். அவருடன் தாமும் சென்றிருப்பதாகக் கூறினார் சுந்தரானந்தா. அது நாங்கள் சென்ற வழியைக் காட்டிலும் ஆபத்துக்கள் நிறைந்தது.

தற்போது யாரும் அவ்வழியே செல்வது இல்லை. அந்தக் கரையில் ஓரிரு சிறு குடில்கள் தெரிந்தன. மரங்களில் காவி ஆடைகள் உலர்த்தப்பட்டிருப்பதையும் கண்டோம். ஒரு குடிலில், வங்காளத்தைச் சேர்ந்த இளம் சந்நியாசினி ஒருவர் வசிப்பதாக சுந்தரானந்தா கூறியபோது நாங்கள் ஆச்சரியப்பட்டுப் போனோம்.

கேட்பாரற்றுக் கிடக்கும் அந்தக் காட்டுப் பகுதியில் மனித நடமாட்டமே இல்லாத ஒதுங்கிய பிரதேசத்தில் குளிரையும், பனியையும், மழையையும் பொருட்படுத்தாமல் ஒருவர் வசிக்க வேண்டும் என்றால், உண்மையில் அவர் வைராக்கியம் நிறைந்தவராகவும்தான் இருக்க வேண்டும்.

சுமார் ஒரு மணி இருக்கும். சூரியன் இருக்கும் இடம் தெரியாமல் மேக மூட்டமாயிருந்தது. 'உஸ் உஸ்' என்று குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருந்தது. 'சிடுவாஸா' போக இன்னும் எத்தனை தூரம் நடக்க வேண்டும் என்று தெரியவில்லை. 'இனி ஒரு அடிகூட நடக்க முடியாது' என்று வெளிப்படையாகக் கூறும் அளவுக்கு எனக்குக் களைப்பு மேலிட்டிருந்தது. யமுனோத்ரியின் பயணத்தின்போது ஏற்பட்டது போல் வயிற்றுக் குமட்டலும் வந்து விட்டது. மரண தாகம் எடுத்தது. மிட்டாயைப் போட்டுக் கொண்டாலோ வாயெல்லாம் கசந்தது. என் நிலைமையைப் பார்த்து சுந்தரானந்தா பரிதாபப்பட்டார். என்னை அரவணைத்தவாறே மெள்ள நடக்கலானார்.

''இன்னும் கொஞ்ச தூரம்தான். இதுதான் தேவகங்கா. இந்த இடத்திற்கு 'தேவகாட்' என்று பெயர். அந்தப் பாலத்தைக் கடந்து அந்தப் பக்கம் போனால் 'சிடுவாஸா' வந்துவிடும்'' என்று தைரியம் கூறிக் கொண்டே, அங்கிருந்த குறுகலான மரப் பாலத்தின் மீது என்னை ஜாக்கிரதையாக அழைத்துச் சென்று அந்தப் பக்கம் கொண்டு போய்ச் சேர்த்தார். என் உடல் அப்போதிருந்த நிலையில் நிச்சயமாகத் தனியாக நான் அதன் மீது நடந்திருக்க முடியாது.

பதினைந்து நிமிடங்களுக்கெல்லாம் 'சிடுவாஸா' வந்து சேர்ந்தோம். அங்கு தங்குவதற்கு சத்திரமோ, சாவடியோ கிடையாது. திறந்த வெளியில் ஒரு பாறையில் படுத்துக் கொண்டேன். சீராக மூச்சுவிட முடியவில்லை. பிராணவாயு குறைவாக இருக்கும் போலிருக்கிறது. கண்ணனும் ஸ்ரீநிவாசனும் ஏதோ சாப்பிட்டார்கள். எனக்கு அவர்கள் பக்கம் திரும்பிப் பார்க்கக் கூடப் பிடிக்கவில்லை. கண்ணன், கோதுமை உருண்டையில் கொஞ்சம் பிட்டு எனக்குக் கொடுத்தார். அதில் பாதியை வாயில் போட்டுக் கொண்டேன். அதற்குமேல் வேண்டியிருக்கவில்லை.

சுந்தரானந்தாவும் கே.யும் எங்கேயோ கீழே நதிப் பக்கமாக இறங்கிச் சென்று ஒரு பாத்திரத்தில் காப்பி போட்டுக் கொண்டு வந்தார்கள். எங்கள் ஜவானும் கே.யின் ஜவானும் சேர்ந்து தீ மூட்டி காப்பியைச் சூடு பண்ணினார்கள். ஆளுக்கொரு டம்ளர் பருகிவிட்டு, நாங்கள் மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தோம்.

குறுக்கே ஓர் ஆறு ஓடிக் கொண்டிருந்தது. அதை எப்படிக் கடந்து செல்வது என்று நாங்கள் தயங்கினோம்.

''நல்லவேளை, அதில் தண்ணீர் அதிகமாக ஓடவில்லை. நிறைய இருக்குமோ என்று பயந்தேன். அப்படி இருந்திருந்தால் நாம் இரண்டு மூன்று மைல்கள்



மறக்க முடியாத இரவைக் கழித்த போஜ்வாஸா என்ற இடம் இதுதான்

சுற்றிக் கொண்டு போக வேண்டியிருக்கும்'' என்று கூறி, குரங்கு போல் பாறை பாறையாகத் தாவச் செய்து எங்களை ஜாக்கிரதையாக அழைத்துச் சென்றார் சுந்தரானந்தா. அவரது துணை இருந்திராவிட்டால் வழி தப்பிப் போயிருப்போம். 'அனுபவமிக்க வழி காட்டி ஒருவரில்லாமல் கோமுகத்திற்குச் செல்லாதீர்கள்' என்று எல்லோரும் எங்களை எச்சரித்ததன் பொருள் அப்போது நன்றாகப் புரிந்தது.

மாலை மணி நாலரை இருக்கும். பத்தாவது மைலில் இருக்கும் 'போஜ்வாஸா' வந்து சேர்ந்தோம். ஒரு பள்ளத்தாக்கின் நடுவில் இருக்கும் சிறு தங்குமிடம் அது. பாதையிலிருந்து நூறு அடிக்கு மேல் கீழே இறங்கிப் போக வேண்டும்.

''நானும் கே.யும் கோமுகத்தருகில் இருக்கும் ஜியலாஜிகல் சர்வே காம்ப்புக்குப் (பூவியல் ஆய்வாளர் முகாம்) போகிறோம். நீங்கள் இரவு இங்கே தங்கி விட்டுக் காலையில் எழுந்து வாருங்கள். இனிமேல் உங்களால் நடக்க முடியாது'' என்று கூறிய சுந்தரானந்தா, கே.யுடன் வேகமாக நடக்கத் தொடங்கினார்.

நாங்கள் அன்றிரவு 'போஜ்வாஸா'வில் தங்கினோம். ஐயோ! அந்த இரவு!

என் வாழ்க்கையில் மறக்க முடியாத இரவு அது!

காலை எட்டு மணிக்கு உடல் நலத்துடனும் உற்சாகத்துடனும் கோமுக தரிசனத்திற்குப் புறப்பட்ட நான், 'போஜ்வாஸா' வந்து சேர்ந்தபோது சிக்காளியாகி விட்டிருந்தேன். குளிர் அடக்கமாக எங்கேயாவது படுத்தால் போதும் என்று தோன்றியது. நிற்கவோ, சூழ்நிலையின் ரம்மியத்தை ரசிக்கவோ சக்தியற்று, மிகவும் சோர்வுற்றிருந்தேன்.


அந்த இடத்தில் ஒரு பாதாள அறை இருக்கிறது. அதில் 'லால்பிஹாரி' என்ற ஒரு சாது வசிக்கிறார். அங்கு வரும் யாத்திரிகர்களுக்குத் தங்க வசதிகள் செய்து கொடுக்கிறார் அவர். வெந்நீர் போட்டுக் கொடுக்கிறார். டீயும் ஏதாவது ஆகாரமும் தயார் செய்து தருகிறார். சாதுக்களிடம் அவர் ஒன்றும் எதிர் பார்ப்பதில்லை. வசதியுள்ளவர்கள் தாராளமாய்த் தந்து விட்டுப் போவதை மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொள்கிறார்.

கண்ணனும் ஸ்ரீநிவாசனும் அந்தப் பாதாள அறைக்குள் சிரமப்பட்டு நுழைந்து போய் அவரிடம் ஏதோ பேசினார்கள். ஓர் அடிகூட எடுத்து வைக்க முடியாத நிலையிலிருந்த நான், அங்கிருந்த ஒரு மேடையில் அமர்ந்தேன். அங்கிருந்து கோமுகம் தரிசனமாயிற்று. பிரமாண்டமான அந்த ஐஸ் பாறை, மறையும் சூரிய ஒளிபட்டுத் தங்க நிறத்தில் பளபளத்துக் கொண்டிருந்தது. போஜ்வாஸாவிலிருந்து அந்த இடம் சுமார் இரண்டு மைல்கள். இருபுறமும் உறைபனியால் போர்த்தப்பட்ட மலைச் சிகரங்கள். ஒருவித ஆரவாரமுமின்றி அருகில் பாகிரதி கங்கா ஓடிக் கொண்டிருந்தாள்.

''ஓ' வென்று வெறிச்சோடிக் கிடந்த அந்த இடத்தில் திடீரென்று வெளிச்சம் குறைந்து, மளமளவென்று இருள் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது. அப்போதிருந்த என் உடல் நிலையிலும் மனத் தளர்ச்சியிலும், ஏதோ ஒரு பீதி என்னைப் பற்றிக் கொண்டதை உணர்ந்தேன். என் அறிவு என்னைப் பார்த்துச் சிரித்தது. என் உணர்வு உள்ளத்தைத் தளர்வடையச் செய்தது. கணத்திற்குக் கணம், என் மனோதிடம் மாயமாய் மறைந்து வருவதைக் கண்டு என் திகில் பன்மடங்காயிற்று.

கண்ணனும் ஸ்ரீநிவாசனும் பாதாள அறையிலிருந்து திரும்பி வந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து லால்பிஹாரி வந்தார். எங்களுக்கு ஓர் அறையை ஒழித்துக் கொடுப்பதற்காகப் பெரும் பாடுபட்டார் அவர். அங்கிருப்பதே இரண்டு மூன்று அறைகள்தாம். மரியாதைக்குத்தான் அதை 'அறை' என்று குறிப்பிடுகிறேன். அந்த இடத்தை டஞ்சன் என்று அழைப்பதுதான் பொருத்தமாக இருக்கும். ஐந்தரை ஆறு மணிக்கெல்லாம் கும்மிருட்டாகி விட்டதால், அறையினுள் நுழையவே பயமாயிருந்தது. நல்ல வேளை, எங்கள் கையில் டார்ச் இருந்ததால் பிழைத்தோம்.

பெருங் கூச்சல் போட்டு ஓர் அறையிலிருந்த நாலைந்து சாதுக்களை வேறு அறைக்குத் துரத்தினர் லால்பிஹாரி. அவர்கள் பதிலுக்குச் சத்தம் போட்டார்கள். ஆனால் பயனில்லை. கடைசியில் வெற்றிகரமாக வாபஸ் ஆனார்கள். நாங்கள் அந்த 'அறை'யின் ஒரு மூலையை ஆக்கிரமித்துக் கொண்டோம். மற்றொரு மூலையில் மூன்று நான்கு சாதுக்கள் முடங்கிக் கொண்டிருந்தார்கள். நான்கு பேரே சௌகரியமாகப் படுக்கக்கூடிய அந்த இடத்தில் ஏழெட்டுப் பேர் ஒருமாதிரி 'அட்ஜஸ்ட்' செய்து படுத்துக் கொண்டோம்.



கோமுகம் செல்லும்போது நாம் காணும் பனிமலைச் சிகரங்கள்

நாங்கள் மூவரும் 'ஸ்லீப்பிங் கிட்'டுக்குள் புகுந்து கொண்டோம். எங்களையும் சாதுக்களையும் பிரிக்கும் எல்லைக்கோட்டில் ஜவான் ஸலீந்தர் சிங் படுத்துக் கொண்டார். எழுந்து வெளியே செல்ல வேண்டுமானுல் யாரும் தரையில் கால் வைக்க முடியாது. யார் மீதாவது காலை வைத்துத்தான் நடக்க வேண்டும்.

எல்லோருக்கும் நல்ல பசி. லால்பிஹாரி பொங்கல் செய்து கொண்டு வருவதாகக் கூறி யிருந்தாராம். கண்ணனும் ஸ்ரீநிவாசனும் பொங்கலுக்காக 'கிட்'டுக்குள் காத்திருந்தார்கள். நானும் விழித்துக் கொண்டுதானிருந்தேன். ஆனுல் பொங்கலுக்காக அல்ல. தூக்கம் வராத காரணத்தால் விழித்துக் கொண்டிருந்தேன். பசி வயிற்றைக் கிளறியது. குமட்டலும் இருந்தது. எதைத் தின்ருலும் வாயிலெடுத்து விடுவேன் என்று தோன்றியது. எனக்கு ஒன்றுமே வேண்டாம் என்று கூறி விட்டேன். கண்ணன் எழுந்து சென்று, வெந்நீர் கொண்டு வந்து 'க்ளுகோஸ்' கரைத்துக் கொடுத்தார். ஆனுல், இரண்டு ஸ்பூன் சாப்பிடுவதற்குள் வயிற்றைக் குமட்டியது. டார்ச்சை எடுத்துக் கொண்டு வெளியே விரைந்தேன். நான் போட்ட இரைச்சலில், அந்தப் பள்ளத்தாக்கே எதிரொலியில் அதிர்ந்தது.

உள்ளே வந்து மீண்டும் 'கிட்'டுக்குள் நுழைந்து கொண்டபோது, நான் ஒரு மோசமான நோயாளியாகிவிட்டிருந்தேன். ஒற்றைத் தலைவலி, மண்டையைக் கோடரி கொண்டு பிளந்தது. வெளியில் சென்று விட்டு வந்ததால் என் கைகால்களெல்லாம் ஜில்லிட்டுப் போய், எலும்புகளில் குளிர் பாய்ந்து,



லால்பிஹாரி

வயிற்றில் ஒரு பகாசுரப் பசியைக் கிளறியது. புரண்டு புரண்டுப் படுத்துப் பார்த்தேன். என் வேதனை அதிகமாயிற்றே தவிர அது சற்றும் குறைந்ததாகக் காணோம்.

திடீரென்று அறையில் ஒரு பயங்கரக் குரல் கேட்டது. ஓட்டை லாரி ஒன்று, பழுதடைந்த பாதையில் போவது போல் ஒரே சத்தமாய் இருந்தது. சற்று நேரம் கழிந்ததும், லால்பிஹாரி பேசிக் கொண்டிருக்கிருர் என்பது புரிந்தது! அவர் பொங்கல் செய்து எடுத்துக் கொண்டு வந்து எல்லோரையும் சாப்பிடும்படி கட்டாயப்படுத்திக் கொண்டிருந்தார். கட்டைத் தொண்டையில், அடி வயிற்றிலிருந்து புரியாத இந்தியில் அவர் பேசியது, என் மண்டை இடியை அதிகப்படுத்தியது. திடீரென்று அவர் குரலில் கோபம் தொனித்தது. சத்தம் கூரையைப் பிய்த்துக் கொண்டு சென்று, அதிர்வேட்டாக முழங்கியது.

நான் பொங்கல் சாப்பிடவில்லை என்று அவருக்குக் கோபம்.

கண்ணன் என் உடல் நிலையை அவருக்குப் பொறுமையுடன் விளக்கினுர்.

''உடம்பாவது மண்ணுங்கட்டியாவது? இது சுவாமி பிரசாதம், ஒன்றும் செய்யாது. சாப்பிடச் சொல்லு'' என்று கர்ஜித்தார் அவர்.

''வேண்டாம். அவரைத் தொந்தரவு செய்யாதீர்கள். நாங்கள் சாப்பிடு கிறேம்'' என்று கெஞ்சினுர் கண்ணன்.

''இது என்ன ஆஸ்பத்திரியா? நோயாளிகளுக்காகவா நான் இதைக் கட்டி வைத்திருக்கேன். இது ஓர் ஆச்ரமம். நான் சொல்கிறபடி கேட்கா விட்டால் இங்கே யாரும் தங்க வேண்டிய அவசியம் இல்லை'' என்று அடாவடித் தனமாக இரைச்சல் போட்டார் லால்பிஹாரி.

கண்ணனுக்கு என்ன பதில் சொல்வது என்றே புரியவில்லை.

தலைமாட்டில் இப்படி ஒரு பேரிரைச்சலை என்ஞல் பொறுக்க முடியவில்லை. மெள்ளத் தலையை வெளியே நீட்டி, ''நான் சாப்பிடுகிறேன், அவரைப் போகச் சொல்லுப்பா'' என்றேன்.

ஸ்ரீநிவாசன் அதை இந்தியில் மொழிபெயர்த்தார். 'அச்சா' என்று வெற்றியுடன் உருமிவிட்டு லால்பிஹாரி ஒரு வழியாகப் போய்ச் சேர்ந்தார்.

சாதாரண நேரமாக இருந்திருந்தால் லால்பிஹாரி போன்ற ஒரு கேரக்டரை நான் ரசித்திருப்பேன். ஆனுல், அப்போதிருந்த களைப்பிலும்

அசதியிலும் அவர் கழுத்தை நெரித்து விடலாமா என்று தோன்றியது. அதற்கு உடம்பில் தெம்பில்லை என்று அறிந்து பேசாமலிருந்து விட்டேன்.



மலையேறிவிட்டு வரும்
மங்கையர்

மணி ஆக ஆக, என் உடல் நிலையும் மோசமாகிக் கொண்டிருந்தது. திடீரென்று நல்ல காய்ச்சல் அடிப்பதை உணரத் தொடங்கினேன். கண்ணிமைகள் கனத்தன. உள்ளங் காலிலிருந்து உச்சந் தலைவரை, கணுக் கணுவாக வலித்தது. வலி பொறுக்காமல் பலமாக முனகவும் ஆரம்பித்து விட்டேன். பாவம், என்னால் கண்ணனுக்குத் தூக்கம் கெட்டு விட்டது. ஸ்ரீநிவாசனின் பேச்சு மூச்சைக் காணோம். அவர் நன்றாகத் தூங்கி விட்டார் என்று நினைத்துக் கொண்டேன்.

கண்ணன் என்னை அணைத்தவாறு படுத்துக் கொண்டார்.

''என்னப்பா பண்ணுகிறது?''

''சொல்லத் தெரியவில்லை. எனக்குப் பெரியதாக ஏதோ வந்துவிட்டது. ஒரு வைத்திய உதவியும் கிடைக்க வழியற்ற அத்வானத்தில் வந்து மாட்டிக் கொண்டு விட்டேனே.. ஈச்வரா, இதென்ன சோதனை!''

''அப்படி யெல்லாம் ஒன்றுமிருக்காது. பசி, தலைவலி, வயிற்றுக் குமட்டல், உடம்பு வலி எல்லாம் உன்னை அரற்றுகிறது. காலையில் சரியாய் விடும், தூங்கு.''

''அதுதான் முடியவில்லை, கண்ணா.. எனக்கு இந்த இரவு நரகமாய் இருக்கும் போலிருக்கிறதே. நாளைக் காலை கோமுகத்திற்குப் போவேன் என்று எனக்குத் தோன்றவில்லை.''

''அதெல்லாம் போய் வரலாம், கவலைப்படாதே. பெரியவா இருக்கா!''

''அந்த ஒரு தைரியம்தான்..''

காஞ்சிப் பெரியவரை நினைத்தவுடன் கண்ணீர்ப் பெருக்கெடுத்தது. அவரை நினைத்துக் கொண்டு கண்களை மூடித் தரிசனம் செய்தபடியே தூங்க முயன்றேன், முடியவில்லை.

அப்போது என்ன மணியோ தெரியாது. ஒரே நிசப்தமாக இருந்தது. அரட்டல் மிரட்டல் கண்டவன்

வழியில் சாதுக்கள்
குளிர் காய்கிறார்கள்



மாதிரி நான் ஏதேதோ பேசத் தொடங்கினேன். உணர்ச்சி வசப்பட்டுக் காரணமின்றிக் குமுறிக் குமுறி அழுதேன். அதெல்லாம் எனக்கு நன்ருகத் தெரிகிறது. 'இது சிறுபிள்ளைத்தனம்' என்று அறிவு இடித்துக் கூறுவதும் காதில் விழுகிறது. ஆனால், என்னல் பேசாமல் இருக்க முடியவில்லை. என் மனமோ, என் உணர்வுகளோ என் கட்டுப்பாட்டில் இல்லாமல் கட்டவிழ்த்துக் கொண்டு பிதற்றித் திரிந்தன. ஆயிரத்துஐந்நூறு மைல்களுக்கப்பால் இருக்கும் என் சகோதரனின் மகனைப் பற்றி மட்டும் ஏனே திடீரென்று நினைத்துக் கொண்டேன். 'நான் திரும்பி வந்து பார்த்தவற்றையெல்லாம் ஒன்று விடாமல் சொல்லுவேன் என்று அவன் ஆவலுடன் காத்துக் கொண்டிருப்பானே... அவனை மோசம் செய்து விடுவேனே' என்று நான் புலம்பியிருக்கிறேன். அதைப் பற்றிக் கண்ணன் மறுநாள் கூறியபோது, பந்த பாசத்தைக் கடந்தவனுக என்னைக் கருதிக் கொண்டிருக்கும் நான், ரத்த பாசத்திற்கு இத்தனை அடிமைப்பட்டுக் கிடப்பவனு என்று அறிந்து வெட்கப் பட்டேன்.

உடலும் உள்ளமும் பலவீனப்பட்டுப் போய்ப் பலவாறுன எண்ணக் குமுறல்களால் அலைக்கழிக்கப்பட்டிருந்த நிலையில், 'ஐயோ, அப்பா, அம்மா' என்று சற்று உரக்கவே கத்தி விட்டேன். அருகில் படுத்திருப்பவர்களுக்கெல்லாம் தொந்தரவாக இருக்கிறேம் என்று தெரிந்தும், கதியற்ற நிலையில் கதறுவதைத் தவிர நான் வேறு என்ன செய்ய முடியும்?

அப்போது ஒரு குரல் கேட்டது. அழகான ஆங்கிலத்தில், தீர்மானமான உச்சரிப்பில், "What's wrong with our friend there?" (நண்பருக்கு என்ன உடல் கோளாறு?) என்று அருகில் படுத்திருந்த சாதுக்களில் ஒரு சாது கேட்டார். சுவாமி சின்மயானந்தாவின் குரல் போல் கணீரென்று இருந்தது அது. நான் கண்ணனிடம் டார்ச் போடச் சொன்னேன். அந்த சாது எழுந்து நின்ருர். பார்ப்பதற்கும் கிட்டத்தட்ட சின்மயானந்தா மாதிரியே இருந்தார்.

நான் என் உடல் நிலையை அவரிடம் ஆங்கிலத்திலேயே விவரித்தேன்.

"என்னிடம் ஹோமியோபதி மருந்து இருக்கிறது. உங்களுக்கு 'அப்ஜெக்ஷன்' இல்லையென்ருல் தருகிறேன்" என்ருர் அவர், தன் மடியில் இருந்து ஒரு சிறு பொட்டலத்தை எடுத்தவாறே.


"கொடுங்கள், சாப்பிடுகிறேன்; எனக்கு ஹோமியோபதியில் நம்பிக்கை உண்டு" என்றேன் நான்.

"இதை அப்படியே வாயில் போட்டுக் கொள்ளுங்கள். விரைவிலேயே நீங்கள் குணமடைவீர்கள். பயப்படுவதற்கோ கலவரப்படுவதற்கோ ஒன்றும் இல்லை. இந்த மாதிரி நோய், இந்த உயரத்தில், அதுவும் இந்த இடத்தில் சிலருக்கு ஏற்படுவது சகஜம்தான். தைரியமாகப் படுங்கள். தூங்க முயற்சி செய்யுங்கள்" என்ருர் அவர்.

அந்த மாத்திரைகளை வாங்கி வாயில் போட்டுக் கொண்டேன். அவரது சொற்களைப் போன்றே அவையும் அமிர்தமாக இனித்தன.

தெய்வத்தின் துணையும் குருவின் கருணையும் இருந்தால், எதிர்பாராத இடங்களில், எதிர்பாராத நேரத்தில், எதிர்பாராத வகையில் உதவிகள் கிடைக்கும் என்ற என் திட நம்பிக்கைக்கு மற்றுமொரு சான்ருக இந்த நிகழ்ச்சியை நினைவில் குறித்துக் கொண்டேன் நான்.

உத்தரகாசியைச் சேர்ந்த அந்தச் சாது தந்த ஹோமியோபதி மருந்து உடலைவிட என் மனத்துக்குச் சற்றுத் தென்பு அளித்தது. மருந்து உண்ட பிறகும் ஓரிரு முறை நான் வெளியே போய் வந்தேன். மண்டை வலி குறைய வில்லை. உடலில் அனல் வீசியது. தூக்கம் வராமல் புரண்டு புரண்டுதான் படுத் தேன். ஆனால், அங்கு நான் நாதியற்றுத் தனிமையில் கிடக்கவில்லை என்ற எண்ணம், என் மனேதிடத்திற்கு வலுவூட்டும் மாமருந்தாக அமைந்தது.



ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்

இனி உயிருக்கு ஆபத்தில்லை என்ற நம்பிக்கை பிறந்தாலும், மறுநாள் கோமுகத்திற்கு நடந்து செல்ல முடியும் என்ற நம்பிக்கை பிறக்கவில்லை. அந்தப் பயணத்தைப் பற்றி நினைத்துப் பார்க்கக்கூட நடுங்கினேன்.

இந்த ஏமாற்றத்தை என்ருல் தாங்க முடியவில்லை. 'காண வேண்டும்' 'காண வேண்டும்' என்று இரவு பகலாகக் கனவு கண்டு கொண்டிருந்த கோமுகத்தை, அதுவும் இரண்டு மைல் தொலைவு வரை வந்துவிட்டு, அருகில் சென்று தரிசிக்க முடியாமல் திரும்புவது என்பது சாதாரண ஏமாற்றமா? 'மகத்தான பாபம் ஏதோ செய்திருப்பதால்தான் தெய்வம் என்னைச் சோதிக் கிறது' என்று கண் கலங்கினேன். இயலாமையால் இன்னல்கள் அனுபவிக்கும் போதுதான் மனிதன் தன் குறைகளையும், பலவீனங்களையும் தெளிவாகக் காண்கிருன். சக்தியிழந்து செயலிழந்து தவிக்கும்போதுதான் அவன் செருக்கு அழிந்து, செய்வினையை நினைந்து, தன் சிறுமையை உணர்கிருன்.

ஏமாற்றத்தின் எல்லையில் நின்று ஏங்கிய நான், 'உனக்கு எல்லா தரிசனங்களும் கிடைக்கும்' என்று தேனம்பாக்கம் கிணற்றடியில் கரம் தூக்கி ஆசி வழங்கிய காஞ்சிப் பெரியவரையே தியானித்துக் கொண்டிருந்தேன்.

அப்போது பெரியவர் என் முன் தோன்றிஞர்: ''நான் உன்னுடன் வருவதற்கில்லை. பூஜைக்குப் போக வேண்டும். மடத்திலிருந்து ஒரு கடிதம் தரச் சொல்கிறேன். அதை எடுத்துக் கொண்டு கோமுகம் போய் வா'' என்ருர்.

இந்த வார்த்தைகளை மிக மிகத் தெளிவாகக் கேட்டேன். புனிதரின் உருவத்தையும் நான் மிக மிகத் தெளிவாகவே கண்டேன். அது ஒரு கனவு என்று நாளது வரை நான் நம்பத் தயாராயில்லை.

முதலில் நான் அந்தத் தரிசனத்தைச் சாதாரணமாகத்தான் நினைத்தேன். நாம் சற்றுக் கண்ணயர்ந்ததும் தோன்றும் கனவாகவே அதைக் கருதினேன்.

ஆனல் நேரம் ஆக ஆக, அந்தச் சத்திய தரிசனத்திற்கு முக்யத்துவம் கொடுக்கத் தொடங்கினேன். 'கடிதம் தரச் சொல்கிறேன்' என்பதற்கு 'என் ஆசி என்ற பொரிகக் கடிதம் இருக்கும்போது, நீ ஏன் கவலைப்படுகிருய்? அதைக் காட்டி விட்டுச் சுவர்க்கத்தினுள்ளும் நுழையலாமே' என்று பொருள்படுத்திக் கொண்டேன் நான். நாற்பது ஆண்டுகளுக்கு முன்,பால் பிரண்டனுக்கு ஓட்டல் அறையொன்றில் காஞ்சிப் பெரியவர், ஒளி மயமாகக் காட்சி தந்து, ரமண பகவானிடம் செல்லும்படி அவருக்கு அருள்வாக்கு அருளிய நிகழ்ச்சி, அக்கணம் என் நினைவுக்கு வந்தது.

விடியற்காலை ஆறு மணிக்கெல்லாம் எழுந்து வெளியே வந்தோம். சரியான இமாலயக் குளிர். எதைத் தொட்டாலும் ஜில்லென்றிருந்தது. லால்பிஹாரி சுக்குக் கஷாயம் மாதிரி எதையோ தயாரித்துக் கொண்டு வந்து என்னைக் குடிக்கச் சொன்னர். நான் மறுத்தேன்.

''ஒன்றும் செய்யாது, குடி. உனக்காக இந்தக் கடுங்குளிரில் எழுந்து தயாரித்திருக்கிறேன்'' என்று அன்புடன் உபசரித்தார். இடி இடித்து முழக்கும் மேகம்தான் நிலத்தைக் குளிர்விக்கும் மழையையும் பொழிகிறது!

பத்து நாள் ஃப்ளூ ஜுரம் அடித்தவன் போலிருந்தது என் தோற்றமும் உடல் நிலையும். தூக்கமின்மையால் கண்கள் சிவந்து இமைகள் கனத்திருந்தன.

''உடம்பு எப்படியப்பா இருக்கிறது?'' என்று கேட்டார் கண்ணன்.

''என்னல் நடக்க முடியும் என்று தோன்றவில்லை. நீங்களிருவரும் போய் வந்துவிடுங்கள், நான் இங்கேயே இருக்கிறேன்'' என்றேன் நான்.

இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். தனிமையில் ஏதோ பேசிக் கொண்டனர். என்னை விட்டுவிட்டு கோமுகம் செல்வதில் அவர் களுக்கு விருப்பமில்லை என்பது அவர்களது முகபாவத்திலிருந்து தெரிந்தது.

மறுகணம்..

என்னுள் ஓர் அசுர சக்தி பிறந்தது. கைத் தடியை எடுத்தேன். நடக்கத் தொடங்கிவிட்டேன்.

''எங்கே போகிருய்?'' என்று கவலையோடு கேட்டார் கண்ணன்.

''கோமுகத்திற்குத்தான். பெரியவரின் துணை இருக்கும்போது, நான் பயப்படுவது அஞ்ஞானம். வா, போகலாம். என்ன ஆனலும் சரி, முன் வைத்த காலைப் பின் வைக்கப் போவதில்லை'' என்று போருக்குச் செல்லும் வீரனைப் போல் பேசினேன். பேச்சில்தான் வீரம் இருந்தது. நடை தளர்ந்தது. ஜவான் வந்து என்னைத் தாங்கிப் பிடித்துக் கொண்டார்.

நாங்கள் நடந்தோம். எதிரில், மலையேறிவிட்டுத் திரும்பும் பெண்கள் கூட்டமாக வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் உத்தரகாசியிலுள்ள ''நேரு மலையேறும் பயிற்சிப் பள்ளி'யைச் சேர்ந்தவர்கள். சுமக்க முடியாத சுமையை அநாயாசமாகத் தூக்கிக் கொண்டு, அரட்டை அடித்துக் கொண்டு கும்பலாக வந்த பெண்களைப் பார்த்ததும், என் தைரியம் அதிகமாயிற்று.

ஒன்றரைக் கிலோ மீட்டர் நடந்ததும், ஜியலாஜிகல் சர்வே குழுவினர் தங்கியிருந்த கூடாரங்கள் கண்ணுக்குத் தெரிந்தன. எங்களைத் தொலைவில் கண்டதும் சுந்தரானந்தாவும் கே-யும் கைகளை அசைத்து ஆர்வத்துடன் வரவேற்றனர்.



புனிதமிக்க கோமுக தரிசனம்

பன்னிரண்டாயிரத்து எண்ணூறு அடி உயரத்தில், கேட்பாரற்றுக் கிடக்கும் பிரதேசத்தில், ஆபத்துக்கள் நிறைந்த பனி மலைகளுக்கிடையே கூடாரங்கள் அடித்துக் கொண்டு, ஏழெட்டுப் பேர் வசித்து வந்ததைக் கண்டபோது ஆச்சரிய மாகவே இருந்தது. அவர்களில் ஒரு பெண்மணியும் இருந்ததைக் கண்டபோது, தூக்கிவாரிப் போட்டது.

புவியியல் ஆய்வுக் குழுவினரில் பஞ்சாபைச் சேர்ந்த பூரி என்பவர் அங்கிருந்தார். தமது உறவினரான அவரைக் காணத்தான் கே.அங்கு வந்திருந்தார். அங்கிருந்த பெண்மணி, பூரியின் மனைவி. தம்பதி இருவரும், தங்கள் இல்லத் திற்கு வந்துவிட்டது போல் எங்களுக்கு விழுந்து விழுந்து உபசாரம் செய்தனர். டீயும் பிஸ்கட்டும் கொடுத்தனர். கோமுக் போய்விட்டுத் திரும்பும்போது, 'லஞ்ச்' சாப்பிட்டு விட்டுச் செல்லும்படி அன்புடன் அழைத்தார்கள். நாங்கள் அந்த அழைப்பை உடனே ஏற்றுக் கொண்டோம்.

அங்கிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் கோமுகம் இருக்கிறது. ஒன்பது மணிக்குக் கிளம்பி, பத்து மணிக்குக் கோமுகம் வந்து சேர்ந்தோம். அந்தக் கடைசி ஒரு கிலோ மீட்டரும் மிகவும் கடினமான பிரயாணமாக இருந்தது. ஒரே ஏற்றம்தான். போதிய பிராணவாயு இல்லாததால் மூச்சு விடுவதே கடினமாகிவிட்டது. மேடான ஓரிடத்தில்

நின்று சுந்தரானந்தா, ''அதோ தெரிகிறதே, அதுதான் கோமுகம்: அதோ.. அதுதான் ஐஸ் குகை. அதனுள்ளிருந்துதான் கங்கை வெளிவருகிறுள்'' என்று சுட்டிக் காட்டினார்.


என் சொல்லாற்றலுக்கோ வர்ணனைத் திறனுக்கோ அப்பாற்பட்ட அந்த அற்புதக் காட்சியைக் கண்டபோது, பரமானந்தம் ஏற்பட்டது. அந்த இயற்கை தோற்றம் எதிர்பார்த்ததற்கெல்லாம் அதிகமான அற்புத எழிலோடும், அப்ராக்ருத சௌந்தர்யத்தோடும் திகழ்ந்தது. எங்கள் கண்ணுக்கெதிரே ஐஸ் மலை தெரிந்தது. அதற்குப் பின்னுல், வெண் பனியால் மூடப்பட்ட பல சிகரங்கள் தெரிந்தன. மேகக் கூட்டமும் பனி மூட்டமும் அச் சிகரங்களை மறைப் பதும் விலகிச் செல்வதுமாகக் கண்ணுமூச்சி விளையாடிக் கொண்டிருந்தன.

நூறு அடி இறங்கிச் சென்றோம். சிறியதும் பெரியதுமான பல பாறை களுக்கிடையே நுழைந்து, குதித்து, தாவி, கங்கையின் கரையை அடைந்தோம்.

'தடால்' என்று 'டைனமிட்' வேட்டுப் போல் பயங்கரச் சத்தம் கேட்டது: நாங்கள் நடுநடுங்கிப் போய் விட்டோம்.

''அருகில் எங்கேயோ ஐஸ் பாறைகள் மலையிலிருந்து பெயர்ந்து விழும் சத்தம்தான் அது. இங்கெல்லாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நீங்கள் இங்கேயே இருங்கள். அதிக தூரம் போக வேண்டாம்'' என்று சுந்தரானந்தா கட்டளையிட்டார்.

ஜியலாஜிகல் சர்வே காம்ப்பில் உபசாரம்





ஐஸ் குகை வாயிலில் கங்கா ஸ்நானம்

''அதோ, அந்த ஐஸ் குகைக்கருகில் போய்ப் பார்க்க முடியாதா?''என்று கேட்டேன் நான்.

''உங்களுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதா? அதனருகில் யாரும் போக மாட்டார்கள். வேண்டுமானால், இன்னும் கொஞ்ச தூரம் போகலாம். போட்டோ எடுக்கச் சௌகரியமாக இருக்கும்'' என்று கூறி, எங்களைப் பின்தொடரும்படிக் கூறி நடந்தார் சுந்தரானந்தா. ஆனால், நான் பாய்ந்து கொண்டு அவருக்கு முன்னால் ஓடினேன். ''மெள்ள, மெள்ள'' என்று என்னை எச்சரித்தவாறு சுந்தரானந்தா சத்தம் போட்டார்.

கோமுகத்தைக் கண்டதும் நான் வெறி பிடித்தவன் போலாகிவிட்டேன். எல்லையற்ற மகிழ்ச்சித் திளைப்பில், என் களைப்பெல்லாம் பறந்தோடிவிட்டது. முதல் நாள் இரவு நான் பட்ட அவஸ்தையெல்லாம் மாயமாய், கெட்ட கனவாய் மறைந்தோடிவிட்டது. தலையிடியோ, வயிற்றுக் குமட்டலோ, முதுகு வலியோ ஒன்றுமே இல்லை. இதுவரை நான் அனுபவித்தறியாத தெம்புடன் காணப்பட்டேன். உள்ளத்தில் கிளர்ந்தெழுந்த பரவச நிலையில் பயம் அகன்று

ஒரு தைரிய புருஷனுகிவிட்டிருந்தேன். உயரிய லட்சியங்களை நோக்கிச் செல்லும் போது, இடையில் நாம் சந்திக்கும் துயரெல்லாம், பயணத்தின் இறுதியில் துரும்பாகத் தோன்றுவது போல், கோமுக தரிசனத்தைப் பெற்றதும், என் உடலும், அதனுல் ஏற்பட்ட உபாதைகளும் தொலைந்து, இயற்கையோடு ஒன்றி இறையருள் நல்கும் இனிய லயிப்பில் மூழ்கிவிட்டிருந்தேன்.

என்ன ஆச்சரியம்! இதென்ன மாற்றம்? இதென்ன புதுத் தோற்றம்..? என் உடல் நிலையையும் மன நிலையையும் என்னுலேயே நம்ப முடியவில்லை. திவ்யக் காட்சிகளும், தேவ தரிசனமும் கிடைக்கும் முன், அந்தப் பேரானந்தத்தைப் பன்மடங்கு பெருக்கிக் காட்டுவதற்காக இயற்கை நமக்கு முதலில் துன்பங்களைத் தந்து வருத்துகிறதோ? அப்போது மெய்யாகத் தோன்றிய வேதனைகள் எல்லாம் எத்தனை பொய்யாக, வேடிக்கையாக ஆகிவிடுகின்றன?


அதோ, ஐம்பதடி தொலைவிலிருக்கும் கோமுக குகையை நான் தரிசிக்கிறேன். பச்சை நீல நிறத்தில், கண்ணுடியாய்ப் பளபளத்துக் கொண்டு இருக்கிறது அந்த ஐஸ் குகை. கல்லும் மண்ணும் கலந்து சில இடங்களில் அழுக்கு 'ப்ரௌ'னுக இருக்கிறது. அதன் வாயிலிருந்து பனி உருகி, ஐஸ் கரைந்து கங்கையாக வருவது தெரிகிறது. போகப் போக குகை இருண்டு கொண்டே போகிறது. 'அதன் நீளமென்ன, அது எங்கு போய் முடிகிறது, எங்கிருந்து நீர் வருகிறது'—இதெல்லாம் இதுவரை மனிதன் கண்டறியாத மர்மங்கள். அதனுள் இதுவரை ஒருவரும் துணிந்து சென்றதில்லையாம்.

கங்கோத்ரி கிளேஷியரின் அடிப்பாகமே கோமுகம். உச்சியில் இரு சிகரங்கள் தெரிகின்றன. அவ்விரு சிகரங்களையும் கொம்புகளாக நினைத்துக் கொண்டால், அந்தக் குகையின் தோற்றம் பசுவின் முகம் போல் இருக்கிறது. அதனுலேயே அதற்கு 'கோமுகம்' என்ற பெயர் தோன்றியிருக்கிறது.

அன்று எங்கள் அதிர்ஷ்டம். நல்ல வெயில் காய்ந்து கொண்டிருந்தது. ஆதவன் பிரகாசமாய்க் காய்ந்தாலும் அந்த ஐஸ் குளிரில் எங்களுக்கு அது உறைக்கவே இல்லை.

நதியிலும் கரையிலும் பனிக்கட்டிகள் வெண் பாறைகளாகச் சிதறிக் கிடந்தன. அதுவரை நான் கண்டிராத காட்சி அது. முதலில் பாறைகள் மீது 'ஸ்நோ' படர்ந்திருப்பதாகத்தான் நினைத்தேன். கரையிலிருந்த ஒரு சிறு கட்டியைக் கையில் எடுத்தேன். அது அத்தனை ஜில்லிப்பாக இல்லை. எனக்கு ஒரே தாகமாக இருந்தது. வாயில் வைத்து நறநறவென்று கடித்துத் தின்னத் தொடங்கினேன்.


இமயச் சிகரங்களின்



''அதைத் தின்னுதீர்கள். வெறும் வயிற்றில் ஐஸைத் தின்ருல் கெடுதல்.''—சுந்தரானந்தா அலறினுர்.

''அதைக் கங்கையாக நினைத்துச் சாப்பிடுகிறேன். புனித கங்கை கெடுதி செய்யமாட்டாள். உடலையும் ஆன்மாவையும் சுத்தப்படுத்தும் புண்ணியவதி அல்லவா அன்னை கங்கா!'' என்று அதற்கு நான் சமாதானம் கூறினேன்.

அங்கு ஐந்தாறு சாதுக்கள் ஸ்நானம் செய்துவிட்டுக் குளிர்காய்ந்து கொண்டிருந்தார்கள். அதில் ஒருவர் அவதூத் சாமியார். அவர் சாம்பல் போன்ற ஏதோ ஒரு மண்ணை உடல் பூராவும் பூசிக்கொண்டு, ஒரு பாறையின் மீது நின்று கை கூப்பித் தொழுது கொண்டிருந்தார். வயதான மற்ருெரு சாது, வேருெரு பாறையில் அமர்ந்து, ஜபம் செய்து கொண்டிருந்தார். இன்னெருவர் தான் எடுத்து வந்த புட்டியில் கங்கை நீரை நிரப்பிக் கொண்டிருந்தார்.



கோமுகத்தில்
ஓர் அவதூத் சாது


சுந்தரானந்தா உடைகளைக் களைந்து கோவணாண்டியாக நின்ருர். கண்ணனும், ஸ்ரீநிவாசனும், ஜவானும் குளிக்கத் தயாராகி விட்டார்கள்.

நான் காலை மட்டும் நீரில் நனைத்துப் பார்த்தேன். அப்பப்பா! கங்கோத்ரியைத் தோற்கடித்தது அந்த ஜில்லிப்பு. அது கால்களைக் கடித்தது. 'சர்'றென்று இழுத்துக் கொண்டேன். அந்த நீரில் குளிப்பதற்குத் தைரியம் மட்டும் இருந்தால் போதாது, உடலையும் உயிரையும் துரும்பாக நினைக்கும் பாவம் ஏற்பட வேண்டும். அந் நீரில் இறங்குவதனுல் ஏற்படும் விபரீத விளைவுகளைத் தாங்கும் மனுேதிடம் இருக்க வேண்டும்.

கண்ணன் முதலில் கங்கையில் இறங்கினுர். மூன்று முழுக்குப் போட்டு விட்டு எழுந்தார். அதற்கு மேல் நான் ஒருகணம்கூடக் காத்திருக்கவில்லை. ஒரே ஓட்டமாக ஓடி, நீரில் இறங்கி, கோமுகக் குகையைப் பார்த்துப் பிரார்த்தித்துவிட்டு அப்போது நினைவுக்கு வந்தவர்களையெல்லாம் நினைத்துக்கொண்டு அவர்களுக்கும் சேர்த்து ஒரு முழுக்குப் போட்டேன். கங்கை மகாத்மியமும், கங்கை புராணமும் உண்மையானுல் அந்தக் கணமே நான் இப் பிறவியில் செய்த பாவங்கள் மட்டுமல்ல, முற்பிறவியில் செய்த பாவங்களும் தொலைந்து விட்டிருக்க வேண்டும். மறைந்த என் மூதாதையரெல்லாம் முக்தி

கண்கவர் தோற்றங்கள்





அடைந்திருக்க வேண்டும்: என் சுற்றமும் நட்பும் உற்ருரும், உடன் பிறப்புக்களும் நற்கதி பெறுவது உறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

''கங்காமாதாகி ஜெய்!''

—உரத்த குரலில் கத்திக் கொண்டு, அம்பைப் போல் பாய்ந்து கரைக்கு ஓடி வந்தேன். தலை முதல் கால்வரை 'சுருக்' 'சுருக்'கென்று குத்திக் கொண்டு இருந்தது. கங்கோத்ரியில் கொட்டியதைவிட கொடிய தேள்கள், உடலெங்கும் கொட்டித் தீர்த்தன!

நாங்கள் நதியில் இறங்கிய வேகத்தையும் குளித்த ஜோரையும் திரும்பி வந்த பரபரப்பையும் கண்ட சுந்தரானந்தா திடுக்கிட்டுப் போனுர். இத்தனை தூரம் தன்னை வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டுவிட்டு, கோமுகத்தைக் கண்டதும் சிறிதும் கட்டுப்படாமல் ஏதேதோ செய்கிருர்களே என்று அவருக்குச் சற்றுக் கோபம் ஏற்பட்டிருக்க வேண்டும்.

அதனுல் எங்களை அடக்கி வழிக்குக் கொண்டு வர அவர் தீர்மானித்திருக்க வேண்டும்.

''உங்களுக்கெல்லாம் இது விளையாட்டாக இருக்கிறதா? ரொம்ப நேரம் உடம்பை 'எக்ஸ்போஸ்' பண்ணிக்காதீங்க. சீக்கிரம் 'ட்ரெஸ்'ஸை மாட்டிக்குங்க. கோட்டெல்லாம் போட்டுக்குங்க. முதலில் ஷூவைப் போடுங்க. இது பொல்லாத பனி. ஆபத்தாகிவிடும். 'Frost bite'-ல் விரலெல்லாம் அறுந்து விழுந்துவிடும்'' என்று சத்தம் போட்டார் சுந்தரானந்தா.

பயங்கரமான இந்தச் செய்தியைக் கேட்டதும் எங்களுக்குக் கதிகலங்கிப் போய்விட்டது. இனிமேல் அவரது அறிவுரைகளை உதாசீனப்படுத்துவது ஆபத்து என்று உணர்ந்தோம். அவசர அவசரமாக ஸாக்ஸைப் போட்டுக் கொண்டு ஷூக்களை மாட்டிக் கொண்டோம். கைவசம் இருந்த எல்லா ஆடைகளையும் எடுத்துப் பரபரப்புடன் அணிந்து கொண்டோம்.

கோமுகம் என்றும், கோமுகி என்றும், கோமுக் என்றும் அழைக்கப்படும் இந்த இடம் நம் கற்பனையையெல்லாம் மீறிய இயற்கையெழிலோடு திகழ்கிறது. அங்கு தங்கியிருந்த ஒன்றரை மணி நேரமும் நான் பரவச நிலையிலிருந்தேன். அங்கு சென்றுவிட்டால் நம் வாழ்வோ, நம் ஊரோ, நம் பிற அலுவல்களோ நினைவுக்கு வரவே வராது. சிந்தனை யோட்டமும் மனவெழுச்சிகளும் அடங்கி,மனம் தன்வயப்படும் தியான நிலை அங்கு எளிதாகக் கைகூடி விடும். அதற்கென்று சாதகமோ, தனி முயற்சிகளோ தேவையில்லை. துன்பக் களைப்பையெல்லாம் பறக்கச் செய்யும் அந்த இன்பத் திளைப்பின் இணையில்லா அனுபவம், அந்த அழகு உணர்ச்சி, ஆன்மிக மறுமலர்ச்சியெனும் கங்கையாக நம் இதயத்தில் பாய்ந்து, நம் வாழ்வைத் தூய்மைப்படுத்துவது ஒன்றே கோமுக தரிசனத்தின் சாச்வதமான பலனுகும்.

பேரெழில் பொழியும் சௌந்தர்ய தேவதையின் மாய வலையில் சிக்குண்டு, செயலற்று, பாறையின் மீது அமர்ந்திருந்த என்னைப் பார்த்து ''புறப்படலாமா?'' என்று கேட்டார் சுந்தரானந்தா. முதன் முறையாகக் கடற்கரையைப் பார்த்துவிட்டு, அந்த வசிகரத் தோற்றத்திலும் புதிய அனுபவங்களிலும் மனத்தைப் பறி கொடுத்து, பேராச்சரியத்தில் மூழ்கித் திளைத்துக்

கொண்டிருக்கும் குழந்தையை 'வீட்டுக்குப் போகலாம் வா' என்று அழைத்தால் அது எப்படி சிணுங்குமோ, அவ்வாறு என் உள்ளம் சிணுங்கியது.

சுற்றுப்புறத்தின் பூகோள அமைப்பை விளக்கினார் சுந்தரானந்தா. கோமுகத்தின் மேல் இரண்டு மைல் ஏறிச் சென்றால் 'தபோவனம்' என்ற இடத்தைக் காணலாம். அங்கு ஓர் அழகிய ஏரி இருக்கிறதென்றும், வகை வகையான வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும் அற்புதக் காட்சியைக் காணலாம் என்றும் கூறினார். அவரது குருவான தபோவன்ஜி மகராஜ் அங்கு சென்று சில காலம் தங்கி இருக்கிறாராம். அந்த வழியாக, பனிமலைகளைக் கடந்து குறுக்குப் பாதையில் பத்ரிநாத் செல்லலாம் என்றும், ஆனால் எல்லோராலும் அது சாத்தியமில்லை என்றும் கூறினார் அவர்.

கோமுகத்தின் கிழக்குப்புறத்தில் சுவர்க்காரோகண சிகரம் இருக்கிறது. அவ்வழியாகத்தான் தர்மபுத்திரர் சுவர்க்கத்திற்குச் சென்றார் என்று மகா பாரதம் கூறுகிறது. பத்ரிநாத்திலிருந்து மான கிராமம் செல்லும் வழியில், அந்த மலையைத் தரிசித்தேன் நான். தெற்குப்புறம், நாராயண பர்வதம் இருக்கிறது. அதைக் கடந்து சென்றால், பத்ரிநாத் கோயிலை அடையலாம். மற்றொருபுறம் 22,000 அடி உயரமுள்ள நீலகண்ட பர்வதம் இருக்கிறது. அதன் வெள்ளிச் சிகரத்தைத்தான் பத்ரிநாத்திலிருந்து தரிசனம் செய்து மெய் சிலிர்த்தேன். நீலகண்ட பர்வதத்தின் தென்புறத்தில் கேதார்நாத் புனிதத் தலம் இருக்கிறது.

இயற்கை யெழிலின் இன்ப லயிப்பில் ஆசிரியர்





கோமுகத்தை நெருங்கும் போது மூச்சுத் திணறும் ஏற்றம்

நாங்கள் நின்ற இடத்திலிருந்து சிவலிங்க, பாகிரதி சிகரங்கள் தெரிந்தன. நாங்கள் கோமுகம் செல்வதற்குப் பத்து நாட்களுக்கு முன்புதான் I.T.B.P-யைச் சேர்ந்த ஓர் அதிகாரியின் தலைமையில் ஒரு கோஷ்டி முதன்முறையாகச் சிவலிங்க சிகரத்தின் மீது ஏறி, வெற்றிக் கொடி நாட்டிவிட்டு வந்ததாக ஜவான் ஸலிந்தர்சிங் பெருமையுடன் கூறினர். மேரு, சுமேரு மலைகள் மேகப் போர்வையில் மறைந்திருப்பதாக சுந்தரானந்தா கூறினர். ஸ்ரீஆதிசங்கரர் தமது 'கங்காஷ்டக'த்தில் கங்கையைப் பார்த்து, 'சுவர்க்கலோகத்திலிருந்து கீழே விழுந்து, சுமேரு பருவதத்தினுடைய ஒரு குகையிலிருந்து வெளியே வருகிருய்' என்று விளிக்கிருர். கோமுகத்தின் இந்தக் குகையைத்தான் சங்கர பகவான் குறிப்பிட்டாரோ?

நாங்கள் கோமுகத்தை விட்டுப் புறப்பட வேண்டிய நேரம் நெருங்கி விட்டது. இப்புவியில் வாழும் சகல ஜீவராசிகளையும் ரட்சிக்கும்பொருட்டு தேவலோகத்திலிருந்து கருணையோடு இறங்கி வரும் பாகிரதி கங்காவைக்

கைகூப்பித் தொழுதேன். ஆதி ஜகத்குருவான ஸ்ரீசங்கர பகவானின் சுலோகம் நினைவுக்கு வந்தது:

'ஏ, கங்காதேவி! சிரசின் மீது கை கூப்பியபடி, சிவபெருமானின் திருமேனி சம்பந்தப்பட்ட உன் புனிதக் கரையில் நின்று கொண்டு ஸ்ரீமகாவிஷ்ணுவின் திருப்பாதக் கமலங்களை நினைத்துக் கொண்டு என் பிராணன் பிரிய நேர்ந்தால், அக்கணம் ஹரி-ஹரன் இருவரும் ஒருவரே என்ற அத்வைத ஞான மயமான பக்தியுணர்வு என்னுள் ஏற்படட்டும்.'

இப் பிரபஞ்சத்தையே பிரும்ம மயமாக அறிந்துணர்ந்து எங்கு, எதை, எப்படிக் கண்டாலும், இரண்டில்லாத ஒரே வஸ்துவாகத் தரிசித்து ஆனந்தித்த ஆசாரிய சிகரமான ஸ்ரீ ஆதிசங்கரர், இமயச் சிகரத்தில் நின்று கொண்டு தம் ஒப்பற்ற அத்வைத மதத்தைப் பறைசாற்றி யிருக்கிறார்.

கங்கையின் புனிதத் தன்மையை நம் ஆசாரிய மகா புருஷரே கூறக் கேட்போம்:

'கங்கையே, உன் அலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தாலும், அதில் ஒரு துளியை பானம் பண்ணினாலும், உன் நீரில் அமிழ்ந்து ஸ்நானம் செய்தாலும் அந்த மனிதனுக்கு இந்திரப் பதவியும் எளிதாகக் கிட்டிவிடும்.'

பாவிஷ்யப் புராணமோ, 'நடந்து கொண்டிருக்கும் போதோ, நின்று கொண்டிருக்கும்போதோ, தூக்கத்திலோ, விழிப்பிலோ, சாப்பிடும்போதோ, பேசும்போதோ எவன் ஒருவன் கங்கையைச் சதா நினைத்துக் கொண்டிருக்கிறானோ அவன் சகல பாவங்களிலிருந்தும் பந்தங்களிலிருந்தும் விடுதலையடைகிறான்' என்று உறுதி அளிக்கிறது.

கவி காளிதாசன் கங்கையின் பெருமைகளைப் பற்றிக் கூறும்போது, 'யமனிடமிருந்து எம்மை மீட்கும் சக்தி உன் ஒரு துளி நீருக்குத்தான் இருக்கிறது' என்று கூறுகிறார்.

தீராத நோயினால் பீடிக்கப்பட்டு, மரணம் நம்மைத் தழுவ வரும் இறுதி வேளையில், கடைசி மூச்சு அடங்கப் போவதற்கு அறிகுறியாக, தொண்டையில் கட்டியிருக்கும் கபம் 'கர் கர்' என்று கர்ண கடூரமாக சப்திக்கும் நிலையிலும் ஒருவன் கங்கையை நினைத்துக் கொண்டாலே போதுமாம், அவன் நற்கதி அடைந்து விடலாம் என்றும் காளிதாசன் கூறுகிறார். கங்கையில் ஸ்நானம் செய்யும் பாக்கியத்தைப் பெறாதவர்களும், இறுதிக் காலத்தில் 'ஐயோ, கங்கா ஸ்நானம் செய்யாமல் இந்த ஜன்மா வீணாகி விட்டதே' என்று ஏங்கினாலும் போதுமாம், அந்த ஏக்கமே நம்மைப் பரிசுத்தப்படுத்தி முக்தியடையச் செய்து விடுமாம். கங்கையின் புனிதத்தை, கவிகளுக்கே உரிய நயத்தோடும், உறுதியோடும் காளிதாசன் கூறியிருக்கும் அழகுக்குத்தான் ஈடு இணை உண்டா?

கங்கையைக் கண்ட வால்மீகி மகரிஷியின் உள்ளத்திலும் கவிதை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதில் வியப்பென்ன இருக்க முடியும்?

'மோட்ச லட்சுமியின் ஜெயக் கொடியைப் போல் நீ தோற்றமளிக்கிறாய்; மகா விஷ்ணுவின் திருவடித் தாமரையிலிருந்து வரும் இளம் தண்டு போல் காட்சியளிக்கிறாய்; பரமேஸ்வரனின் சிரசை அலங்கரிக்கும் வெண்மலரான மாலதி புஷ்பம்போல் நீ பிரகாசிக்கிறாய்..'

கங்கையைக் கண்டு பரவசப்பட்ட வால்மீகியின் தீராத ஆசை என்ன தெரியுமா?

> 'எனக்குப் பெரிய அரச பதவிகள் வேண்டாம். யானைப் படைகளை ஏவி, பகைவர்களை வென்று, அடிமை மாதர்கள் சாமரம் வீச, தங்க சிம்மாசனம் ஏறி மகிழ வேண்டும் என்ற ஆசை எனக்கில்லை. உன் கரையிலுள்ள ஒரு மரத்தில் கூடு கட்டி வாழும் ஒரு பறவையாக நான் பிறந்தால் போதும். அல்லது உன்னில் வாழும் ஓர் ஆமையாகவோ, மீனாகவோ, சர்ப்பமாகவோ, பூச்சியாகவோ, புழுவாகவோ ஜன்மம் எடுத்தாலே போதும்.'

மகரிஷிகளும், மகான்களும், மகாத்மாக்களும், மகாகவிகளும், மாமனிதர்களும் போற்றிப் புகழ்ந்துள்ள கங்கை, நம்முள் ஆன்மிக அலைகளை எழுப்பி, ஞான கங்கையாகப் பாய்ந்து கொண்டிருக்கிறாள். தீராத நம் ஆத்ம தாகத்தைத் தணித்துக் கொண்டிருக்கிறாள்.

கங்கா என்ற வடமொழிச் சொல்லுக்கே, மோட்சத்தை விரும்புகிறவர்களால் அடையப்படுகிறவள் என்றும், மோட்சத்திற்கு அழைத்துச் செல்பவள் என்றும் இரு பொருள்கள் உண்டு. ஆண்டவனின் இருப்பிடத்தை நமக்கு நினைவுபடுத்திக் கொண்டிருக்கும் கங்கை, நம்மை அவரது திருவடிகளுக்கு அழைத்தும் செல்கிறது.

அருள் வெள்ளமாய்ப் பாயும் அன்புக் கங்கை முதன்முதலாக நம் கண்ணுக்குத் தெரியும் கோமுகத்திற்குச் சென்று புண்ணிய மூட்டையைக் கட்டிச் சுமந்து கொண்டு நாங்கள் கங்கோத்ரியை நோக்கிப் பயணமானோம்.

அந்தப் புண்ணிய மூட்டை கண்ணனின் கையில் பத்திரமாக இருந்தது. அந்த கங்கைச் செம்பை துணியில் கட்டி நீர் தளும்பாமல் மிக ஜாக்கிரதையாகக் கொண்டு வந்தார் அவர். கோமுகத்திலிருந்து கங்கையைக் கொண்டு வருவதே பெரும் புண்ணியமாகும். அதிலும், புனித கங்கையை எங்களுக்கு அறிமுகம் செய்து வைத்து, அதன் பிறப்பிடத்திற்கு எங்களைப் பத்திரமாக அழைத்துச் சென்று, ஸ்நானம் செய்வித்து, முக்திக்கு வழி வகுத்துத் தந்த ஆசாரியப் பெருமகனான ஸ்ரீ காஞ்சி மாமுனிவரிடம் சமர்ப்பிப்பதற்காக அந்தத் தீர்த்தத்தைச் சுமந்து செல்லும்போது அதன் பளு அரைப் பங்கு குறைந்து போய், புண்ணியம் இரண்டு பங்கு உயர்ந்தது!

கோமுகத்திற்குச் சென்றது முதல் அங்கிருந்து திரும்பும் வரையில், நான் வேறு மனிதனாகவே இருந்தேன். சரீரம் என்ற ஒன்று இருப்பதையே மறந்து, சாந்தியும் ஆனந்தமும் அனுபவித்துக் கொண்டிருந்தேன். தரிசனம் முடிந்து திரும்பியதும் நான் பழைய நிலையை அடைந்தேன். கோமுகத்தில் ஜியலாஜிகல் சர்வே காம்ப்புக்குத் திரும்பும் வழியில் மீண்டும் எனக்கு மூச்சு முட்டிற்று; உடல் தளர்ந்தது; நடையின் வேகம் குறைந்தது.

சென்னை திரும்பியதும், தேனம்பாக்கம் சென்று என் பயண அனுபவங்களை, முக்கியமாக கோமுக யாத்திரையைக் காஞ்சி மாமுனிவரிடம் விவரமாகக் கூறினேன். நான் பட்ட கஷ்டங்களை யெல்லாம் ஒன்று விடாமல் அவரிடம் விளக்கினேன்.

எல்லாவற்றையும் கேட்டுவிட்டு நிதானமாக, ''அப்பப்போ மூச்சுவிட முடியாமல் கஷ்டப்பட்டாயோ?'' என்று கேட்டார் பெரியவர்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. எல்லா இன்னல்களையும் கூறிய நான், மூச்சு விட முடியாமல் திணறியதை மட்டும் கூற மறந்து விட்டிருந்தேன். அதைப்பற்றி சுவாமிகள் கேட்டபோது, உண்மையில் ஆச்சரியப்பட்டேன்.

கோமுகத்திற்குச் செல்லும் வழியில், ஓர் ஏற்றத்தில் சுவாசிக்க முடியாமல் நான் திணறியபோது பின்னல் வந்த ஒரு சாது, 'ஓம் நமசிவாய' என்று சொல்லிக்கொண்டே நடக்கும்படி எனக்கு அறிவுரை கூறினர். நான், அவர் கூறியபடியே பஞ்சாட்சர மந்திரத்தை உச்சரித்துக் கொண்டே சென்றேன். என் மூச்சுத் திணறல் குறைந்தது.

சுவாமிகள் கேட்டபோது அந்நிகழ்ச்சி என் நினைவுக்கு வந்தது.

''ஆமாம், ரொம்ப சிரமப்பட்டேன். ஆனுல், பெரியவா அனுக்கிரகத்தினுல் சௌக்கியமாக வந்து சேர்ந்து விட்டேன்'' என்றேன்.

பெரியவர் தமக்கே உரிய நளினத்துடன் லேசாகச் சிரித்துக் கொண்டார்.

இறுதியாக நான் விடைபெற்ற போது, ''எப்படியோ, தவிச்சுத் திண்டாடி எல்லாத்தையும் பார்த்துட்டு வந்துட்டே, போயிட்டு வா'' என்று கூறி அனுப்பினர்.

யமுனேத்ரியில் ஒரு சாது எனக்குக் கைத்தடி கொடுத்துதவினர். போஜ்வாஸாவில் ஒரு சாது ஹோமியோபதி மருந்து தந்தார். கோமுக்

போஜ்பத்ர மரத்தினடியில்...




செல்லும் வழியில் ஒரு சாது, நமசிவாய மந்திரோபதேசம் செய்தார். நெருக்கடியான நேரங்களிலெல்லாம் முன் பின் தெரியாத சாதுக்கள் எனக்குப் பேருதவி புரிந்ததை நினைக்கும்போதெல்லாம், நான் காஞ்சிப் பெரியவரின் கருணையை நினைத்துக் கண்ணீர் பெருக்கிக் கொண்டிருக்கிறேன்.

கோமுகத்திலிருந்து திரும்பும் வழியில் மூச்சு விடுவதற்குக் கஷ்டப்பட்ட போது, மீண்டும் 'ஓம் நமசிவாய' என்று சொல்லிக்கொண்டே சௌக்கியமாக வந்து சேர்ந்து விட்டேன்.

ஜியலாஜிகல் சர்வே காம்ப்பில் மிஸஸ் பூரி, அருமையான சப்பாத்தியும் உருளைக்கிழங்கு கறியும் பரிமாறினர். அதை ருசித்துச் சாப்பிட்டேன். ஆனால், ஒன்றுக்கு மேல் சாப்பிட முடியவில்லை.

நாங்கள் போஜ்வாஸாவை நெருங்கியதும், லால்பிஹாரியின் ஆச்ரமத்தை நோக்கி நன்றியுடன் ஒரு கும்பிடு போட்டேன். எங்கள் பாதையை ஒட்டியிருந்த போஜ்பத்ர மரத்தில் சுந்தரானந்தா ஏறி, கத்தியால் மிக லாகவமாக அதன் பட்டையை உரித்துக் கொடுத்தார். அதை மடித்தபோது ஒரு புஸ்தகம் போலவே இருந்தது.

கங்கோத்ரிக்குத் திரும்பி வருவதற்குள் எனக்குப் போதும் போதும் என்றாகி விட்டது. உடல் அசதியும் அலுப்பும் ஒருபுறம் வாட்ட, ஷூவுக்குள் விரல்களெல்லாம் ரணமாகி வலித்தன. ஒவ்வோர் அடியும் எடுத்து வைக்கும் போதும் பிராணன் போய் வந்தது. நான் உட்கார்ந்து, எழுந்து, தள்ளாடித் தடுமாறி ஆமையாக நடந்து கொண்டிருந்தேன். எனக்குத் துணையாக ஜவானை விட்டு விட்டு, எல்லோரும் முன்னே நடந்து சென்றுர்கள். கண்ணன் கண்ணுக்குத் தெரியாத தொலைவில் ஒரு பர்லாங் முன்னே சென்று கொண்டிருந்தார். அவருக்கும் உடல்நிலை சரியில்லை. வழியில் வாயில் எடுத்திருக்கிறுர், அது எனக்குத் தெரிந்தால் நான் அதைரியப்பட்டு விடப் போகிறேனே என்பதற்காகவும், 'நீ கூட 'ஆடிப்' போய் விட்டாயே' என்று நான் கேலி பேசப் போகிறேன் என்பதற்காகவும் அவர் முன்னுல் சென்றுர் என்பது எனக்குப் பின்னர்தான் தெரிந்தது. இதைத்தான் ஆனைக்கும் அடி சறுக்கும் என்று முன்பு குறிப்பிட்டிருந்தேன்.



தராலி கிராமத்தின் தோற்றம்

17

நாங்கள் கங்கோத்ரி வந்து சேர்ந்தபோது மாலை மணி ஆறரை ஆகிவிட்டிருந்தது. சுந்தரானந்தா முக்கால் மணிக்கு முன்பே அங்கு வந்து சேர்ந்து விட்டிருந்தார். கோமுகத்திலிருந்து திரும்பும்போது எங்களுடன் மெள்ள நடந்து வருவதற்கு அவருக்கு 'போர்' அடித்ததால், வேகமாகவே நடந்து வந்து விட்டார்.

வந்ததும் வராததுமாக 'ஷூ'க்களைக் கழற்றினேன். இரண்டு மூன்று விரல்களில் கொப்புளங்கள் வெடித்திருந்தன. குத்து வலி தாங்க முடியவில்லை. இரண்டு கட்டை விரல் நகங்களும் நிலம் பாய்ந்து கறுத்திருந்தன. கண்ணனின் கால்களில் இரு சுண்டுவிரல்களும் வீங்கிப் பழுத்திருந்தன.

நல்ல வேளையாக, மலையேறும் பயிற்சி நிலையத்தைச் சேர்ந்த டாக்டர், மருந்து போடுவதாகக் கூறி எங்களை அழைத்துச் சென்றார். அவருடைய உதவியாளர் ஒரு கேரளத்துக்காரர். 'நம் பக்கத்து ஆசாமிகள்' என்ற சொந்தத்தில் எங்களை நன்றாகக் கவனித்துக் கொண்டார். அவர் ஊசியால் குத்தி கொப்புளங்களை உடைத்தார். பிளாஸ்திரிகள் போட்டார். இரண்டு மூன்று நாட்களுக்கு 'ஷூ போட வேண்டாம்' என்று யோசனையும் கூறினார். ஸ்ரீநிவாசனுக்கு



மண்ணில் புதைந்துள்ள சிவாலயம்

'ஷூ' போட்டுப் பழக்கம் இருந்த தாலோ என்னவோ, இம்மாதிரித் தொந்தரவு ஒன்றுமில்லை. (சென்னைக்குத் திரும்பிய பிறகு எனக்கு ஏழெட்டு நகங்கள் விழுந்து புதிதாக முளைத்தன.)

நாங்கள் அன்றிரவுக்குள் கங்கோத்ரியிலிருந்து புறப்பட்டு விட்டோம். களைப்போடு களைப்பாக இரவே 'கோபாங்' போய்ச் சேர்ந்து விட்டால், அங்கு **I. T. B. P.** காம்ப்பில் நன்றாக ஓய்வு எடுத்துக் கொண்டு, மறு நாள் காலை உத்தரகாசிக்குப் புறப்பட்டுப் போக சௌகரியமாக இருக்கும் என்று கண்ணன் கூறிய 'ஐடியா'வை நாங்கள் இருவரும் மறு பேச்சுப் பேசாமல் ஒப்புக்கொண்டோம்.

சுந்தரானந்தாவுக்கு மூவரும் மாறி மாறி நன்றி கூறிவிட்டு, ஜீப்பில் ஏறி அமர்ந்தோம். கோமுகம் செல்ல ஜீப் பாதை யொன்றை அமைப்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வருவதாகக் கூறினர் டிரைவர். அந்தத் திட்டம் நிறைவேறினல், அது உ. பி. அரசின் பெரிய சாதனையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. 'நம்மால் அங்கேயெல்லாம் போக முடியுமா?' என்று இப்போது ஏங்கிக் கொண்டிருப்பவர்களெல்லாம் அப்போது எளிதாகக் கோமுகம் போய் விட்டு வந்து விடலாம்.

இரவு 'பைரவங்காட்' பள்ளத்தாக்கில் இறங்கி; இருண்ட காட்டுப் பாதையில் நடக்கும் போது பயமாயிருந்தது. வழியில் நரப்பிராணி கிடையாது. கையில் டார்ச் இல்லாமல் இருந்திருந்தால் நாங்கள் நிச்சயம் வழி தவறிப் போயிருப்போம்.

பாகீரதி-ஜடகங்கா சங்கமத்தின் அருகில் இருக்கும் பைரவன் கோயிலை அடுத்து ஒரு கந்தக நீரூற்று இருக்கிறதாம். அந்த நீரில் குளித்தால் பல நோய்கள் குணமாகி விடுமாம்.

இந்தப் பகுதிக்கு அருகில்தான் ஜானு மகரிஷியின் ஆச்ரமம் இருந்ததாம். பாகீரதி அவரது யாகத்தை அழித்து விட்டதால் கோபம் கொண்ட ஜானு மகரிஷி, அவளை அப்படியே பானம் பண்ணி விட்டாராம். பின்னர், தம் காது வழியே அவளை வெளியே விட்டாராம். அதனல் அவளுக்கு ஜானவி என்ற பெயர் ஏற்பட்டதாம். இப்படியொரு கதையை நாம் ஏற்கெனவே கேள்விப் பட்டிருக்கிறோம் அல்லவா? இந்தப் பகுதியில்தான் அந்த அதிசய நிகழ்ச்சி நடந்ததாம். அதற்கு ஆதாரமாக, திபேத்திலிருந்து இங்கு பாய்ந்து வரும் ஜட கங்கைக்கு ஜானவி என்ற பெயர் பொருத்தமாக அமைந்திருப்பதைச் சுட்டிக் காட்டுகிறார்கள்.

நாங்கள் லங்காவுக்கு வந்து சேர்ந்தபோது மணி ஒன்பதாகி விட்டது. அங்கு எங்கள் டாக்சியைக் காணவில்லை. புஷ்க்கர் காத்திருந்துவிட்டு, 'இருட்டின பிறகு வரமாட்டார்கள்' என்று தீர்மானித்து, மீண்டும் 'கோபாங்' போயிருப்பார் என்று எண்ணினேம். அங்கு ஒரு டீக்கடையிலிருந்த இரு பையன்களிடம் கோபாங் சென்று டாக்சியை அழைத்து வரும்படி வேண்டினேம். இரண்டு ரூபாய் பணத்துக்காக அந்தப் பையன்கள் அந்தப் பயங்கர இருளில், மூன்று மைல்கள் ஓடிச் சென்று டாக்சியை அழைத்து வந்த உதவியை மறக்கவே முடியாது.

நாங்கள் சென்றபோது கோபாங் காம்ப் உறங்கிவிட்டிருந்தது. ஒருவரையும் தொந்தரவு செய்ய விரும்பாததால் நாங்கள் 'எங்கள்' கூடாரத்தினுள் நுழைந்து 'கப்சிப்' என்று படுத்துக் கொண்டோம். சரியான குளிர். 'கிட்'டுக்குள் புகுந்து கொண்டு, கடந்த இரு நாட்களாகக் கண்ட காட்சியற்புதங்களை நினைவில் அசை போட்டுக் கொண்டே படுத்திருந்தேன் நான். எனக்கு முன்னுல் உறங்கி விட்டிருந்த நண்பர்களின் இரட்டை நாதசுரம் போன்ற குறட்டையின் நாதம் எனக்குத் தாலாட்டுப் பாட, நானும் உறக்கத்தில் ஆழ்ந்தேன்.

மறுநாட் காலை 'இன்-சார்ஜ்' (அங்குள்ள அதிகாரியை அப்படித்தான் அழைக்கிருர்கள்) எங்கள் கூடாரத்திற்கு வந்து நலம் விசாரித்தார். அன்று காலை எங்களைப் பற்றி விசாரித்து டில்லியிலிருந்து ஒயர்லெஸ் செய்தி ஒன்று வந்ததாகக் கூறினர். எங்கள் அடுத்த பயணத் திட்டத்தைப் பற்றித் தங்களுக்கு அறிவிக்கும்படி தமக்கு அங்கிருந்து ஒரு தாக்கீது வந்திருப்பதாகவும் கூறினர். எல்லாம் சி. எஸ். ஆரின் முயற்சியாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டோம். நாங்கள் கேதார்நாத்திலும் பத்ரிநாத்திலும் இருக்கப் போகும் தேதிகளை உத்தேசமாகக் கூறி, டெல்லிக்கு அறிவிக்கும்படி அவரிடம் கேட்டுக் கொண்டோம்.

எல்லோரிடமிருந்தும் விடை பெற்றுக் கொண்டு, காலை எட்டரை மணிக்கு கோபாங்கிலிருந்து உத்தரகாசிக்குப் புறப்பட்டோம். அங்கிருந்து எங்கள் கேதார்நாத் பயணம் தொடங்கி விட்டதைத் தெரிவிப்பதற்காக 'ஜெய் கேதார்' என்று புஷ்க்கர் உரக்கக் குரல் கொடுத்தார்.

நான்காவது மைலில் 'தராலி' என்ற சிறு கிராமம் இருக்கிறது. அங்கு ஸ்ரீகண்ட பர்வதத்திலிருந்து ஓடி வரும் தூத் கங்கா என்ற சிற்ருறு, பாகீரதியுடன் வந்து கலக்கிறது. அந்த இடத்திற்கு 'விச்வநாத் பூரி' என்று பழைய பெயர் உண்டு. அங்கு மணலில் பாதி புதைந்திருந்த ஒரு சிவன் கோயிலைப் பார்த்தோம். வெளியில் யாளி ஒன்றும் யானையின் முகம் ஒன்றும் காணப்படுகின்றன. இதைப் போல் இன்னும் நூற்றுக்கணக்கான கோயில்கள் ஆற்று வெள்ளத்தில் மண் மூடிப் போய் விட்டதாகக் கூறினுர்கள்.

தராலிக்கு நேர் எதிரே, நதிக்கு அந்தப் பக்கம் 'முகாபா' என்ற ஊர் இருக்கிறது. கங்கோத்ரி ஆலயத்தின் பண்டாக்கள் வசிக்கும் இடம் அது. கங்கோத்ரி கோயில் ஆறு மாதம் மூடப்பட்டிருக்கும் போது, இதன் அருகிலுள்ள மார்க்கண்டேயஸ்தான் என்ற ஊரில்தான் கங்காதேவி விக்ரகத்தைக் கொண்டு வந்து பூஜை செய்கிருர்களாம்.

தராலியிலிருந்து மானஸரோவர் ஏரிக்கும், கைலாச மலைக்கும் ஒரு பாதை பிரிவதாகக் கூறி, 'அதோ, அதற்கு அப்படிப் போக வேண்டும்' என்று ஓர்

உள்ளூர்வாசி காட்டினுர். அந்த வழியை ஏக்கத்தோடு பார்த்தேன் நான். அவை திபேத்தில் இருக்கின்றன. தற்போது சீனுவின் ஆக்கிரமிப்பின்கீழ் உள்ள அந்த இடங்களுக்குப் போவது என்பது நினேத்துப் பார்க்கக் கூட முடியாத தாகும். இருந்தாலும் ஆசைக்கு அளவுண்டா?

பங்களூரை அடுத்த கைலாச ஆச்ரமத்திலுள்ள திருச்சி சுவாமிகளும், தீர்த்தஹள்ளிக்கு அருகிலுள்ள முல்பாகல் கிராமத்தில் எதிர்பாராமல் தரிசித்த துவாரகா பீடாதிபதிகளும், தங்களது கைலாச யாத்திரையைப்பற்றி என்னிடம் விவரித்த நாட்களிலிருந்து, இப்பிறவியில் எப்படியாவது அவ்விடங்களேக் காண வேண்டும் என்ற ஆர்வம் என்னுள் வேரூன்றத் தொடங்கியது. தராலியில் வந்து நின்று அங்கு செல்லும் பாதையைக் கண்டபோது, அந்த ஆர்வம் கொழுந்துவிட்டெரிந்தது. 'காலம் வரும், நம்பிக்கையோடு காத்திருப்போம்' என்று உறுதி பூண்டேன்.

தராலியிலிருந்து 'ஹரிசில்' என்ற 'ஹரிப்பிரயாகை' நான்கு மைல் தொலேவிலிருக்கிறது. இந்தப் பகுதியில் எங்கள் பயணம் புத்துணர்வும் புதுத் தென்பும் அளிப்பதாக அமைந்திருந்தது. இயற்கைக் காட்சிகளின் வனப்பு, அழகுத் தத்துவத்திற்கு இலக்கணமாகத் திகழ்ந்தது. உத்தரகாசியிலிருந்து கங்கோத்ரிக்கு வரும்போது இருட்டி விட்டிருந்ததால், நாங்கள் இந்தக் காட்சிகளே ரசிக்க முடியாமல் போயிற்று. நல்லவேளே, திரும்பும் போதாவது வெளிச்சத்தில் வந்தோமே என்று நினேத்துக் கொண்டேன்.

ஹரிப்பிரயாகையில் சியாம கங்கா என்னும் நதியும் ஜலந்தர் என்னும் நதியும் பாகீரதியுடன் கலக்கின்றன. அங்கு புராதனமான லட்சுமிநாராயணர் ஆலயம் ஒன்று இருப்பதாக நான் முன்பே படித்திருந்ததால் அதைத் தேடிக் கொண்டு நானும் ஸ்ரீநிவாசனும் புறப்பட்டோம். கண்ணன் டாக்சியிலேயே அமர்ந்திருந்தார். உடல் நலம் சற்றுக் குன்றியிருந்த காரணத்தால் உற்சாகம் இழந்திருந்தவரை, உபத்திரவப்படுத்த நான் விரும்பவில்லே.

அங்கிருந்து மிகப் பழைய, ஆபத்தான நிலேயிலிருந்த பாலத்தைக் கடந்து, சுமார் ஒரு மைல் நடந்து, கடைசியில் அந்தக் கோயிலேக் கண்டு பிடித்தோம்.

லட்சுமி நாராயணர் ஆலயத்தின் முன் நிற்பவர் பார்வதி அம்மாள்



தாய், தந்தையை இழந்த சிறுமி





உத்தரகாசி ஊர்

ஊருக்கு வெளியே, ஒதுங்கி, தனிமையில் கோயில் கொண்டிருந்தார் ஸ்ரீ லட்சுமி நாராயணர். சிறு கோயில்தான். அது பூட்டப்பட்டிருந்தது. சுற்று முற்றும் தேடிப் பார்த்தோம். விசாரித்துப் பார்க்கலாம் என்ருல் ஓர் ஆசாமி கூடக் கண்ணில் தென்படவில்லே.

இத்தனை தூரம் வந்து விட்டு சுவாமியைப் பார்க்காமல் திரும்ப எங்களுக்கு இஷ்டமில்லை. எங்கேயாவது விசாரித்துப் பார்க்கும்படி ஜவானிடம் கேட்டுக் கொண்டோம். ஒரு கிழவிதான் அந்தக் கோயிலைக் கவனித்துக் கொண்டிருந்தாள் என்றும், அவள் வீடு அங்கு எங்கோதான் இருக்கிறது என்றும் நினைவுப்படுத்திக் கொண்டு ஸலீந்தர் சென்ருர். நாங்கள் பின்னல் நடந்தோம்.

ஜவான் சொன்ன அந்தக் கிழவியைக் கண்டு பிடித்தோம். ஆனல், அவள் கோயிலைத் திறக்க மறுத்து விட்டாள். காலையில் வீட்டு வேலை நிறைய இருக்கிறது என்றும் தன்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என்றும் கண்டிப்பாகக் கூறி விட்டாள். நாங்கள் மன்ருடினேம். ஆயிரத்து ஐந்நூறு மைல்களுக்கப்பாலிருந்து இமாலய யாத்திரை வந்திருப்பதாகக் கூறினேம். அதைக் கேட்டு அந்த அம்மாளின் மனம் கரைந்தது. வீட்டிற்குச் சென்று சாவிக் கொத்தை எடுத்துக் கொண்டு வந்து கோயிலைத் திறந்தாள்.

வெளியே ஒரு சிவலிங்கம் இருக்கிறது. கருவறையில் நாராயணர், லட்சுமி, கருடன், அனுமார் முதலிய மூர்த்திகள் இருக்கின்றன. எல்லாம் பளிங்குக் கல்லால் ஆனவை.

நாராயணன் தமது மேல்கரங்களில் கதையும், சக்ரமும் ஏந்தி யிருக்கிருர். கீழ் வலக்கை வர ஹஸ்தமாக இருக்கிறது. இடக் கையில் சங்கு இருக்கிறது.

அந்தக் கிழவியின் பெயர் பார்வதி. கடுவால் பிராம்மண வகுப்பைச் சேர்ந்தவள். அவளது பரம்பரையினர்தான் அந்தக் கோயிலைக் கவனித்து



ஸ்ரீ விச்வேச்வரர் ஆலயம் (உத்தரகாசி)


வந்திருக்கிறார்கள். இவள் மூன்றாவது தலைமுறையைச் சேர்ந்தவள். எங்களுக்கு சுவாமி பிரசாதம் தந்துவிட்டு, தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றாள். 'ஜில்'லென்று மோர் கொண்டு வந்து கொடுத்து உபசரித்தாள்.

அங்கு ஓர் அழகிய சிறுமி, கன்றுக் குட்டியுடன் விளையாடிக் கொண்டிருந்தாள். ஸ்ரீநிவாசன் அவளை போட்டோ பிடித்துக் கொண்டிருக்கும்போது, 'அந்தப் பெண் இந்த அம்மாவின் பேத்தியா?' என்று விசாரிக்கும்படி ஸலீந்தரிடம் சொன்னேன். ஸலீந்தர் கேட்டார்.

''ஆமாம். என் பிள்ளை வயிற்றுப் பேத்தி இவள். பெயர் பிந்து. என் பிள்ளையும் நாட்டுப்பெண்ணும் அண்மையில் அடுத்தடுத்து இறந்து விட்டனர். இப்போது இந்தப் பெண்ணும் நானும்தான் இங்கே குடித்தனம் நடத்துகிறோம். நீங்கள் வந்தபோது பசி என்று இவள் அழுதுகொண்டு இருந்தாள். அவளுக்கு ஏதாவது செய்து தர வேண்டும் என்றுதான் முதலில் உங்களுடன் கோயிலுக்கு வரத் தயங்கினேன். என்னைத் தப்பாக நினைத்துக் கொள்ளாதீர்கள்'' என்று அந்த மூதாட்டி கூறியபோது, எங்கள் கண்கள் கலங்கி விட்டன.

கங்கோத்ரியிலிருந்து உத்தரகாசி வரும் வரையில், பாகிரதி நதி பாய்ந்து ஓடும் பள்ளத்தாக்குகளின் ரம்மியமான காட்சிகளை ரசித்துக் கொண்டே வந்தோம். பாரதத்தின் ஜீவநாடியான அந்த ஜீவநதி, உயரத்திலிருந்து பார்க்கும்போது ஓர் அழகுடன் விளங்குகிறது; அருகில் ஓடும்போது ஓர் அழகுடன் விளங்குகிறது; அருகில் ஓடும்போது ஓர் எழிலுடன் திகழ்கிறது.

வகைவகையான தோற்றங்களுடன், வளம் குவித்து நம்மை வாழ்விக்கப் பறந்தோடி வரும் பாகிரதி மங்கை, புதுப் புதுப் பொலிவு களுடன் பூத்துக் குலுங்குகிறுள். அவளையும், அவளை அரவணைத்துக் கொண்டு வரும் இமயத் தொடரையும் இமை கொட்டாது பார்த்துப் பார்த்துப் பரவசம் அடைந்தோம். இயற்கை அழகைப் பருகப் பருக, சாந்தி பிறக்கிறது; அந்த சாந்தியில் ஆனந்தம் தாண்டவ மாடுகிறது. அந்தத் தாண்டவ நடனத்தில் ஆண்டவனின் தரிசனம் கிடைக்கிறது.




சக்தி கோயில்

ஓர் இடத்தில் புஷ்க்கர் டாக்சியை நிறுத் திஞர். ஸ்ரீநிவாசனைப் பார்த்து ''ஸாப், அதோ! அதை ஒரு போட்டோ எடுத்துக் கொள்ளுங்கள். என்ன அற்புதமான காட்சி பாருங்கள். அந்த மணல் பரப்பில் பாகிரதி கிளைகளாகப் பிரிந்து வரும் அற்புதத்தை ரசியுங்கள். ஆகா! அப்படியே இந்திய 'மாப்' பின் அமைப்பு தெரிகிறது, பார்த்தீர்களா?'' என்று ஆர்வமும் உற்சாகமும் பொங்கக் குதித்தார். இறங்கிப் பார்த்தோம். அவர் கூறியது உண்மைதான்.

அவ்விடத்தில் மலைகளின் அமைப்பும், அவற்றினிடையே பாகிரதி சின்னஞ் சிறு கிளைகளாகப் பிரிந்து, மணற் பரப்பில் இந்திய நாட்டின் வரைபடம் ஒன்று வரைந்திருந்த விந்தையும், புஷ்க்கரின் கலா ரசனையைத் தூண்டியதில் வியப் பில்லை. தெய்வங்கள் வாழும் வானுலகிலிருந்து வருபவள் அல்லவா பாகிரதி? அவர்கள் லீலைகள் அத்தனையும் இவளுக்கு அத்துபடியா யிருக்கிறது போலும்! அவரவர் மனநிலைக்கு ஏற்பவும், மனப் பக்குவத்திற்கு ஏற்றவாறும் அற்புதக் காட்சிகள் தந்து, உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் கள்வனுய் அற்புத லீலைகள் புரிவதன்றோ தெய்வத்தின் தனித்தன்மை!

கங்கனுனி என்ற இடத்தைக் கடந்தபோது, மலை மீது பராசரர் ஆச்ரமம் இருந்த இடத்தில் இறங்கி அந்தத் திக்கை நோக்கிக் கன்னத்தில் போட்டுக் கொண்டோம். அதன் அருகிலிருந்த உஷ்ண குண்டத்திலிருந்து ஆவி பறந்து வந்தது எங்கள் கண்ணுக்குத் தெரிந்தது. ஏறிச் சென்று குளித்துவிட்டு வரவேண்டும் என்ற ஆசை இருந்தது. ஆனல், உடல் ஒத்துழைக்க வில்லை. 'அதுதான் அங்கிருந்தபடியே கண்ணுல் தரிசித்து விட்டீர்களே, புண்ணியம் கிடைத்த மாதிரிதான்' என்று உள் மனம் உடலுக்கு அனுசரணையாக மொழியவே, நாங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம்.

பைரவன் கோயில்



இரண்டு மைல்கள் கடந்ததும் அதுவரை காணுத ஒரு காட்சியைக் கண்டு வியந்தோம்.

அங்கு பாகீரதி விரிந்து, பரந்து நிரம்பி வழிந்து ஓடிக் கொண்டு இருந்தாள். பாலமாகக் குறுக்கே கட்டப்பட்டிருந்த கனமான ஓர் இரும்புக் கம்பியில் இணைக்கப்பட்ட ஒரு சிறு தொட்டிலில் உட்கார்ந்தவாறு ஒருவன், இக்கரையிலிருந்து அக்கரைக்குச் சென்று கொண்டிருந்தான். அதைப் பார்த்த போது, 'அறுந்து விழுந்தால் என்ன கதி?' என்று நினைத்த நமக்குத்தான் பயமாக இருந்தது. நின்று நடுக்கத்துடன் வேடிக்கை பார்த்த எங்களைப் பார்த்து அந்த ஆசாமி சிரித்துக் கொண்டிருந்தான்! பழக்கப்பட்டுப் போய் விட்டால் எதிலுமே பயமற்றுப் போய்விடுகிறதே!

உத்தரகாசிக்கு வந்து சேரும்போது பகல் மணி ஒன்றாகி விட்டது. எங்கள் திட்டப்படி இரவுக்குள் எப்படியாவது ஸ்ரீநகர் போய்ச் சேர்ந்துவிட வேண்டும். அங்கிருந்து மறுநாள் காலை புறப்பட்டு ருத்ரப்பிரயாகை வழியாக, கேதார்நாத்துக்குச் செல்ல வேண்டும்.

''இங்கே சாப்பாட்டை முடித்துக் கொண்டு உடனே கிளம்ப வேண்டியது தானே?'' என்று கேட்டார் புஷ்க்கர்.

''அதெப்படி முடியும்? இன்னும் கோயிலைப் பார்க்கவேயில்லையே. எல்லாவற்றையும் பார்த்த பிறகுதான் கிளம்ப முடியும்'' என்றேன் நான்.

''அதென்னவோ எனக்குத் தெரியாது. எல்லாவற்றையும் நாலு மணிக்குள்ளே முடித்துக் கொண்டு புறப்பட்டு விடுங்கள். அதற்குள் நான் உடைகளைத் துவைத்து உலர வைத்துக் கொண்டு விடுகிறேன்'' என்று கூறிவிட்டு புஷ்க்கர் கிளம்பி விட்டார். நாங்கள் ஆகாரத்தை முடித்துக் கொண்டு சிறிது ஓய்வு எடுத்துக் கொண்டு கோயில்களைத் தரிசிக்கச் சென்றோம்.


வாரணாசியைப் போல் இந்த உத்தரகாசியில் உறைபவரும் விச்வேச்வரரே. 'கலியுகத்தில் புராதனக் காசியின் மகிமை குறையும்போது நான் உத்தரகாசியில் வந்து தங்கி விடுவேன்' என்று ஸ்ரீபரமேச்வரனே கூறியிருக்கிறாராம். அது என்னவோ தெரியாது. நாற்பது ஐம்பது வருடங்களுக்கு முன்பு வரை உத்தரகாசி, தவத்திற்கும் தியானத்திற்கும் ஏற்ற தனிமையும் சாந்தியும் நிறைந்த ஒரு தவச்சோலையாக இருந்தது. மனித நடமாட்டத்திலிருந்து ஒதுங்கி, ஆன்மிக சாதனைகளில் நாட்டம் கொள்வதற்காக இங்கு அநேக மகான்களும் மகாத்மாக்களும் வந்திருக்கிறார்கள். தினமும் பாகீரதியில் ஸ்நானம் செய்தும், விச்வேச்வரரை வழிபட்டும் ஆத்ம லாபம் பெற்று வந்திருக்கிறார்கள்.

அந் நாட்களை நாம் வெகு சிரமப்பட்டு கற்பனை செய்து கொண்டால்தான் உண்டு. இப்போது முற்றிலும் மாறிவிட்டிருப்பதைப்பற்றி முன்பே குறிப்பிட்டிருந்தேன். தற்போதுள்ள கடை வீதிகளின் வழியே, மனிதர்களின் மீது இடித்துக் கொண்டு சந்து பொந்துகளைக் கடந்து செல்லும்போது, கும்பலைப் பொறுத்தவரையில் சீக்கிரத்திலேயே இதுவும் ஒரு 'காசி' ஆகிவிடும் என்ற எண்ணம் எழத்தான் செய்கிறது.

நாங்கள் கோயிலுக்குச் சென்ற போது மாலை மணி மூன்றிருக்கும். எங்களையும், நிழலுக்காகக் கோயிலில் ஒதுங்கிப் படுத்துக் கொண்டிருந்த ஓரிருவரையும் தவிர அங்கு வேறு யாருமில்லை.



மணிகர்ணிகா கட்டம்



அன்னபூரணி கோயில்

சிறு கோயில்தான். அது தரைமட்டத்திற்கு மேல், ஓர் உயர்ந்த மேடையில் அமைந்திருக்கிறது. பத்துப் பதினைந்து படிகள் ஏறிச் செல்ல வேண்டும்.

அலங்கார மண்டபங்களோ, சிற்பத் தூண்களோ கிடையாது. உயர்ந்த மேடையைச் சுற்றிப் பிராகாரம் அமைந்திருக்கிறது. கிழக்கு நோக்கிய நுழை வாயில். வாயிற்படிக்கு மேல் ஒரு விநாயகர் இருக்கிறார். அவர் தமது கரங்களில் பரசு, உருத்திராட்ச மாலை, கமண்டலம், மோதகம் முதலியவற்றை ஏந்தி யிருக்கிறார். (வடக்கே பெரும்பாலான கணபதிமூர்த்திகள் இத் தோற்றத் துடன்தான் காணப்படுகின்றன.)

உள்ளே அர்த்த மண்டபத்தில் சுவாமியை நோக்கி ஒரு சிறு நந்திகேச்வரர் அமர்ந்திருக்கிறார். நாம் கருவறையில் தாராளமாக நுழையலாம். காசியில் நடைபெறுவது போன்றே இங்கேயும் ஸ்ரீ விச்வேச்வரருக்கு நம் கையாலேயே அபிஷேக, ஆராதனைகள் செய்யலாம்.

பெரிய, புராதனமான லிங்கம். பார்த்ததுமே பக்தியைத் தூண்டும் வடிவில் எழுந்தருளி யிருக்கிறார் சுவாமி. எத்தனை மகான்கள், எத்தனை யோகேச்வரர்கள், எத்தனை ஞானத் தபோதனர்கள் அவரை வழிபட்டிருப்பார் களோ! எத்தனையெத்தனை பேருக்கு அவர் நற்கதி அருளி யிருப்பாரோ! எத்தனை கருணை நிறைந்தவராக இருந்தால் எங்களைப் போன்றவர்களுக்கும் அவர் தரிசனம் அளித்திருப்பார்!

தஞ்சம் என்று சரணடைந்து விட்டால் அடுத்த கணமே அடைக்கலம் தந்தருளக் காத்திருக்கும் பிரபுவுக்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்துவிட்டு அவரை வலம் வந்தோம். விச்வேச்வரரை ஒருமுறை வலம் வந்துவிட்டால் நாம் அண்டசராசரங்களைச் சுற்றி வந்த பலனைப் பெற்று விடலாமே! அன்று பரமேச்வரனை வலம் வந்துவிட்டு, தும்பிக்கையான் மிக எளிதாகப் பழத்தைப் பெற்றுச் சென்று விடவில்லையா, அதுபோல!

நமக்கு இந்தத் தத்துவத்தை நினைவுபடுத்திக் கொண்டு கருவறையில் சலவைக் கல்லாலான சிறு விநாயகமூர்த்தி அமர்ந்திருக்கிறார். அங்கு விருஷபத் தில் அமர்ந்தபடி ஓர் உருவச்சிலை இருக்கிறது. அமர்ந்திருப்பது அப்பனா, அம்மையா என்பது சரியாகப் புலப்படவில்லை.

சுவாமி கிழக்கு நோக்கிக் கோயில் கொண்டிருக்கிறார். அக்கருவறையை வலம் வரும்போது, வடக்குப்புறத்தில் ஒரு கோமுகத்திலிருந்து நீர் சொட்டிக் கொண்டிருக்கிறது. அதனடியில் ஒரு சிவலிங்கம் இருக்கிறது.

பிராகாரத்தைச் சுற்றிக் கொண்டு கீழ் இறங்கி வந்தால், சுவாமி கோயிலுக்கு நேர் எதிரே, ஒரு தனி மண்டபத்தில், பிருமாண்டமான திரிசூலம் காணப்படுகிறது. ஐம்பது ஐம்பத்திரண்டு அடி உயரமிருக்கும். சக்தி சொரூப மான அந்த சூலத்தை, அம்பாளாக வழிபடுகிறார்கள். சுவாமியைக் காசி விச்வேச்வரர் என்றும், சக்தியை காசி விச்வேச்வரி என்றும் அழைக்கிறார்கள். இந்தத் திருசூலத்தைப் பார்த்ததும், பத்ரிநாத் செல்லும் வழியில் சமோலிக்கு அருகில் உள்ள கோபேச்வரர் ஆலயத்தில் பார்த்த உயரமான சூலம் என் நினைவுக்கு வந்தது. இதுவும் இரும்பாலானதே.

இதை நேபாள மகாராஜா ஒருவர் நிர்மாணித்ததாகக் கூறுகிறார்கள். அதற்குச் செப்புக் கவசம் போட்டிருக்கிறார்கள். அத் தகட்டில் பிராசீனமான லிபியில் ஏதோ எழுதப்பட்டிருக்கிறது. சூலத்தின் அடியில் ஸ்ரீசக்கரமும் ஒரு பாணலிங்கமும் இருக்கின்றன.

சிவனையும் சக்தியையும் வழிபட்டுக் கொண்டு வெளியே வந்தோம். ஆலயத்திற்குக் கிழக்குப்புறம் பைரவனுக்கு ஒரு சிறு கோயில் இருக்கிறது. கோயில் பூட்டப்பட்டிருந்ததால் கதவு இடுக்கு வழியே எட்டிப் பார்த்தோம். அந்த மூர்த்தி அர்த்த பிம்பமாக இருப்பதைக் கண்டோம்.

அக்கோயிலுக்கு எதிர்ப்புறத்தில் சற்றுத் தொலைவில் அன்னபூரணிக்கு ஒரு கோயிலும், அருகில் பரசுராமனுக்கு ஒரு கோயிலும் இருக்கின்றன.

இக் கோயில்களெல்லாம் இருப்பது ஊருக்குக் கிழக்குத் திசையில். அங்கிருந்து புறப்பட்டு எங்கள் டாக்சி நின்றிருந்த இடத்திற்கு வந்தோம். புஷ்க்கர் குளித்துவிட்டு, துவைத்து உலர்ந்த ஆடைகளை அணிந்து கொண்டு 'பளிச்'சென்று இருந்தார். சற்றுத் தெம்புடனும் காணப்பட்டார்.

'பராத்' என்ற மாப்பிள்ளை அழைப்பு ஊர்வலம்



எங்களைக் கண்டதும் ''புறப்பட வேண்டியதுதானே? நான் ரெடி'' என்றார்.

''இன்னும் ஒரே ஒரு இடம்தான் பாக்கி யிருக்கிறது. புனிதத் தலத்திற்கு வந்தால் முக்கியமான ஸ்நான கட்டத்தைப் பார்க்காமல் போகக் கூடாது. அதை மாத்திரம் பார்த்துவிட்டுப் புறப்பட்டு விடலாம்'' என்றேன் நான்.

''போகும் வழிதான். டாக்சியில் ஏறுங்கள். இப்படித்தான் போக வேண்டும்'' என்று அவர் கூறவே, நாங்கள் டாக்சியில் ஏறிக் கொண்டோம்.

மேற்கே சென்ற கார், இரண்டு மூன்று சந்துகளில் நுழைந்து புறப்பட்டு, ஓர் ஓரமாக நின்றது.

''இதோ, இப்படிப் போங்கள்'' என்று ஒரு குறுகலான பாதையைக் காட்டினார் புஷ்க்கர். நாங்கள் இறங்கிச் சென்றோம்.

அது மணிகர்ணிகா ஸ்நான கட்டத்திற்குச் செல்லும் வழி. மகர சங்கராந்தியின் போது, அந்த இடத்தில் ஜனநெரிசல் தாங்க முடியாதாம். அப்போது ஊரில் ஏழு நாட்கள் திருவிழா நடக்குமாம். எங்கிருந்தெல்லாமோ மக்கள் பெருங் கூட்டமாக வருவார்களாம். சுவாமி, அம்மன் எல்லாரும் பல்லக்குகளில் பவனி வருவார்களாம். பெரிய பெரிய சந்தைகள் நடைபெறுமாம். வியாபாரம் கொழிக்குமாம். உத்தரகாசி அமர்க்களப்படுமாம்.


திருவிழாவின்போது நுழையவே முடியாத நெரிசல் இருக்கும் அந்த ஸ்நான கட்டத்தில் நாங்கள் மட்டும் சௌகரியமாக, நிம்மதியாக இறங்கிச் சென்றோம். அந்த காசியிலுள்ள ஸ்நான கட்டத்திற்கு ஈடான மகிமையை இது பெற்றிருப்பதாகக் கூறுகிறார்கள்.

இங்கு பாகீரதி இரு கிளைகளாகப் பிரிந்து செல்கிறாள். நடுவில் ஒரு திட்டுப் போல் இருக்கிறது. பெரும் வெள்ளம் வரும்போது, அந்தத் திட்டு மறைந்து, எல்லாம் ஒன்றாகி விடும் போலிருக்கிறது.

நாங்கள் சென்ற சமயம், நீர் குறைவாகத்தான் ஓடிக் கொண்டிருந்தது. நாங்கள் தைரியமாக இறங்கி, ஸ்நானம் செய்திருக்கலாம். ஆனால், புஷ்க்கர் எங்களை அவசரப்படுத்திக் கொண்டிருந்ததால், அந்த எண்ணத்தைக் கைவிட்டு, நீரை எடுத்துத் தலையில் கொஞ்சம் தெளித்துக் கொண்டு, மீதியை அருந்தி விட்டோம்.

கங்கையின் ஒரு துளி நீருக்கும் மகோன்னத சக்தி இருக்கிறதே.

வழியில் கண்ட சிறுவர்கள்



உத்தரகாசியிலிருந்து மாலை நாலரை மணிக்குப் புறப்பட்டு ஐந்தாவது மைலில் உள்ள மாத்லி I. T. B. P. காம்ப்புக்கு வந்தோம். கங்கோத்ரிக்குச் சென்றபோது, அங்கிருந்த அதிகாரி அன்புடன் கொடுத்துதவிய ஆடைகளையும் ஷூக்களையும் படுக்கை 'கிட்'டுக்களையும் நன்றியுடன் திருப்பித் தந்தோம். ஆனால், அவர் 'தந்த' ஜவான் ஸலீந்தர்சிங்கை மட்டும் எங்களால் திருப்பித் தர முடியவில்லை! இன்-சார்ஜ் ஆபீசரிடம் எப்படியாவது அனுமதி பெற்றுத் தன்னையும் எங்களுடன் அழைத்துச் செல்லும்படி மன்றாடிக் கேட்டுக் கொண்டார் சிங். ஆர்வமுள்ள இளைஞர். நல்ல சுபாவம். எங்களைப் போலவே புஷ்க்கருக்கும் அவரைப் பிடித்து விட்டது. ஆபீசரிடம் கேட்டோம். அவரும் சம்மதித்து விட்டார். ஸலீந்தருக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை.

மாலை சுமார் ஆறு மணிக்கு தராசு வந்தோம். அங்கு 'பராத்' என்ற மாப்பிள்ளை அழைப்பு ஊர்வலம் ஒன்று நடந்து கொண்டிருந்தது. சிறு பல்லக்கில், மலர்த் தோரணங்களுக்குள் முகத்தை மறைத்துக் கொண்டிருந்த மாப்பிள்ளை வெட்கத்துடன் எங்களைப் பார்த்தார். முன்னால், வாத்திய ஒலியின் மெட்டுக்கு ஏற்ப ஒரு மாது (?) நடனமாடிக் கொண்டே வந்தாள்(ன்)! அந்த இசையை நான் ரெகார்ட் செய்து கொண்டேன். ஸ்ரீநிவாசன் அந்தக் காட்சியைப் படம் பிடித்துக் கொண்டார். அதைக் கண்ட எல்லோருக்கும் ஒரே குஷி. வாத்திய இசையை நான் உடனேயே ஒலிபரப்பிக் காட்டியபோது, ஊர் மக்கள் ஆச்சரியத்துடன் ஆரவாரம் செய்து எங்களை வழியனுப்பி வைத்தனர்.

சற்றுத் தொலைவு சென்றதும், பாதையோரத்தில் பத்துப் பதினைந்து சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். கவலையின்றி அவர்கள் குதித்துக் கும்மாளம் போட்டதைப் பார்க்க எங்களுக்கு ஆனந்தமாக இருந்தது. அவர்களைப் பார்த்தால் மலைஜாதிப் பையன்கள் என்றே சொல்ல முடியாது. எல்லாம் நம் ஊர்ப் பையன்கள் போலவே இருந்தார்கள். விளையாட்டுச் சிறுவர்கள் எல்லா ஊர்களிலும் ஒரே மாதிரிதான் இருக்கிறார்கள். அதே விஷமம், அதே சிரிப்பு, அதே எக்களிப்பு!

நாங்கள் காரை நிறுத்தியபோது, என்னவோ ஏதோ என்று அவர்கள் ஒருகணம் நடுங்கியே விட்டார்கள். போட்டோவுக்கு நிற்கும்படி நாங்கள் கூறியபோது, அவர்கள் அடைந்த குதூகலத்திற்கு அளவேயில்லை. அவர்கள் கடற்கரையைக் கண்டார்களா? மிருகக்காட்சிசாலையைக் கண்டார்களா? கண்காட்சிச்சாலைகளைக் கண்டார்களா? சினிமா, டிராமாக்களைக் கண்டார்களா? அவர்களுக்கும்தான் எப்படியோ பொழுது போய்விடுகிறது. இமயத்தின் இன்பச் சூழலிலே, இயற்கையின் பரிசுத்தமான நிழலிலேயே, கள்ளம் கபடமற்ற கண்மணிகளாக அவர்கள் வளர்கிறார்கள். 'நாடு போற்றும் நல்லவர்களாக, வல்லவர்களாக வாழ்ந்து பாரதத்தை வாழ்விக்கட்டும்' என்று பிரார்த்தித்துக் கொண்டே எங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம்.

தராசுவிலிருந்து செல்லும் பாதையில் சற்றுத் தொலைவு சென்று வலப்புறம் திரும்பினால், நரேந்திர நகர் வழியாக ரிஷிகேசத்திற்குச் செல்லலாம். அதுதான் நாங்கள் வந்த வழி. அவ்வாறின்றி நேரே சென்றால், டெஹ்ரி வழியாக ஸ்ரீநகருக்கும் ருத்ரப்பிரயாகைக்கும் செல்லலாம்.


இரவு ஏழரை மணிக்கு டெஹ்ரி வந்து சேர்ந்தோம். நெரிசலும் நாகரிக வளர்ச்சியும் மிகுந்த ஊர். இமாலய மலைப் பகுதியிலிருக்கிறோம் என்பதே




ருத்ரப்பிரயாகையிலிருந்து கேதார்நாத் செல்லும் மலைப்பாதை

மறந்து விடுகிறது. திடீரென்று சமவெளிக்கு வந்து விட்டது போன்ற ஒரு பிரமை ஏற்படுகிறது. அங்கு பெரிய பெரிய ஓட்டல்கள் இருந்தன. அவற்றில் வகை வகையான தின்பண்டங்கள் இருந்தன. பூரி, சப்பாத்தி, சாதம், தயிர் எல்லாம் கிடைத்தன. எங்களுக்கு நல்ல பசியும் இருந்தது. ஆனால் சாப்பிடக் கொடுத்து வைக்கவில்லை. அங்கே சாப்பிட உட்கார்ந்தால் ஸ்ரீநகர் போகும் போது அதிக நேரமாகிவிடும் என்று புஷ்க்கர் எங்களை அவசரப்படுத்தினர். ஸ்ரீநகரில் இதை விடப் பெரிய ஓட்டல்கள் இருப்பதாகவும், அங்கே சாப்பிடலாம் என்றும் கூறினர். அவர் பேச்சைக் கேட்டுக் கொண்டு போனோம். ஆனால், இரவு ஒன்பதரை மணிக்கு ஸ்ரீநகரை அடைந்தபோது சாப்பிடுவதற்கு ஒன்றுமே கிடைக்கவில்லை. அங்கிருந்த ஓரிரு ஓட்டல்களும் மூடப்பட்டிருந்தன. ஒரு கடையில் ஐஸ்கிரீம் கிடைத்தது. அதைத் தின்று விட்டுப் படுத்துக் கொண்டோம். எங்களைக் கொண்டு வந்து விடுதியில் இறக்கியவர்தான்; பின்னர் புஷ்க்கர் எங்கள் கண்களில் படவேயில்லை!

அதிகாலையில் எழுந்து ருத்ரப்பிரயாகைக்குச் சென்றோம். பத்ரிநாத் யாத்திரையின்போது, எங்களை கோடீச்வரர் ஆலயத்திற்கும், பாண்டவர் குகைக்கும் அழைத்துச் சென்ற நரேந்திரகுமாரைச் சந்திக்கலாம் என்று நேரே அவரது ஓட்டலுக்குச் சென்றோம். ஆனால், அவர் ஊரிலில்லை. அங்கு ஆகாரத்தை முடித்துக் கொண்டு சங்கமத்திற்குச் சென்றோம். அது கடந்த செப்டம்பரில் நான் பார்த்த இடம் மாதிரியே தோன்றவில்லை. அலகநந்தா விலும் மந்தாகினியிலும் நீர் குறைந்தே காணப்பட்டது. படித்துறையிலிருந்து



'அகஸ்திய முனி' கடைவீதி



அகஸ்தீச்வரர் கோயில் நுழைவாயில்

தண்ணீர் சற்று விலகி ஓடிக் கொண்டிருந்ததால், அங்கு ஆழமாக இருக்குமோ என்னவோ என்று அஞ்சி நாங்கள் ஸ்நானம் செய்யாமலேயே திரும்பிவிட்டோம்.


ருத்ரப்பிரயாகையிலிருந்து அலகநந்தா கரையின் மீது சென்றால் பத்ரிநாத்தை அடையலாம். மந்தாகினி கரை மீது சென்றால் கேதார் நாத்தை அடையலாம். ருத்ரப்பிரயாகையிலிருந்து கேதார்நாத் 48 மைல்கள் தான். ஆனால், முதல் நாள் காலை எட்டரை மணிக்குப் புறப்பட்டு, மறுநாள் காலை பத்து மணிக்குத்தான் கேதார்நாத்தை அடைய முடிந்தது!

முன்பெல்லாம் ருத்ரப்பிரயாகை வரையில்தான் பஸ் போகுமாம். அங்கிருந்து கேதாரத்திற்கு நடையாகத்தான் செல்ல வேண்டும். அடுத்து, பதினொரு மைலில் உள்ள அகஸ்திய முனி என்ற இடம் வரையில் பஸ் பாதை அமைக்கப்பட்டது. பின்னர் படிப்படியாக விரிவாக்கப்பட்டு தற்போது கேதார்நாத்திலிருந்து பன்னிரண்டாவது மைல் வரையில், 'ஸோன் பிரயாகை' என்ற இடம் வரை, பஸ்ஸும் காரும் செல்கிறது. அங்கிருந்து நடையாகவோ, மட்டக் குதிரையிலோ, கண்டியிலோ, தண்டியிலோதான் கேதாருக்குச் செல்ல வேண்டும்.

அகஸ்திய ரிஷி கோயில்




அகஸ்திய ரிஷி





ஸ்ரீ அகஸ்தீச்வரர் ஆலயம்



ஸ்ரீ அகஸ்தீச்வரர்

ருத்ரப்பிரயாகையிலிருந்து கேதார்நாத் செல்லும் பாதை, பத்ரிநாத் பாதையைப் போல் அத்தனை சிரானதாக இல்லை. அது ராணுவத்தினர் போட்டிருக்கும் பாதை. இது பி.டபிள்யூ.டி. இலாகாவினர் போட்டிருக்கும் பாதை. வேறு எப்படி யிருக்கும்?

காலை எட்டரை மணிக்கு ருத்ரப்பிரயாகையிலிருந்து புறப்பட்டு, முக்கால் மணிக்கெல்லாம் பதினோராவது மைலிலிருக்கும் அகஸ்திய முனி என்ற இடத்திற்கு வந்து சேர்ந்தோம்.

ஆகா! எத்தனை அழகான சமவெளி அது! பச்சைப் பசேலென்று மரகதப் பாய் விரித்தாற்போல் பசும்புல் பரவிப் பரந்த மைதானம் ஒன்றில் ஆடுகளும் மாடுகளும் மேய்ந்து கொண்டிருந்த காட்சி, பார்க்க அற்புதமா யிருந்தது. புகழ்பெற்ற ஓவியர் வரைந்த கண்கவர் சித்திரமாக அது எங்களைக் கவர்ந்தது.

அங்கிருந்து ஒரு பர்லாங் சென்றால் கடைவீதி. அதன் அருகிலேயே அகஸ்தியர் கோயில் இருக்கிறது.

அந்தப் பகுதியில் அகத்திய முனிவர் தவம் இருந்ததால் அந்த இடத்திற்கு 'அகஸ்திய முனி' என்ற பெயர் ஏற்பட்டது. அகத்தியர் ஆராதித்த முருகப்பெருமான், கார்த்திகேய மூர்த்தியாய் அங்குள்ள மலையின் மீது கோயில் கொண்டிருக்கிறாராம்.

பரமசிவன்—பார்வதி திருமணத்திற்காகக் கூடிய கூட்டத்தின் காரணமாக வடகோடு தாழ்ந்து, தென்கோடு உயர்ந்தபோது அதைச் சரிக்கட்டி சமன் செய்ய, குறுமுனியை அல்லவா ஈச்வரன் தென்புலம் அனுப்பி வைத்தார்! அந்தத் தமிழ் முனிவர்தான் முதன் முறையாக விந்திய மலையைக் கடந்து தென்னகம் வந்து, நம் புண்ணிய பாரதத்தை சமய உணர்வாலும் கலாசாரப் பண்பாலும் இணைத்து வைத்தார் என்று புராணங்கள் பறைசாற்றுகின்றன.

ஒரு சமயம் விந்திய மலையைப் பார்த்து நாரதர், ''எல்லோரும் சுமேரு பர்வதத்தையும் இமாலயப் பர்வதத்தையும்தானே போற்றுகிறார்கள்! விந்தியப் பர்வதத்தைப்பற்றி யாருக்குமே தெரியவில்லையே'' என்று கூறினாராம். உடனே விந்திய மலை கோபம் அடைந்து ''எல்லோரையும் ஆட்டி வைக்கிறேன் பார்'' என்று சபதம் செய்ததாம். பின்னர் அது வளர்ந்து கொண்டே இருந்ததால்

சூரிய சந்திரர்களின் நடமாட்டம் தடைப்பட்டு, தேவர்கள் இருளில் திண்டாடி னார்களாம். அவர்கள் பரமசிவனிடத்தில் போய் முறையிட, அவர் அவர்களைப் பிரும்மாவிடம் அனுப்பி வைத்தாராம். பிரும்மா, தம்மால் ஒன்றும் செய்வதற் கில்லை என்று கூறி அவர்களைத் திருமாலிடம் செல்லும்படி பணித்தாராம். மகாவிஷ்ணுவிடம் அவர்கள் தங்கள் இன்னல்களை முறையிட்டபோது, அவர் அகத்திய முனிவரால்தான் அவரது சீடரான விந்திய மலையை வழிக்குக் கொண்டு வர முடியும் என்று கூறி குறு முனிவரிடம் அனுப்பினாராம். பின்னர் எல்லா தேவர்களும் தவத்தில் ஆழ்ந்திருந்த அகத்தியரிடம் சென்று அவரடி பணிந்து முறையிட்டனர். உடனே முனிவர் அங்கு செல்ல, குருவைக் கண்ட விந்திய மலை நமஸ்காரம் செய்தது. சிரம் தாழ்த்திய மலையை அப்படியே இருக்கும்படிக் கூறிவிட்டு அகத்தியர், தென்னகம் வந்தாராம்.

அகத்தியர் கோயிலில் நாங்கள் சந்தித்த க்ஷேமானந்த பண்டிட்டிடம் தல மகிமையைப் பற்றிக் கேட்டபோது அவர் மேலே காணும் கதையைக் கூறினார்.

நுழைவாயிலைப் பார்த்தால் ஏதோ ஒரு வீட்டுக்குள் செல்வது போலிருக் கிறது. உள்ளே சென்றால் ஒரு முற்றம். அங்கு இரண்டு சந்நிதிகள் இருக்கின்றன. ஓர் ஓரமாகப் பண்டாவின் வீடு இருக்கிறது.

அங்கிருக்கும் கருட பகவானும் நந்திகேச்வரருமே அக் கோயிலின் புராதனத்தன்மைக்குச் சான்று கூறுகின்றனர்.

ஒரு சந்நிதியில் அகஸ்திய ரிஷி மூலவராக இருக்கிறார். மற்றொன்றில் அகஸ்தீச்வரர் எழுந்தருளி யிருக்கிறார். அக்கருவறையில் சலவைக் கல்லாலான லட்சுமிநாராயணமூர்த்தியும் இருக்கிறது. வெளியே சுவரில், ஆஞ்சநேயமூர்த்தி, பீமசேனன் உருவச் சித்திரங்கள் காணப்படுகின்றன.



குப்தகாசி பஸ் நிலையம்

18

அலகநந்தா நம்மை பத்ரிநாத்துக்கு அழைத்துச் செல்வது போல், மந்தாகினி நம்மைக் கேதார்நாத்துக்கு அழைத்துச் செல்கிறது. இந்தப் புறமும் அந்தப் புறமும் மாறி மாறி ஓடும் அவளது சௌந்தர்யத்தில் லயிக்கும் நம் மனம் உயர்வது போன்றே நாமும் உயர்ந்துகொண்டே போகிறோம்! சாதாரணச் சமவெளியில் பயணம் செய்வது போல்தான் தோன்றுகிறது. ஆனால், ஒவ்வொரு முறையும், மந்தாகினிப் பள்ளத்தாக்கைத் திரும்பிப் பார்க்கும்போது தான், நிமிஷத்துக்கு நிமிஷம் நாம் உயரே போய்க் கொண்டிருக்கிறோம் என்பது புரிகிறது.

பத்ரிநாத்துக்குச் செல்லும் வழியில் இருப்பது போன்ற முக்கியமான சங்கமங்களோ, ஊர்களோ கேதார்நாத் பாதையில் காணப்படவில்லை. வழிநெடுகிலும், பாதையை ஒட்டினாற்போல் சில சிற்றூர்கள் இருக்கின்றன. இறங்கி உள்ளே நடந்து சென்றால், பல கிராமங்களைக் காணலாம். அங்கங்கே புராண சம்பந்தமான இடங்களும், புராதனக் கோயில்களும் இருக்கின்றன. அந்தக் காலத்தில் நடந்து சென்றவர்கள் எல்லா இடங்களையும் தரிசிக்கும் பாக்கியம் பெற்றிருந்தார்கள். நாங்கள் இயன்றவரை வழியில் இறங்கி, முக்கியமான இடங்களைப் பார்த்துக்கொண்டு சென்றோம். அகத்திய முனிவர் தவமியற்றிய 'அகஸ்தியமுனி'யிலிருந்து இரண்டு மைல்கள் சென்றதுமே, கேதார சிகரத் தரிசனம் ஆயிற்று. பனி படர்ந்த அந்த வெண்மலைத் தொடர்ச்சியைக் கண்டதுமே, கேதாரேச்வரரையே கண்டது போன்ற ஒரு மகிழ்ச்சி உள்ளத்தில் பொங்கிப் பெருகிற்று.



கேதாரத்திலிருந்து ஓடி வரும் மந்தாகினி நதி

நான்காவது மைலில் சந்திரபுரி என்ற சிற்றூர் வந்தது. பாதை ஓரத்திலேயே சிறு கடை வீதி இருக்கிறது. அங்கு, அருவிகளிலிருந்து ஓடி வரும் நீரை வாய்க்கால்கள் மூலம் கொண்டு வந்து பாசனத்துக்கும், குடிநீருக்கும் பயன்படுத்துகிறார்கள். நாங்கள் பல இடங்களில் கண்டது போல், இங்கும் மாவரைக்கும் இயந்திரத்தை இயக்குவதற்கும் அதன் ஓட்டத்தைப் பயன்படுத்துகிறார்கள்.

வாய்க்கால் ஓரமாகச் சற்று நடந்து சென்று, அங்குள்ள சிவாலயத்தை அடைந்தோம். சிறிய ஆலயம்தான். சுற்றிலும் வீடுகள் இருக்கின்றன. அங்கு இருந்த பையன்களெல்லாம் எங்களைக் கண்டதும் ஓடி வந்தார்கள். தங்கள் வீட்டிலிருந்தபடியே சில பெரியவர்களும் வேடிக்கை பார்த்தார்கள். இந்தக் கோயிலைத் தேடிக் கொண்டு வந்த எங்களைக் கண்டு அவர்களுக்கு ஒரே ஆச்சரியம்! அதைப் பற்றி நாங்கள் விசாரித்தபோது, அவர்களுக்கு ஒரே பெருமையாகவும் இருந்தது.

இமயம் முதல் குமரிவரை எந்தக் குக்கிராமத்திற்குச் சென்று, அங்கு உள்ள கோயில்களைப் பற்றி நாம் விசாரித்தால் போதும், 'நான், நீ' என்று போட்டி போட்டுக் கொண்டு அவற்றின் பெருமைகளையும், மகிமைகளையும் மிக உற்சாகத்துடன் விளக்கத் தொடங்கி விடுவார்கள். முற்போக்குக் கருத்துக்களாலும், முன்னேற்றத் திட்டங்களாலும் எத்தனை மாற்றங்கள் ஏற்பட்டாலும் ஆலயத்தை மையமாகவும், தெய்வ பக்தியை அடிப்படையாகவும் வைத்து வளர்ந்துவிட்ட நம்முடைய சமுதாய வாழ்வை, எந்தச் சக்தியாலும் மாற்றவோ, மாசுபடுத்தவோ முடியாது என்ற பேருண்மையைப் புண்ணிய பாரதப் பயணம் செய்பவர்கள் நிச்சயமாக உணருவார்கள்.

சந்திரபுரியில் உறையும் ஈச்வரனின் திருநாமம், சந்திரசேகர மகாதேவ் என்பதாகும். நம் பகுதிகளில் உள்ளது போன்ற ஆவுடையாருடன் கூடிய சிவலிங்கம் அல்ல. கேதார்நாத்திலுள்ளது போன்று சிறு கற்பாறை வடிவில்

இருக்கிறது அது. கருவறையில் வேறு மூர்த்திகள் இல்லை. ஆரத்தி காட்டுவதற்குப் பண்டாவும் இல்லை!

அந்த ஊரில் சந்திரபாகு என்ற நதி மந்தாகினியுடன் கலக்கிறது. அதனால் அந்த ஊருக்குச் சந்திரபுரி என்ற பெயர் ஏற்பட்டதா, அல்லது சந்திரசேகரர் உறைவதால் அப் பெயர் தோன்றியதா என்பது அங்கு இருப்பவர்களுக்கே சரியாகத் தெரியவில்லை.

இரண்டு மூன்று கிலோ மீட்டர் சென்றதும் மந்தாகினிக்கு அக்கரையில் வெண் கோபுரத்துடன் கூடிய ஒரு கோயில் தெரிந்தது. விசாரித்ததில், அது துர்க்கையம்மன் கோயில் என்றும் இந்திராணி தேவி என்பது திருநாமம் என்றும் அறிந்தோம்.

மூன்று மைல்கள் சென்றதும் பிஹிரி என்ற ஒரு கிராமம் இருப்பதாகவும் அங்கு பீமசேனனின் கோயில் இருப்பதாகவும் சந்திரபுரியில் ஓர் அன்பர் கூறவே அந்த இடம் வந்ததும் காரை நிறுத்தச் சொன்னோம். கோவேறு கழுதையின்மீது சாமான்களை ஏற்றிவந்த ஓர் ஆசாமியைக் கேட்டோம். அவர் '''பீரி'யைக் கேட்கிறீர்களா? இப்படியே இறங்கிப் போங்கள். அருகில்தான் இருக்கிறது'' என்று கையைக் காட்டினார். அவர் கூறியதைக் கேட்ட போது, வெகு அருகில்தான் இருக்கும் என்று எண்ணினோம். ஆனால், போகப் போக, 'இன்னும் கொஞ்ச தூரம் போகனும்' என்று கையைக் காட்டிக்கொண்டே யிருந்தார்கள்! நல்ல வெயில் கொளுத்தத் தொடங்கிவிட்டது. முக்கி முனகிக் கொண்டு சுமார் ஒன்றரை மைல்கள் நடந்திருப்போம். 'முன் வைத்த காலைப் பின் வைக்கக் கூடாது' என்ற ஒரே பிடிவாதத்துடன் சிரமத்தைப் பொருட்படுத்தாமல் நடந்து, ஒரு சிறு பாலத்தைக் கடந்து அக்கரைக்குச் சென்றோம்.


அங்கு ஒரு சிறிய சந்நிதி அறை. அதனுள் பாறையில் செதுக்கப்பட்டுள்ள பீமசேனனின் உருவத்தைக் கண்டதும், நாங்கள் சிரமப்பட்டது வீண் போக வில்லை என்றுதான் தோன்றியது. அது மிகவும் புராதனமான சிலா வடிவமாகத் தோன்றியது. பஞ்ச பாண்டவர்கள் சஞ்சாரம் செய்த பகுதி ஆதலால், அவர்களுடைய பராக்கிரமங்களெல்லாம் செவி வழி வந்த செய்திகளாக அங்கு போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவர்களுடைய வாழ்க்கைச் சரிதங்கள், மலைவாழ் மக்களைத் தியாக சிந்தை உடையவர்களாகவும், அறநெறியோடு மனத்திட்பம் உடைய வீரர்களாகவும் ஆக்கியிருக்கின்றன. சிறு வயதில் பாட்டிமார்கள் சொல்லும் கதைகளில் நாம் கேள்வியுற்ற கதாநாயகர்களெல்லாம் வாழ்ந்து, வீரச் செயல்கள் புரிந்த இடங்களை நேரில் காணும்

சந்திரசேகர மகாதேவர் (சந்திரபுரி)



பீரியில் பீமன் சிலை





ஸ்ரீ விச்வநாதர் ஆலயம் (குப்தகாசி)

போது, புராணக் கதைகள் நம் சிந்தையைப் புனிதப்படுத்தும் விந்தையை நினைத்துப் பூரித்துப் போகிறோம்.

அந்தப் பகுதியில் பீரி என்ற ஓர் அசுரன் இருந்தானும். அவன் மக்களுக்கு மிகவும் தொல்லை கொடுத்து வந்தானும். அப்போது அங்கு வந்த பீமசேன விடம் ஊர் மக்கள் சென்று முறையிட்டனராம். உடனே பீமசேனன், அவனைத் தன் இரு கரங்களாலும் தூக்கிக் கீழே போட்டு, காலால் மிதித்துக் கொன்றுனும். அதனுலேயே அந்த ஊருக்கு 'பீரி' என்ற பெயர் ஏற்பட்டதாம்.

அங்கு இருந்த ஓர் இளைஞன் உற்சாகத்துடன் கூறியதைக் கேட்ட போது, களைப்பெல்லாம் பறந்து, எங்கள் தோள்களும் விம்மிப் புடைத்து நின்றன.

மார்பில் கவசம் அணிந்து, அதன் மீது மாலைகள் புரள, இடக்காலை மடித்து, வலக்காலைத் தொங்கப் போட்டுக்கொண்டு வெகு கம்பீரமாக அமர்ந்திருக்கிறுன் பீமன். அவனது வலக் கரத்தில் கதையும், இடக் கையில் எருமைக் கடா தலையும் வைத்திருக்கிறுன். அருகில் விநாயகரைப் போன்ற உருவத்துடன் ஒரு சிறு கல்லும் உருவமே சரியாகப் புரியாத மற்ருெரு கல்லும் இருக்கின்றன.

அடுத்து, 'குண்டுசட்டி' என்ற கிராமம். முன்பு அதுவரையில்தான் பஸ்கள் வந்து கொண்டிருந்தனவாம். அங்கிருந்து மட்டக் குதிரைகளில் ஏறி, முப்பது மைலிலுள்ள கேதார்நாத்துக்குச் செல்வார்களாம். அதைக் கேட்டதும் 'குண்டுச்சட்டியில் குதிரை ஓட்டுகிறுன்' என்ற பழமொழி எங்களுக்கு நினைவுக்கு வந்தது. வாய்விட்டுச் சிரித்தோம்.

அதன் அருகிலுள்ள 'சோனியூர்' என்ற இடத்தில்தான் பாணுசுரன் சிவபெருமானைக் குறித்துக் கடும் தவம் இருந்து, பெரும் வலிமை பெற்றுன்.

சற்றுத் தொலைவு சென்றதும் எங்களுக்கு சௌகம்பா மலைச் சிகரம் நன்ருகத் தரிசனம் ஆயிற்று. 'வெள்ளிப் பனிமலையின் மீதுலாவுவோம்' என்ற பாரதியின் வாக்குத்தான் நினைவுக்கு வந்தது.

அங்கிருந்து மூன்ருவது கிலோ மீட்டரில் உள்ள குப்தகாசிக்குக் காலை பதினென்றரை மணிக்கு வந்து சேர்ந்தோம். ருத்ரப்பிரயாகையை விட்டால் அடுத்த பெரிய ஊர் இதுதான். கேதார்நாத் அங்கிருந்து சுமார் இருபத்து நான்கு மைல். ருத்ரப்பிரயாகைக்கும், கேதார்நாத்துக்கும் சம தொலைவில் இருக்கும் குப்தகாசி, சுமார் நாலாயிரத்து ஐந்நூறு அடி. உயரத்திலிருக்கிறது.

பஸ் நிலையத்தில் இறங்கி, ஆலயத்தைக் காணச் சென்ருேம். அங்கிருந்து சுமார் அரை பர்லாங் ஏறிச் சென்ருல் ஊரை அடையலாம். மலைச் சரிவிலேயே வீடுகள் கட்டியிருக்கிருர்கள். எல்லாம் கருங்கல்லாலும், மரத்தாலும், ஓடுகளாலும் ஆன பழங்கால வீடுகள்தாம்.

இப்போது காசி விச்வேச்வரர் ஆலயத்தினுள் நுழைந்து கொண்டிருக்கிருேம். நுழைந்ததும் சந்நிதிக்கு எதிரே ஓர் அழகிய சிறு குளம் இருக்கிறது. காசியை நினைவுபடுத்துவது போன்று இதை 'மணிகர்ணிகா' என்று அழைக்கிருர்கள். இங்கு இரு தாரைகள் கொட்டிக் கொண்டிருக்கின்றன. நந்தி முகமுடைய குழாயிலிருந்து கங்கையும், யானை முகமுடைய குழாயிலிருந்து யமுனையும் வருவதாக நம்புகிருர்கள். நல்ல வெயிலில் பயணம் செய்திருந்ததால் களைப்புத் தீர அந்தச் சங்கமத்தில் நன்கு அமிழ்ந்து ஸ்நானம் செய்தோம். கங்கையின் கீழும் யமுனையின் கீழும் நின்று, தனித் தனியாகவும் நீராடினேம்.


கோயிலுக்கு ஒரே பிராகாரம்தான். சுற்றிலும் திண்ணை இருக்கிறது. புனித நீரில் நீராடிவிட்டு, சுவாமி தரிசனத்திற்குச் சென்ருேம்.

அர்த்த மண்டபத்தில் ஒரு விநாயகர் சிலையிருக்கிறது. அழகான வேலைப் பாடுகள் நிறைந்த அமைப்பு. அவருக்கு வலப்புறம் வராகியும் இந்திராணியும் இருக்கிருர்கள். இரண்டுமே கண்கவர் சிற்பங்கள்தான். அங்கு பித்தளையினல் ஆன ஒரு நந்தியும் இருக்கிறது.

கருவறையில் . . .



அர்த்தமண்டபத்திலுள்ள விநாயகமூர்த்தி





குப்தகாசியிலிருந்து உக்கிமட் தரிசனம்

கருவறையில் நாம் தாராளமாக நுழையலாம். காசி விச்வேச்வரர் சுயம்பு மூர்த்தி. கேதார் லிங்கம் போன்றே அமைப்பு. அதற்கு முகக் கவசம் போட்டு இருக்கிறார்கள். ஆவுடையாரில் கங்கை நீர் சுரந்து கொண்டிருக்கிறது.

சுவாமிக்கு மேலே உள்ள சுவரில், அன்னபூர்ணா தேவி காட்சி தருகிறாள். இருபுறமும் ஸ்படிகம் போன்ற சலவைக் கல்லால் ஆன விநாயகமூர்த்தி, கார்த்திகேயன் இருவரின் சிறு சிலா வடிவங்கள் காணப்படுகின்றன. பார்வதியின் தோழிப் பெண் ஒருத்தியும் அங்கு அமர்ந்திருக்கிறாள்.

அப்போதுதான் ஸ்நானம் செய்து மடியாக வந்த பண்டா, தியான ச்லோகம் சொல்லி, மந்திரங்களுடன் அபிஷேக, ஆராதனைகள் செய்தார்.

பக்கத்திலேயே தனியாக ஒரு சந்நிதி இருக்கிறது. அதில், விருஷபாருட ரான அர்த்தநாரீச்வரர் எழுந்தருளி யிருக்கிறார். பக்கத்தில் பார்வதிதேவி காட்சி தருகிறாள்.

பரம்பொருள் தமது பரம ரகசியத்தைக் காட்டி அருளிய திருத்தலமாம் அது. குப்த என்றால் ரகசியம். காசி என்றால் பேரொளி.

பாணாசுரனின் மகள் உஷாதேவி, பார்வதிதேவியைக் குறித்துத் தவம் இருந்து உபதேசம் பெற்றது இங்குதான். பாணினி, பதஞ்சலி, காத்தியாயனர் முதலியோர் தவம் இருந்து பேறு பெற்ற இடம் இது. பக்தர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, திருவடி தூக்கி, உடுக்கை அடித்து தத்துவ தரிசனம் தந்தான் பரமன். 'ஓம்' என்ற நாதவொலி பிறந்தது. தமருகத்திலிருந்து

தோன்றிய 'ரும்' என்ற மூல ஒலியே பாணினி சூத்திரத்திற்கு அடிப்படையாக அமைந்தது. பிரணவ மந்திரமான பரம ரகசியம் இத்தனை வெளிப்படையாகத் தெரிந்து விட்டதே என்று பரமசிவன் கோபம் அடைந்து, உடனே மறைந்து விட்டார். தனிமையில் விடப்பட்ட பார்வதிதேவி, தவம் இருந்தாள். தன்னை விட்டு அகலக்கூடாது என்று நாதனிடம் நெக்குருக வேண்டினாள். பரமன் சிரித்தான்: 'உன்னை விட்டு நான் போவதா? அப்படியென்றால் உன்னையே நீ புரிந்து கொள்ளவில்லை என்றுதான் பொருள். சரியாகப் பார். உன்னில் நான் பாதியாக இருக்கிறேன்' என்று தத்துவோபதேசம் செய்தார். அதனாலேயே இங்கு பார்வதிதேவி அர்த்தநாரீச்வரர் வடிவில் இருக்கிறாள்.

வசிஷ்ட மகரிஷி இங்குதான் பிரும்ம ரிஷி ஆனாராம். பரமேச்வரன் தேவர்களுக்கும் மகரிஷிகளுக்கும் தம்முடைய ரகசிய ரூபமான சந்திரசேகர வடிவத்தைக் காட்டி அருளியதாலும் இது 'குப்தகாசி' என்று அழைக்கப்பட்டு வருகிறதாம்.


குப்தகாசியில் கேதார்நாத் பண்டாக்கள் வசிக்கிறார்கள். இது மந்தாகினி நதிக்கு வலப்புறம் இருக்கிறது. மந்தாகினிக்கு இடப்புறம், நேர் எதிரே உக்கிமடம் என்ற ஊர் தெரிகிறது. தீபாவளியை அடுத்து, ஆறு மாதங்கள் கேதார்நாத் ஆலயம் மூடப்பட்ட பிறகு, கேதாரநாதருக்கு உக்கி மடத்தில்தான் பூஜை செய்யப்படுகிறது.


குப்தகாசியிலிருந்து ஸோன்பிரயாகைக்குச் செல்லும் வரை ஒரே மலையேற்றம்தான். பாதையும் குறுகலாக இருக்கிறது. பத்ரிநாத் செல்லும் போது, பீப்பல்கோட்டிலும் ஜோஷிமட்டிலும் 'கேட் ஸிஸ்டம்' இருப்பது போல் இங்கும் இருக்கிறது. அதற்காக எங்களைக் காக்க வைத்துவிட்டுச் சரியாக ஒரு மணிக்கு டாக்ஸியைப் போக விட்டார்கள்.

வழியில் நிறைய 'சட்டி'கள் வருகின்றன. அக் கிராமங்களிலெல்லாம் புராண சம்பந்தப்பட்ட பல கோயில்கள் இருக்கின்றனவென்றும், அங்குள்ள மண்டபங்களில் பல சிற்ப அற்புதங்களைக் காணலாம் என்றும் கூறினார்கள். அவற்றைப் பற்றியெல்லாம் கேள்விப்பட்டோமே தவிர இறங்கிச் சென்று பார்க்க முடியவில்லையே என்ற வருத்தம் இன்னும் என் மனத்தைவிட்டு நீங்கவில்லை. ஒரு பயணத் திட்டம் வகுத்துக் கொண்டு புறப்பட்டு விட்டால், நம் இஷ்டத்திற்கு அதை மாற்றிக் கொள்ள முடியாமல் போய் விடுகிறது. சாவகாசமாக நடந்து சென்று ஒவ்வோர் இடமாகப் பார்த்து ஆனந்திக்கும் பொன்னான வாய்ப்பு இப் பிறவியில் கிட்ட வேண்டும் என்று எந்நேரமும் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன்.

குப்தகாசியை விட்டால், 'நளாசட்டி' என்ற நளன் சட்டி வருகிறது. நள மகராஜன் வழிபட்ட லலிதாம்பிகை அங்கு எழுந்தருளி யிருக்கிறாள். அருகில் உள்ள மலையின் மீது நளமகாதேவர் கோயில் கொண்டிருக்கிறார்.

நாராயண கோட்டி





ஸோன்பிரயாகை பஸ் நிலையம்

முன்பெல்லாம் பாத யாத்திரையாக வருபவர்கள், கேதாரத்திலிருந்து திரும்பும்போது நளாசட்டி வரையில் வந்து, உக்கிமட், கோபேச்வர், சமோலி, பிப்பல்கோட்டி வழியாகப் பத்ரிநாத் செல்வார்களாம். தற்போது அங்கு மோட்டார் பாதை போட்டிருக்கிறார்கள். ஆனால், அப்பாதை ஆபத்தானதாக இருப்பதால், டாக்சிக்காரர்கள் அவ்வழியாகப் போவதற்கு விரும்புவதில்லை.

நளாசட்டிக்கு ஒரு மைலில் மாதாதேவி கோயில் இருக்கிறது. அதை அடுத்து, நாராயணகோட்டி. பாதையிலிருந்து பார்த்த போது சோலைகளுக்கு நடுவே, நான்கைந்து கோபுரங்கள் தெரிந்தன. சிவன், லட்சுமி, நாராயணன், சத்தியநாராயணன், பிருஹதீச்வரன் முதலியவர்கள் கோயில் கொண்டிருக்கிறார்கள்.

அங்கிருந்து மூன்று மைல்கள் சென்றால் மெய்கண்டா அல்லது மைகண்டா சட்டி வருகிறது. அங்கு மகிஷாசுரமர்த்தனிக்கு ஒரு கோயில் இருக்கிறது. மகிஷாசுரன் ஆண்டுவந்த 'மஹிஷ் கண்ட' பர்வதமும் இருக்கிறது.

அடுத்து ஃபாட்டா என்ற கிராமத்தை அடைந்தோம். இங்கெல்லாம் பாதை சரியாக அமைக்கப்படவில்லை. கரடுமுரடாக இருப்பதுடன், மிகக் குறுகலாகவும் இருக்கிறது. நீர் அருவிகள் பாதையின் குறுக்கே ஓடிக் கொண்டிருக்கின்றன. நல்ல அடர்த்தியான காடு. விபத்து ஏற்பட்டாலோ,

கார் நின்று விட்டாலோ அதோகதிதான்! நடுக்கத்துடனேயேதான் அந்தப் பகுதியைக் கடந்தோம். பதினேழு கிலோ மீட்டர் சென்றதும், ராம்ப்பூர் என்ற கிராமம் வருகிறது. அங்கிருந்து ஸோன்பிரயாகை நான்கு கிலோமீட்டர்.


தற்போது நாம், ஐயாயிரத்துஐந்நூறு அடி உயரத்திற்கு வந்து விட்டோம். ராம்ப்பூரிலிருந்து சிறிது தொலைவு சென்றால், நமக்கு இடப்புறம் திரியுகி நாராயணன் கோயிலுக்குப் பாதை பிரிகிறது. அது மூன்று மைல் ஏற்றம். இமாலயப் பயணத்தில் காண வேண்டிய முக்கியமான புண்ணியத் தலங்களில் இது ஒன்று. கேதார்நாத்துக்குச் செல்லும்போது, திரியுகி நாராயணனை எப்படியாவது தரிசித்து விட வேண்டும் என்று திட்டமிட்டிருந் தேன். ஆனால், இங்கு வந்தபோதுதான், அந்த இடத்திற்குக் காரில் போக முடியாது என்பதும், குதிரையின் மீதோ, அல்லது நடந்தோதான் சென்று வரவேண்டும் என்பதும் தெரிந்தது. இந்தப் புறமாக ஏறி, நாராயணனைத் தரிசித்துவிட்டு, மீண்டும் ஸோன்பிரயாகைக்கு அருகில் இறங்கலாம் என்றும் கூறினார்கள். ஆனால், கோமுக் சென்றுவிட்டுத் திரும்பியதிலிருந்து ரணமாகி விட்டிருந்த என் கால்கள் கெஞ்சியதால் நடப்பது முடியாத காரியம். குதிரையில் சென்றால் அங்கிருந்து திரும்புவதற்குள் இருட்டிவிடும். மறுநாள்தான் கேதாருக்குப் புறப்பட முடியும். எனவே, திரியுகிநாராயணன் கோயிலுக்குச் செல்லும் எண்ணத்தை நான் கைவிட வேண்டியதாயிற்று.

மலை உச்சியில் சாகம்பரி என்ற மானஸதேவிக்கு ஒரு கோயில் இருக்கிறதாம். அங்கிருந்து சமதரையில் சற்றுத் தொலைவு சென்றால், திரியுகிநாராயணன் கோயில் இருக்கிறதாம்.


அந்த இடத்தில்தான் ஸ்ரீநாராயணப் பெருமான் தமது சகோதரி பார்வதி தேவியை சிவபெருமானுக்குத் தாரை வார்த்துத் தந்தாராம். ஆலயத்தில் அந்த அக்னி குண்டத்தை இன்றும் காணலாம் என்கிறார்கள். குளிரிலும், மழை யிலும் அணையாமல் அதைப் பாதுகாப்பதற்கு என்றே சில குடும்பங்கள் அங்கு இருக்கின்றனவாம். அந்தச் சாம்பலைப் பக்தர்கள் பிரசாதமாக எடுத்துச் செல்கிறார்கள். மூன்று யுகங்களாக ஸ்ரீ நாராயணன் அங்கு தங்கியிருப்ப தால், அவருக்குத் திரியுகி நாராயணன் என்ற திருநாமம் ஏற்பட்டுள்ளது. அவருக்கு இருபுறமும் இலக்குமியும் பூதேவியும் காட்சி தருகிறார்கள்.

ஆறாயிரம் அடி உயரத்திலிருக்கும் திரியுகி நாராயணனைத் தரிசித்துவிட்டுக் கேதார்நாத் செல்வதற்கு மொத்தம் பதினான்கு மைல்கள் ஆகிறது. மூன்று

ஸோன்பிரயாகையிலிருந்து
கேதார் செல்லும் வழி



சங்கமம்





கேதார் செல்லும் மலைக் காட்டுப் பாதை

மைல்கள் ஏறி, மூன்று மைல்கள் இறங்க வேண்டும். உள்ளத்தில் உறுதியும், உடலில் சக்தியும் இருப்பவர்கள் அவசியம் சென்று தரிசிக்க வேண்டிய திருத்தலம் அது.

நாங்கள் நேர்ப் பாதையில் ஸோன்பிரயாகை வந்து சேரும்போது இரண்டரை மணிக்கு மேல் ஆகிவிட்டது. அதற்கு 'ஸோம்த்வார்' என்ற பெயரும் உண்டு. அங்கு ஸோம் என்றும், சுவர்ணகங்கா என்றும், வாசுகி என்றும் அழைக்கப்படும் நதி, மந்தாகினியுடன் சங்கமமாகிறது. ஸோம்பிரயாகை, ஸோன்பிரயாகை ஆகிவிட்டது.

கேதார்நாத் செல்லும் பாதையில், ஸோன்பிரயாகை வரையில்தான் பஸ்களும் இதர வாகனங்களும் செல்ல முடியும். இங்கிருந்து பதினேழு மைல்கள் நடையிலோ, 'போனி' என்ற மட்டக் குதிரை மீதோ, கண்டியிலோ, தண்டியிலோதான் போக வேண்டும்.

பாதை மிகவும் செங்குத்தாக இருப்பதுடன் பல பகுதிகளில் உருளைக் கற்கள் நிறைந்திருக்கும் என்று கண்ணன் கூறினார். அவர் முன்பு ஒரு முறை கேதார்நாத்துக்குச் சென்று வந்திருக்கிறார். அந்த அனுபவத்தினால்தான் என்னால் நிச்சயம் நடக்க முடியாது என்று அவர் கூறினார். எனது 'யமுனோத்ரி' 'கோமுக்' அனுபவத்திற்குப் பிறகு, என்னை எங்கும் நடத்தி அழைத்துச் செல்ல அவருக்குத் தைரியம் இல்லை என்று எனக்குப் புரிந்தது. அவரைச் சொல்வானேன்? எனக்கும்தான் நம்பிக்கையில்லை. குதிரை சவாரிதான் செய்து


பார்ப்போமே என்று தோன்றியது. ஆனல் உள்ளூர நடுக்கம்தான். வேறு வழியில்லையே! கண்டியிலோ தண்டியிலோ செல்வதற்கு எனக்கு இஷ்டமில்லை. எப்படியாவது கேதார்நாதரைத் தரிசனம் செய்தாக வேண்டுமே! இத்தனை தூரம் வந்துவிட்ட பிறகு, யோசித்துக் கொண்டிருந்தால் எப்படி?

ஆளுக்கொரு குதிரையைப் பேசிக் கொண்டோம். குதிரைகள் ஏற்பாடு செய்ய ஏஜண்ட் இருக்கிறர். அவர் மூலமாகத்தான் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். போய் வர ஒரு குதிரைக்கு அறுபத்தைந்து ரூபாய் என்று பேசி முடிவு செய்தோம்.

அப்போது, தமிழும் தெலுங்கும் பேசிய தென்னட்டினர் சிலர் அங்கு நடமாடிக் கொண்டிருப்பதைக் கண்டேன். அவர்களெல்லாம் ஒரு 'டூரிஸ்ட்' பஸ் ஏற்பாடு செய்துகொண்டு வந்திருந்தார்கள். கேதார் தரிசனம் முடித்துக் கொண்டு திரும்பிக் கொண்டிருந்த அவர்களிடம் ''குதிரை சவாரி எப்படி இருந்தது?'' என்று கேட்டேன். ''சௌகரியமாக, ஜாக்கிரதையாக அழைச்சுக் கிட்டுப் போய் வராங்க. அதெல்லாம் பயமில்லே. நீங்க தைரியமா போய் வாங்க'' என்று ஒருவர் கூறவே, எனக்கு உண்மையிலேயே தைரியம் வந்து விட்டது.

கடைவீதியில் சென்று ஆளுக்கொரு குதிரையில் ஏறி அமர்ந்தோம். சங்கமத்தினருகிலுள்ள பாலத்தைக் கடந்து, கேதார் பாதையில் ஏறிச் சென்றேம். மந்தாகினி நொங்கும் நுரையுமாக, கொப்பளித்துக் கொண்டு பேரிரைச்சலுடன் பாய்வதைப் பார்த்தவாறே அடர்த்தியான காடுகளுக்குள் நுழைந்து நாங்கள் பயணம் செய்து கொண்டிருந்தோம். முக்கால் மைலில், தலையில்லாமல் ஒரு கணபதி சிலை இருந்தது. குதிரையிலிருந்தபடியே அதை வணங்கினேம்.

கௌரிகுண்ட் கிராமம்







பார்வதி கோயில் சுடுநீர் குண்டம் (கௌரிகுண்ட்)

ஒரு சமயம் பார்வதி குளிக்கும்போது அங்கு கணபதியைக் காவல் போட்டிருந்தாள். அப்போது மாறுவேடத்தில் அங்கு நுழையப் பார்த்த சிவபெருமானைக் கணபதி தடுக்கவே, கோபம் கொண்ட சிவன், கணபதியின் தலையைக் கொய்து விட்டார். பின்னர், பார்வதி செய்தி அறிந்து, வருத்த முற்று, கணவனிடம் வேண்ட, அவர் அவ்வழியே சென்ற யானையின் தலையைக் கொய்து கணபதிக்கு வைத்துவிட்டார். அதன் பிறகே விநாயகர், கஜானனன் என்று அழைக்கப்பட்டார்.

ஏற்கெனவே நாம் கேள்விப்பட்டிருக்கும் இந்தக் கதையை அந்தச் சிலை நினைவுபடுத்துகிறது.

மலைப்பாதையில் குதிரை செங்குத்தாக ஏறும்போது உயிரைக் கையில் பிடித்துக்கொண்டுதான் பயணம் செய்தேன். மண் தரையில் செல்லும்போது அத்தனை பயமாக இல்லை. ஆனால் வழுக்குகின்ற பாறைகளில் குதிரை ஏறிச் செல்லும்போது, 'அதன் கால் வழுக்கிவிட்டால் என்ன கதி?' என்று ஒரு கணம் திகிலடையாமல் இருக்க முடியாது. குதிரைக்காரர் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு கூடவே நடந்து வருகிறார். இருந்தாலும் நமக்கு ஒரே நடுக்கமாகத் தான் இருக்கிறது. சில இடங்களில் பாதை மிகக் குறுகலாக இருக்கிறது. குதிரையோ, பாதுகாப்பாக மலையை யொட்டியே நடக்கிறது. அங்கு துருத்திக் கொண்டிருக்கும் பாறைகள் நம் மண்டையைக் குறி பார்க்கின்றன. ஓரிரு முறை, 'ஐயோ' என்று அலறியே விட்டேன். அப்போது, குதிரைக்காரர் மெல்லச் சிரித்துவிட்டு, ''பயப்படாதீர்கள். உங்களுக்கு ஒரு ஆபத்தும் இல்லாமல் கொண்டு போய்ச் சேர்க்கிறேன்'' என்று அபயம் அளித்தார்.

இருக்கிற ஆபத்துக்கள் போதாதென்று எதிரில் ஆட்கள் வேறு வருகிறார்கள்.அல்லது மற்றொரு குதிரை எதிரில் வந்துவிடும்.அப்போதெல்லாம் என் குதிரை உடலை வளைத்து ஒதுங்கி வழிவிட்ட பாங்கைக் கண்டு நான் அதிசயித்துப் போனேன். அது மட்டுமல்ல; தன் நான்கு கால்களையும் கற்களின் மீது மாறி மாறி மிக ஜாக்கிரதையாகவும் சாதுர்யமாகவும் பதிய வைத்து


மிக லாகவமாக அது ஏறும் அழகை இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம். முதல் அரை மணி நேரம் திகிலுடனேயே சென்ற நான், போகப் போகப் பயணத்தை மிகவும் ரசிக்கத் தொடங்கி விட்டேன். என் குதிரைதான் முதலில் சென்றது. நான் கையை உயர்த்திப் பாடிக் கொண்டு வந்ததையும் எதிரில் வருபவர்களிடம் 'ஜெய் கேதார்நாத் மகராஜ்' என்று கூக்குரல் எழுப்பியதையும் கண்ட என் நண்பர்கள் என்னை 'லீடர் ஸார்' என்று அழைக்கத் தொடங்கி விட்டனர். குதிரை சவாரி எனக்கு நன்றாகப் பழகிவிட்டது.

நாலரை மணி சுமாருக்கு மூன்று மைலில் இருக்கும் 'கௌரிகுண்ட்' என்ற கிராமத்திற்கு வந்து சேர்ந்தோம். இரவு அங்கு தங்கிவிட்டு, மறுநாட் காலை கேதார் பயணத்தைத் தொடரலாம் என்று கூறிய குதிரைக்காரர்கள் எங்களை ஒரு கடைவாசலில் இறக்கிவிட்டுச் சென்று விட்டார்கள். இரவில் பயணம் செய்வது ஆபத்து. கேதார் செல்வதற்குள் நன்றாக இருட்டிவிடும். ஆதலால் இந்த ஏற்பாடு.

கடைக்காரரே மாடியில் எங்களுக்கு ஓர் அறை ஒழித்து விட்டார். படுத்து உறங்க ரஜாய்களும் கொடுத்தார். இங்கு இருப்பவர்கள் தங்கள் இல்லங்களில் இம்மாதிரி அறைகளை வாடகைக்கு விட்டுச் சம்பாதிக்கிறார்கள்.

அறையில் சாமான்களைப் போட்டுவிட்டு, வெளியே புறப்பட்டோம். எங்கள் அறையிலிருந்து கீழிறங்கி வந்ததும், எதிர்ப்புறம் சுடுநீர் குண்டம் ஒன்று இருந்தது. பத்ரிநாத்திலும், யமுனோத்ரியிலும் இருக்கும் குண்டம் போலவே, இதிலும் நீர் நன்றாகக் கொதித்தது. அங்கிருந்து இருபது அடி தொலைவில் மந்தாகினி 'ஜில்'லென்று ஓடிக் கொண்டிருந்தது.


பார்வதி நீராடிய கௌரிகுண்டம்



உடல் களைப்புத் தீரவும், குளிருக்கு இதமாகவும் அந்த வெந்நீரில் அமிழ்ந்து ஸ்நானம் செய்தோம். பூனாவிலிருந்து வந்திருந்த ஒரு கோஷ்டியைச் சுடுநீர்க் குண்டத்தருகில் சந்தித்தோம். ஆண்கள், பெண்டிர் அத்தனை பேரும் வயது முதிர்ந்தவர்கள். இத்தனை சிரமமான ஒரு பயணத்தை மேற்கொண்டது அவர்களது பக்தி உணர்வைக் காட்டியது. தமிழ்நாட்டைச் சேர்ந்த ஓர் அன்பர்தான், டூரிஸ்ட் பஸ்ஸில் அவர்களை அழைத்து வந்திருந்தார்.

சுடுநீர் குண்டத்திலிருந்து சற்றுத் தொலைவில் கௌரிகுண்டம் என்ற குளம் இருக்கிறது. அதன் நீர் மஞ்சளாக இருக்கிறது. சிவபெருமானைக் குறித்துத் தவமிருந்தபோது பார்வதி அந்தக் குளத்தில்தான் மஞ்சள் தேய்த்துக் குளிப்பது வழக்கம் என்று அதன் கரையிலிருந்த பண்டா கூறினார். அங்கு தம்பதிகள் வந்து சங்கல்பம் செய்து கொள்கிறார்கள்.

கௌரிகுண்டத்திற்கு எதிரே பார்வதி கோயில் இருக்கிறது. கருவறையில் கௌரிசங்கர், லட்சுமிநாராயணமூர்த்தி, அன்னபூர்ணாதேவி, கருட பகவான், கணேசர் முதலிய மூர்த்திகள் இருக்கின்றன. ஒரு பெரிய சிவலிங்கமும் காணப்படுகிறது.



கேதார சிகர தரிசனம்

கௌரிகுண்ட் என்ற இடம் தேவாரத் திருமுறையில் 'அநேக தங்காவதம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. திருஞானசம்பந்தப் பெருமானின் பாசுரம் இதற்கு உண்டு - காளத்தியில் இருந்தபடியே அப் புனிதத் தலத்தைக் கற்பனையில் கண்டு வர்ணித்திருக்கிறார் ஞானசம்பந்தர். அங்கு சிவபெருமான் சுயம்பு மூர்த்தியாக எழுந்தருளி யிருக்கிறார். அவரது சிரசைப் பாம்பு ஒன்று அலங்கரிக்கிறது. எதிரே ஒரு திரிசூலம் இருக்கிறது. அதைக் கொண்டுதான் பரமசிவன் கணபதியின் தலையைக் கொய்தாராம். இந்த இடம் பார்வதி கோயிலுக்கு அருகில் இருக்கிறது.

இந்த இடத்தை நான் பார்க்கவில்லை. ஏனெனில் அங்கு சென்றபோது அப்படியொரு சந்நிதி இருப்பதே எனக்குத் தெரியாது. அங்கு யாரும் எனக்குச் சொல்லவுமில்லை. இதைப் பற்றி நான் சென்னைக்குத் திரும்பிய பிறகே படித்து அறிந்தேன். மற்றொரு முறை கேதாரம் சென்று வரும் வாய்ப்புக் கிட்டினால், இதை மறக்காமல் தரிசனம் செய்ய வேண்டும் என்ற ஆவலுடன் இருக்கிறேன்.

இனி, நம் கேதாரப் பயணத்தைத் தொடருவோம்.

ஜூன் மாதம் 29-ம் தேதி. சனிக்கிழமை. விடியற்காலை ஐந்து மணிக்கெல்லாம் எழுந்து, 'போனி' சவாரிக்குத் தயாராகி விட்டோம். கௌரிகுண்டத்திலிருந்து கேதார்நாத் ஏழு மைல். இன்னும் சுமார் ஐயாயிரம் அடி ஏறியாக வேண்டும். காலை பதினொரு மணிக்கெல்லாம் சென்று விடலாம் என்று குதிரைக்காரர் கூறினார். ஏறி அமர்ந்தோம்.

19

''இந்த 'போனி' சவாரியை என்னால் மறக்கவே முடியாது. காடுகள் அடர்ந்த மலை ஒருபுறமும், அதலபாதாளத்தில் ஓடும் நதி மறுபுறமுமாகக் குறுகிய பாதையில் சென்றபோது, நான் அதுவரை அறிந்திருந்த உலகத்திற்குச் சிறிதும் சம்பந்தமில்லாத பிரதேசத்தில் சஞ்சரித்துக் கொண்டிருப்பதை உணர்ந்தேன். அத்தனை அப்பட்டமான, கலப்படமே இல்லாத இயற்கைச் சூழலில் நான் இருந்ததே இல்லை. அத்தனை ஆரோக்கியமான தூய காற்றை நான் சுவாசித்ததே இல்லை. இயற்கையின் சுய வடிவத்தை அத்தனை அருகில் கண்டதும் இல்லை. அவள் ஒரு சமயம் பத்ரகாளியாகப் பயமுறுத்துகிறாள்; ஒரு சமயம் காருண்யவல்லியாக உள்ளத்தைக் குளிர்விக்கிறாள்.

அடர்ந்த காடுகளிலிருந்து வண்டுகள் ரீங்காரம் செய்தன. அங்கிருந்த பச்சிலைகளின் நெடி மூக்கைத் துளைத்தது. பதுங்கி யிருக்கும் வனவிலங்குகள் எங்கே யிருந்தாவது திடீரென்று நம் மீது பாய்ந்து விடுமோ என்ற அச்சத்தைத் தூண்டிற்று.

எட்டிப் பார்த்தால் தலையைச் சுற்றும் பாதாளம். விழுந்தால் எலும்புகள் கிடைப்பதுகூட சந்தேகமே. மந்தாகினி நதி, சிறு ஓடையாகச் செல்லும் அழகிய தோற்றம். எதிர்ப்புறத்தில், மலைகளிலிருந்து ராட்சஸ நீர்வீழ்ச்சிகள் கொட்டிக் கொண்டிருக்கும் எழிற் காட்சி.

இந்த இன்பச் சூழலில், நான்கு குதிரைகள், அவற்றை நடத்திச் சென்ற நான்கு ஆட்கள், அவற்றில் சவாரி செய்த நாங்கள் நான்கு பேர் மட்டுமே பயணம் செய்து கொண்டிருந்தோம். இயற்கை அன்னை, தன் மௌன சாம்ராஜ்யத்தில் எங்களை நுழையவிட்டதோடு அல்லாமல், அந்த இடத்தையே எங்களுக்கு ஏகபோகமாகப் பட்டா செய்து கொடுத்து விட்டது போன்றே தோன்றியது. இமாலயச் சாரலில் எங்கள் ஆட்சி கொடி கட்டிப் பறந்தது. எங்கள் கேதார யாத்திரை, ஏதோ ஒரு கோட்டையைப் பிடித்துவிட்ட எக்காளத்துடன், வெற்றி விழா கொண்டாட்டமாக வீறுநடை போட்டது.

எங்கள் குதூகலத்தைக் கண்டதும், குதிரைக்காரர்களுக்கும் குஷி பிறந்து விட்டது. அவர்கள் ஏதோ ஒரு நாட்டுப் பாடலைக் கோரஸாகப் பாடிக் கொண்டு வந்தார்கள். நான் அதை ரிக்கார்டு செய்து அவர்களுக்கு மீண்டும் போட்டுக் காட்டியபோது, தங்கள் குரலைக் கேட்டு, அதிசயப்பட்டு வாய் விட்டுச் சிரித்தனர் அக் குதிரைக்காரர்கள்.

மூன்றாவது மைலில் சிடுவாஸா என்ற இடத்தில் ஒரு பைரவர் சிலையைக் காட்டினார்கள். சற்றுத் தொலைவு கடந்ததும், பீம்பலி என்ற இடத்தில் பீமன் சிலையைக் காட்டினார்கள்.

பாண்டவர்கள் நடந்த பாதையில் அல்லவா சென்று கொண்டிருக்கிறோம். ஆதிசங்கர பகவான் சென்ற வழியில் அல்லவா போய்க் கொண்டிருக்கிறோம். அதை நினைக்கும்போதே புல்லரித்தது.

ராம்ப்பாடா என்ற ஒரு சட்டி வந்தது. கூடவே மழையும் வந்து விட்டது. அங்கெல்லாம் திடீர் திடீரென்று மழை வருகிறது. வெய்யில் காய்ந்து கொண்டு இருக்கும்போதே, எங்கிருந்தோ குளிர் காற்று வீசுகிறது. கரு மேகங்கள் சூழ்கின்றன. அவை பெருந் தூறல்களாகச் சிதறிவிட்டுக் கரைந்து



நாங்கள் சென்ற பாதை



தரிசனம் முடிந்து திரும்புகிறார்கள்

விடுகின்றன. நாங்கள் ரெயின் கோட்டுக்களை எடுத்து மேலே போட்டுக் கொள்வோம். குதிரைக்காரர்களும் தயாராக வைத்திருக்கும் குடைகளைப் பிரித்துக் கொள்வார்கள்.

ராம்ப்பாடாவில் ஓரிரு டீக்கடைகள் இருந்தன. நாங்கள் டீ குடித்துவிட்டு சற்று இளைப்பாறினோம். குதிரைகளுக்கும் அங்கு தீனி வாங்கிப் போட்டார்கள். அவை பொரி உருண்டைகள் போன்றும் வெல்லக்கட்டிகள் போன்றும் இருந்தன. பாவம், நுரை கக்கிக் கொண்டு, இரைத்துக் கொண்டிருந்த அப்பிராணிகள், அந்தப் பலகாரத்தைத் தின்று, தண்ணீர் குடித்துச் சற்று ஓய்வு எடுத்துக் கொண்டன. இந்தக் குதிரைகளுக்கு இதுதான் கடைசிப் பிறவியாக இருக்கும்! சந்தேகமில்லை.

கேதார்நாத்திற்கு இன்னும் மூன்று மைல்களே இருந்தன. நாங்கள் கிட்டத்தட்ட பத்தாயிரம் அடிக்கு மேல் வந்து விட்டோம். கௌரிகுண்டத்திலிருந்து ஒரு மைலுக்கு ஆயிரம் அடி வீதமாக மேல் ஏறி வந்திருக்கிறோம். செங்குத்தான ஏற்றம். குதிரையில் வந்ததால் அந்தச் சிரமம் தெரியவில்லை. நடந்து செல்பவர்களுக்கு, அது பிரம்மப் பிரயத்தனமாகத்தான் இருக்கும். எள்ளளவும் சந்தேகமில்லை.

ராம்ப்பாடாவிலிருந்து பாதை சுற்றிச் சுற்றி மேலே ஏறிச் செல்கிறது. கல்லின் மீது குதிரைகளின் குளம்புகள் பதியும்போது 'டக்டக்' என்று ஓசை எழும்பியது, எங்கள் பயணத்திற்குக் கம்பீரத்தையும், கண்ணியத்தையும் அளித்தது. வாகை சூடிய தளபதிகள் போல் நாங்கள் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டோம்.

காலையில் கேதார்நாத்திலிருந்து புறப்பட்ட பயணிகளை எதிரில் சந்தித்தோம். அவர்கள் உடலிலும் முகத்திலும் சுற்றி யிருந்த கம்பளிப் போர்வைகளைக் கண்டபோதுதான், கேதாரத்தில் எத்தனை குளிராக இருக்கும் என்று ஒருவாறு ஊகித்துக் கொண்டோம். அவர்களது முகங்களெல்லாம் கறுத்து, வெந்து கண்ணராவியாகக் காட்சி அளித்தன. உதடுகள் எல்லாம் பனியில் வெடித்து இருந்தன. கேதாரேச்வரரை எங்களுக்கு முன்னால் தரிசனம் செய்து விட்டுத் திரும்பும் அந்தப் புண்ணியாத்மாக்களைக் கண்டு புனிதம் பெற்றோம். 'குட் மார்னிங்' என்று கூறுவதற்குப் பதில் 'கேதார்நாத் மகராஜ்கி — ஜெய்' என்று உற்சாகத்துடன் குரல் கொடுத்துக் கொண்டு நாங்கள் உணர்ச்சிப் பெருக்கோடு முன்னேறிக் கொண்டிருந்தோம்.

கருடச்சட்டி வந்தது. பத்ரிநாத் செல்லும் மார்க்கத்தில் ஹனுமான்சட்டி கடைசிக் கிராமமாக அமைந்திருப்பது போல், இங்கு கருடச்சட்டி கடைசிக் கிராமமாக அமைந்திருக்கிறது. அங்கே யிருந்து கேதார்நாத் இரண்டரை கிலோ மீட்டர்தான். நாம் தற்போது பதினோராயிரம் அடி உயரத்திலிருக்கிறோம். வெய்யிலும் காய்கிறது. குளிரும் வீசுகிறது. வான மண்டலத்திற்கே வந்து விட்டது போன்ற பிரமை ஏற்படுகிறது.


கருடச்சட்டியில் கருட பகவானுக்கு ஒரு சிறு கோயில் இருக்கிறது. புராதனமான கற்சிலை ஒன்று வெளியே இருக்கிறது. உள்ளே ஒரு நவீன சிலையை வைத்திருக்கிறார்கள்.

கருடச்சட்டியைக் கடந்ததுமே நமக்கு கேதார்நாத் மலைச் சிகரங்கள் கண்ணுக்குத் தெரிகின்றன. வெண் பனியால் போர்த்தப்பட்ட சிகரங்கள், சூரிய ஒளியில் மூழ்கி, கண்ணைப் பறிக்கும்படி மின்னுகின்றன. லட்சியத்தை அடைந்துவிட்டோம் என்ற பூரிப்பில், உள்ளம் துள்ளிக் குதிக்கிறது. வாழ்வின் பயனை எய்தி விட்டோம் என்ற பரவசத்தில், 'ஹரஹர மகாதேவா' 'சங்கரா சம்போ' என்று மனம் ஜபிக்கத் தொடங்குகிறது. நம்மை அறியாமலே நம் கைகள் சிரசுக்கு மேலே போய்க் கும்பிடுகின்றன.

கருடச்சட்டி



கேதாரத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறோம்



கேதார்நாத்ஜிக்கு — ஜெய்!

தற்போது நாம் பன்னிரண்டாயிரம் அடி உயர்ந்துவிட்டோம்! வெள்ளிப் பனி மலைகளைப் பார்த்துக் கொண்டே பயணம் செய்கிறோம். ஆனால் செல்லச் செல்ல, பயணம் நீண்டு கொண்டே போவது போல் தோன்றுகிறது. கேதாரத்தை விரைவில் அடைந்துவிட வேண்டும் என்ற ஆவல் அதிகரிக்க அதிகரிக்க, இலக்கு விலகிக் கொண்டே போகிறதோ!



கருடன் கோயில்

வழியில் ஒரு சாதுவைச் சந்தித்தேன். அவர், இடுப்பில் அரை வேட்டி மட்டுமே கட்டிக் கொண்டிருந்தார். அங்கு உள்ள குகை போன்ற ஓர் இடத்தில் வசிக்கிறாராம். குச்சிகளைக் கொளுத்திக் குளிர்காய்ந்து கொண்டிருந்தவர், எங்கள் குதிரைகள் அந்தக் குகை வாயிலில் நின்றதும், அருகில் வந்தார். 'நமஸ்தே' என்றேன் நான். அவரும் சிரித்துக் கொண்டு 'நமஸ்தே' என்றார். பேச்சுக் கொடுத்துப் பார்த்தேன். குதிரைக்காரர்களும் கேள்வி கேட்டார்கள். அவர் பதிலுக்கு வாயைத் திறக்கவே இல்லை. அவர் யாரோ, எந்த ஊரோ, என்ன பெயரோ! அங்கு என்ன செய்கிறாரோ, அந்த கேதாரநாதருக்குத்தான் வெளிச்சம். மொத்தத்தில் கொடுத்து வைத்த ஆத்மா. உண்மைத் தியாகமும், உறுதியான உள்ளமும் கொண்ட ஓர் உயர்ந்த ஜீவன். இல்லாவிட்டால், இந்த இடத்தில் வந்து வாசம் செய்ய வேண்டும் என்று தோன்றுமா? அவருக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு எங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம்.

அதோ! கேதார்நாத் புனிதத் தலம் தரிசனம் ஆகிறது. அன்று தேவதர்சினியிலிருந்து பத்ரிநாத் ஊரைக் கண்டதும், வைகுண்டம் போல் தோன்றியது. இன்று கேதாரத்தைக் கண்டதும் கைலாசத்தையே தரிசிப்பது போல் இருக்கிறது. இருநூறு அடிகள் இறங்கிச் சென்றால் அந்தத் தெய்விகச் சமவெளியை அடையலாம்.

இமயச் சிகரத்தில் நான் கேதார ஆலயத்தின் சிகரத்தைத் தேடினேன். பனிப் படலத்தில் மறைந்திருந்த அந்த உன்னத கோபுரம் என்னுடன் சற்று நேரம் கண்ணாமூச்சி விளையாடிய பிறகே காட்சி தந்தது. புகைப்படங்களில் கண்டு பழக்கப்பட்ட கோபுரமானதால், பல கட்டடங்களுக்கு இடையே அதை மிக எளிதாக அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது.

தொன்மைப் புகழுக்கு ஒரு கோபுரம்; புராண மகிமைக்கு ஒரு கோபுரம்; பாரதத்தின் பெருமைக்கே ஒரு கோபுரம்; பிறவிப் பிணி நீக்கும் மாமருந்தாம் அம்மகோன்னத கோபுரத்தைத் தரிசனம் செய்து இப்பிறவியில் இப்பேறு கிட்ட எப்பிறவியில் என்ன மாதவம் செய்தோமோ!



நான் நன்றிக்கடன் பட்டுள்ள குதிரை

பரமசிவன் பஞ்சபாண்டவர்களுக்குத் தரிசனம் தந்த இடம் கேதார புண்ணியத்தலம். அதோ தெரிகிறதே ருத்ர இமாலய மலைத் தொடர்ச்சி, அதன் வழியாகத்தான் பாண்டவர்கள் மகாப்பிரஸ்தான யாத்திரை சென்றார்கள். அவர்கள் சுவர்க்கம் சென்ற சுவர்க்காரோஹிணி சிகரம் அங்குதான் இருக்கிறது. நான்கு பாண்டவர்களும் திரௌபதியும் வழியில் மடிந்து விழ, தர்மபுத்திரர் மட்டும் உடலோடு சுவர்க்கம் சென்றது இந்த வழியாகத்தான். அப்பனிமலைச் சிகரங்களைத் தரிசித்துக் கொண்டே, கேதார ஊரை நோக்கித் தற்போது முன்னேறிக் கொண்டிருக்கிறோம்.

சிவபெருமான் உறையும் இடங்களிலேயே பூவுலகில் கேதாரத்திற்கு நிகரானது வேறோர் இடம் இல்லை என்று வியாச பகவான் பாண்டவர்களுக்கு எடுத்துரைத்திருக்கிறார். சகோதரர்களையும், உற்றார் உறவினர்களையும், குருமார்களையும் கொன்று குவித்த பாவத்திற்குப் பரிகாரம் தேட வேண்டுமானால், கேதாரத்தில் நித்திய தவயோகத்தில் ஆழ்ந்திருக்கும் உமாமகேச்வரனைத் தஞ்சமடைவதைத் தவிர வேறு வழியில்லை என்று வியாச முனிவர் பாண்டவர்களுக்கு எடுத்துக்கூறியதாகப் புராணம் பறைசாற்றுகிறது.

அந்த கேதாரநாதர் கோயில் கொண்டிருக்கும் விமான கோபுரத்தைத் தரிசித்த நாங்கள் புல்லரிக்க, புளகிதம் பொங்கப் புண்ணியம் பெற்றோம்.

ஆகா! எத்தனை மகத்தான காட்சி இது! வெள்ளிப் பனிமலைச் சுவர் பின்னணித் திரையாகப் படர்ந்திருக்க, முன்னால் துலங்கும் ஆலயமும்,

அதைச் சுற்றி எழும்பியுள்ள சிற்றூரும், நயனத்திற்கொரு விருந்தாக நாடக அரங்கன்றோ அமைத்துத் தந்திருக்கின்றன!

மணி ஒன்பதரைதான். எதிர்பார்த்ததற்குச் சீக்கிரமாகவே வந்து சேர்ந்திருக்கிறோம். வந்த சிரமம் தெரியாமல், மிக எளிதாக வந்துவிட்டோம். எல்லாம் கேதாரநாதனின் பெருங் கருணைதான். யமுனோத்ரி யாத்திரையின் போதும், கோமுகப் பயணத்தின் போதும் நான் பட்ட துன்பங்களை யெல்லாம் கண்டு மனமிரங்கி, கேதார விஜயத்தை எனக்கு எளிதாக்கித் தந்த தயாநிதிக்கு நான் என்ன கைம்மாறு செய்ய முடியும்? தன் உடல் சோர என்னைச் சுமந்து வந்த வாயில்லாப் பிராணிக்கு நான் பெரிதும் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன். தமிழில் அதை 'மட்டக் குதிரை' என்று அழைக்கிறார்கள். என்னைப் பொறுத்த வரை அது உயர்ந்த குதிரை, உன்னதமான குதிரை, உயிருக்குயிரான குதிரை.

கேதார சமவெளியில் இறங்கிக் கொண்டிருக்கிறோம். அந்தச் சமவெளி 11,750 அடி உயரத்தில் இருக்கிறது.

எனக்கு வலப்புறம் மந்தாகினி ஓடிக் கொண்டிருக்கிறாள். வரும் வழியில் எத்தனையோ ஆழத்தில் கேட்பாரற்று ஓடிக் கொண்டிருந்த அவளைப் பார்த்துப் பரிதாபப்பட்டேன். பெரிய பாறைகளில் மோதிப் பாய்ந்து பெருகும் பேரருவியாகவும் அவளைச் சந்தித்துப் பரவசப்பட்டேன். கண்ணுக்குப் புலப்படாத கடவுளின் பேரருள் போல், கண்ணுக்குத் தெரியாத இடத்தில் உற்பத்தியாகி, பாரிலுள்ளோரை வாழ்விக்க வேகமாகப் போய்க் கொண்டிருக்கிறாள் அவள். நாற்பத்தைந்து மைல் பயணத்திற்குப் பிறகு, ருத்ரப்பிரயாகையில் அலறிப் புடைக்கும் அலகநந்தாவுடன் கலந்து, தன்னை அழித்துக் கொள்ளும் தியாக மங்கையாக அவளைத் தரிசித்தேன். இரு நதிகளும் சங்கமமாகும் ருத்ரப் பிரயாகையிலும், இணைந்த சகோதரிகள் பின்னர் தேவப்பிரயாகையில் பாகீரதியுடன் சங்கமமாகும் இடத்திலும் நீராடித் திளைத்ததையும் அந் நேரத்தில்

கேதாரத்தில் மந்தாகினி நதி



நினைவுபடுத்திக் கொண்டேன். இமயத்து மகிமையெல்லாம் ஒருங்கிணைந்த அருள் வெள்ளமாக, உடலையும் உள்ளத்தையும் தூய்மைப்படுத்தி நற்கதி நல்கும் சக்தியாக, கருணைக்கொரு கங்கையாகப் பாயும் ரிஷிகேசத்திலும் ஹரித்துவாரத்திலும் நீராடிய நாட்களையும் அப்போது நினைவுபடுத்திக் கொண்டு அந் நினைவாலேயே நீராட்டப் பெற்ற புனிதனாக, புண்ணியமிகு கேதார எல்லைக்குள் நுழைந்தேன்.

எனக்கு இடப்புறம் பயணிகள் விடுதிகளைக் காண்கிறேன். செல்ல முடியாத இடம் என்றும், சென்றாலும் இயற்கையை வெல்ல முடியாத இடம் என்றும் ஒரு காலத்தில் கருதப்பட்ட கேதாரத்திலும், இன்று நாகரிகம் தலை நீட்டத் தொடங்கியிருப்பதைக் கண்டேன். பயணிகள் விடுதிகளை அடுத்து, 'ஹிம் லோக்' என்ற பெரிய உணவு விடுதியையும் கண்டேன். அங்கு நடமாடிய பணியாட்களைப் பார்த்தபோது, அது நவீன வசதிகளோடு கூடியதாக இருக்கும் போல் தோன்றியது. எல்லா வசதிகள் இருந்தும், மன நிம்மதி கிடைக்காமல் தனிமை நாடித் தல யாத்திரை வரும் மனிதன் அங்கும் வசதிகளையே தேடித் தேடி அலையும் அவல நிலைக்கு இந்த நவீன விடுதி ஓர் அடையாளச் சின்னமாக நிற்கிறது. புராண காலத்தையும் புண்ணியக் கதைகளையும் நினைத்துக்கொண்டு அங்கு வருபவர்களுக்கு அது நாகரிக உலகத்தைக் கண் முன்னால் நிறுத்தி, தூயசிந்தனையைச் சிறிது மாசுபடுத்துகிறது. அதனிடமிருந்து என் கவனத்தைத் திருப்புவதற்காக, எதிரேயுள்ள மாமலையின் காட்சியில் மனத்தைப் பறி கொடுத்தேன். ஆதிசிவனை நினைவுபடுத்துவது போல் அது காட்சி தந்தது. அருகில் அலைந்து கொண்டிருந்த மேகச் சிதறல்கள், ஐயனின் அலையலையான ஜடையைக் கண் முன்னால் கொண்டு வந்து நிறுத்தின.

நாங்கள் மந்தாகினியின் அருகில் வந்து விட்டோம். 'ஓ'வென்ற பேரிரைச்சல் கேட்கவில்லையா? இடப்புறம், மலையிலிருந்து வெள்ளை வெளே ரென்ற நீரருவி ஒன்று பெருகி வந்து, மந்தாகினியுடன் கலக்கிறது. அதை 'தூத் கங்கா' என்று குதிரைக்காரர் அறிமுகப்படுத்தி வைக்கிறார். அதாவது பால் கங்கையாம். நம் பக்கங்களில் பாலைக் கங்கையாக்குகிறார்கள்! இங்கோ் கங்கையே பாலாக இருக்கிறது!

ஒரு பாலத்தைக் கடக்கிறோம். அங்கு ஒருவர் கழுத்தில் தப்பட்டையைக் கட்டிக் கொண்டு, ஏதோ ஒரு பாட்டுக்குத் தாளமாக அதைத் தட்டியபடி அங்கு வருபவர்களை ஆனந்தமாக வரவேற்றுக் கொண்டு இருக்கிறார்.

பாலத்தைக் கடந்து வலப்புறம் திரும்பினால் ஸ்நான கட்டம். அங்கு கங்கா மாதாவுக்கு ஒரு சிறு கோயில் இருக்கிறது. வருபவர்களில் நெஞ்சுரம் மிக்கவர்கள், மந்தாகினியில் ஸ்நானம் செய்துவிட்டு, கங்கா மாதாவை வணங்கிவிட்டு, கேதாரேச்வரர் தரிசனத்திற்காகச் செல்கிறார்கள். அங்கிருந்து அரை பர்லாங் ஏறிச் சென்றால் கடைவீதி. அது நம்மை நேரே கோயிலின் வாயிலுக்கு அழைத்துச் செல்கிறது.

நாங்கள் மந்தாகினியில் ஸ்நானம் செய்வதற்காக உடைகளைக் களைந்தோம். 'பத்ரிநாத்திலும், கங்கோத்ரியிலும், கோமுகத்திலும் ஐஸ் நீரில் ஸ்நானம் செய்தவர்களுக்கு இது ஒரு பிரமாதமா?' என்று நாங்கள் சற்று இறுமாப்புடனேயே நீரில் இறங்கினோம். 'ஐயோ! இதென்ன வேகம்! இதென்ன குளிர்ச்சி!' முன் வைத்த காலைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டோம்.

''கண்ணு, சிரமப்படும் போல் இருக்கே. இது எல்லா நதிகளையும் தோற்கடிக்கிறதே. அந்த நீரெல்லாம் ஐஸ். இது கலப்படமில்லாத அசல் ஐஸ்! புரோட்சணத்துடன் புறப்பட வேண்டியதுதான்'' என்று நான் கூறியதைக் கண்ணன் காதில் போட்டுக் கொள்ளவில்லை.



கங்காமாதா கோயில்

மந்தாகினியைத் தொட்டுத் தொட்டுக் கொஞ்சி, சமாதானப் படுத்திக் கொண்டிருந்தார் அவர்.


''என்ன கண்ணு சொல்றே? தலையில் தெளித்துக் கொண்டுவிட்டால் போதாதா?''

''போதாது! கேதாரத்திற்கு வந்துவிட்டு, மந்தாகினியில் ஸ்நானம் செய்யாமல் திரும்புவதா? இதில் ஸ்நானம் செய்வதால் கிட்டும் புண்ணியத்தை எத்தனையோ அசுவமேத யாகங்கள் செய்த புண்ணியத்திற்கு ஈடாகச் சொல்லியிருக்கிறார்கள். பிராணன் போவதாயிருந்தால் இப்படியே போகட்டுமே. நேரே சுவர்க்கத்திற்குப் போய்விடலாம்'' என்று கூறியபடியே அந்த நீரில் இறங்கி, அமிழ்ந்து ஸ்நானம் செய்து எழுந்தும் விட்டார், நெஞ்சுரம் மிக்க நண்பர்.

எனக்கும் தைரியம் பிறந்தது. அங்கிருந்த இரும்புக் கம்பியைப் பிடித்துக் கொண்டு, அவசர அவசரமாக ஒரு முழுக்குப் போட்டுவிட்டு, ஓடி வந்துவிட்டேன். அதற்குப் பிறகு ஸ்ரீநிவாசனுக்கும் ஜவான் ஸலீந்தர்சிங்குக்கும் கூடத் தென்பு பிறந்துவிட்டது. ஒரு நொடியில் எப்படியோ ஒரு முழுக்குப் போட்டு விட்டுத் திரும்பிவிட்டார்கள். எங்கள் இமயப் பயணத்தில் செய்த ஸ்நானங்களிலேயே மந்தாகினி ஸ்நானத்தை மட்டும் நாங்கள் என்றென்றும் மறக்க முடியாது.

உடலையும் உள்ளத்தையும் பரிசுத்தம் ஆக்கிக் கொண்டு நாங்கள் கேதார நாதரின் தரிசனத்திற்குப் புறப்பட்டுச் சென்றோம். செல்லும் வழியில்

மந்தாகினி ஸ்நான கட்டம்





ஸ்ரீ கேதாரேச்வரர் ஆலயத்தின் முகப்புத் தோற்றம்


ராதாகிருஷ்ண ஐய கணேச வாஜ்பேயி என்ற பண்டாவைச் சந்தித்தோம். கண்ணன் முன்பு கேதாரம் வந்திருந்தபோது அவரைச் சந்தித்திருக்கிறார். அதை நினைவுபடுத்தி, காமகோடி மடத்தின் சம்பந்தத்தையும் கூறினார். கணேச வாஜ்பேயிக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. தமிழ்நாட்டிலிருந்து யார் வந்தாலும் தம்மைத்தான் தேடி வருவார்கள் என்று அவர் பெருமையுடன் கூறிக்கொண்டார். அவருக்குத் தமிழ் லேசாகப் புரிகிறது. பேசவும் பேசுகிறார். சிறிது முயன்றால் நாம் அவர் தமிழைப் புரிந்து கொண்டு விடலாம்.

அவருடைய முன்னோர்கள் தமிழ் நாட்டிலிருந்து வந்து குடியேறியவர்கள் என்றும் தமக்குப் பூர்வீகம் 'சிதாம்பராம்' என்றும் கூறினார் வாஜ்பேயி. தெம்பரம் வாஜ்பேயர் வமிசத்தைச் சேர்ந்தவர் என்று நாங்கள் புரிந்து கொண்டோம்.

இவ்வாறு வட நாட்டிலிருந்து தென்னாட்டிற்கும், தென்னாட்டிலிருந்து வடநாட்டிற்கும் அக்கால மக்கள் குடியேறி, அவருடைய சந்ததியினர் காலதேச வர்த்தமானத்தால் உருமாறிப் போயிருப்பதைக் காண்கிறோம். சூழ்நிலை, மொழி, கலாசார வேறுபாடுகளால் நடையுடை பாவனைகள் மாறி யிருந்தாலும், எத்தனை தலைமுறைகளின் இடைவெளி யிருந்தாலும், மனிதன் பூர்விகத்தை நினைவு கூர்ந்து பூரிக்கிறான். அப்படியிருக்கும்போது, மனித குலத்திற்கே பொதுவான பூர்விகத்தை அந்த மூலப் பொருளை, பரப் பிரும்மத்தை, சச்சிதானந்த சொருபத்தை நினைத்து நாம் அனைவரும் எத்தனை பெருமையில் திளைத்து, பேரானந்தத்தில் மிதக்க வேண்டும்?

கடைவீதியைக் கடந்து, கேதாரேச்வரரின் ஆலயத்தை நோக்கிச் சென்ற போது, அத்தகைய ஒரு பேரானந்தத்தில் நாங்கள் மிதந்து கொண்டிருந்தோம். அன்றாடப் பிழைப்பிற்காக உழன்று அல்லற்படும் உலக வாழ்வு என்ற

கடைவீதியைக் கடந்து, படைத்தவனின் பாத கமலங்களைச் சென்றடைவதுதானே பிறவியின் பெரும் பயனாகிறது.




கம்பீரமான நந்தி

பாரத ரத்தினங்களான பாண்டவர்களால் நிர்மாணிக்கப்பட்டு, பின்னர் பாரதத்தின் மணிவிளக்காக விளங்கும் ஆதிசங்கர பகவானால் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட ஆலயத்தினுள் தற்போது நுழைந்து கொண்டிருக்கிறோம். சில படிகளே ஏறிய பின்னர் ஆலயத்தின் முன் முற்றத்தில் வந்து நிற்கிறோம். அந்தத் திறந்த வெளியில், கேதாரேச்வரர் திருச் சந்நிதியை நோக்கிக்கொண்டு அழகிய நந்திகேச்வரர் அற்புதக் கம்பீரத்துடன் தாழ்வான மேடையொன்றில் அமர்ந்திருக்கிறார். அவருக்கும் அவர் பணிவிடை புரியும் நாதனுக்கும் பக்தர்கள் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

கணேச வாஜ்பேயி எங்கள் கவனத்தை வேறு பக்கம் திருப்பினார்.

''அதோ, சுற்றிலும் உள்ள மலையின் அமைப்பைக் கவனித்தீர்களா? அடுத்தடுத்து இரு மலைகள் மேலும் கீழும் இருப்பது சிவலிங்கத்தில் உள்ள

பக்திப் பரவசம்





கேதாரநாத் ஆலயத்திலிருந்து...

ஆவுடையார் மாதிரியே தோன்றுகிறது பாருங்கள். சுற்றிலுமுள்ள மலையை ஆவுடையாராகவும், ஆலயத்தை லிங்கமாகவும் கற்பனை செய்து பாருங்கள். இது சிவ சக்தி ஐக்கியமான தலம் என்பது புரியும்'' என்றார். பின்னர், ''அதோ பாருங்கள், பனி மலைகளிலிருந்து நான்கு அருவிகள் ஓடிவருகின்றன. அது பால் கங்கை, அது தேன் கங்கை, அது சுவர்ண கங்கை, அது சரஸ்வதி. அவை நான்கும் மந்தாகினியில் கலக்கின்றன. இந்தத் தலத்தின் மகிமைக்கும் இயற்கையழகிற்கும் இதுவும் ஒரு காரணம்'' என்று ஒவ்வொன்றாகச் சுட்டிக் காட்டினார் அவர்.

தற்போது ஸ்ரீ கேதாரநாதரின் தரிசனத்திற்குச் சென்று கொண்டு இருக்கிறோம். முதலில் ஆலயத்தை வலம் வருவோம்.

ஒரே ஒரு பிராகாரம்தான். சுற்றிலும் மதிற்சுவரில்லை. கருங்கல் தளம் போட்டிருக்கிறார்கள். சிறுகச் சிறுகத் திருப்பணிகள் நடந்து கொண்டிருப்பது தெரிகிறது.

நந்திகேச்வரர் இருப்பதுதான் தெற்குப் பிராகாரம்: அதாவது திருச்சந்நிதி தெற்கு நோக்கி யிருக்கிறது. மேற்குப் பிராகாரத்தில் ஒன்றுமில்லை. வடக்குப் பிராகாரத்தில் பழைய கற்சிலைகள் காணப்படுகின்றன. அங்கு உருவமற்ற 'மூர்த்தி'களும் இருக்கின்றன. அவற்றில் ஒன்று, நீலகண்ட மகாதேவருடையது என்கிறார்கள்.

வடகிழக்கில்—அதாவது ஈசானிய திசையில், ஈசானீச்வரர் திருச் சந்நிதி இருக்கிறது. அங்குள்ள சிவலிங்கம் சிறு பாறை வடிவில் இருக்கிறது. வெளிப்புறம் கணபதியும், உமாமகேஸ்வரரும் எழுந்தருளி யிருக்கிறார்கள். கிழக்குப் பிராகாரத்தில் ஆலய நிர்வாக அலுவலக அறைகள் இருக்கின்றன. அடுத்து, முகுந்தபைரவர் என்ற ஓர் அழகான, புராதனமான கற்சிலை நம் கண்ணையும் கருத்தையும் கவருகிறது.

அங்கு நின்று கருவறை விமானத்தைத் தரிசித்தோம்.

''இது பாண்டவர்கள் கட்டிய விமானம்'' என்றார் பண்டா.

''நிஜமாகவா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டார் ஸ்ரீநிவாசன், காமிராவைச் சற்று 'அட்ஜஸ்ட்' செய்தபடி.


''அவரையே கேட்டுப் பாரேன்...'' என்றேன் நான், சிரித்துக் கொண்டே. ஸ்ரீநிவாசன் பண்டாவிடம் இந்தியில் கேட்டார்.

பண்டா சிரித்தார்: ''அதாவது முதன் முதலில் இதைப் பாண்டவர்கள் தான் கட்டினார்கள். பிறகு எத்தனையோ பேர் இதை மாற்றி அமைத்திருக்கிறார்கள்'' என்று விளக்கினார்.

விமான கோபுரம் சீரான கருங்கல் கட்டடம். சிற்ப வேலைப்பாடுகள் இல்லாமலே, கம்பீரமாகக் காட்சி தருகிறது அது.

''முன் மண்டபம், பரீட்சித் மகாராஜாவின் மகன் ஜனமேஜயன் கட்டி முடித்தது'' என்று பண்டா கூறினார்.

விமான கோபுரத்தின் பின்னழகு





முன் மண்டபத்திற்கு வெளியே இருக்கும் கணபதி

'பாண்டவர்கள் கட்டியுள்ள விமானம் மாதிரிதானே இதுவும்?' என்று கேட்பது போல், ஸ்ரீநிவாசன் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார்.

பேசிக் கொண்டே நாங்கள் மீண்டும் நந்திகேச்வரரிடமே வந்து சேர்ந்தோம். அங்கு வந்து நின்றபோது, நுழைவாயிலின் அருகில், கிழக்குப்புறம் வீற்றிருக்கும் பெரிய கணபதிமூர்த்தி எங்கள் கவனத்தைக் கவர்ந்தார்.

அதைப் பார்த்தாலே அது மிகப் புராதனமான சிலை என்பது எளிதில் தெரிகிறது. தெய்வ சாந்நித்யம் பரிபூரணமாக ஒளி வீசுகிறது. நான்கு திருக்கரங்கள் கொண்டுள்ள அக் கணபதி, வலக் கையில் உருத்திராட்ச மாலையை உருட்டிக் கொண்டு தவச்சிலராக அமர்ந்திருக்கிறார்.

குறுக்கிடும் தடைகளை யெல்லாம் அகற்றி, நம் வாழ்வை மலரச் செய்யும் யானைமுகத்தோனை முதலில் தொழுதுவிட்டுத்தான், தந்தையைக் காணச் செல்ல வேண்டும் என்ற மரபு அங்கு இருந்து வருகிறது. கும்பிடுவது என்றால், கன்னத்தில் போட்டுக் கொண்டு, அவசர அவசரமாகத் தோப்புக் கரணம் போட்டுவிட்டு உள்ளே நுழைவதில் அல்ல. அதனால் பயனில்லையாம். அங்கு அமர்ந்து, ஆற அமர, அபிஷேக, அர்ச்சனை, தூப தீபங்களோடு அவரை ஆராதனை செய்ய வேண்டுமாம்.

அவ்விதமே நாங்கள் முறையாகச் சங்கல்பம் செய்து கொண்டு, கணநாதனை ஆராதித்துவிட்டு, ஈச்வரனைத் தரிசிக்கச் சென்றோம். சுற்றிலும் அமர்ந்திருக்கும் பண்டாக்கள் மிகச் சிரத்தையோடு, மந்திரங்களை ஒன்று கூட விடாமல் கூறி, நமக்கு வழிபாடு செய்து வைக்கின்றனர்கள்.

எழுந்து நிற்கின்றோம். நுழை வாயிலில், இருபுறமும் காட்சி தரும் கம்பீரமான துவாரபாலகர்கள் நம்மைப் பார்த்து, 'உள்ளே சென்று

ஈசானீச்வரர் சந்நிதி



முகுந்த பைரவர்



ஆனந்தமாக தேவாதி தேவனைத் தரிசிக்கலாம்' என்று கூறுவது போல் ஒரு பிரமை தட்டுகிறது. மேலே நிமிர்ந்து பார்க்கிறோம். பைரவரின் முகம் எட்டிப் பார்க்கிறது. அதற்குக் கீழே பிந்துவாசினியின் சிதைந்த சிற்பம் ஒன்று அரைகுறையாகத் தெரிகிறது. துவார பாலகருக்கு மேலேயுள்ள கோபால கிருஷ்ணனின் உருவம் கண்ணில் படுகிறது.

கேதாரேச்வரரைத் தரிசிக்க பக்திப் பெருக்குடன் உள்ளே நுழைகிறோம்.

கருங்கல்லாலான அந்த முன் மண்டபத்தைச் சபா மண்டபம் என்றும், நவக்கிரக மண்டபம் என்றும் அழைக்கிறார்கள்.

மொத்தம் நான்கு தூண்கள் இருக்கின்றன. தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்ற நான்கு புருஷார்த்தங்களை அவை குறிக்கின்றனவாம். உத்தரத்தில் உள்ள வட்டங்கள் நவக்கிரகங்களைக் குறிப்பதாகக் கூறுகிறார்கள். நடுவில் அமைந்துள்ள பத்ம தளங்களின் மத்தியில் சூரிய பகவான் ஒளி வீசுகிறார்.




துவாரபாலகர்

சுற்றிலும் உள்ள சுவர்களில் பஞ்ச பாண்டவர்களின் பெரிய கற்சிலைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. திரௌபதியும், குந்தியும், கண்ணபிரானும்கூட இருக்கிறார்கள். அர்ஜுனன் தவக்கோலத்தில் இருக்கிறான். நகுல சகாதேவர்கள் வில்லுடன் காட்சி தருகிறார்கள். பீமன், கதையை ஏந்தி யிருக்கிறான். யுதிஷ்டிரர் தர்மமே உருவாகக் காட்சி தருகிறார். அந்த இருளில் சிற்பச் சிலைகளின் எழிலை முழுமையாகக் கண்டு ரசிக்க முடியவில்லை. அவை தென்னாட்டு சிற்பங்களுக்கு மாறுபட்டதாக இருக்கின்றன. அங்கு பஞ்சலோகத்தினாலான லட்சுமிநாராயணரின் விக்ரகம் ஒன்றும் இருக்கிறது.


அந்த மண்டபத்தின் மத்தியில், பித்தளையினாலான சிறு நந்தி ஒன்று, கருவறையை நோக்கி அமர்ந்திருக்கிறது. அதற்குக் கீழே திருச்சந்நிதியைப் பார்த்தபடியே வீரபத்திர சுவாமியும் வீற்றிருக்கின்றார்.

சபா மண்டபத்தை யடுத்துள்ள சிறிய அர்த்தமண்டபத்தினுள் நுழைகிறோம். அங்கு இடப்புறம் சித்தி-புத்தி தேவியரோடு கணபதியையும், எதிரில் பார்வதிதேவியையும் தரிசித்துக் கொள்கிறோம். அம்மையின் அருகிலும் செல்லக் குழந்தை கணபதி இருக்கிறார்.

அதோ, கருவறையில் கேதாரீச்வரர் வீற்றிருக்கிறார். இப் பிறவியின் நற்பயனைப் பெறவும், மறு பிறவியைத் தவிர்க்கவும் அவரைத் தரிசனம் செய்து கொள்வோம் வாருங்கள்.



ஸ்ரீகேதாரநாதர்



அலங்கார தரிசனம்

பாரத தேசத்திலுள்ள துவாதசலிங்க க்ஷேத்திரம் என்ற பன்னிரண்டு ஜோதிர் லிங்கங்களில் கேதாரலிங்கமும் ஒன்ருகும். சுயம்புமூர்த்தி. சிறு குன்று போன்ற கற்பாறை வடிவில், சுவாமி அங்கு நித்தியவாசம் செய்து கொண்டு இருக்கிருர்.

ஸ்ரீ வைகுண்டபதி நர, நாராயண ரிஷிகளாக வடிவங்கள் தாங்கி, பத்ரிகா ஆச்ரமத்தில் தங்கி யிருந்த சமயத்தில், மண்ணில் சிவலிங்கம் செய்து வைத்து, வெகு காலம் வரை ஆராதித்துக் கொண்டிருந்தார்களாம். அவர்களுடைய அத்தூய்மையான பக்தியையும், இடையருத வழிபாட்டையும் கண்டு மெச்சிய பரமேச்வரன், அவர்கள் முன் தோன்றி, வேண்டிய வரத்தைக் கேட்கும்படிக் கோரிஞராம். அப்போது நர நாராயணர்கள், ''தாங்கள் கேதாரத்தில் ஜோதி வடிவத்தில் என்றென்றும் எழுந்தருளி யிருக்க வேண்டும்; மனித குலம் தங்களைத் தரிசித்து உய்ய வேண்டும்'' என்று பிரார்த்தித்துக் கொண்டார்களாம். அதன்படியே கைலாசவாசனும் கேதாரத் தலத்தில், ஜோதிர்லிங்க வடிவில் தங்கிவிட்டார்.

அந்த ஜோதிர்லிங்கம், தற்போது பாறை வடிவில் காட்சி தரக் காரணம் என்ன? கூர்ந்து பார்த்தால், ஓர் எருமைக் கடாவின் பின் பாகத்தைப் போல் தோன்றுகிறது அல்லவா? அதற்கும் ஒரு கதை உண்டு.

பாரதப் போர் முடிந்து, ஓய்வும் மனச்சாந்தியும் பெறுவதற்காகப் பஞ்சபாண்டவர்கள் இப்பகுதிக்கு வந்தார்கள். அவர்களைக் கண்டதும், சிவபெருமான் எருமை வடிவம் தாங்கி, ஓட ஆரம்பித்தார். அந்த மிருகத்தினிடம் தெய்வீக அம்சம் ஒளிர்வதைக் கண்ட பஞ்சபாண்டவர்கள், அதைத் துரத்திச் சென்ருர்கள். சுவாமி, பூமிக்குள் புகுந்து மறைந்து விடலாம் என்று எண்ணிஞர். ஆனல், அதற்குள் பீமசேனன், எருமையின் வாலைப் பிடித்து இழுத்து விட்டான். முன்பாகம் பூமிக்குள் மறைய, பின் பாகம் மட்டும் வெளியே தங்கி விட்டது.

சுவாமியின் முன் பாகம் நேபாளத்தில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

எருமை வடிவத்திலிருந்த சிவபெருமான் பூமியில் புகுந்தபோது, ஐந்து பாகங்களாகப் பிரிந்தார் என்றும் கூறுகிருர்கள். பின்பாகம், கேதாரநாத்திலும் கைகள், துங்காநாத்திலும் முகம், ருத்ரநாத்திலும் வயிறு, மத்யமேச்வரத்திலும் ஜடை, கல்பேச்வரத்திலும் இருப்பதாக மக்கள் நம்புகிருர்கள்.

துங்காநாத், உக்கிமெட்டுக்கும் சமோலிக்கும் இடையேயுள்ள மலை உச்சியில் உள்ளது. இமயத்திலேயே மிகவும் உயரத்தில் இருக்கும் ஆலயம் இதுதான். ருத்ரநாத், மண்டல்சட்டியிலிருந்து பதினோராவது மைலில் இருக்கிறது. மத்யமேச்வரா என்று அழைக்கப்படும் இடம், உக்கிமெட்டிலிருந்து பன்னிரண்டு மைல் தொலைவில் உள்ளது. அதற்குக் காளிகட்டின் வழியாகச் செல்ல வேண்டும். கல்பேஷ்வர் என்னும் இடம், பத்ரிநாத் செல்லும் வழியில் உள்ள ஹெலாங்சட்டியிலிருந்து ஐந்தாவது மைலில், அலகநந்தாவின் அக்கரையில் உள்ளது.

பஞ்சபத்ரியைப் போல் (விஷால் பத்ரி, யோக பத்ரி, பவிஷ்ய பத்ரி, விருத பத்ரி, ஆதி பத்ரி) மேற்கண்ட ஐந்து தலங்களுக்கும் 'பஞ்ச கேதார்' என்று பெயர். இமயத்திலுள்ள இந்தப் புண்ணியத் தலங்களையெல்லாம் ஒரே பயணத்தில் தரிசிப்பவர்களும் இருக்கிறார்கள்.

கேதாரத்தில் சிவபெருமான் தங்களுக்குக் காட்சியளித்த இடத்தில், பாண்டவர்கள் அவருக்குக் கோயில் எழுப்பி வழிபட்டார்கள்.


சிவபுராணம் கூறுகிறது:

> கேதாரத்தில் பாண்டவர்கள் வழிபட்ட அதே முறையில்தான் சாட்சாத் சிவபெருமானைப் பாரத மக்கள் தலைமுறை தலைமுறையாக வழிபட்டு வருகிறார்கள்.

பத்ரிநாத்தில், அலகநந்தாவிலிருந்து ஆலயத்திற்கு வரும் வழியில் ஆதிகேதாரேச்வரர் சந்நிதி இருக்கிறதல்லவா? அதைப்பற்றிய சுவாரஸ்ய மான முழுக் கதை இதுதான்:

ஸ்ரீநாராயண மகாப்பிரபு, பத்ரிகாச்ரமத்தில் சிறு குழந்தையாக விளையாடிக் கொண்டிருந்தார். அதனுடைய இனிமையான குரலைக் கேட்டு இதயத்தைப் பறி கொடுத்த பார்வதிதேவி, குழந்தையைத் தூக்கிக்கொண்டு போய்த் தன் நாதனிடத்தில் காட்டி மகிழ்ந்தாள். சிவபெருமானுக்கு இது பிடிக்கவில்லை. ஆனால், பார்வதிக்கோ குழந்தையை விட்டுவிட விருப்ப மில்லை. ஒரு நாள் சிவபெருமானுக்கும், நாராயணனுக்கும் இடையே, யார் அந்தப் பிரதேசத்தில் தங்குவது என்ற வாக்குவாதம் தோன்றி, பேச்சு வலுத்தது. அச்சமயம் பார்வதிதேவி குறுக்கிட்டு, ''நாம் கேதாரத்திற்குச் சென்று விடுவோம். மகாபாரதத்தின்போது, அந்த இடம் புகழடையப் போகிறது'' என்றாளாம். அதன் படியே, சிவபெருமான் கேதாரம் செல்வது என்றும், நாராயணன் பத்ரிகாச்ரமத்தில் தங்குவது என்றும் ஒரு முடிவுக்கு வந்தார்களாம். அப்படிச் செல்வதற்கு முன் பரமேச் வரன் தமது ஓர் அம்சத்தை, அலகநந்தாவின் கரையில் விட்டு விட்டு, அங்கு வருபவர்களெல்லாம் தன்னைத் தரிசித்த பிறகே, பத்ரி நாராயணரை வழிபட வேண்டும் என்றும் ஆணையிட்டாராம்.

உதக்குண்டம்



அந்தக் கேதார மகாப் பிரபுவை தற்போது நாம் வலம் வந்து கொண்டு இருக்கிறோம். ஆறடிக்கு ஆறடிச் சதுரத்தில் அந்த ஜோதிர்லிங்கம் எழுந்தருளி யிருக்கிறது. மூன்றடி உயரமிருக்கிறது. கீழே நாற்புறமும் வெள்ளிப் பட்டையால் வரம்பு கட்டி யிருக்கிறார்கள். அந்த வடிவம் அசப்பில் ஸ்ரீசக்கரமேருவைப் போல் தோற்றமளித்து, சிவசக்தி சொரூபமாகத் திகழ்கிறது. ஜோதிர்லிங்கத்தின் இடப் பாகத்தைச் சக்தியாக ஆராதிக்கிறார்கள். அந்த இடம் கணபதியின் முகம் போல அமைந்திருக்கிறது. பின்புறத்தை மகாவிஷ்ணு, நெய்யினால் அபிஷேகம் செய்து ஆராதித்தாராம். அதனால் நம்மையும் நெய் அபிஷேகம் செய்யச் சொல்கிறார் ராவல்ஜி. அவர் லிங்காயத் வீரசைவ பரம்பரையைச் சேர்ந்தவர். அவர்தான் ஆலயத்தின் பிரதான அர்ச்சகர். கேதாரநாத், குப்தகாசி, உக்கிமட், மத்தியமேச்வரா முதலிய இடங்களிலுள்ள பண்டாக்களெல்லாம் அவருக்குக் கீழ்தான். அவரது தலைமைப் பீடம் உக்கிமட்டிலுள்ளது.

சுவாமிக்கு நாமே அபிஷேகம் செய்யலாம். அர்ச்சனை செய்யலாம். தீப, தூப நைவேத்தியங்களோடு ஆராதனையும் செய்யலாம். நமது பிராணனாக இருக்கும் நாதனை இறுகத் தழுவி, ஆனந்தப்படலாம்.

யமுனோத்ரிக்கும் கங்கோத்ரிக்கும் முதலில் செல்பவர்கள், அங்கிருந்து நீரைக் கொண்டு வந்து, கேதாரப் பிரபுவுக்கு அபிஷேகம் செய்விக்க வேண்டுமாம். அந்தப் புண்ணியத்திற்கு ஈடு இணையே கிடையாதாம்.

பாரதத்தின் ஒளிவிளக்காக, ஓர் அகண்ட ஜோதி, கருவறையில் எந்நேரமும் எரிந்து கொண்டிருக்கிறது.

காலை நேரத்தில் கேதாரநாதனைச் சுயம்பு வடிவத்தில் திருமேனி தரிசனமாகக் கண்டு களிக்கலாம். காலை எட்டு மணி முதல் மதியம் வரை நாம் கேதாரீச்வரருக்கு அர்ச்சனை ஆராதனைகள் செய்யலாம். பின்னர் மாலை ஐந்து முதல் ஆறு மணி வரை 'போகம்' என்ற நைவேத்தியப் படைப்பும், அதை ஒட்டிய வழிபாடும் நடைபெறுகிறது. பின்னர், இரவு எட்டு மணி வரையில் சிருங்கார தரிசனம். அதாவது, அலங்காரம் செய்து அழகு பார்க்கிறார்கள். இறுதியாக ஆரத்தி தரிசனம்.

ஆலயத்திற்கு எதிரேயுள்ள கடைவீதியில் 'உதக்குண்டம்' என்ற ஒரு சிறு சுனை இருக்கிறது. அது வற்றாமல் இருக்கிறது. ஆலய வழிபாடு முடிந்து, அங்கு வந்து, அந்தத் தீர்த்தத்தை வாங்கிப் பருகினால்தான் தரிசனத்தின் பலன் பூரணமாகின்றது என்றும், அதுதான் முக்கியமான பிரசாதமாகக் கருதப்படுகிறது என்றும் பண்டா கூறினார். இந்தத் தீர்த்தத்தின் மகிமையை சிவபுராணம் சிறப்பாகக் கூறுகிறது.



ஸ்ரீ சங்கராசாரிய 'கைவல்யதாம்'

மகாபாரதத்தின் கதாநாயகர்களான பாண்டவர்களின் வரலாற்ருேடு இணைக்கப்பட்டுள்ள கேதாரத் திருத்தலம், புண்ணிய பாரதத்தை ஒருங்கிணைத்த ஒப்பில்லாக் குருமூர்த்தியான ஸ்ரீ ஆதி சங்கராசாரியாரின் வாழ்க்கையோடும் பிணைக்கப்பட்டுள்ளது. அவர் கேதாரத்திற்கு எத்தனை முறை வந்தார், எத்தனை நாட்கள் தங்கினுர் என்ற விவரங்களுக்கு ஆதாரங்கள் கிடைக்காவிட்டாலும், துவாதச லிங்கங்களில் ஒன்ருன கேதாரீச்வரரைப் பற்றி அவர் இயற்றியுள்ள சுலோகம் நமக்குக் கிடைத்துள்ளது. இதர பதினேருரு சுயம்புலிங்கத் தலங்களுக்கும் சென்று வழிபட்டு, தோத்திரங்கள் இயற்றியது போல கேதாரநாதரையும் வழிபட்டு ஆராதித்திருக்கிருர்.

இமாத்ரிபார்சுவேபி தடே ரமன்த்தம்
சம்ப்பூஜ்யமானம் ஸததம் முனீந்த்ர :

ஸுராஸுரைர்யட்ச மஹோரகாத்யை :
கேதாரஸம்ஞும் சிவமீசமீடே

இமயகிரியின் ஒரு பகுதியில் ஆனந்தத்துடன் எழுந்தருளி, முனிவர்களாலும், தேவர்களாலும், அசுரர்களாலும், யட்சர்களாலும், பெரிய நாகங்களாலும் பூஜிக்கப்படும் கேதாரம் என்னுமிடத்தில் உள்ள சிவபெருமானைத் துதிக்கிறேன்.

இதர துவாதச லிங்கத் திருத்தலங்கள்:



ஸ்ரீ ஆதி சங்கரர் உருவச்சிலையின் முன்..

1. ராமேச்வரம், 2. ஸ்ரீசைலம், 3. பீமசங்கரம் (மகாராஷ்டிரம்), 4. வைத்யநாதர்-பரளி (மகாராஷ்டிரம்), 5. நாகேசர்-தாருகாவனம் (மகாராஷ்டிரம்), 6. குஸ்ருநேசர்-எல்லோரா (மகாராஷ்டிரம்), 7. திரயம் பகம் (மகாராஷ்டிரம்), 8. ஓம்காரம்-நர்மதைக்கரை (மத்தியப் பிரதேசம்), 9. சோமநாதம் (குஜராத்), 10. மகா காளேச்வர் (உஜ்ஜெயின்), 11. காசிவிச்வேச்வரர்.

இறுதியாகக் கேதாரத்திலிருந்துதான் ஸ்ரீ சங்கர பகவான் கைலாசத் திற்குச் சென்றதாகவும், அப் பிரதேசத்தில்தான் அவர் தமது பூத உடலை விட்டுச் சென்றதாகவும் ஒரு கருத்து நிலவுகிறது.

ஸ்ரீ சங்கரர் கேதாரத்தில் ஸித்தி பெற்றுக் கைலாசம் அடைந்தார் என்று 'மாதவீயசங்கர விஜயம்' கூறுகிறது. இதர சில சங்கர விஜயங்கள் ஸ்ரீ ஆதிசங்கரர் காஞ்சியில் மறைந்தார் என்ற செய்தியைப் பறைசாற்று கின்றன.

ஸ்ரீ ஆதிசங்கரர் கைலாசத்திற்குச் சென்று சிவபெருமானிடமிருந்து ஐந்து ஸ்படிக லிங்கங்கள் பெற்று மீண்டும் பூமிக்குத் திரும்பியதாகவும், ஆராதனைக் காக அவற்றை ஐந்து இடங்களில் எழுந்தருளச் செய்ததாகவும் கூறப்படுவது உண்டு.

ஸ்ரீ ஆதிசங்கரர் பத்ரியிலிருந்தபோது, தவத்தில் ஆழ்ந்திருந்த தமது குருவான கோவிந்த பகவத்பாதரையும் பரம குருவான கௌடபாதரையும்

தரிசித்ததாகவும் கூறப்படுகிறது. பின்னர் அவர் ஒரு குகையில் ஸ்ரீ தத்தாத்ரேயரைத் தரிசித்து அங்கிருந்து அப்படியே மறைந்து விட்டதாக 'சித்விலாசீய சங்கர விஜய'த்தில் கூறப்படுகிறது. ஸ்ரீ ஆதிசங்கரர், கேரளத்திலுள்ள திருச்சூர் ஸ்ரீ வடக்குநாதர் கோயிலில் சுவாமியுடன் ஐக்கியமாகி விட்டதாக கேரளீய சங்கர விஜயத்தில் கூறப்பட்டுள்ளது.

ஸ்ரீ சங்கரர் காலடியில் பிறந்ததைப் பற்றிக் கருத்து வேற்றுமையிருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், அவர் மறைந்த விதமும், இடமும் பலவாறாகக் கூறப்படுவதால் ஸ்ரீ கேதாரநாதர் கோயிலுக்கு மேற்குப்புறமுள்ள ஸ்ரீஆதிசங்கரரின் 'சமாதி'யைத் தரிசிக்கச் செல்லும்போது, அவரது மறைவைப் பற்றி நாம் படித்து அறிந்த விவரங்கள் நம் நினைவுக்கு வராமல் போகாது.


அந்த இடத்திற்குச் சென்று கொண்டிருக்கும்போது, கோயிலுக்குப் பின்புறம், கையில் ஒரு பிருமாண்டமான தண்டம் வைத்திருப்பது போல் ஒரு சிலை தெரிந்தது. அது என்னவென்று அருகில் இருந்த பண்டாவிடம் கேட்டேன்.

''ஸ்ரீ ஆதி ஜகத்குரு சங்கராசாரியாரின் நினைவாக நான்கு வருடங்களுக்கு முன்பு, துவாரகா பீடாதிபதி அவர்களின் நன்முயற்சியால் இது இங்கு ஸ்தாபிக்கப்பட்டது. இது சலவைக் கல்லால் ஆனது'' என்று கூறினார் அவர்.

''வெட்டவெளியில் தனியாக ஒரு தண்டம் மாத்திரம் வைக்கப்பட்டிருப்பது என்னவோ போலிருக்கிறதே... இதற்கு ஒரு கூரை கூடப் போடாமல் வைத்து விட்டார்களே!'' என்று நான் கண்ணனிடம் குறைப்பட்டுக் கொண்டேன். அதைப் புரிந்து கொண்ட பண்டா, ''இந்த இடத்தைப் பிரமாதமாகக் கட்ட வேண்டும் என்ற திட்டம் இருக்கிறது. அதோ பாருங்கள், ஒரு மண்டபம் கட்டுவதற்கான அஸ்திவாரம் கூடப் போடப்பட்டிருக்கிறது...ஆனால், என்ன காரணமோ தெரியவில்லை; அதற்குப் பிறகு இங்கு ஒரு வேலையும் நடைபெறவில்லை. அப்படியே நின்று விட்டது'' என்றார் பண்டா.

ஸ்ரீ ஆதி சங்கரருக்கு நவீனச் சின்னம்





சலவைக் கல் நண்டம்

இது ஒரு நவீனமான சின்னம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், நம் வேத நெறிக்குப் புறம்பான மதங்களை வாகை சூடி, பாரதத்தின் பண்டைய கலாசாரப் பெருமைகளை நிலைநாட்டி, பாருக்கெல்லாம் ஒரு ஞான சூரியனைப் பிரகாசித்த ஒரு மாமேதையின் நினைவைப் போற்றுவதற்காக நிறுவப்பட்ட சின்னம் அரை குறையாக நிற்பதைப் பார்க்க மிகவும் கஷ்டமாயிருக்கிறது. திருக்கரத்தில் தர்மச் செங்கோல் ஏந்தி, தரணியெங்கும் அத்வைத சாம்ராஜ்ய ஆட்சி புரிந்த ஆசாரிய மகாபுருஷரின் நினைவுச் சின்னம் அதிவிரைவிலேயே நிறைவு பெற வேண்டும் என்று நாங்கள் கேதாரநாதரை மனமாரப் பிரார்த்தித்துக் கொண்டோம். அவர் நிறுவிய ஸ்ரீ மடங்களின் தலைவர்களும், அம்மடங்களின் லட்சக்கணக்கான சீடர்களும் மனம் வைத்தால், அரை நொடியில் அதைப் பூர்த்தி செய்துவிட முடியுமே!

உத்தரப் பிரதேச அரசும், பத்ரி-கேதார் ஆலயக் கமிட்டியினரும் இதில் தீவிர கவனம் செலுத்துவார்கள் என்று நம்புகிறேன்.

அங்கிருந்து, நாங்கள் இடப்புறமுள்ள ஸ்ரீ ஆதிசங்கரர் 'சமாதி'க்கு வந்தோம். பன்னிரண்டு ஆண்டுகள் முன்பு வரை அங்கு ஒரு சிறு மேடையும் அதன் மீது ஒரு சிவலிங்கமும்தான் இருந்தனவாம். பின்னர், பல பெரியோர்களின் நன்முயற்சியால் கொட்டகை போன்ற ஒரு சிறு கட்டடம் எழுப்பப்பட்டு, அங்கு ஆதிசங்கரரின் சிறு சலவைக்கல் சிலை ஒன்றும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது.

சுவர்க்கத்வார கங்கா, தேன் கங்கா, மந்தாகினி மூன்று தீர்த்தங்கள் சங்கமம் ஆகும் திரிவேணி சங்கமத்தின் அருகில் அத் திருச் சந்நிதி அமைந்திருக்கிறது. 1963-ம் ஆண்டு, மே மாதம் 27-ந் தேதி உத்தரப் பிரதேச கவர்னர் திரு. விசுவநாத் தாஸ், பிகார் கவர்னர் திரு. அனந்தசயனம் ஐயங்கார் இருவரின் முன்னிலையில் ஸ்ரீ துவாரகா பீடாதிபதி அபிநவ சச்சிதானந்த தீர்த்த சுவாமிகளால் அச் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டதாக அங்குள்ள ஒரு சலவைக் கல் பலகையில் எழுதியிருப்பதை பண்டா எங்களுக்குப் படித்துக் காட்டினார். 'ஸ்ரீ சங்கராசாரிய கைவல்யதாம்' என்று அதை அழைக்கிறார்கள்.

கண்ணனும் நானும் ஸ்ரீ ஆதிசங்கரரின் சிலைக்கு எதிரே அமர்ந்து, சிறிது நேரம் அம்மகானைப் பற்றிய தூய சிந்தனையில் மூழ்கி யிருந்தோம். அக்கணம் எங்கள் மனம் ஆனந்த அமைதியின் எல்லையை எட்டிப் பிடித்தது.

அந்தப் பரமபுருஷர் திருவவதாரம் செய்திராவிட்டால், இன்று பண்டைய பாரதத்தைக் காணும் பேறு நமக்குக் கிடைத்திருக்குமா என்பது சந்தேகத்திற்குரிய பிரச்னையாகும். ஸ்ரீ ராமனும் ஸ்ரீ கிருஷ்ணனும் தமது பொன்னடி


களாலும், திருநாமங்களாலும் புனிதப்படுத்தி ஒருமைப்படுத்திய இப்பாரதத்தை, நம் பண்டைய நெறிக்குப் புறம்பான பல்வேறு சக்திகள் சின்னுபின்னப்படுத்தி, உருத் தெரியாமல் அழித்துவிட ஆயத்தங்கள் செய்து, அதில் ஓரளவு வெற்றியும் கண்டுவிட்ட நேரத்தில், இருள் போக்க வந்த ஆதவனுகத் தோன்றியவர் ஸ்ரீ ஆதிசங்கரர். கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீரம் வரையிலும், காலடியிலிருந்து கேதாரம் வரையிலும், துவாரகையிலிருந்து பூரி ஜகந்நாதம் வரையிலும், ஆன்மிக உணர்ச்சி பரவித் தழைக்கிறது என்ருல், அத்வைத தத்துவம் நிலைத்திருக்கிறது என்ருல், வேத மதம் வேருன்றியுள்ளது என்ருல், தெய்வ பக்தி செழிக்கிறது என்ருல், ஆலய தரிசனங்களும், புனிதப் பயணங்களும் ஆண்டுக்கு ஆண்டு வளர்ந்து வருகிறதென்ருல், தீர்த்த மகிமை களும் சிறக்கிறது என்ருல், புண்ணிய பாரதம் பெருமையுடன் பீடு நடை போடுகிறதென்ருல், அதற்கு இக்கலியில் அடித்தளம் அமைத்துக் கொடுத்த மூல புருஷர் ஸ்ரீ ஆதிசங்கர பகவானே.

முப்பத்திரண்டு வயதிற்குள், இப் புண்ணிய பூமியை இரு முறை வலம் வந்து, புராணப் பெருமைகளை யெல்லாம் நமக்கு நினைவுபடுத்தி, தெய்வங் களின் சிறப்புகளை யெல்லாம் உள்ளத்தில் ஆழப் பதித்து, சாத்திரங்களைத் தொகுத்து, தோத்திரங்களைப் படைத்து, வழிபாட்டு முறைகளை வகுத்து, வாழ்க்கை நெறிகளைப் புகட்டி, வான் புகழ் கொண்ட அந்த வள்ளல் பெருந் தகையை நினைக்காத நிமிடங்கள், நம் வாழ்வில் விரயமான நிமிடங்களாகும்.

இணையற்ற தொண்டினுல், இமாலயக் கீர்த்தி பெற்ற அப் புனிதரின் திருச்சந்நிதியை விட்டு அகலவே மனம் வரவில்லை.

ஸ்ரீ ஆதிசங்கரரின் நினைவாலயத்திலிருந்து நேரே உதக்குண்டத்திற்கு வந்து தீர்த்தப் பிரசாதத்தைப் பெற்றுப் பருகிவிட்டு அதனருகிலுள்ள நவதுர்க்கா, சத்தியநாராயணர், பஞ்சமுக மகாதேவர் சந்நிதிகளைத் தரிசித்த பிறகு எங்கள் கேதாரப் பயணத்தை முடித்துக் கொண்டு புறப்பட்டோம். ஒரு மணிக்குப் புறப்பட்டு மாலை ஐந்து மணிக்கு ஸோன் பிரயாகை வந்து சேர்ந் தோம். இறக்கமானதால் வேகமாகவே வந்துவிட்டோம். கடைசி மூன்று மைல்கள் நானும் கண்ணனும், குதிரையைவிட்டு இறங்கி நடந்தே வந்தோம். குதிரை சவாரி செய்து பழக்கமில்லாததால், முதுகிலும் இடுப்பிலும் தாங்க முடியாத வலி எடுத்து விட்டது. இறங்கி, காலை வீசி நடந்தது பரம சுகமாக இருந்தது.

செல்லும் வழியில் மலை மீதுள்ள ஒரு கிராமம்



அன்றிரவு ஸோன்பிரயாகையில் தங்கிவிட்டு, மறுநாள் காலையில் எங்கள் பத்ரிநாத் பயணத்தைத் தொடங்கினோம். ஒன்பது மாதங்களுக்குள் மறுபடியும் பத்ரிநாராயணர் தரிசனம் கிடைக்கும் என்று கனவு கண்டிருக்க முடியுமா? அதுவும் பயண முறைப்படி ஜமுனோத்ரி, கங்கோத்ரி, கேதார்நாத் தலங்களைத் தரிசித்துக் கொண்டு, இறுதியாகப் பத்ரிகாச்ரமம் செல்வது கிடைத்தற்கரிய பேறன்றோ? இடையில் கோமுக தரிசனம் வேறு. எத்தனை அரிய பாக்கியம்!

இருப்பினும் மனத்தில் ஒரு குறை. ஏதாவது ஒரு குறைவில்லாமல் மனித வாழ்வு முழுமை பெறுவதில்லையோ!

கேதாரம் வரும்போது, பார்வதி கல்யாணம் நடைபெற்ற திரியுகிநாராயணரைத் தரிசிக்க முடியாமல் போனது பெரிய குறை. அதைப் போன்றே திரும்பும்போது உக்கி மடம், துங்காநாத், ருத்ரநாத் முதலிய தலங்களைக் காண முடியாமல் போய்விட்டது. உத்தர கண்ட 'Map'-ல் பார்த்தபோது, குப்தகாசியிலிருந்து சமோலி செல்லும் வழியில் இத் தலங்கள் இருப்பது தெரிந்தது. கேதாரத்திலிருந்து பத்ரி செல்லும்போது இத்தலங்களைப் பார்த்துக் கொண்டு வந்துவிடலாம் என்று நானே மனத்தில் ஒரு திட்டம் வகுத்துக் கொண்டிருந்தேன். அது எத்தனை பெரிய தவறு என்று அங்கு வந்த பிறகுதான் தெரிந்தது. முதலில் குப்தகாசியிலிருந்து சமோலி செல்லும் பாதை, கார் பயணத்திற்கே லாயக்கற்றது என்று டாக்சிக்காரர் புஷ்க்கர் கூறிவிட்டார். அப்படிச் சிரமப்பட்டுப் போனாலும், இந்த இடங்களைப் பார்ப்பதற்குக் குறைந்தது மூன்று நாட்கள் ஆகுமாம். உக்கி மடத்திற்கு எளிதாகச் சென்றுவிட முடியும் என்றும் துங்காநாத், ருத்ரநாத் முதலிய ஆலயங்களைத் தரிசிக்கக் கால் நடையாகத்தான் செல்ல வேண்டும் என்றும் கூறினார் அவர். மிகக் கடுமையான ஏற்றமாம். ஆபத்தான பாதையாம். இந்தப் பயணத்தின் போது அங்கெல்லாம் செல்ல முடியாது என்றும், அதற்குத் தேவையான ஏற்பாடுகளோடு தனியாக ஒரு யாத்திரை வரவேண்டும் என்றும் தோன்றியதால், அந்த எண்ணத்தைக் கைவிட்டேன். குப்தகாசி வழியாகக் காலை பதினொரு மணிக்கு நேரே ருத்ரப்பிரயாகைக்கு வந்து சேர்ந்தோம்.


கேதார்நாத் செல்லும் வழியில் ருத்ரப்பிரயாகையில் இறங்கி, கங்கா—வைஷ்ணவ் ஓட்டல் சொந்தக்காரர் நரேந்திர குமாரை நாங்கள் சந்திக்க முயன்றோம். ஆனால், முடியவில்லை. முதல் பத்ரி பயணத்தின்போது எங்களுக்கு அறிமுகமான நல்ல நண்பர் அவர். அவருடைய உதவியால்தான் கோடீச்வரர் ஆலயத்தையும், பாண்டவர் குகையையும் காண முடிந்தது. நல்ல வேளையாக கேதாரிலிருந்து திரும்பும்போது அவரைச் சந்தித்து நலன் விசாரிக்க முடிந்தது. ஓட்டல் மாடியில் உள்ள அறையை எங்களுக்கு ஒழித்துக் கொடுத்தார். எங்கள் துணிகளைத் துவைத்து, குளித்து, தயிர்சாதத்தை ரசித்துச் சாப்பிட்டுவிட்டு, இரண்டு மணி வரை ஓய்வு எடுத்துக் கொண்டு ஜோஷிமட்டுக்குப் புறப்பட்டோம்.

யமுனோத்ரி செல்லும் வழியில் கால் வலியுடன் படுத்திருக்கும் ஒரு மூதாட்டிக்கு ஒரு பெண்மணி காலைப் பிடித்து விடுகிறார்.



செல்லும் பாதையில் முன்பு பார்த்த இடங்களையும், இயற்கைக் காட்சிகளையும், பயங்கர வளைவுகளையும், வளைந்து வளைந்து செல்லும் அலகநந்தாவின் அற்புதத் தோற்றத்தையும் ரசித்துக் கொண்டே ஆதவன் மறையும் வேளையில் நாங்கள் ஜோஷிமட் வந்து சேர்ந்தோம்.

அங்கு ஏழாயிரம் அடி உயரத்தில் தனி பங்களாவில் தன்னந்தனியாக சந்நியாசியைப் போல் வாழ்ந்து கொண்டிருந்த **I. T. B. P.** அதிகாரி மகிந்தர்சிங்கை சந்திக்கும் வாய்ப்புப் பெற்றதை என் இமயப் பயணத்தின் முக்கிய அனுபவங்களில் ஒன்ருகக் கருதுகிறேன்.



கங்கோத்ரியில்...

அவருக்கு நாற்பது வயதிற்குள் தான் இருக்கும். உள் அமைதியின் அழகு,முகத்தில் தாண்டவமாடுகிறது. ஆழ்ந்த பக்தியின் வசீகரப் பொலிவு கண்களில் பளிச்சிடுகிறது. பழகும் எளிமையும், பேச்சின் மென்மையும், பகட்டில்லாத பண்பின் பக்குவமும், அவரது ஆன்மிக வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. பகைவனை எதிர்த்துப் படையை நடத்திச் செல்லும் அந்த ராணுவ வீரர், பற்றில்லாத துறவியாக, பரம ஞானியாக வாழ்ந்து கொண்டிருக்கிருர்.

கடந்த ஆண்டு பத்ரி யாத்திரையின்போது இவரைத் தொலைவிலிருந்து பார்த்து அதிசயித்தேன் நான். நாங்கள் நடந்து சென்று கொண்டிருந்த போது, எதிரில் வந்த ஒரு ராணுவ ஜீப்பிலிருந்து ஓர் அதிகாரி இறங்கி, கைகால்களைச் சுத்தம் செய்து கொண்டு, ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளை சாஷ்டாங்கமாகக் கீழே விழுந்து வணங்கினுர் என்று முன்பு குறிப்பிட்டிருந்தேனே, அவரேதான் இவர்.

புற வாழ்க்கையின் எந்தச் சூழ்நிலையிலும், கட்டாயத்தின் இக்கட்டான நிலையிலும், மனிதன் தனக்கென்று வகுத்துக் கொண்ட வாழ்க்கை நெறிகளிலிருந்து ஓர் அணுவும் பிறழாமல் வாழ வேண்டும், வாழ முடியும் என்றும் வாழ்ந்து காட்டிக் கொண்டிருப்பவர் மகிந்தர்சிங். நாம சங்கீர்த்தனம்தான் அவரது பொழுதுபோக்கு. சமய நூல்களையும் பக்தி இலக்கியங்களையும் படிப்பதுதான் அவரது முதல் விருப்பம். தீய பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகி விடாமல் அவர் தன்னை மிகப் புனிதமாகக் காப்பாற்றிக் கொண்டு வருகிருர். எங்களுக்கு டீ வந்தபோது, ''நீங்கள் சாப்பிடவில்லையே!'' என்று வினவினேன் நான்.

''நான் டீ, காப்பி ஒன்றும் சாப்பிடுவதில்லை'' என்று அவர் புன்னகையுடன் கூறியபோது, நான் அதிசயப்பட்டதோடு வெட்கமும் அடைந்தேன்.



உழைக்கும் வர்க்கம்

அந்த உயரத்தில் அமர்ந்து கொண்டு, எதிரிலுள்ள இமயமலைச் சிகரங்களையே பார்த்துக் கொண்டிருக்கிறார். அந்தத் தெய்விகத் தியானத்தில் மெய்ம்மறந்து ஒன்றிப்போகிறார்.

அவரது குடும்பம் டேராடூனில் வசிக்கிறது. திருமதி மகிந்தர்சிங் அங்கு டாக்டராகப் பணி புரிந்து கொண்டிருக்கிறார்.

மகிந்தர்சிங் அந்த 'காம்ப்'பின் தலைமை அதிகாரி. அவருக்குக் கீழுள்ள அதிகாரிகளும், ஜவான்களும் அவரிடம் பயபக்தியோடு பழகுகிறார்கள். அத்துடன் ஒரு மகானிடம் காட்ட வேண்டிய மரியாதையையும் மதிப்பையும் வைத்திருக்கிறார்கள். அதிகாரத்தைவிட, அன்பைவிட, ஆன்மிகக் கட்டுப்பாட்டுக்குள்ள சக்தி விவரிக்க முடியாத வலிமை பொருந்தியதல்லவா?

தன் வாசகர்களைப் பயனுள்ள 'பாரத தரிசன'த்திற்கு அழைத்துச் சென்று விகடன் ஆற்றிவரும் அரும்பணியைக் கேள்வியுற்று அவர் இறும்பூதெய்தினார். என் இமாலயப் பயண விவரங்களை ஆர்வமுடன் கேட்டு ஆனந்தப்பட்டார். கடந்த முறை மானா கிராமத்திற்குச் சென்று, வியாச குகையைப் படம் பிடிக்க முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பின நிகழ்ச்சியை நான் கூறியபோது, அவர் மிகவும் வருத்தப்பட்டார். ''இதுவரை யாருமே வெளியிடாத அதன் படத்தைப் பிரசுரிக்கத் துடிக்கும் உங்கள் ஆர்வம் எனக்குப் புரிகிறது. ஆனால், அந்த எல்லைப் பகுதியில் தற்போது சற்றுக் கெடுபிடி அதிகமாயிருக்கிறது. என்னால் முடிந்த உதவியைச் செய்கிறேன். நம்பிக்கையோடு போங்கள்'' என்று அவர் என்னை உற்சாகப்படுத்தி அனுப்பினார்.

மறுநாள் காலை புறப்பட்டு, மதியம் மூன்று மணிக்கு நேரே மானா கிராமத்திற்குச் சென்றோம். அங்குள்ள **I. T. B. P.** காம்ப் அதிகாரி எங்களை வரவேற்கக் காத்துக் கொண்டிருந்தார். மகிந்தர்சிங்கிடமிருந்து 'ஒயர்லெஸ்' செய்தி வந்ததாகவும் எப்படியாவது வியாச குகையைப் படம் எடுக்க எங்களுக்கு உதவி புரியுமாறு அவர் கேட்டுக் கொண்டிருக்கிறார் என்றும் அந்த அதிகாரி கூறினார். மகிந்தர்சிங்கிடமிருந்து ஒரு தாக்கீது வந்தால் அது குருவின் கட்டளைக்கு ஈடானது என்று அவர் கருதுவது அவர் காட்டிய ஆர்வத்திலிருந்து புரிந்தது. எங்களுடன் அவர் வந்ததால், எங்களுக்குத் தேவையான படங்களை எடுத்துக் கொள்ள முடிந்தது. வியாச பகவானை நினைக்கும்போதெல்லாம் நான் மகிந்தர்சிங்கை நினைத்துக் கொள்கிறேன்.

உற்ற தோழன்



வியாச குகையிலிருந்து அரை மைல் தொலைவிலுள்ள 'பீமன் பால'த்தைக் காணச் சென்றோம். அது சரஸ்வதி நதியின் மீது அமைக்கப்பட்டுள்ள ஓர் இயற்கையான பாலம். ஒரு பிருமாண்டமான பாறை அங்கு பாலமாக அமைந்திருக்க, அதன் மத்தியில் உள்ள பெரிய துவாரத்தின் வழியாக நதி பாய்ந்து வருகிறது. அந்தப் பாறையை பீமசேனன் தூக்கிக் குறுக்கே போட்டதாகக் கூறப்படுகிறது. மலையிலிருந்து பாறையைப் பீமன் பெயர்த்தபோது, அவனுடைய கைகளும் பாதங்களும் மலைச் சரிவில் பதிந்ததால் ஏற்பட்டுள்ள அடையாளங்களையும் அங்கு சுட்டிக் காட்டுகிறார்கள்.

வசுதாரா என்ற ஐந்நூறு அடி நீர்வீழ்ச்சி, அங்கிருந்து இரண்டரை மைல் தொலைவிலுள்ளது. கண்ணுக்குத் தெரிந்த வரையில் அதுதான் அலகநந்தாவின் உற்பத்தி ஸ்தானம். அஷ்டவசுக்கள் தவமிருந்த இடமாம் அது. ஆனால், ராணுவக் கெடுபிடி காரணமாக அங்கு நாங்கள் செல்ல முடியவில்லை.

மாலை பத்ரிக்குத் திரும்பினோம். ஸ்ரீ நாராயணரைத் தரிசனம் செய்து கொண்டோம். 'வீணை மகராஜின்' தேவ கானத்தைப் பருகினோம். ராவல்ஜியைக் கண்டு மனம்விட்டுப் பேசினோம். மணி ஐயர் ஓட்டலில் வற்றல் குழம்பும், மிளகு ரசமும் தயாரிக்கச் சொல்லி அமிர்தமாகச் சாப்பிட்டோம். சாதத்தையும், குழம்பையும் கண்ணால் கண்டு பத்து நாட்களுக்கு மேலாகி விட்டிருந்ததே! போனஸாக அந்த நல்ல மனிதர் எங்களுக்கு அப்பளம் வேறு சுட்டுப் போட்டார்!

மறுநாள் காலை நாங்கள் ரிஷிகேசத்தை நோக்கிப் பயணமானபோது எல்லாருக்கும் பரம திருப்தியாக இருந்தது. பத்து நாட்களில் 'சதுர்தாம்' தரிசனத்தை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு திரும்புகிறோம். வெள்ளிப் பனி மலை மீதினில் ஆயிரம் மைல்கள் உலாவிவிட்டு வருகிறோம். ஆனந்தம் இருக்காதா?

அதிலும் ஜவான் ஸலீந்தருக்கு எல்லையற்ற மகிழ்ச்சி. இமயத்திலே பிறந்து வளர்ந்தவர், அதுவரை பார்க்காத தலங்களை யெல்லாம் தரிசித்த 'குஷி'யில் பாட ஆரம்பித்துவிட்டார். அருமையான மெட்டில் அமைந்த கடுவாலிப் பாட்டு அது. அதை ரெகார்டு செய்யச் சொல்லி மீண்டும் கேட்டு மகிழ்ந்தார். மலைவாழ் மக்களுக்கே உரிய கள்ளம் கபடமற்ற எத்தனை தூய்மையான மகிழ்ச்சி அது!

என் இமயப் பயணங்களில் என்னை மிகவும் கவர்ந்தது அங்கு வாழும் மக்களின் எளிமைப் பண்பும் தூய்மையான பக்தியுணர்வும்தான்.

ஜோஷிமட்டில் சந்தித்த
ஒரு நாகரிக கர்வாலி தம்பதி



அவர்களது புற அழுக்கின் நெடியைச் சற்றுப் பொறுத்துக் கொண்டால், அவர்களது மாசற்ற மனத்தின் அழகை ரசிக்கலாம். இயற்கையின் பகையைப் பெரிதுபடுத்தாமல், போராட்ட மனப்பான்மையையோ மனக் கசப்பையோ வளர்த்துக் கொள்ளாமல் அதனுடன் உறவாடி, உளம் மகிழ்ந்து, பொறுமையுடன் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு வேளைச் சோற்றுக்கும்

அவர்கள் உழைக்க வேண்டியிருக்கிறது. காட்டில் வெட்டிய விறகை, பாடிக் கொண்டே முதுகில் சுமந்து வரும் சிறுவர்களையும் இளைஞர்களையும் வழியில் கண்டேன். உற்ற தோழனைப் பொறுப்புடன் அவர்களுக்குத் துணை புரியும் கோவேறுக் கழுதைகளைக் கண்டேன். வீட்டில் கம்பளி ஆடைகளை நெய்யும் மூதாட்டிகளைக் கண்டேன். மூச்சுத் திணற முதுகில் கட்டிய 'கண்டி'யில் மனிதனைச் சுமந்து செல்லும் பலசாலிகளைப் பார்த்தேன். டீக் கடைகளில் அமர்ந்து குளிர் காய்ந்துகொண்டே, ஈ ஓட்டிக் கொண்டிருக்கும் வயோதிகர்களைக் கண்டேன்.

மலைகளின் மீது உயரத்தில் தென்பட்ட கிராமங்களைக் கண்டு நான் ஏங்கிப் போவது உண்டு. அங்கு ஏறிச் சென்று, அந்தத் தனிமையையும் அமைதியையும் ரசிக்க வேண்டும் என்று துடிப்பேன். நமக்குப் பழக்கப்பட்ட உலகத்திற்குச் சற்றும் சம்பந்தமில்லாமல் மேகங்களுக்கு இடையே வாழ்க்கை நடத்தும் அவர்கள், உண்மையில் கொடுத்து வைத்தவர்கள். அவர்களது அகராதியில் 'பயம்' என்ற வார்த்தைக்கே இடமில்லை.

சின்னஞ்சிறுர்களும் காடுகளில் ஆடு, மாடுகள் மேய்த்துக் கொண்டிருப் பார்கள். பயங்கரத் தொங்கு பாலத்தில், அதைவிடப் பயங்கரமான நதியைக் கடந்து கொண்டிருப்பார்கள். பேய் இருட்டில் பேசிக் கொண்டே எங்கோ போய்க் கொண்டிருப்பார்கள்.

கீழே இறங்க இறங்க, நவ இந்தியாவின் முன்னேற்றச் சுவடுகள் ஆங்காங்கு பதியத் தொடங்கியுள்ளதையும் கடுவாலி மக்களின் மீது சமவெளி நாகரிகத்தின் சாயல் படியத் தொடங்கியுள்ளதையும் காண முடிகிறது. படிப்பும், பதவியும் படாடோப வாழ்க்கையின் மோகமும் அவர்களையும் ஈர்க்க ஆரம்பித்திருப்ப தற்கான அடையாளங்களும் தெரிந்தன.

இமயத்திலுள்ள தலங்களைத் தரிசிக்க வருபவர்களில் பெரும்பாலும் வயோதிகர்களாகத்தான் இருக்கிறுர்கள். இளவட்டங்களை அதிகமாகக் காண முடியவில்லை. உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பிகார், ராஜஸ்தான், மகாராஷ்டிரம், வங்காளம் இம் மாநிலங்களிலிருந்துதான் நிறையப் பேர் வருகிறுர்கள். பஸ்களில் ஏறிக்கொண்டு களைப்பையோ, பனியையோ, வெய்யிலையோ பாராட்டாமல் நான்கு தலங்களையும் தரிசித்துவிட்டு வருகிறுர் கள். சிலர் பத்ரிநாத்துக்கு மட்டும் வருகிறுர்கள். தென்னகத்திலிருந்து வரும் பெரும்பாலான யாத்திரிகர்கள் நடக்கவே தேவையற்ற, அதிகச் சிரமமில்லாத பத்ரிநாத்துக்கு மட்டும்தான் வருகிறுர்கள்!

எல்லா இடங்களிலும் எளிய, ஏழைமையான கிராம மக்களைத்தான் அதிக மாகப் பார்த்தேன். தள்ளாத வயதில், ஒருவருக்கொருவர் துணையாக ஆண் களும் பெண்களுமாக பக்தியோடு, 'கேதார்நாத்ஜிக்கு ஜெய்', 'கங்காமாய்க்கு ஜெய்', 'ஜம்னுமாய்க்கு ஜெய்', 'பத்ரி விஷால்கி ஜெய்' என்று கோஷமிட்டுக் கொண்டு மலையேறி வரும் காட்சி நொந்த மனத்துக்கு மாமருந்தாக இருக்கிறது.

இமயத்தில் அழகைக் காணலாம். ஆனந்தத்தை அனுபவிக்கலாம். சத்தியத்தை உணரலாம். அதனுல் தெய்வத்தைத் தரிசிக்கலாம். இந்தத்



இமயத்தில் இயற்கை தீட்டியுள்ள ஓர் எழிலோவியம்

தெய்வ தரிசனத்திற்காகத்தான் காலம் காலமாக மக்கள் இமயத்தை நாடிச் சென்று வருகிறார்கள். அதனாலேயே இந்த பக்திப் பயணங்கள் பயனுள்ளதாக அமைகின்றன.

இந்தத் தூய பக்தியில், தியாக உணர்வில், சமயப் பற்றில், ஆன்மிக லட்சியத்தில், ஒருமைத் தத்துவத்தில் நாம் பண்டைய பாரதத்தைத் தரிசிக்கிறோம். புண்ணிய பாரதத்தின் பிறப்பிடமே இமயம் என்றும் உணர்கிறோம். இமயம் இடும் புனிதப் பிச்சையில் நமது பாரதியக் கலாசாரம் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை அறிகிறோம். இமயத்தை அறியாமல் பாரதத்தை முழுமையாகத் தெரிந்து கொண்டுவிட முடியாது என்றும் தெளிகிறோம்.

இமயத்தில் நான் பார்த்தது கைமண் அளவுதான். இன்னும் காண வேண்டிய இடங்களும், வழிபட வேண்டிய தலங்களும் நிறைய இருக்கின்றன. வேளை வரும்போது அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளத் துடித்துக் கொண்டிருக்கின்றேன்.

நான் எழுதுவதைப் படித்து, பிரசுரமாகும் படங்களையும் பார்த்துவிட்டு அநேகர் திருப்தியடையாமல் என்னிடம் கடிதம் மூலம் தொடர்பு கொண்டோ

நேரில் வந்தோ என் அற்புத அனுபவங்களை மீண்டும் ஒரு முறை கேட்டு ஆனந்திப்பது உண்டு.


ஆனால், அவர்களை என்னால் முழுமையாக திருப்திப்படுத்த முடிவதில்லை. நான் கண்ட காட்சிகளை எழுத்தில் அப்படியே வடித்துக் காட்டும் ஆற்றலோ, படம் பிடித்துக் காட்டும் நாவன்மையோ எனக்கு இல்லாததுதான் அதற்குக் காரணமாக இருக்க வேண்டும். அவரவர்கள் நேரில் கண்டு, உணர்ந்து, ஆனந்தத்தில் லயிக்க வேண்டிய அனுபவங்கள் அவை.

அங்கெல்லாம் சென்று வரவேண்டும் என்ற தங்கள் ஆர்வத்தைத் தெரிவிப்பவர்களும் உண்டு. முடிந்தவர்களெல்லாம் இமயப் பயணத்தை மேற்கொள்ளவேண்டும் என்று நான் விரும்புகிறேன். இளைஞர்கள், முக்கியமாக நம் மாணவ மணிகள் இம்மாதிரியான பயணங்களைப் பயனுள்ள 'பிக்னிக்'காகவும் ஆன்மிக 'அட்வென்ச்ச'ராகவும் மேற்கொள்ள வேண்டும் என்பதுதான் என் அவா. நம் வம்சாவளியையும் குடும்ப பரம்பரையையும் அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டுவது போல் நம் நாட்டின் வரலாற்றையும், நம் பண்டையப் பெருமைகளையும், மகான்களின் சாதனைகள் மிக்க தூய வாழ்வையும் தெரிந்து கொள்ள முயல வேண்டும். பாரத நாட்டின் அழியாச் செல்வச் சிறப்புக்கள் நம் சிந்தையில் குடியேறி, ரத்தத்தில் ஊற ஊறத்தான் நாம் எத்தகைய மகோன்னத கலாசாரத்தின் வாரிசுகள் என்பது புரியும்.


நம் வளமிக்க வாழ்வுக்கான வளர்ச்சித் திட்டங்களும், முன்னேற்றக் கனவுகளும், சீரான குடும்ப வாழ்வும், ஒழுங்கான சமூகக் கண்ணோட்டமும், ஒழுக்கம் மிக்க அரசியலும், விஞ்ஞான விநோதங்களைப் பற்றிய உண்மையான கணிப்பும், நம் கலாசாரத்தின் அடிப்படையின் மீதும் ஆன்மிக அடித்தளத்தின் மீதும் அமைக்கப்பட்டால்தான் அவை நிலையான பயன் தர முடியும் என்பதில் கருத்து வேற்றுமையே இருக்க முடியாது.

'பழையன கழிதலும், புதியன புகுதலும்' என்ற பொன்மொழியைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல், தொன்மை மிகுச் சிறப்புக்கள் அனைத்துமே சாரமற்ற குப்பைக் கூளங்கள் என்று ஒதுக்கித் தள்ளிவிட்டுப் புதிய கருத்துக்களையோ புதுமை உலகத்தையோ படைத்துவிட முடியும் என்று நினைப்பது அறியாமையாகும். உன்னத லட்சியங்களுக்குட்பட்ட பாரம்பரியத்தின் அழிக்க முடியாத கோட்பாடுகளின் தொடர்ச்சியாகத்தான் புதிய சமுதாயம் மலர முடியுமே தவிர, அவற்றின் தொடர்பை அறுத்துக் கொண்டு, தன்னிச்சையாக வளரவோ வாழ்ந்துவிடவோ முடியாது. இம்மாதிரியான நாகரிக மோகங்கள், வேகமாக அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்லும் அநாகரிக அவலங்களாகத்தான் முடியும்.

இரண்டாம் பாகம் நிறைவுற்றது.




யமுனோத்ரி, கங்கோத்ரி, கோமுக், கேதார்நாத், பத்ரிநாத் முதலிய திருத்தலங்களையும் யமுனை, பாகீரதி, கங்கை, அலகநந்தா நதிகளையும் மேலே உள்ள படத்தில் காணலாம்.



இந்நூலில் வரும் முக்கியமான இடங்களை மேலே உள்ள படத்தில் காணலாம்.



கேதார்நாத் தல தரிசனம்



கங்கோத்ரியில் நீராடுதுறை